In the field of education in Sri Lanka, Dr. Shukri was offered an opportunity to make his contribution when the minister of education appointed him between 1978-1979 to serve as a member of the education reform committee appointed to study and recommend reforms in the field of education. He functioned as an academic consultant to the department of Arabic and Islamic studies of South Eastern University since its inception and also functioned as the member of the University Council. He also served as the member of the committee appointed by the National Institute of Education (NIE) to draft the history syllabus in the school curriculum. In 2001, he was elected as the member of the executive council federation of the Universities of the Islamic World in Morocco. Dr. Shukri held many important positions in the academic and administrative field. Sri Lanka national library service board, Sri Lanka Sahithya Mandalaya, National Commission of UNESCO, Official Language Commission are some of the institutions and organizations in which he held memberships and made significant contributions. He also served as a member of the Board of Management of the Postgraduate Institute of Archaeology. He also functions as a member of the Advisory Board of Muslim Programs in Sri Lanka Broadcasting Corporation and Sri Lanka Rupavahini Corporation.

**Works and Compilations :**

Dr. Shukri who is proficient in Arabic, English, Tamil and Sinhala has number of compilations and publications to his credit. "Islam and Education (1970)", "Mankind in Peril (1970)", "Muslims of Sri Lanka (Edited) (1986) are some of his important compilations in English. He also wrote many books in Tamil. "Al-Quran- its Doctrine and way of life (1981)", "Islamic Dawah and Modern World Challenges (1982)", "Sufis in Defence of Faith (1984)", "Hadis and Sunnah (1993)", "Naleem Hadjiar-His life and contributions (1993)", "The Life and Thought of Imam-al-Ghazzali (1997)", "Human Rights in Islam (1996)", "Muslim writers and their Responsibilities (1996)", "Islamic Life and Thought (1996)", "Centrers of Islamic Culture and Civilization During the Medieval Period (1997)", "Religion and Science (1997)", are some of his important works in Tamil.

Through this works and compilations in English and Tamil based on deep study and research on the basis of training in research methodology he had gained in the western University, Dr. Shukri was able to expound an authentic exposition of Islamic concepts.

**International Conferences :**

Dr. Shukri participated in number of international conferences held in Mecca, Saudi Arabia, Bahrain, Cairo, Malaysia, Qatar, Pakistan and in UK displayed his deep knowledge,

erudite learning and scholarship by his lectures and presentations and brought honor to Sri Lanka. In 1987, he participated in the millennium celebration of the founding of Al-Azad University and brought great honor to the country. Apart from subjects related to Islamic studies and culture. Dr. Shukri had delivered lectures and made academic presentation in various conferences on subjects related to world peace, archaeology, history, science, comparative religion and Alcoholism and Drug addiction. These lectures and presentations reflect his deep knowledge and familiarity in many disciplines and contemporary social problems.

**Research :**

Human rights, the subject that has engaged the attention of all the people in recent times was an area he was much interested. He has written many learned articles on this theme in the Muslim World Leaque Journal published from Saudi Arabia. His studies on Muslim thinkers and philosophers such as Al-Ghazzali and Al-Baruni were published in international journals and also he has contributed articles on Muslim contribution to Science and Civilization. His article on Jabir bin Hayyan's contribution to chemistry was published in 1990 in the Journal of Science and Medicine of Hamdard Institute, Pakistan.

**Awards and Recognitions :**

Dr. Shukri was able to forge academic relationship with international scholars in the field of Islamic Studies. His contacts with Professor S.A. Imam and Professor W.S. Karunaratne at University of Peradeniya and University of Kelaniya left a deep impact on his academic personality. Though he moved with scholars and leaders of international repute, the simplicity he displays as a Muslim is a matter of pride for us as Sri Lankans. When one talks to him, he feels that he is talking to an intimate friend and a close companion. Though he is a highly respected academic personality, he is modest and unassuming. He is a noble person about whom entire Muslim community could be proud.

In recognition and appreciation of his services, the cultural ministry of the southern provincial council honored him by a conferring in him the title of "Rohana Ran-Silu" in 2003. Hindu Cultural Ministry awarded him the title of "Kala Ma-Mani". All Ceylon YMMA Conference conferred him the award of "Y personality of the Year" for 2005. Sri Lanka student Islamic Movement awarded him the "Wahda Award" in 2005.

Born in our hometown Matara and served as our colleague in the academic staff of University of Kelaniya. Dr. Mohamed Ali Mohamed Shukri who is respected by all the communities of this country is a linguist, philosopher, scholar of Islamic studies and religion, a social worker, and an expert in the middle east and a historian and above all is a humanist.



# மறந்திட முடியாத நூலக ஆளுமை

## ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்

**கலாநிதி. மைதிலி விசாகரூபன்**
சிரேஷ்ட உதவி நூலகர்(தரம் I), நூலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் பிரதம நூலகராகவும், இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி மறைந்த நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் 1961 ஆம் ஆண்டு இணுவிலில் பிறந்தார். இவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் சிறப்புக்கலைப் பட்டதாரி. நூல்கள், நூலகங்கள், நூலகவியற்துறை முதலானவற்றின் மீது கொண்ட ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நூலகவியல் பட்டக் கற்கையை மேற்கொண்டிருந்தார். பெங்களூர் ஆவணவாக்கல் பயிற்சி மையத்தில் தனது நூலகவியல் சார் அறிவை மேலும் செப்பனிட்டுக் கொண்டார்.

2008 ஆம் ஆண்டில் தற்காலிக நூலகராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் நியமிக்கப்பட்ட இவர், 2012இல் நிரந்தர நூலகராக நியமனம் பெற்றார். நூலகத்தையும் நூலகவியல் துறையையும் ஆழமாக நேசித்த ஸ்ரீகாந்தலட்சுமி அவர்கள் நூலகத்தை சமூகத்தோடு ஒன்றிணைத்து செயற்படுத்தும் திட்டங்களை தன்னம்பிக்கையோடு ஆரம்பித்தார். சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்குமுரிய களங்களாக நூலகங்கள் செயற்படும் வகையில் இவரது இத்திட்டங்கள் அமைந்திருந்தன.

வெறுமனே நூலகக் கட்டடங்களை கட்டியெழுப்புவதால் பயனில்லை. மக்களை அவை சென்றடைய வேண்டும், மக்களின் வாழ்நாள் முழுமைக்குமான கல்வி மையங்களாக நூலகங்கள் திகழ வேண்டும் என்பதில் ஆர்வத்தைக் கொண்டிருந்தார். இதற்காக **"நூலக விழிப்புணர்வு நிறுவகம்"** என்னும் அமைப்பொன்றை நிறுவி கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்படுத்திவந்தார். இந்நிறுவனத்தின் மூலம் தகவல் பரவலாக்க வேலைகளை முன்னெடுத்தார்.

நூலகக் கருத்தரங்குகளை நடாத்துதல், தகவலறிவு சார்ந்த போட்டிகளை நடாத்துதல், வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடையே தூண்டுதல், பாடசாலைகளிலும் வீடுகளிலும் நூலகங்களை உருவாக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் என இன்னோரன்ன பணிகளை நூலகவியல்துறை சார்ந்து எடுத்து வந்துள்ளார்.

தனது நூலகத்துறை சார்ந்த அறிவு, ஆர்வம், ஆற்றல் முதலானவற்றை உந்துசக்தியாகக் கொண்டு பல நூல்களை எழுதினார். **நூலகப் பகுப்பாக்கம்: நூலகர் கைநூல், நூலகத் தகவல்வள முகாமைத்துவம், நூலக தகவல் அறிவியல் கலைக் களஞ்சிய அகராதி, தகவல் வளங்களும் சேவைகளும், நூலக தகவல் அறிவியல் ஆய்வுக் கோவை, நூலக அபிவிருத்தி, சொற்கருவூலம்** என ஏறத்தாழ பதின்மூன்று நூல்களை இவர் எழுதியுள்ளார்.

**"வளமான வாசிப்பு மானுடத்தின் மேம்பாடு"** என்பதை அவர் தனது நூலகவியல் சார்ந்த செயற்பாடுகளில் முதன்மைப்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை. தனது வாழ்வில் நூலகவியல் துறைசார் வளர்ச்சிக்கு வழங்கிய அதேயளவு முக்கியத்துவத்தை தமிழர் தம் பாரம்பரியத்தை பேணும் முயற்சிக்கும் வழங்கியிருந்தார். வெகுவாக மாறி வரும் தமிழர் தம் வாழ்வியல் அம்சங்களின் ஊற்றுக்கள் மறைந்துவிடாமல் பாதுகாப்பதில் திட்டமிட்டு ஈடுபட்டு வந்தார்.

பாரம்பரியப் பொருள்களைத் தேடிச் சேகரித்து வருவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். தனியொருவராக இப்பணியில் ஓய்வின்றி செயற்பட்டு வந்தமை அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரிந்த உண்மை. எவ்வாறாயினும் தமிழர் வாழ்வியலை புலப்படுத்தும் ஒரு அருங்காட்சியத்தை நிறுவ வேண்டும் என்பதை தனது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு எண்ணற்ற அரிய பொருட்களை சேகரித்து வைத்துள்ளார். இதற்காக தனது சொந்தப் பணத்தையும் பெருந்தொகையாக செலவிட்டும் வந்தார். ஏறத்தாழ தனது வீட்டில் அத்தகையதொரு அருங்காட்சியகத்தை நிறுவியிருந்தார் என்று குறிப்பிடுமளவிற்கு தமிழர் தம் வரலாற்றை பறைசாற்றும் மரபுரிமைப் பொருட்கள் அவரால் சேகரிக்கப்பட்டுள்ளன. இது இவர் தான் வாழ்ந்த சமூகத்திற்கு செய்த பெருந் தொண்டு என்றே குறிப்பிட வேண்டும்.

இவையாவற்றையும் சரியான ஒரு இலக்கில் கொண்டு சென்று ஒரு இடத்தில் நிறுவுவதற்கு முன்னால் 25.12.2019 அன்று காலனாற்காவுகொள்ளப்பட்டார். அனைத்து வேலைகளும் ஸ்தம்பித்து விட்டன.

நூலகம் சார்ந்தும் நூலகவியல் சார்ந்தும் ஆழ்ந்த அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புடன் வாழ்ந்த ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்களின் ஆவணச் சேகரிப்புக்களும் நூலகவியல் சார்ந்த செயற்றிட்டங்களும் கூடவே அவரால் எழுதப்பட்ட நூல்களும் காலமுள்ளவரை அவரை எவராலும் மறந்திட முடியாத நூலக ஆளுமையாக எம் முன்னால் வலம் வர வைக்கும் என்பது வெளிப்படையான உண்மை.

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்களால் முன் மொழியப்பட்ட இத்திட்டங்கள் நடைமுறைக்கு வருமாயின் கருத்துள்ள ஆரோக்கியமான நூலகச் சேவை நாட்டில் சாத்தியமாகும்.



# தேசிய, சமூக மட்டத்தின் அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வச் செயற்பாடுகளின் முக்கியத்துவமும், சமூகம் வேண்டி நிற்கும் ஆளுமைகளும்.

**பயாஸ் வை.எல்**
இறுதி வருடம்,
பொறியியல் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**இலங்கையில் தான்னார்வத் தொண்டர்கள்**

உலகில் அதிக தன்னார்வத் தொண்டர்களைக் கொண்ட ஒரு நாடாக இலங்கை காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையின் சனத்தொகையில் 15 வயதிற்கு மேற்பட்ட மக்களில் 48%ஆன மக்கள் தன்னார்வத் தொண்டர்களாகச் செயற்பட்டு வருகின்றனர் என்பது இலங்கையர் என்ற வகையில் எமக்கான மிகவும் மகிழ்ச்சியான ஒரு செய்தியாகும் (1).

ஒருபக்கம், பாரிய ஒரு அணி தன்னார்வலர்களாகச் செயற்பட்டாலும் மறுபக்கம், தேசம் தன்னார்வலர்களிடமிருந்து அதிக பயன்களைப் பெற தவறி விட்டதா? அல்லது தன்னார்வலர்களாக கட்டாயம் செயற்பட வேண்டியவர்கள் செயற்படாமல் ஒதுங்கி விட்டனரா? என்ற பல வினாக்கள் எம்முள் எழுகின்றன.

**பல்கலைக்கழக நுழைவு ஒரு அருள்**

2019ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி வருடத்தில் சாதாரணதரப் பரீட்சைக்கு 5.5இலட்சம் மாணவர்களே தோற்றியுள்ளனர். அதில் 3.3இலட்சம் மாணவர்கள் உயர்தரத்திற்கு சித்தியடைந்துள்ளனர். இவர்களுள் 2.3 இலட்சம் மாணவர்களே பல்கலைக்கழக அனுமதிக்கான போதியளவு பெறுபேறுகளை பெற்றுள்ளனர். இவற்றுள் ஒரு லட்சம் மாணவர்களுக்கே (மொத்தமாக 18% மாணவர்களுக்கே) அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கின்றது. ஒரு மாணவனுக்கு பல்கலைக்கழக நுழைவிற்கு இப்படியான பல மட்டங்களைத் தாண்டி கிடைக்கும் வாய்ப்பானது முதலில் இறைவனின் அருள் என்றே குறிப்பிட முடியும். இவ்வாறான அருளைப் பெற்றவர்கள் பொறுப்புக்களைச் சுமந்தவர்களாவர். பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காதவர்களைவிட பல்கலைக்கழக வாய்ப்பு கிடைத்தவர்கள் அதிகமான பொறுப்புக்களையுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(2)

**பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வச் செயற்பாடுகளின் முக்கியத்துவம்**

பல்கலைக்கழகக் காலத்தில் பல காத்திரமான முன்னெடுப்புகளை மேற்கொள்ள முனைந்தாலும், அவர்களுடைய பல்கலைக்கழகக் கல்வி மற்றும் அதனோடு இணைந்த செயற்பாடுகள் காரணமாக தாம் வாழும் சமூகத்திற்கு தம்மால் குறைவாகவே சேவை செய்யக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால், இன்றைய சூழ்நிலையை நாம் சற்று நோக்கும் போது இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்காக பல கதவுகள் திறந்துள்ளன. பல தன்னார்வத்தொண்டர் அமைப்புக்கள் நாட்டில் அனைத்து பக்கங்களிலும் இளைஞர் யுவதிகளால் உருவாக்கப்பட்டு தேசிய, சமூக மட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில் பல்கலைக்கழக மாணவர்கள் தன்னார்வச் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டி தமது ஆற்றல்களை மேம்படுத்தி அதன் மூலம் தாம் சார்ந்து உள்ள சமூகத்திற்கும், தேசத்திற்கும் தமது துறைரீதியில் பயனுள்ளவர்களாகத் திகழமுடியும்.

தன்னார்வச் செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுவதன் ஊடாக எதிர்கால சமூகம் வேண்டி நிற்கும் பல துறைசார் நிபுணர்கள் உருவாகுவதன்மூலம் சமூகமும், முழு தேசமும் பல்வேறு நன்மைகளைப் பெறலாம். இதற்கான சில முன்னெடுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தரமான கல்வியை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முயற்சித்தல்.
- சமூகத்தில் நிலவும் கலாச்சாரச் சீர்கேடுகளை அடையாளப்படுத்தி, அவற்றின் சீர்திருத்தங்களுக்காக உழைத்தல்.
- சகவாழ்வுக்கான கட்டமைப்புக்களை சமூக, தேசிய ரீதியில் மேற்கொள்ளல்.
- சமூகத்தினதும், தேசத்தினதும் பொருளாதார மேம்பாட்டிக்கான வழிவகைகளை முன்மொழிந்து செயற்படுத்தல்.
- சமூக நீதியை நிலைநாட்டல் மற்றும் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்காக நீதி கிடைக்க வழிவகைகளை செய்து கொடுத்தல்.
- குற்றம் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல்.
- வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க புது வேலைவாய்ப்புக்களை உருவாக்க ஊக்குவித்தல்.
- வறுமையைச் சமூகத்திலும் முழு தேசத்தில் இருந்தும் இல்லாதொழிக்க புதிய வேலைத்திட்டங்களை அறிமுகம் செய்தலும், முன்னெடுத்தலும்.
- பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் அநீதிகளுக்கு குரல்கொடுத்தல்.
- போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை போதையில் இருந்து மீண்டுவர வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- மேலே குறிப்பிட்ட விடயங்களை செய்யக்கூடிய தன்னார்வத் தொண்டர்களை உருவாக்குதல் மற்றும் தன்னார்வ செயற்பாடுகளை மேற்கொள்ளும் தன்னார்வ அமைப்புகளுக்கு பொருளாதார ரீதியாகவோ உடல் ரீதியாகவோ அல்லது சிந்தனை ரீதியாகவோ உதவுதல்.

இது தவிர, இக்கால கட்டத்தில் சூழல் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். என்ற வகையில்,

- பிளாஸ்டிக் பாவனை
- புவி வெப்பமடைதல்

- விலங்குகளுக்கு அநீதி இழைக்கப்படுதல்
- சூழல் மாசடைதல்

போன்றவற்றிற்கு எதிராகவும் இது போன்ற பல்வேறு சூழலியல் சம்மந்தமான பிரச்சனைகளுக்கு குரல் கொடுப்பதோடு,

- சேதன உரப்பாவனையை ஊக்குவித்தல்
- தமது நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வீட்டுத்தோட்டம் அமைக்க பொதுமக்களைத் தூண்டுதல்
- பயன் தரும் புதிய மரங்களை நட பொது மக்களை வழிகாட்டல்

போன்ற ஆக்கபூர்வமான சூழல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் முன்வருதல் வேண்டும்.

**வரலாற்றில் தன்னார்வலர்கள்**

1980ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம் சமூகம் ஆங்கிலக் கல்வியை புறக்கணித்ததால் கல்வித்துறையில் மட்டுமின்றி வாழ்வின் ஏனைய துறைகளிலும் பின்தங்கினர். இலங்கையில் வாழ்ந்த சிங்கள, தமிழ் சகோதர சகோதரிகள் ஆங்கிலக் கல்வியை கற்று அரச சேவைகளான வைத்தியம், பொறியியல், நில அளவையியல், சட்டம் போன்ற துறைகளில் தொழில்களைப் பெற்றதோடு அந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட கோல்புறூக் சீர்திருத்திற்கு அமைய சட்ட நிரூபன சபையிலும் அங்கத்துவம் பெற்றனர். இவ்வாறான அனைத்து வாய்ப்புக்களையும் முஸ்லிம் சமுதாயம் நவீன கல்வியைப் பெறாததால் இழக்க நேரிட்டமையை அக்காலத்தில் வாழ்ந்த புத்திஜீவிகள் உணர்ந்ததால் சமுதாயத்தின் இந்த அவல நிலையை முழு மூச்சாக தமது சொந்தப்பிரச்சினையாக எண்ணி அதற்காக பல்வேறு துறைகளிலும் பல்வேறு ஆளுமைகள் உழைத்தார்கள். உதாரணமாக, எம்.சி. சித்தி லெப்பை அவர்கள் **“முஸ்லிம் நேசன்”** பத்திரிகையை வெளியிட்டு அதில் தொடர்ந்து சமூகத்தை விழிப்புணர்வூட்டினார். எம்.சி. சித்தி லெப்பை, ஏ.எம்.வாப்பிச்சிமரைக்கர் அவர்களுடன் ஐ.எம்.எல்.ஏ. அஸீஸ் அவர்கள் இணைந்து கொழும்பு ஸாஹிரா கல்லூரியை ஆரம்பிக்க முழு மூச்சாக உழைத்தனர். இதே போல மாப்பிள்ளை லெப்பை ஆலிம், Dr. டி.பி. ஜாயா போன்ற பல புத்திஜீவிகள் தாம் சார்ந்துள்ள துறை மூலம் தமது சமூகத்திற்கு மட்டும் அல்லாது முழு தேசத்திற்கும் தன்னார்வலர்களாக செயற்பட்டு தனது சமூகத்தையும் தேசத்தையும் இன்னுமொரு தளத்திற்கு நகர்த்தி இருக்கிறார்கள்.

**பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வ செயற்பாடுகளும், அதன் முக்கியத்துவமும்**

பல்கலைக்கழக மாணவர்கள் தாம் சார்ந்துள்ள துறையில் ஆழமான அறிவை பெறும் போது சமூகமும், தேசமும் அதிகமான நன்மைகளை பல்கலைக்கழக தன்னார்வலர்களிடம் இருந்து பெறக்கூடியதாக இருக்கும் என்பதோடு, சமூகம் வேண்டி நிற்கும் ஆளுமையாகவும் தன்னை மாற்ற முடியும். இதன் மூலம் சமூகமும், தேசமும் மட்டுமன்றி தன்னார்வலர்களும் பல நன்மைகளை பெறுகிறார்கள்.

- நீங்களாகவே செய்த பல நன்மைகளையும் தாண்டி செய்யாத பல நன்மைகள் உங்களை மறுமையில் சுவனத்திற்கு அழைத்துச் செல்லும்.
- எதிர்கால சந்ததியினரில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராக மாறுவீர்.
- சுயதிருப்தி உருவாகும் இதன் மூலம் சந்தோசமான வாழ்வு உருவாகும்.
- சமூகத்தில் உயர் மட்டங்களில் உள்ளபவர்களுடனான தொடர்பு மூலம் சமூக, தேசிய சேவைகளில் பங்கெடுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

- உங்களுடைய வேட்கையைப் பகிர்வதன் மூலம் புதியதொரு ஆரோக்கியமான சமூகப் பாரம்பரியத்தை கட்டியெழுப்பலாம்.
- வலுவான சமூகக் கட்டமைப்பை உருவாக்க உங்களால் முடியும்.

இது தவிர, இன்னும் பல நன்மைகளை அடைய முடியும்.

**"எந்த ஒரு சமூதாயத்தவரும், தம் நிலையைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை."(திருக்குர்ஆன் 13:11)** என்ற அல்–குர்ஆனின் கூற்றுப் படி, தன்னார்வலர்கள் முதலில் தன்னையும், தொடராக சமூக, தேச ஒழுங்குகளில் நல்ல மாற்றத்தையும் விளைவிக்க, சமூகம் தொடர்பாகவும் அதன் மாற்றம் தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும்.

**தன்னார்வலர்கள், ஆளுமைகளாக மிளிர**

பொதுவாக தன்னார்வலர்களைப் பற்றி குறிப்பிட்டாலும், குறிப்பாக நாம் இங்கு சுட்டுவது **பல்கலைக்கழக மாணவர்களையே.** அவர்கள் தன்னார்வலர்களாகச் செயற்படும் போது இன்னும் அதிகமாகத் தம்மை வளப்படுத்துவதில் காலநேரங்களைச் செலவிட வேண்டும். சுயமான சில தயார்படுத்தல்களில் ஈடுபடுவதும் சிறப்பாக இருக்கும்.

- படைப்பாளனுடனான உறவை எப்போதும் சீராகப் பேணுதல்.
- இலக்கியம் தொடர்பான ஆர்வத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் மனிதனின் சிந்தனை, பண்பாடு தொடர்பான வித்தியாசங்களை உணர்ந்து பிரச்சினைகளை அணுகலாம்.
- தனது தாய் மொழி தவிர்ந்த சகோதர மொழிகளையும் கற்க முயற்சி மேற்கொள்ளுதல்.
- எந்த விடயத்தையும் நடுநிலையுடனும், சமூக நலனை முன்வைத்தும் முன்னெடுத்தல்.
- பிறரிடம் தனது பொருளாதாரத்தில் தங்கி இருக்காது இயலுமான அளவு சிறு வருமானமுள்ள சுய தொழில் ஒன்றை செய்தல்.
- தினமும் தூங்க செல்ல முன் தன்னைத்தானே ஒரு முறை சுயவிசாரணை செய்தல் (முஹாஸபா).
- தனது துறையில் ஆழமான அறிவை தேடிக் கற்று, அவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்.

போன்ற விடயங்கள் மூலம் தன்னார்வத் தொண்டர்கள் மனித சமூகத்திற்கு பயனுள்ள மனிதனாக வாழ தன்னை ஒழுங்குபடுத்த வேண்டும் இதன் மூலம் தான் சார்ந்துள்ள சமூகத்தினதும், தேசத்தினதும் பிரச்சினைகளைத் தனது சொந்தப் பிரச்சினைகள் என கருதி அதற்கான தீர்வுகளை இனங்கண்டு, அதனை தனது அன்றாட வாழ்க்கையோடு இணைத்து இது தொடர்பாக செயலாற்றும் சமூக, தேசிய அமைப்புகளுடன் கைகோர்த்து தனது வாழ்வை மனித சமூகத்தின் விடிவுக்காக எந்த வித எதிர்பார்ப்புமின்றி தனது நேரம், உடல் உழைப்பு மற்றும் சிந்தனை ரீதியான பங்களிப்பை வழங்குவதன் மூலம் தேசிய, சமூக மட்டத்தின் அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வச் செயற்பாடுகள் உறுதுணையாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## References


1. *"Top 10 countries: volunteering time for charities 2018 | Statista." https://www.statista.com/statistics/283354/top-10-countries-volunteering-time-for-charities/*
2. *"(University Education, 2018-2019)." http://www.statistics.gov.lk/*

# நல் மாற்றம் செய்...

**நசீபா இக்பால் ஏ.எல்**
ஆசிரியை,
அக்கரைப்பற்று.

மனிதா... மனிதா...
மனம் மாறும் மனிதா...
மனமாசுகள் நிறைந்தாய்...
மனிதம் இழந்தாய்....

மாற்றம் என்பதைத் தவிர
மற்றவை அனைத்தையும்
மாற்றி அமைத்தாய்..
மாநிலம் நீ ஆள

மக்களை வதைத்தாய்
மாபெரும் புரட்சியென்று
மதங்களையே விற்றாய்....
ஒட்டி நின்ற மாந்தர்களை
வெட்டி வேறாக பிரித்தாய்...
பட்டு போன்ற உள்ளங்களில்
கொட்டும் விஷத்தைக் கலந்தாய்
சற்றும் கூட இரங்காத
சீற்றம் தன்னை உருவாக்கினாய்...

ஏ ! மனிதா....
ஏனிந்த ஆவேஷம்?
எதற்காக இந்த வெறி?
மதியை செலவு செய்து
மதியினில் கால் வைத்து
மேன்மை கண்ட நீ....
மாநிலம் எழுச்சி காண
மாற்றங்களை உருவாக்கி
மாறுபட்ட உலகை
மனம் விரும்ப மாட்டாயோ!?

மனிதம் தேடும் மனிதா...
மதங்களின் பெயர்களால்
மாசுகளை விதைக்காமல்
மானுட நேயங்களால் – நல்
மாற்றங்களை அறுவடை செய்....

இயந்திர உலகமதில்
இம்மியளவும் குறைவில்லாத
இதய சுத்த மாந்தர்களை
இயக்குவதற்கு வழிகள் செய்

அறிவின் வளர்ச்சியோடு
திறன்களை விருத்தி செய்து
மனப்பாங்குகளில் நேரான
மாந்தர்களைக் காணச் செய்


வறுமையில் பஞ்சமும்
வாழ்வில் செல்வமும்
வளமாகக் கைக்கொண்டு
வாழும் முறைகள் செய்...

செந்நெல் வயல் நிலமாய்
கன்னல் மிகை நலமாய்
மின்னும் பொன் பூமி காண
பசுமைப் புரட்சிகள் செய்...

மனிதா.....
இன்றைய இளைஞன் நீ
நாளைய தலைவனாமே
நல்லுலகம் நாளை படைக்கும்
நற்கரங்கள் உனதாமே

நாளைய தலைவா....
நஞ்சு வேர்களை இன்று
கொஞ்சமும் தயங்காமல்
மிஞ்சாமல் அழித்து விடு
தஞ்சமாய் இவ்வுலகம்
அஞ்சாமல் உன்னிடம்
அப்படியே சரணடையும்...


Freshers Welcome 2018/2019
Freshers Welcome 2018/19
Organized By Muslim Majlis of University of Jaffna
PHOTOGRAPHED BY
MANJITHA DASSANAYAKE

Freshers Welcome 2018/19
Organized By Muslim Majlis of University of Jaffna
PHOTOGRAPHED BY
MANJITHA DASSANAYAKE

Freshers Welcome 2018/19

PHOTOGRAPHED BY

Freshers Welcome 2018/19

Freshers Welcome 2018/19
Organized By Muslim Majlis of University of Jaffna
PHOTOGRAPHED BY
MANJITHA DASSANAYAKE

Freshers Welcome 2018/19
PHOTOGRAPHED BY

Freshers Welcome 2018/19
PHOTOGRAPHED BY


Freshers Welcome 2018/19
PHOTOGRAPHED BY

Freshers Welcome 2018/19

Freshers Welcome 2018/19
Organized By Muslim Majlis of University of Jaffna
PHOTOGRAPHED BY
MANJITHA DASSANAYAKE

Freshers Welcome 2018/19
Organized By Muslim Majlis of University of Jaffna
PHOTOGRAPHED BY
MANJITHA DASSANAYAKE

Freshers Welcome 2018/19

Freshers Welcome 2018/19

Freshers Welcome 2018/19

# Website Launching




























*" This article is posthumously published in favour of tributing his legendary contributions."*

# OPTIMIZING INTELLECTUAL AND HUMAN CAPITAL COMPETING SUCCESSFULLY IN THE GLOBAL KNOWLEDGE ECONOMY

**Late, Dr. M.A.M Shukri**
Director (Life time), Jami'ah Naleemiah Institute,
Sri Lanka.

Today at the global level changes are taking place in an accelerated pace. These changes are issuing forth new challenges and also new opportunities. These challenges must be addressed and opportunities must be utilized if any nation or community is to keep abreast with these changes and forge ahead in the contemporary competitive global situation.

The major change that we are currently experiencing is Globalization and its deep impact with many implications not only in the financial system of the world, but also in other spheres such as social and cultural. The Globalization process has made the integration of information technology an important component of trade and commerce, media and communication. There is a paradigm shift in all aspects of life bringing revolutionary changes in the social order. The most important change is the shift from industrial society to information society in which knowledge is playing a significant role, and the technology based on knowledge has replaced manual labour. It is this skill that forms the core element in achieving success in the new global market.

According to Peter Drucker, the strength of a society in future will be based on the strength of a society's knowledge and it is the learning societies that will lead the future generation. As knowledge assuming the role of the capital in the new economy, it is the knowledge workers who will be playing the key role in the development process, because it

is they who will make knowledge work. (Nik Mustapha, Hj. Nik Hassan, The Path of Global Prosperity, an Islamic Approach, in The Economic & Financial Imperatives of Globalization ; An Islamic Response, IKIM, Malaysia, 2000, p.32)

In this context one must have a clear perception of the two basic terminologies that are related to the subject under discussion. They are, "Human Capital" and "Knowledge Economy".

Human Capital is generally defined as follows:

> *"Human Capital is the knowledge and skill embodied in an individual as a result of education, training and skill which is required for productive work. Human Capital is acquired through education and training"*

In the production of the human capital in the contemporary world, knowledge plays the most important and significant role. It is knowledge and training in skills that generates and develop human capital. Hence, knowledge economy has become an important component of global economy. Knowledge economy which is also known as knowledge based economy or knowledge driven economy is generally defined as :

> *"An economy characterized by the recognition of knowledge as a source of competitiveness, the increasing importance of science, research, technology and also innovation in knowledge creation, the use of computers and the internet to generate, share, and apply knowledge"*

According to UNDP report in major OECD countries more than half of the GDP is knowledge based.

The growth and development in knowledge based industries requires investment on knowledge and the role of universities in this context assumes a new dimension. They are considered not only as producers of knowledge and transmitters of culture, but also as agents of economic growth.

In order to aim at a competitive edge in the knowledge based economy, the Muslim world must evolve a development strategy that would pave the way for the growth of human capital through investment on knowledge, education and training in skills.

In evolving such a development strategy, on the basis of a futuristic vision, the present state of the Muslim world must be taken into consideration in respect of its physical and human resources and also the internal and external challenges it encounters.

The Muslim world stretching from Morocco in North West Africa to Indonesia in South East Asia consists of countries that occupy an important position, controlling the main gateways of world trade. They are rich in natural resources and they produce more than

two third of worlds oil, 70% of its rubber, 67% of its spices, two third of all palm oil and half of all tin and phosphates. It is also rich in gas resources and endowed with mineral resources, with all these resources, they account for less than 5% of world economic production and more than 600 million of the Muslims live below the poverty line.

Human development in Islamic countries is lower than their per capita income. This reveals the startling truth that income derived from the resources is not fairly distributed among the people. The overall Human Development Index for Islamic countries is only 0.393 placing Islamic world in low human development category.

The major problem faced by the Muslim world is widespread poverty and illiteracy. It is this state of backwardness that acts as the major hurdle for development in the Islamic world. Muslim world also encounters the problem of debt burden. Another major factor that acts as a deterrent to development is the regional conflicts and the high defense expenditure which drain the economy of the Muslim countries. As the fair share of income is diverted to settle the foreign debts and for defense purposes, there is little allocation of resources for development in the field of education and social welfare.

> *"According to the statistics of International Institute for Strategic Studies at present the Muslim countries spend around 77 billion US Dollars on defense and nearly six million people are currently employed in this sector."*

(Ali Muhammad & Muhammad Ahsan, Globalization and Recolanisation, London, 2002,p.155)

In comparison to the amount of money spent on defense, the spending on education and investment on knowledge is rather very low.

If the Muslim Ummah is to forge ahead in the present competitive world, where knowledge and knowle*dg*e based economy plays an important role, knowledge development and investment on education must assume top priority. Human resource is the basic ingredient for development. "Man is the central element in development, non human factors with all their abundance can do very little without human resources and in the development of human resources education plays an important role".*(Siddeek, AHM, Mobilization of Resources for Development, AJISC, vol. iv, No. II, 1989, pp.248-249)*

In the present world the countries invest on education will be the most competitive. It is only through the education that a nation can attain professional skill which will lead to efficiency which is an important component of human resource development.

In the development of human resources, knowledge and education plays an important role. In the present world the countries invest on education will be the most competitive. It is only through education that a nation can attain professional skill which leads to efficiency, which is an important ingredient of development.

Widespread illiteracy is one of the major challenges faced by the Muslim world and organized effort must be made to spread literacy at all levels of the society. Eeven at the higher level in the field of education, the Muslim countries are far behind non Muslim countries.

> *"Statistics reveal that in the Muslim world there is lower enrollment in science studies and inadequate research and development funding and facilities, poor industrial infrastructure, absence of S & T manpower. Hence, in the Muslim world policy planning, HRD planning are some of the areas that demands serious attention."(Khan, A.G, Restricted Areas of S & T and Ways to Develop such Technologies in the Muslim World, International Conference on Science in Islamic Polity in the Twenty First Century, COMSTECH, Islamabad, 1995)*

As already observed above, the world today is entering a new phase in the field of knowledge and in the ways of developing human capital. The age of information technology had made a paradigm shift in knowledge. Today, thanks to information technology, the information can be transmitted faster, cheaper and with much greater easy.

It is this new skill in information technology that form the core element in achieving success in the knowledge based economy.

> *"According to the UNDP report that in the major OECD countries more than half of the GDP is knowledge based. Studies reveal that over the next decade, 30% of the world's economic growth and 40% of the new employment will be driven by information technology, but the developing countries and the Islamic world that falls within this group, face a stupendous challenge in acquiring the knowledge and skill in information technology. According to UNDP report the information technology field is dominated by those who control world's knowledge, but the Islamic world does not have the knowledge and skill to compete with them." (Ali Muhammad & Muhammad Ahsan, Globalization and Recolanisation, London, 2002, p.124)*

The acquisition of hardware, development of software and all other know have related to IT, such as training and maintenance needs heavy financial investment. How can the Islamic world with its present rate of illiteracy and poverty hope to achieve competency in this filed and develop its human capital is the major issue that needs to be addressed as a matter of urgency. Even owning a personal computer is a luxury for an average individual in a Muslim country. It is stated that buying a personal computer costs an average US citizen about a month's pay whereas for a citizen of Bangladesh, it costs his eight years of wages. Due to the prevalent rate of poverty and illiteracy, the lower rates of internet users are to be found in the Islamic world.

In order to arrest this trend serious effort must be taken for the promotion of education and elevation of poverty in any plan that is envisaged for the development of human capital in the Muslim world. Another important issue that must be taken into consideration in this respect is the production of quality leadership, because the act of transforming ideas into practical programmes requires able, skilled and experienced leadership. The formulation of ideas and the vision, coupled with creation of an effective and dynamic leadership is important at all levels to translate these ideals into reality and to manage the changes.

If the Muslim world is to forge ahead meeting the challenges that are posed by the knowledge based society, attain progress and advancement in the field of human development on the lines stated above, the Muslim world must evolve a comprehensive plan identifying the problems and strategies that must be adopted to solve these problems.

In drafting this comprehensive plan the following areas must be taken into consideration:

1. Promotion of knowledge and education, with the objective of reducing the present rate of illiteracy.

2. Increasing investment on science education and also ensure higher enrollment in science education.

3. Increasing investment on scientific and technological research.

4. Identifying the changing role of the universities in the knowledge based society and effecting changes in the university curriculum to suit the needs of the modern knowledge based society.

5. Evolving a national policy for rational allocation of resources having major focus on education and human resource development.

In order to implement this plan and strategy, the institutional machinery of the existing international Islamic organizations and institutions must be utilized to the maximum possible level. The OIC can function as the major agency to incorporate the services of the institutions such as IDB, Islamic Foundation for Science, Technology & Development and also ISESCO to attain the objective of optimizing intellectual and intellectual and human capital for the regeneration of the Muslim world.




# தேசிய, சமூக மட்டத்தின் அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வ செயற்பாடுகளின் முக்கியத்துவமும், சமூகம் வேண்டி நிற்கும் ஆளுமைகளும்

**அப்துல்லாஹ் முஹம்மது ஆதில்**
கணித மற்றும் புள்ளிவிபரவியல் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

தேசிய, சமூக மட்டத்தின் அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பை மிகச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு தேசிய சமூகம் எனும் எண்ணக்கரு பற்றிய தெளிவும் புரிதலும் முக்கியத்துவம் பெறுகிறது.

**தேசிய சமூகமும் பல்கலைக்கழகமும்**

**தேசிய சமூகம் பற்றிய எண்ணக்கருக்கள்**

தேசிய சமூகம் என்பதற்கு அரசறிவியலாளர்கள் தந்துள்ள வரைவிலக்கணங்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவையாகும்.

- பொதுவான மொழி பொதுவான தொன்மைச் சிறப்பு ஆகியவற்றால் இணைக்கப்பட்ட சனத் திரளைக் குறிக்கும். (லீகொக்)
- பிறப்பினாலும் மரபினாலும் பொது மொழியாலும் ஒன்றுபட்ட மக்கள் குழுவைக் குறிக்கும். (கால்வோ)
- மக்கள் தாம் புரிந்து கொள்ள முடியாத ஓர் உணர்வின் மூலம் ஒன்றாக கட்டுப்பட்டு இருப்பதே தேசிய சமூகம். மேலும் ஒரே மொழியினைப் பேசுகின்றவர்களாக அல்லது ஒரே இனத்தினைச் சேர்ந்தவர்களாக மக்கள் இருக்காவிட்டாலும் குறைந்தபட்சம் கடந்த காலச் சிந்தனைகளை நிறைவேற்றியவர்களாகவும் தங்களுடைய எதிர்காலச் சிந்தனைகளை அல்லது விருப்பினை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். (ஏர்னெஸ்ட் ரெனன்)

பொதுவாக மொழி, மதம், இனம், ஒருமைப்பாடு, கலாசாரம், அரசியல் உணர்வு போன்ற பண்புகளையும் பொதுமைப்பாடான வரலாற்றையும் கொண்ட மக்கள் குழுமத்தை குறிக்கும் தேசிய சமூகம் என அடையாளப்படுத்த முடியும்.

ஒரு மக்கள் கூட்டத்தை தேசிய சமூகம் என அடையாளப்படுத்துவதாயின் அது பின்வரும் பண்புகளை பெற்றிருத்தல் வேண்டும் என்பது மேற்குறித்த வரைவிலக்கணங்களில் இருந்து தெளிவாகிறது.

1. பன்மைத்துவ சமூக கலாசார கட்டமைப்பு (Pluralism) (பல்வகை இனம், மதம், மொழி, கலாசாரம், நம்பிக்கை, வழக்காறுகள், தரைத்தோற்ற வேறுபாடுகள்).
2. பல்லினங்களையும் இணைப்பதை நோக்கமாக கொண்ட ஒரு சித்தாந்தம்.
3. பொதுக்கொள்கை
4. பொது மரபு

தேசிய சமூகங்களுக்கு உதாரணமாக ஸ்விட்சர்லாந்து, இலங்கை, இந்தியா, பெல்ஜியம், ரஷ்யா போன்ற நாடுகளை குறிப்பிடலாம்.

மேற்கூறிய தேசிய சமூகத்தின் பண்புகளிலிருந்து பன்மைத்துவ சமூக கட்டமைப்பு, தேசிய சமூகத்தின் அடிப்படை பண்பாகும் என்பது தெளிவாகிறது. பொதுவாக இப்பன்மைத்துவ சமூக கட்டமைப்பின் பிரதிபலிப்பாக பல்கலைக்கழகங்களை கருதலாம். ஆகவே பல்கலைக்கழகங்கள் தேசிய சமூகத்தின் சிறிய மாதிரியுருக்கள் என புரிந்து கொள்ளலாம்.

பல்கலைக்கழகங்கள் என்பது வெறுமனே பட்டப் படிப்பையோ, மேற்படிப்பையோ மாத்திரம் வழங்கும் கல்வி சார் நிறுவனங்கள் அல்ல. சமூகவியல் கண்ணோட்டத்தில் அவை பல்வகை இனம், மதம், மொழி, கலாசாரம், பொருளாதார வகுப்பு, பிராந்தியங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர் தொகுதியை கொண்ட நிறுவனங்கள் ஆகும்.

முன்னணி வலைத்தளங்களின், ஜுலை 2020 வரை கிடைக்கப் பெற்ற தரவுகளிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபர ஆய்வின் படி உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 28,000 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. உலகளவில் அதிக பல்கலைக்கழகங்களை இந்தியா கொண்டுள்ளது. தரவுகளின் படி இந்தியாவில் 4,381 பல்கலைக்கழகங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 3,254 எண்ணிக்கையில் அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. சீனா 2,595 பல்கலைக்கழகங்களை கொண்டுள்ளது. அந்த வரிசையில் இல.16, 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 17 பல்கலைக்கழகங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள்,

- தேசிய சமூகத்தின் ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்திற்கும், புரிந்துணர்வு மற்றும் சக வாழ்விற்குமான களங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.
- தேசம் மற்றும் தன் சார் சமூக அபிவிருத்திக்கு பங்காற்றும் மானுட வளங்களை உற்பத்தி செய்கின்றன.
- மனித நேயமிக்க நற்பிரஜைகள் உருவாகும் வாய்ப்புக்களை வழங்குகின்றன.

- அறிவு, தொழிநுட்ப மட்டத்தில் தேசத்தையும், சமூகத்தையும் அடுத்த மட்டத்திற்கு நகர்த்திச் செல்கின்றன.
- பொருளாதாரப் பிண்ணனியில் பெரும் பங்காற்றுகின்றன.

மேற்கூறிய விடயங்களுக்கு அமைய தேசிய சமூக மட்ட அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழகங்களின் வகிபாகம் இன்றியமையாததாகிறது.

பல்கலைக்கழகம் எனும் போது அதன் தலையாய மானுட வளம் மற்றும் உற்பத்தி பல்கலைக்கழக மாணவர்கள் தான். இலங்கையில் 17 மாநில பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால் நாட்டின் பல்கலைக்கழகங்களின் மட்டுப்படுத்தப்பட்ட திறன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழக நுழைவு தேர்வில் கலந்து கொள்ளும் 350,000 மாணவர்களில் சுமார் 30,000 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். உயர் கல்விக்காக ஆண்டுதோறும் சுமார் 12,000 இலங்கை மாணவர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். *(http://www.universityworldnews.com)*

பல்கலைக்கழக மாணவர்கள் மீது தேசிய சமூகத்தின் பெருமளவு எதிர்பார்ப்புகளுடன் அரசு, நாட்டு மக்களின் வரிப்பணத்தின் பெரும் பகுதியை அரச பல்கலைக்கழகங்களுக்காக செலவிடுகிறது.

வருடாந்த பல்கலைக்கழக நிதி ஒதுக்கீடு – 2021 (மில்லியன்களில்)

| Category | Estimates submitted by the UGC – 2021 | Estimates approved NBD - 2021 |
|---|---|---|
| **Recurrent Grants** | 63,752 | 53,995 |
| **Capital Grants** | 40,947 | 8,300 |
| **Total** | s104,699 | 62,295 |

*(HEAD No.214 – University Grants Commissions (UGC),Financial circular 08/2020 : Annual Allocation – 2021)*

தேசிய சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கும், வரிப்பணத்திற்கும், சமூகத்திற்கும் என்றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆகிறார்கள் பல்கலைக்கழக மாணவர்கள். அந்த வகையில் தேசிய சமூக மட்டத்தின் அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வ செயற்பாடுகளின் முக்கியத்துவமும் சமூகம் வேண்டி நிற்கும் ஆளுமைகளும் எனும் தலைப்பில் இவ்வாய்வு காலத்தின் தேவை கருதி முன்வைக்கப்படுகிறது.

**தேசிய சமூக அடுத்த கட்ட நகர்விற்கு பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வ செயற்பாடுகள்.**

தேசிய சமூகத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் பட்டப்படிப்பையும் தாண்டி இன்ன பிற தன்னார்வ செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுவது முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வாறான தன்னார்வ செயற்பாடுகளுக்கான சில உதாரணங்களை இங்கு காணலாம்.

**1.கருத்தரங்குகளை (Seminar) மேற்கொள்ளல்**

பின்தங்கிய பிராந்திய பாடசாலைகளை இனங்கண்டு உயர் தர பரீட்சைக்குப் பின்னரான இலவச தொழில் வழிகாட்டுதல், கல்வி வழிகாட்டுதல் மற்றும் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்கான கற்கைநெறிகளை தெரிவு செய்வதற்கும் மற்றும் விண்ணப்பிப்பதற்குமான கருத்தரங்குகளை நடாத்துதல்.

**2.கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்**

புத்தக, புகைப்பட, கலை மற்றும் அறிவியல் கண்காட்சிகளை ஒழுங்குபடுத்தி புதிய கலைஞர்கள் மற்றும் மாணவர்களின் புத்தாக்க சிந்தனைகளுக்கான களங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். புத்தகக் கண்காட்சிகள் மூலம் பகுத்தறிவு மிக்க சமூகத்தை கட்டியெழுப்பல். அத்தோடு பின்தங்கிய பிராந்திய பாடசாலைகளுக்குப் புத்தகங்கள் அன்பளிப்பு செய்யும் செயற்றிட்டத்தை மேற்கொள்ளல்.

**3.பட்டறை வகுப்புக்களை (Workshop) நடாத்துதல்**

சினிமா, புகைப்பட, வானியல், அறிவியல் மற்றும் இன்னபிற பட்டறை வகுப்புக்கள் மூலம் அடுத்த தலைமுறையினரின் முன்னேற்றகரமான சிந்தனைகளுக்கு வழி வகுத்தல்.

**4.பன்மைத்துவத்தை அங்கீகரிக்கும் அடுத்த தலைமுறையை கட்டியெழுப்பல்**

பல் கலாசாரங்களையும் புரிந்து நட்புறவுடன் அணுகும் தலைமுறைக்கான ஒருமைப்பாட்டுத் தளங்ளை உருவாக்கிக் கொடுத்தல்.

**5. சமூக அநீதிகளுக்கு எதிரான அஹிம்சை முறையிலான கண்டனத்தையும் மாற்று வழிமுறைகளையும் முன்வைத்தல்**

இதுவொரு பரந்த தலைப்பாக பேசப்பட வேண்டிய விடயமாகும். பல்கலைக்கழக மாணவர்களின் குரல் என்பது தேசிய சமூகமும் சர்வதேச சமூகமும் மதிப்பளிக்குமொன்று என்றவகையில் சமூக அநீதிகளை தேசிய சமூகத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் பதிவு செய்ய வேண்டிய கடப்பாடு பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது.

**பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் சமூகம் வேண்டி நிற்கும் ஆளுமைகள்**

முறையான கல்வி மனிதர்களின் ஆளுமையை விருத்தி செய்வதில் பெரும் பங்காற்றுகிறது. அவ்வகையில் மக்களின் பொதுப்புத்தியில் உயர்நிலைக் கல்விசாலைகளான பல்கலைக்கழகங்கள் ஆளுமை விருத்திக்கான தளங்களாகும். ஆகவே பல்கலைக்கழகங்களின் உற்பத்திகளான மாணவர்களிடத்தில் தேசிய சமூகமும் பெருமளவு ஆளுமை விருத்தியை வேண்டி நிற்கிறது.

**1. நற்பிரஜைத்துவம்**

நற்பிரஜைத்துவம் என்பது ஒருவர், தான் ஒரு பிரஜை என்ற வகையில் தனது வகிபாகத்தை முறையாகவும் சரியாகவும் நிறைவாகவும் மேற்கொள்ளுவதைக் குறிக்கும். நற்பிரஜைத்துவ எண்ணக்கருவானது பல விழுமியக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்விழுமியங்கள் பூரணமாக வெளிப்படும் போதே நற்பிரஜைத்துவம் என்பது முழுமை பெறுகிறது. அவையாவன,

- நாணயமாக நடத்தல்
- பரிவு காட்டல்
- மதித்தல்
- பொறுப்புணர்ச்சி
- துணிச்சல்
- தேசப்பற்று

மேற்குறிப்பிட்ட ஆறு தூண்களுமே நற்பிரஜைத்துவத்தின் பிரதான கருப்பொருளாக அமைகின்றன. நடைமுறையில் நற்பிரஜை என்பவர்,

- பிறரையும் அவர்களது உடமைகளையும் மதிப்பவராக இருப்பார்.
- பிறருக்கு உதவுபவராகவும் பரிவு காட்டுபவராகவும் இருப்பதோடு பிறருடைய நலனுக்கு முன்னுரிமை வழங்குவார்.

- பிறருடைய கருத்துக்களைச் செவிமடுப்பார்.
- உதவி தேவைப்படும் மக்களுக்கு உதவுவார்.
- சூழலை மதிப்பார், அதற்கு எத்தகைய பங்கமும் விளைவிக்கமாட்டார்.
- சிரமப்பட்டு உழைப்பார்.
- பண்பாடாகவும் இனிமையாகவும் நடப்பார்.
- அரசறிவியல் துறையிலும் சமூகவியல் கண்ணோட்டத்திலும் நற்பிரஜை தொடர்பாக வழங்கப்படும் விளக்கங்களின் சாராம்சமே இவை.

**2. ஆக்கபூர்வமான சிந்தனை**

ஆக்கபூர்வமான சிந்தனை புதிய விடயங்களை முயற்சிக்கவும், புத்தாக்க சிந்தனைகளுக்கும், சூழ்நிலைகளைக் கையாளவும், நவீன மாற்றங்களோடு இசைந்து பயணிக்கவும், சவால்களை சமாளிப்பதிலும் என திறன் விருத்தியில் பங்காற்றுகிறது.

**3. தலைமைத்துவம்**

பல்கலைக்கழக மாணவர்களிடம் சமூகம் வேண்டி நிற்கும் முதன்மையான ஆளுமைப் பண்பு தலைமைத்துவம் ஆகும்.

தலைமைத்துவம் என்பது திறமையான தொடர்பு, மேற்பார்வை மற்றும் உத்வேகம் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு இலக்கை அடைய வரையறுக்கப்பட்ட மற்றும் இருக்கும் மனித வளங்களை திறம்பட நிர்வகிப்பது தலைமைத்துவமாகும்.

**தலைமைத்துவ வடிவங்கள்**

**ஏகாதிபத்தியத் தலைமைத்துவம்**

இங்கு ஆட்சியாளன் தாமே தனித்துத் தீர்மானம் எடுப்பதோடு குழு உறுப்பினர்கள் கருத்துக்கு மதிப்பளிப்பதில்லை.

**ஜனநாயகத் தலைமைத்துவம்**

இங்கு ஆட்சியாளன் தீர்மானம் எடுக்கும் போது குழு உறுப்பினர்கள் கருத்துக்கு மதிப்பளிப்பதோடு கூட்டாகத் தீர்மானம் எடுத்து கூட்டாக நிறைவேற்றுவார்கள்.

**தாராண்மைத் தலைமைத்துவம்**

இங்கு எல்லா குழு உறுப்பினர்கள் கருத்துக்களும் கருத்திற் கொள்ளப்படுவதால் இத் தலைமைத்துவத்தின் கீழ் குழப்பநிலை ஏற்படலாம்.

சமூகம் பல்கலைக்கழக மாணவர்களிடம் ஜனநாயக தலைமைத்துவத்தை எதிர்பார்க்கிறது. ஜனநாயக தலைமைத்துவ பண்புகளாவன,

- பிறருடன் நல்லுறவைப் பேணல்.
- அர்ப்பணிப்புடன் செயற்படல்.
- பக்கச் சார்பின்றி நேர்மையாக நடத்தல்.
- பொது நலனில் அக்கறையாக இருத்தல்.
- உறுதியான தீர்மானங்களை எடுத்தல்.
- குழு உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படல்.
- உணர்ச்சி வசப்படாதிருத்தல்.

**4. தூர நோக்கு**

உடனுக்குடன் விளைவுகளை எதிர்பார்க்காது நீண்ட கால இலக்குகளை வகுக்கவும், செயற்படுத்தவும் கூடிய பொறுமை காணப்படல் வேண்டும்.

**5. பகுத்தறிவு சிந்தனை**

**6. பன்மைத்துவத்தை அங்கீகரித்தல் மற்றும் நல்லிணக்கம், சமூக நட்புறவு**

இலங்கை போன்ற பன்மைத்துவ இனம், மதம், மொழி, கலாசாரம், நம்பிக்கை, வழக்காறுகள், தரைத்தோற்ற வேறுபாடுகள் நிறைந்த நாட்டில் அப்பல்வகைமையை அங்கீகரிக்கவும் பரஸ்பரம் புரிந்து கொள்வதற்குமான ஒருமைப்பாட்டுத் தளங்கள் இன்றியமையாதவையாகும். அவ்வாறானதொரு ஒருமைப்பாட்டுக்கான தளம் பல்கலைக்கழகம் என்றால் மிகையாகாது. ஆகவே இப்பல்கலைக்கழக மாணவர்களிடம் சமூகம், பன்மைத்துவத்தை மதித்தல் மற்றும் நல்லிணக்கம் முதலிய ஆளுமைகளை எதிர்பார்க்கிறது.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்களிடம் சமூகம் பெருமளவு எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறது. அதனைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது.

**ஆய்வின் விதந்துரைகள்**

**பல்கலைக்கழக மாணவர்களுக்கான விதந்துரைகள்**

வரிப்பணத்தின் பெரும்பகுதியை பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் தேசிய சமூகம் பல்கலைக்கழக மாணவர்களை ஆயிரமாயிரம் எதிர்பார்ப்புக் கண்களோடு நோக்குகிறது. அதனை உணர்ந்து சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய தன்னார்வச் செயற்பாடுகள் மூலம் சமூகத்திற்கு தொண்டாற்ற வேண்டிய பொறுப்பு பல்கழைக்கழக மாணவர்களுக்குரியது.

**உசாத்துணை நூல்கள்**


- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக மாணவர் சாசனம் (2012)
- University Grants Commissions (UGC), HEAD No.214 – Financial circular Annual Allocation – 2021
- Sunil Chandrasiri, Financing of University Education in Srilanka. Vol.45, No.1 (Jan.,2003)
- University Grants Commissions (UGC), Student Enrolment – Statistics (2018)
- ஏ.சர்ஜுன் ரூ ஏ.எம்.றிபான் (2012), சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள் (2nd ed., pp. 10-11).
- அபுல் அஃலா மௌலானா மௌதூதி (1980), பல்கலைக்கழகமா? பழிபீடமா? (1st ed., pp. 5-20).
- ஏ.ஸீ.அகார் முஹம்மத், இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சிறுபான்மை சமூகமும் நற்பிரஜைத்துவமும் (2020).
- Lawrence Stone, The University in Society, Volume I.
- அ.மார்க்ஸ், மாற்றுக் கல்வி – பாவ்லோ ஃப்ரெய்ரே (2018).
- Jayaweera,Suwarna (1991), University and Opportunity: Social Class, Education (pp. 6-14).



# பழிவாங்கும் தேவதை

**பேராசிரியர். கலாநிதி. என்.சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


சமூகவியலாளர்களின் மருத்துவத்துறைசார் ஈடுபாடு என்பது மருத்துவ நிபுணர்கள், மற்றும் மருத்துவக் கவனிப்பினை வழங்கும் ஏனையோருக்கும் அப்பாற்பட்டதாக அமைகின்றது. ஒருகாலத்து சேவைத் துறையாகக் கருதப்பட்ட மருத்துவம் இன்று நிறுவனங்களில் ஒன்றாக சமூகவியலாளர்களால் நோக்கப்படுகின்றது. நலம் பற்றிய உடற்தொழிலியல்சார் வரைவிலக்கண மட்டுப்பாட்டினை கடந்து சமூக பண்பாட்டு நோக்கிலான விரிந்த பொருளினைத் தருவதாக / தேடுவதாக மருத்துவ சமூகவியல் (Medical Sociology) ஆர்வத்தினைக் காணலாம்.

நலம் என்பது நோயற்ற நிலை என்ற மருத்துவ வரைவிலக்கணம் கடந்து உடலும் உள்ளமும் சமூக நலனும் இசைந்த நிறை வாழ்வாக கொள்ளப்படுகின்றது. நோய்வாய்ப்பட்ட தனியனைக் கவனிப்பது மருத்துவம் என்பதற்கு அப்பால், நோயே வராத நல்வாழ்வை உறுதி செய்வதாக சமூக பண்பாட்டியல் அணுகுமுறை அமைந்தது. இயற்கையோடு இசைந்த வாழ்வு, நல்ல சுகாதார பழக்கவழக்கங்கள், போஷாக்கான உணவு, பொது சுகாதார மேம்பாட்டுக்கான சமூக சூழமைவு என்னும் எங்கள் மரபுவழி மருத்துவ நியமங்களாகவே சமூகப்பண்பாட்டியல் தரிசனங்கள் அமைந்துள்ளமை ஈண்டு தெளிவாகின்றது. பின் தங்கிய நாடுகள் என முன்னர் விவரிக்கப்பட்டு தற்பொழுது கொஞ்சம் நாகரிகமாக 'வளர்ந்து வரும் நாடுகள்' (Developing countries) என அழைக்கப்படுகின்றன. மேலை அறிவும் தொழிநுட்பமும் பயனான பல நலன்களைத் தந்தமையை யாரும் மறுப்பதற்கில்லை, எனினும் நவீனமயமாக்கம் என்பதே மேலைமயமாக்கம் தான் என்றவாறு 'எங்களிடம் எதுவுமே இல்லை' என எங்கள் பண்பாட்டு வரலாற்றை, மேன்மைகளை புறந்தள்ளும் அவலம் அபத்தமானது. எங்கள் மனோபாவத்தில் பாரிய மாறுதல் அவசியமாகின்றது. அறியாமலேயே பாரம்பரிய மருத்துவ அறிவுக்கனிகளை புறந்தள்ளும் இன்றைய நிலைக்கு எதிரான விழிப்பூட்டல் இன்றியமையாததாகின்றது.

### அளவுக்கதிகமான மருந்தேற்றம் (Over Medicalization)

இன்று எல்லோரதும் கவர்ச்சி மையமாகியுள்ள மேலைமருத்துவ உலகம் பற்றிய உலகளாவிய சர்ச்சைகள் எங்கள் கவனத்தைப் பெறவேண்டும். அளவுக்கதிகமான மருந்தேற்றம் (Over Medicalization) என்ற பதம் இன்று மேலை பண்பாடுகளிடையே பிரபல்யமானது. மிகவும் வல்லமை

பெற்றதொரு சக்தியாக எழுந்துள்ள மருத்துவத் தொழிலும், அது சார்ந்த உற்பத்தித் தொழில்களும் மருத்துவம் தொடர்பான அர்த்தத்தினையே இன்று பெருமளவுக்கு மாற்றியுள்ளமையைக் காண்கின்றோம். தற்கால மருத்துவ மட்டுப்பாடுகள் பற்றிய இவான் லீச் இன் Limits to Medicine: Medical Nemesis: The Expropriation of Health அமெரிக்க மருத்துவத்தின் சமூக உருமாற்றம் தொடர்பான போல் ஸ்ரேயலின் The Social Transformation & American medicine போன்ற நூல்கள் வெளிப்படுத்தும் உண்மைகள், எங்கள் புலங்கள் இன்று எதிர்கொள்ளும் நிலைமைகளுக்கு கட்டியம் கூறுவன.




உயர்வருமானம், கட்டணங்களை வேண்டியவாறு தீர்மானித்தல் போன்ற சந்தை நிர்ணயங்களால் மருத்துவத்துறையானது அதன் சமூக பண்பாட்டுணர்வு நிலையினின்று விடுபட்டு பொருளீட்டும் தொழிலாகும் அவலம் இந்நூலில் விரிவாகவே விளக்கப்படும். மேற்கண்ட நிலமைகளினடியான உச்சநிலை விமர்சனமாக **'மருத்துவ விஸ்தரிப்பு மனித நலத்துக்கு ஆபத்தாகியுள்ளது'** எனும் இவான் இலீச் (Ivan Illich) இன் கருத்தாக்கத்தினைச் சந்திக்கின்றோம். **'பழிவாங்கும் தேவதையாகவே'** இன்றைய மருத்துவ உலகைச் சாடுவார் இலீச். இவான் இலீச் மேற்கண்ட கருத்தாக்கம் மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட கூற்றாக விமர்சிக்கப்படலாம். நோய்தடுப்பு, நோய்கண்டுபிடிப்பு, நோய் நீக்கம் தொடர்பான அறிவியல் வளர்ச்சி நிலைகளை அப்படியே புறந்தள்ளுதல் முடியாது. அதேவேளையில் இலீச்சின் கடுமையான விமர்சனத்தின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் சமூக சமநீதி பற்றிய அவர் உணர்வுகளை புரிந்திடுதல் இன்றியமையாதது. பல்வேறு விதமான சமூக சமமின்மைகள், முற்சாய்வு நிலைகள், பாரபட்சங்கள், சுயநலம் என நீளும் முதலாளித்துவ சமூக அமைப்பிடை, பலவிதமான நோய்களுக்கே குறித்த சமூக அமைப்பு காரணமாகிவிடுதல் வெளிப்படையானது. இந்த சமூக அமைப்பை உறுதி செய்வதாகவும், அதற்கு துணை போவதாகவும் மருத்துவ அமைப்பு காணப்படுவதே இங்கு இன்றைய மருத்துவத்துறை விமர்சிக்கப்படுதலின் அடிப்படையாகும். இலாபம் ஒன்றே இலட்சியமாக, நவீன மருத்துவம் சாதாரண மனிதனுக்கு எட்டாக்கனியாகிப் போனமை இன்றைய சமூக–முரண்பாட்டியல் பகுப்பாய்வுகளில் (Social–Conflict Analysis) மிகத் தெளிவாகவே விளக்கப் படுவதனையும் இங்கு கருத்திற் கொள்ளலாம்.



### மருத்துவமயமாக்கதிலிருந்து விடுபடல் (Demedicalization)

மேற்கண்ட விமர்சனங்களினடியாக மருத்துவ மயமாக்கத்திலிருந்து விடுபடல் (Demedicalization) எனும் செயன்முறை இன்று முதன்மை பெறக் காணலாம். நோய் நிலையிலிருந்து நலம், சிகிச்சையிலிருந்து தடுப்பு மருத்துவம் எனும் திசையில் மேலைமருத்துவ உலகின் நோக்கிலும் போக்கிலும் புதிய மாற்றங்களை அவதானிக்க முடிகிறது.

நலமான சமூக வாழ்வு, நோய்களே காணாத சுகவாழ்வு, எனும் இந்தக் கருத்ததாக்கங்கள் மீளவும் இயற்கையோடு இசைந்த, பெருமளவு பணத்தை வேண்டிநிற்காத எதிரான விளைவுகள் ஏதுமில்லாத எங்கள் பண்பாட்டு மரபுகள் கண்ட மரபுவழி மருத்துவ வாழ்வுக்கு எங்களை அழைத்து நிற்பதாக உணரமுடியும்.

இந்த அழைப்புக்கான எங்கள் செவிசாய்ப்பு எவ்வாறுள்ளது? மரபுவழி மருத்துவ முறைமைகளை மேலை அலோபதி மருத்துவ முறையுடன் ஒப்பிட்டு தாழ நோக்கும் எமது மனோபாவம் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டமையையே இங்கு மீள மீட்டிப்பார்க்க வேண்டி இருக்கிறது.

**மரபுவழி மருத்துவ முறைமைகளின் மேன்மை**

சித்த மருத்துவம், ஆயுள்வேதம், யுனானி, ஹோமியோபதி என மரபு வழியாகப் பேணப்படும் மருத்துவ பாரம்பரியங்கள் பலவற்றைக் காணமுடிகின்றது. இவை ஒவ்வொன்றும் தோன்றிய தேசச் சூழல் – கருத்தியலின் அடிப்படையாக சிறப்பான பண்புகளைக் கொண்டுள்ளன. இவ்வாறான சுதேச மரபுகள் தான் தொன்மையான மருத்துவ வாழ்வின் தொடக்கப் புள்ளிகள்.

எடுத்துக்காட்டாக, சித்த மருத்துவத்தினை எடுத்துக் கொண்டால் உலக மருத்துவ மரபுகளில் மிகத் தொன்மையான வைத்திய மரபுகளில் ஒன்றாக புகழ் பெறக் காண்கின்றோம். காப்பு, நீக்கம், நிறைப்பு என்னும் பிரதான இலக்குகள் கொண்டதாக அமைந்தது சித்த மருத்துவம். முதலில் அமைவது உடலில் நோய் ஏதும் வாராது காத்தலாகும். நீக்கம் என்பது நோயைப் பகுத்தாய்ந்து தீர்ப்பதனை குறிக்கின்றது. உடல் உரத்துக்கு காய கல்பம் போல அகத்தூய்மைக்கும் அகநிறைவுக்கும் யோகமும் ஞானமும் இன்றியமையாதனவாக உணர்த்தப்பட்டன.

சித்தமருத்துவம் போலவே ஆயுள் நலத்துக்கான உறுதியைத் தரும் பாரம்பரிய வைத்திய முறையாக ஆயுள்வேதம் சிறப்பு பெறக் காணலாம். ஆயர்வேத மருந்துகள் பெரும்பாலும் மூலிகைகளை மையமாகக் கொண்டு அமைகின்றன. இந்த மூலிகைகளை மரபுவழிபண்பாடு கண்டுகொண்ட அனுபவங்கள் மிகவும் ஆர்வத்திற்குரியன. நவீன மருத்துவம் கொண்டிருக்கும் பாரிய ஆய்வுகூட வசதிகள், கருவி கரணங்கள் ஏதுமின்றியே அனுபவ ஞானமாக காணப்பட்ட மருந்துகள் இன்றும் அருமருந்தாகவே பயன்படுவன. விஷம் நீக்கும் மூலிகையான 'சிறியாள் நங்கையின்' கதையை நீங்கள் அறிந்திருக்கக்கூடும் இரவு வேளை புற்றிலிருந்து வெளிப்பட்ட நாகத்தின் மீது கீரியொன்று தாக்குதல் நடத்துகின்றது. பதிலுக்கு நாகமும் பாய்ந்து கீரியை காயப்படத்துகின்றது. பாம்பின் விஷத்தினின்றும் விடுபட கீரி புல்வெளிப்பரப்பில் ஆங்காங்கே பரந்துள்ள மூலிகைகளை வாயினால் மென்றும் அவற்றின்மீது புரண்டும் கொள்கிறது. விஷம் தணிந்து தப்பித்துக் கொண்ட கீரியினை அவதானித்த மனிதன் விஷப்பாம்புக் கடியினின்றும் விடுபட சிறியாள் நங்கையை பயன்படுத்த ஆரம்பிக்கின்றான். மரபுவழி மருத்துவத்தின் இந்த நுண் அவதானங்களை வியக்கும் நவீன மருத்துவ உலகம் தனது மருந்துகள் பலவற்றை மரபுவழி மூலிகைகளினின்றும் உருவாக்கி வருகின்ற சங்கதி எம்மவரில் பலரும் அறியாதது.

இவ்வாறே யுனானி, நோயை மட்டும் பார்ப்பதில்லை. முழுமையாக மனித உடலையும் மனதையும் பார்க்கிறது. நோய்க்கு மருந்து அளிக்காமல் நோய்க்குள்ளானவரின் முழுதளாவிய நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கும் மருத்துவத்தையே தர விழைகிறது. எதிர்ப்பு சக்தியை அதிகரித்தால் நோய் தானாகவே போய்விடும் என்பதே யுனானி சிகிச்சையின் அடிப்படையாகும்.

மரபுவழி இயற்கை மருத்துவ முறையினை நோக்கினால் அங்கு மருந்துகளுக்கோ, மூலிகைகளுக்கோ முக்கியத்துவம் இல்லை உடலின் பிராண சக்தி தான் அனைத்திற்கும் ஆதாரம். நோயினால் உடல் நலிந்து விட்டது எனும் மருத்துவ நோய்க்கு பதில் இங்கு உடல் நலிந்ததால் நோய் வந்து விட்டது என்ற தெளிந்த கருத்தியலை காண முடிகின்றது. உண்ணும் உணவு அளவாக வேண்டப்படும் உயிர்ச்சத்துக்களைக் கொண்டதாக அமைய வேண்டும். உணவே மருந்து என்பது மரபுவழி மருத்துவ சாரமானது.

‘காலையில் வேண்டியளவு நீர் அருந்துங்கள் – யப்பானிய நீர்சிகிச்சை விளம்பரம் ஒன்று அறிவுறுத்துகின்றது.’ என சிலபேர் காலையில் தண்ணீர் குடிக்கத் தொடங்கியதைக் காண முடிகின்றது. இந்த நீர்சிகிச்சை யப்பானிய இயற்கை வைத்திய மரபின் வழியது. இதே இயற்கை வைத்திய நீர்ச்சிகிச்சை எங்கள் அப்பு ஆச்சி வைத்தியமாக எங்கள் பண்பாட்டு புலத்து நிலவிய விடயம் தான். இன்று யப்பானிய கண்டுபிடிப்பாகவேனும் எம்மவர்களை தொற்றிக் கொள்வது நல்லது தான். சூரிய ஓளி சிகிச்சை, விரதமிருத்தல், அமைதி, வணக்கம் என உடலும் உள்ளமும் சாந்தியும் உறுதியும் பெறும் வழிமுறைகளை மீளவும் நாம் கைக்கொள்ளும் போது நோயற்ற வாழ்வு என்பது குறைவற்ற செல்வமாக எம் வசமாகுமல்லவா?

இன்று உலகளாவிய மனுக்குலம் எதிர் கொள்ளும் ‘கொரோனா’ அவலத்திலிருந்து மீளுதற்கான வழிமுறைகளில் எங்கள் பாரம்பரிய சுகவாழ்வு நடைமுறைகளுக்கு தரப்படும் முக்கியத்துவம் நிலைபேறானதாக வேண்டும். இயற்கை வைத்தியமாக மரபுவழி பண்பாட்டின் சுக நல சித்ததாந்தங்களை காலாகாலமாக உணரப்பட்டு வந்த விடயங்களை நவ அறிவியலாக எங்களுக்கு இன்று வாய்த்துள்ள மருத்துவ சமூகவியல் சிந்தனைகளாக நாங்கள் பார்க்க வேண்டியுள்ளது ஒரு சுவாரஸ்யமான நிலைமை தான். உண்மையில் மருத்துவ சமூகவியல், மருத்துவ மானுடவியல் அறிவும் ஆய்வுகளும் மேலை உலகில் இவான் இலீச்சினால் ‘பழிவாங்கும் தேவதையாக’ பழிக்கப்படும் மருத்துவ உலகிற்காக பரிகாரங்களாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. எங்கள் புலங்களிலும் இந்தத் திசையிலான ஆய்வுகளும் அறிவுத் தேடல்களும் காலத்தின் தேவையாகவும் கடமையாகவும் உணர்த்தப்படுகின்றன.



# UNIQUENESS OF VOLUNTEERISM

**Shabnam Riswan**
3rd Year,
Faculty of Management Studies & Commerce,
University of Jaffna.

In the general perspective, the concept of volunteering refers to rendering of service by choice of free will for the benefit of a wider community by an individual, group, or institution without necessarily expecting monetary gain in full knowledge and appreciation of being a volunteer. In the recent periods, we can recognize that critical contribution that volunteering specially the university students volunteer activities as the essential act of citizens, a means for combating social exclusions, and an important contributor to the delivery of high quality public services needed by the society. As a whole university students volunteer activities are creating a greater impact on economic development, social inclusion and volunteers as individuals.

### The Unique Contribution Of Volunteering Towards Development

Volunteers help extend the reach of a range of development and goals by rendering services, facilitating access to services in health, education and many other areas to some of the poorest, most marginalized or most vulnerable communities, ensuring that no one is left behind. Beyond improved delivery of and access to services, university

students volunteer activities are building strong, reciprocal personal and working relationships by being embedded within communities, and in many cases coming from the communities in which they serve.

Volunteers and the people they work alongside have a mutual understanding of each other's experience, skills and networks and can generate solutions that are locally owned and sustained. This enables volunteers to contribute to long-term, culturally and contextually appropriate, respectful, effective and sustainable capacity development.

### Volunteering Is Empowering For Poor And Marginalized People

Volunteers build relationships based on trust with members of their communities and in turn help those communities establish ways of participating in and guiding their own development.

For poor and marginalized people, including minority indigenous peoples, refugees, those with disabilities and others who are all too often on the edges of society, the opportunity to volunteer is a chance to move from being a passive recipient to being actively engaged in development processes.

The act of volunteering by the students of the universities is often the first route through which individuals begin to actively engage in their community and become empowered to realize their rights.

### Beyond Race, Culture And Diversity

Relationships are powerful. Our one-to-one connections with each other are the foundation for change and building relationships with people from different cultures, often many different cultures, is key in building diverse communities that are powerful enough to achieve significant goals. To promote economic development, there are good opportunities you will need to work with people from several different racial, language, ethnic, or economic groups.

Volunteers of universities are able to build trusting relationships that are glue that holds people together as they work on problems. They work with people of diversity with an effort even when they are discriminated or demotivated because they know that hard work, commitment, good attitude and behavior along with knowledge can make drastic change in the society.

They build relationships beyond racial, ethnic, religious or socioeconomic group. They act as a hub by building relations and friendships around themselves that provides them with the necessary strength to achieve the community goals.

When looking around there are many societal forces that serve to separate us from each other. People with different economic groups and religions, ethnic groups, and race are often isolated from each other in schools, jobs and neighbors but this

environment is changed when coming to the field of volunteering by the students of the universities who put themselves different forms of situations that they will meet people of different cultures. They mingle with each other regardless of these matters and care for each other. They perform their services together that other people in the society will notice what true relation is and will be motivated to form relation with other diverse people. They have the opportunity to speak to people about the stereotypes and collection of misinformation the society has are with what they are fed with stored.

Volunteers have the capability to listen to others, their problems, fear, ideas and thoughts. Listening to other's stories would help to get a fuller picture about their lives, their feelings, and the richness of their lives, and according provide necessary help to enhance the lives of them which results in development of sustainable relation.

## Beyond Barriers

The students of the universities are working together and rendering their valuable services to the community that pave way for the development. The students of the universities who involve the volunteer activities are trying their best to enhance the life of the other people beyond the barriers they face. It may be the financial barriers that make themselves suffer and unable them to give their best at times or it may be the gender that draws a line in front of their movement specially in the case of females. The students of the Universities may be lacking with the necessary resources to provide the maximum potential, and in the era of rat race people are having short time for volunteerism. Moreover it includes the racial and cultural differences and may be in forms of languages, locations or physical reasons.

The volunteers believe that the best weapons against those barriers are knowledge and commitment in major cases and events to enlighten, enhance and empower underprivileged individuals and their community, also educating the new generation, young and older people of men, women and children to move beyond their barriers to reach full potential to make the country a better place.

They also cater the education needs of children from socially and economically disadvantaged background and empower the youth along with inspiring volunteerism. They physically involve themselves in rendering the services despite barriers.




The students of the universities are able to create that kind of relation to eliminate the mindset of racism, culture differences and other diversities through their molded behavior and attitudes.

## Virtual Volunteerism

During past volunteerism was rended by physically presenting themselves but due to the pandemic situation they are forced to engage in volunteering through virtual means such as webinars and workshop through zoom.

It has also provided the best solutions for those with problems such as busy schedule, distance, travelling, accommodation, illness etc. And, It is more flexible, can be global, less time intensive and a way through which people learn more about technology which has a great impact on development.

## Current Ways Of Volunteerism

Earlier period volunteerism was rended by physically presenting themselves in a location and provided their services as lectures or workshops for the students facing ordinary or advance level examination, career guidance programmes , issues related to harassments etc. And practically people were educated in the fields such as agriculture, laboratory testing etc.

But nowadays students of the universities offer their services through different ways and methods due to the prevailing condition in the country and their services broadened and covered a wide range of services specially to the students who were unable to continue their studies to face their exam were guided through zoom workshops and webinar which benefited a lot to the people. Career guidance programes are conducted by the students of the universities as the resource persons and people from various parts of the country are benefited.

Many awareness programmes are arranged, psychological workshops are held as people face many problems due to the lockdown and quarantine periods. Volunteerism has also taken a dimension through the YouTube channels, where the volunteers are engaging in services that reaches the globe.

Different non-profit organizations are recruiting the students of the universities from various parts to provide volunteerism as academic guidance sessions, tree planning campaigns, career guidance, motivation programmes and awareness sessions. Among them one of the organization is the Sarvodaya and Sri Lanka Unites who are utilizing the students of the universities as the resource persons in rendering their volunteer services to the society.

The service of Volunteerism should be encouraged and developed in order to contribute to the development of the country. The motivation will create and retain many volunteers from the universities who are young and energetic to meet the demand.

*"Volunteers do not necessarily have the time; they have the heart!"*

# கலங்கரை விளக்கம்

**அஷ்பாக் அஹமட் எம்.இஸட்**
இரண்டாம் வருடம்,
பொறியியல் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



“மனசுல இருந்த பாரம் குறைஞ்ச மாதிரி இருக்கு”, “இப்போ தான லைப் அ பத்தி ஒரு தெளிவு கிடைச்சது”, “என்னால முடியும் அப்டீங்கிற எண்ணத்த என் மனசுல நீங்க விதைச்சிட்டீங்க” இந்த மாதிரியான பின்னூட்டங்களை வாசித்த போது எங்கள் எல்லோருக்கும் அவ்வளவு சந்தோசமாக இருந்தது. நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சக்தி அவர்கள் “இந்த மாணவர்கள் இவ்வாறான ஒரு நிகழ்வினை ஒழுங்கு செய்து அதை நடாத்திய விதம் உண்மையில் பாராட்டத்தக்கது. மேலும் இங்குள்ள பார்வையாளர்களின் முகங்களில் இதன் வெற்றியை உணர்கிறேன்.” என்று கூறிய போது எழுந்த கரகோஷ ஒலி இன்னும் எங்கள் மனதை விட்டு நீங்கவில்லை. இவ்வாறு நிகழ்வு நிறைவுற்று நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டினை நோக்கி பயணத்தை தொடங்கினேன். பஸ்ஸில் ஏறி ஜன்னலோர ஆசனத்தை தேடி அமர்ந்து இன்றைய நாளை மனதில் அசை போட ஆரம்பித்தேன். என்னுடைய பையில் சுருட்டி இருந்த ஒரு பின்னூட்டல் காகிதம் என் கவனத்தை ஈர்த்தது. மெதுவாக அதை எடுத்து படித்த போது என் உடல் நடுங்க தொடங்கியது. வியர்வைத் துளிகள் பெருக்கெடுத்து உடலை நனைத்தன. கண் பார்வை ஒரு திசையில் நிலைக்குத்தி நின்றது. அதில் தொலைவில் தெரியும் கல்லடி பாலத்தின் வடிவம் விடையாக வீற்றிருந்து என்னை எதிர்நோக்கியது.

**(ஒரு வருடத்திற்கு முன்)**

அதிகாலை 5.30 என்ற கடிகார ஒலி கேட்டு அவசரமாகக் கண் விழித்தேன். இத்தனைக்கும் அப்போது தான் இலேசாக தூக்கம் என்னை தழுவியிருந்தது. “கிரியைக் காணவில்லை” என்ற செய்தி கேட்ட நாளில் இருந்து இதுவே என் வாடிக்கையாக இருந்து வருகிறது. வேண்டாவெறுப்பாக எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காலையுணவிற்கு மேசையினருகில் அமர்ந்த போது **“என்னடா கிரியப்பத்தி ஏதும் தகவல் தெரிஞ்சதா?”** என்ற அம்மாவின் குரலால் நிகழ்காலத்திற்கு திரும்பினேன். இருந்தாலும் இதற்கான பதில் என்னிடம் இல்லாத காரணத்தினால் தலையை **“இல்லை”** என்று அசைத்தபடி மீண்டும் யோசிக்கத் தொடங்கினேன்.

பல்கலைகழகத்திற்கு புறப்படும் வேளையில் **“நீ யோசிக்காத அவன் கோபத்துல இங்க எங்க சரி போய் இருப்பான். வேணும்னா பாரு இன்னைக்கு கண்டிப்பா வந்துருவான்.”** என்று அம்மா ஆர்வமூட்டி அனுப்பி வைத்தார். இந்த பதில் எவ்வளவு ஆபத்தானது என்று என் மனதிற்கு தெரியாமலில்லை. **“இரண்டாம் வருட மருத்துவ பீட மாணவன் ஒருவன் சந்தோஷமாக இருந்த நிலையில் திடீரென காணாமல் போனான்.”** என்பது

ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகவே எனக்குத் தோன்றியது. ஏனோ இன்றைய நாள் வேகமாக என்னை கடந்து சென்றது. மாலை நான்கு மணிக்கே வீட்டுக்கு செல்ல ஆயத்தமான போது நண்பனிடம் இருந்து ஒரு அழைப்பு **"மாறா..! அவசரமாக ஹொஸ்பிடலுக்கு வாடா, கிரி கிடச்சிடான்..!"** என்றதோடு அழைப்பு துண்டிக்கப்பட்டது. அவன் குரல் பயத்தினை உணர்த்திய போதே எனக்கு ஓரளவுக்குப் புரிந்தது. வைத்தியசாலைக்குச் சென்ற போது விடயம் முழுவதுமாகவே புரிந்து விட்டது.

பிணவறைக்கு வெளியே இருந்த கட்டிலில் உடலைக் கிடத்தி வைத்திருந்தார்கள். காணாமல் போன அன்றே இது நடந்திருக்க வேண்டும். உப்பி, மீன்களால் மெல்லப்பட்டு வெற்றுக் கண்குழியுடன் இருந்த அவனது உடல், தான் சுமந்து வந்திருக்கும் வேதனைகளை பறைசாற்றியது. "ஏதோ லவ் கேசாம். அதான் தற்கொலை பண்ணியிருக்கான்" என்று அருகிலிருந்தவர் முணுமுணுமுத்தார். இன்னும் அங்கு இருக்கும் பொறுமையைத் தொலைத்தவனாய் கனத்த மனதுடன் வீடு வந்து சேர்ந்தேன். எனது முகத்திலிருந்த கவலையின் வடுவை உணர்ந்த அப்பா "குளிச்சி உடுப்ப மாத்திட்டு வா. அவசரமா கொஞ்சம் வெளிய போயிட்டு வருவம்" என்று கூறினார். நானும் வெளியில் செல்ல நாடியதால் அவர் சொல்படியே ஆயத்தமாகி உந்துருளியில் புறப்பட்டோம். நாம் புறப்பட்ட இடம் கடற்கரையாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கேள்விக்குறியுடன் தந்தையை நோக்கினேன். "எனக்கு என்ன நடந்த என்டு தெரியும்" என்று கூறியபடி கடற்கறை மணலில் அமர்ந்து கொண்டார். நானும் மூன்று நாட்களாக என் மனதில் அடக்கி வைத்திருந்த கவலைகளை எல்லாம் கொட்டித் தீர்த்தேன். பொறுமையாக அவற்றை கிரகித்த என் தந்தை பதிலாக சொன்ன விடயங்கள் என் மனதை தொட்டன.

"தம்பி, இந்த மீன் பிடிக்க போறவங்கள பாத்தியா? நடுக்கடலுக்கு போய் சேரயில எப்பிடியும் இருட்டிடும். சுத்தியும் தண்ணி, இருட்டு ஆளுங்களும் கம்மி, சில நேரம் மழை, புயல் கூட வந்துரும். ஆனா இவங்க தைரியத்தோட, நம்பிக்கையோட திரும்பி வர என்ன காரணம்னு தெரியுமா?" என்று கூறி நிறுத்தினார். நானும் அதற்கான பதிலை அறிய ஆவலுடன் நோக்கினேன். அவர் புன்முறுவலுடன், "தூரத்துல தெரியுர சின்ன வெளிச்சம் தான். அது எதுவாக கூட இருக்கலாம். ஒரு நட்சத்திரமா, ஒரு கலங்கரை விளக்கமாகக் கூட இருக்கலாம். ஆனா அந்த வெளிச்சத்துல ஒவ்வொருவரும் கரையில காத்துக் கிடக்கிற தங்களோட அம்மாவ, அப்பாவ, சகோதரங்கள, நண்பர்களைப் பாக்குறாங்க. அந்த நம்பிக்கை தான் அவங்களுக்கு வாழனும் எங்குற தைரியத்தையும், உத்வேகத்தையும் கொடுக்குது. அந்த வெளிச்சம் இருக்குற வர யாரும் தங்களோட முடிவ தாங்களே தேடிக்க மாட்டாங்க" என்று கூறி முடித்தார். திரும்பி வீட்டுக்கு வந்து சேர்ந்த போது மனம் ஒரு முடிவை எட்டியிருந்தது. அடுத்தவாரம் நடைபெற இருக்கும் மாணவர் கலந்துரையாடல் நிகழ்வில் அந்த முடிவின் முதற்கட்டதினை செயற்படுத்துவது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

"நண்பர்களே! இன்றைய நவீன உலகில் எமது சமூகம் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றது. அதற்கான தீர்வைத் தேடும் நபர்களில் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாமும் முக்கிய பங்காளிகளாவோம். அவ்வாறான ஒரு நிலையில், இன்று எம் சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினை தான் 'அதிகரித்து வரும் தற்கொலைகளின் எண்ணிக்கை' ஆகும்.

மேலும் இவ்வாறு தற்கொலை செய்துகொள்ளும் நபர்களில் பெரும்பாலானோர் 15–25 வயது வரையுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தனியாக வசிக்கும் முதியோர்களும்

இவ்வாறான முடிவினை அணுகுவது வருந்தத்தக்கது. இந்நிலை மேலும் வலுவடைவதை தடுக்க என் மனதில் தோன்றிய ஒரு எண்ணத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இதனை ஒரு பொருத்தமான நெறிமுறையாக வளர்த்தெடுக்கக்கூடிய வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் பகிர்ந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன். அதுதான் ‘கலங்கரை விளக்கம்’. நிச்சயமாக, நானே எதிர்பாராத வகையில் மாணவர்களிடையே இந்த எண்ணத்திற்கு நல்ல வரவேற்பு உருவானது. அந்த நிகழ்விலேயே இதனை ஒரு செயற்றிட்ட நெறிமுறையாக மாற்றுவதற்கு ஒரு குழு தேர்வு செய்யப்பட்டது. மேலதிக உதவிகளுக்காக பல்கலைக்கழக உளவள கற்கை நெறிப்பிரிவு விரிவுரையாளர்களும் பொறுப்பேற்க முன்வந்தனர். ஒரு பெரும் மாற்றத்திற்கான முதலாவது அத்திவாரம் அன்று போடப்பட்டது.

ஆறு மாத கால தொடர்ச்சியான கற்கைகள் மற்றும் ஆய்வுகளின் மூலம் “கலங்கரை விளக்கம் – வாழ்வின் வழிகாட்டி” முதலாம் அமர்வு எமது பல்கலைகழக மாணவர்களுக்காக விஞ்ஞானபீட கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. ‘பல்கலைக்கழக மாணவர்கள் பயணிக்க வேண்டிய இலக்குகளும், எதிர்கொள்ள வேண்டிய சவால்களும்; என்ற தொனிப்பொருளோடு முன்வைப்புக்கள், உளநல வளவாளர் உரை, இந்த பாதையை வெற்றிகரமாக கடந்து வந்தோரின் அனுபவங்கள், மேலும் பார்வையாளர்களுடனான செயற்பாடுகள் என்ற ஒழுங்கில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்வின் முடிவில் கிடைத்த பின்னூட்டங்களை வாசித்தறிந்ததில் பெரும்பாலான நிறைகளோடு, மாற்றியமைக்கப்பட வேண்டிய சில சிறு குறைகளும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இரு கருத்துக்கள் பரவலாக எழுதப்பட்டிருந்தன. முதலாவது ‘இந்நிகழ்வு நேரான ஒரு எண்ணத்தை உள்ளத்தில் விதைக்கின்றது’ என்றும், இரண்டாவது ‘இந்நிகழ்வு பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்’ என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அடுத்த ஒரு மாத காலத்திற்குள் ஒரு பாடசாலை எங்களால் தேர்வு செய்யப்பட்டு அங்குள்ள மாணவர்களிடம் ஒரு கள ஆய்வினை மேற்கொண்டதன் பிறகு, இரண்டாவது அமர்வு பாடசாலை மாணவர்கள் முன்னிலையில் இடம்பெற்றது. இம்முறை மாணவர்களிடம் இருந்து கிடைத்த வரவேற்பு பிரம்மிக்க வைக்கும் வகையில் அமைந்தது. அதிலும் குறிப்பாக மாணவர் தரப்பிலிருந்து இந்நிகழ்வு தொடர்பாகப் பேசிய மாணவி “ஒரு சாண் கயிறோ, கல் பாலத்தின் விளிம்போ எம் போன்ற மாணவர்களின் முயற்சியில் தடைக்கற்களாய் இனி வரப்போவதில்லை. உயர்ந்த இலக்குகளும், சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்தலுமே எமது வாழ்வின் தேடல் என்பதை இன்று உளப்பூர்வமாக உணர்ந்து கொண்டோம்.” என்று தனது கருத்தை பகிர்ந்து கொண்டார். இந்த அமர்வுகள் மேலும் பல்வேறு பாடசாலைகளில் எம்மால் நடாத்தப்பட்டு பட்டை தீட்டப்பட்டதோடு மாணவர்களிடையே இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் ஆர்வமும் அதிகரித்தது. பல பாடசாலைகளில் இந்நெறிமுறையைக் கொண்டு பயிற்றப்பட்ட மாணவர்க்குழு ஒன்றையும் ஏற்படுத்தித்தரும் படி எங்களை கேட்டுக் கொண்டனர்.

இவ்வாறு, மாணவர்களிடையே பிரபல்யமடைந்திருந்த இந்நிகழ்வு பத்திரிகைகளின் வாயிலாக சமூக மக்களிடையேயும் பேசுபொருளானது. விளைவாக, “கலங்கரை விளக்கம் மக்களுக்காக” என்ற தலைப்போடு பல்கலைகழக மாணவர் ஒன்றியம் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து பல்கலைகழக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது. ஒரு எண்ணக்கரு பிறந்து ஒரு வருடமாக அதை சீர்செய்து, செதுக்கி, வளர்த்தெடுத்து, சமூகத்துடனான தனது வெள்ளோட்டத்தில் அது பூரணத்துவத்தை அடைந்திருக்கின்றது என்பதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி சார் பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி, சமூக ரீதியான பிரச்சினைகளுக்கும்

ஆக்கபூர்வமான தீர்வுகளை முன்வைக்க முடியும் என்பது அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்களின் ஒருமித்த கருத்தாக இருந்தது. இந்த நிகழ்ச்சி நிரல், பிற பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் பல்வேறு பிரதேசங்களில் நடாத்தப்படுவதோடு மக்களின் மனதில் "எவ்வாறான சூழ்நிலைகளிலும் தமது வாழ்வை முடித்துக்கொள்ள முற்படாது தைரியமாக முன்னோக்கி செல்ல எங்களை, நீங்கள் இன்று வழிப்படுத்தி நம்பிக்கையை விதைத்தது போல அவர்களுக்குள்ளும் விதைக்க வேண்டும்" என வாழ்த்தி நிகழ்ச்சி நிறைவுற்றது.

இப்பொழுது எனது உடலும் உள்ளமும் அமைதியடைந்தது. பேரூந்து பாலத்தைக் கடந்து வந்துவிட்டது. இனி எந்த அசௌகரியமும் இல்லாத சீரான பாதை தான். இதே போல் வாழ்வின் தோல்விகளை கடந்ததன் பிறகு ஒரு மகத்தான வெற்றியுள்ளது. அதை அடைய உதவும் கலங்கரை விளக்கமாய் எங்கள் பங்களிப்பு, இந்த சமூகத்திற்கு என்றென்றும் தொடரும்.

**பயணங்கள் முடிவதில்லை...**

*யுத்தம் என்பது ஆண்களின் இரத்தத்தால்*
*நிலமெல்லாம்*
*நனைவதாகும். பின்னர் பெண்கள் சிறுவர்களின்*
*கண்ணீரால் அது துடைபடுவதாகும்!*

**- டால்ஸ்டோ / ரஷ்ய நாவலாசிரியர்**

# பாவமும் மன்னிப்பும்

**அப்ரா முஸீன்**
இரண்டாம் வருடம்,
சித்தமருத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மாலை கண்டதும் மறைந்திடும் கதிரவன்
தன் கதிர் தொலைத்திடுவது
மானிடர் பிழைபொறுக்கா பாவம்கண்டு
பொறுக்கும் திடம் கரைந்ததினாலோ.?

எம்பொன் நபி நாயகம்
பாரொளி வீசிட
மணக்கும் மலராய்
மனமேந்தித் தந்த குர்ஆனும்
ஸுன்னாதனையும் மறந்ததன்
மறுமொழி தானோ..?

பூக்கள் மலர்ந்த சோலை காண
குருடன் கண் பெற்ற நிலை..
தௌபா எனும் மாலை..
இருகரம் ஏந்தி விழி நீர் தாண்டி
கேட்க மறுப்பதன் மர்மம் என்னவோ..!

பாவத்தில் திளைத்தெழும் மானிடா..!
மனம் நிறைந்திட்ட கரும்புள்ளிகளை
அழித்திட மனம் இல்லையோ..!
இன்று பிறந்திட்ட மழலையாய்
நீயும் பரிசுத்தம் ஆவதில்லையோ..!

இருகரம் ஏந்தினால் வெறுங்கை திரும்பாமல் விடும் அர் ரஹ்மான்
அவன் ஏகன்..

மரணம் மட்டுமே திரையாய் கொண்ட
ஸுஜுத் எனும் நிலையில் நீயும்
கண்ணீர் சிந்த இறைஞ்சினால்
இரங்கும் வல்ல நாயன் அவன்..
விழிகள் செவிகள்
பார் நோக்கும் இடமெல்லாம்
பாவங்கள் நிறைந்தோடும்
மாயநதியாய் இன்றைய உலகில்..
நீந்திக் கரையேறி
ஆன்மீக லோகாயுத இலட்சியம் அடைந்து
சுவனம் புக..
நீயும் தொடர்வாய் தேடி..
பாவமன்னிப்புக் கேட்டு மன்றாடி..

அல்லாஹ் வல்ல நாயன் தந்த
விளைநிலமாம் பூமியில்..
நாயகம் தூதர் காட்டிய நல்வழியில்..
தினம் நாம் வாழ்ந்தால் இப்பாரினில்..
மறுவுலகில் சுவனம் நம் கையில்..

*சிலசமயம் பணம் ஒருவனை*
*சொந்தக் காலில் நிக்கவைக்கிறது*
*சொந்த கருத்தில் இருக்கவைக்கிறது!*
**– தஸ்தோயஃஸ்கி**



# සරසවි සිසුන්ගේ සමාජ මෙහෙවර

**හෆ්සා කාදර්**
3 වන වසර,
ශාස්ත්‍ර පීඨය,
යාපනය විශ්වවිද්‍යාලය.

ශිෂ්‍යයෙක් තම ජීවිතයේ මුහුණ දෙන අ.පො.ස. උසස් පෙළ නැමති තරඟකාරී කඩඉම් විභාගයෙන් සමත් වී දහසක් හීන මැද විශ්ව විද්‍යාල අධ්‍යාපනයට පිවිසෙයි. යම් කිසි සීමා රාමුවක් තුළ ගමන් කළ ශිෂ්‍යයෙකුට තමාගේ විෂය දැනුම හා හැකියාවන් ක්‍රමයෙන් වර්ධනයට ඉඩක් විශ්ව විද්‍යාල අත්දැකීම් තුළින් ලැබේ. මේ අනුව විශ්ව විද්‍යාලය තුළින් බිහිවන සෑම උපාධිධාරියෙක්ම රටක සෑම ක්ෂේත්‍රයකම අභිවෘධියට දායක වන සම්පත් දායකයෙක් ලෙස පෙනීසිටිය යුතුයි යන්න මගේ අදහසයි. එමෙන්ම අපේ රටේ නිදහස් අධ්‍යාපනය පළමු ශ්‍රේණියේ සිට විශ්ව විද්‍යාල අධ්‍යාපනය දක්වා ලබා ගත හැකි හෙයින් ශිෂ්‍යයින් තම විශ්ව විද්‍යාල අධ්‍යාපනයෙන් පසු රටට වැඩදායී වටිනා සම්පතක් ලෙස විශ්ව විද්‍යාලයෙන් පිටවන උපාධිධාරියෙකු විය යුතුයි. මෙයට මුලින්ම සෑම උපාධිධාරියෙක්ම තමන්ගේ රටට හා සමාජයට සේවය කල යුතුයි යන අධිෂ්ඨානය තමන් තුළ ඇති කර ගත යුතුයි. මේ තුළින් යහපත් ශාරීරික හා මානසික මට්ටමින් ඉහළ සහ උගත් සමාජයක් බිහි වී තිරසාර සේවාවන් ඇති වේ. කෙසේ වෙතත් විශ්ව විද්‍යාල ශිෂ්‍යයන් තමන් අධ්‍යාපනය ලබන තෙවන හා සිව්වන කාල වකවානුව තුළ වර්ධනය කර ගන්නා පෞරුෂත්වය තමන්ගේ වටිනාකම විහිදා දක්වයි.

අද කාලයේ ශිෂ්‍යයින්ට ඕනෑම දෙයක් වේගයෙන් ග්‍රහණය කරගත හැකි වුවත් එය වර්තමාන ලෝකයේ ප්‍රායෝගිකව යෙදීමේදී විවිධ ගැටලුවලට මුහුණ දීමට සිදුවනු ඇත. නැතිනම් ගඟට ඉනි කැපුවා සේ ඔවුන්ගේ හැකියාවන් ප්‍රතිඵලයක් නොමැති දෙයක් බවට පත්වේ. මෙයට හේතුව විශ්ව විද්‍යාලය තුළින් මඟ හැරුණු කලමණාකරණ කුසලතා ලෙස මා හට දැක්විය හැක.

එමෙන්ම අප රටහි අධිකව පවතින සෑම ආකාරයේ ප්‍රශ්නවලටම යෝජිත තීරණ ගැනීමේ හැකියාව විශ්ව විද්‍යාල සිසුන් හට තිබිය යුතුය. නැතිනම් ඔවුන් ලද අධ්‍යාපනය නිශ්ඵල තත්වයට පත් වේ.

මූලික පෞරුෂ වර්ධනය විශ්ව විද්‍යාලය තුළ කෙසේ ආරම්භ විය යුතුද යන්න පිළිබඳ විමර්ෂණය කළ හොත් එය විෂය නිර්දේශය හා විෂය සමගාමී ක්‍රියාකාරකම් තුළින් ද ලබා ගත හැක. විශ්ව විද්‍යාලය යනු පාසලකට වඩා පෞරුෂ වර්ධන අවස්ථා ඇති ස්ථානයකි. නමුත් ශිෂ්‍යයින් එය නිවැරදිව භාවිතා නොකරන නිසා ඔවුන්ගේ හැකියාවන් යම් කිසි අවස්ථාවකට පමණක් සීමා වනු ඇත. විශ්ව විද්‍යාලය තුළ ඇති සෑම තරඟ, විවාද, සංවාද ආදිය සඳහා ශිෂ්‍යයන් සහභාගී වීමට මැලිකමක් දැක්වීම ඔවුන්ගේ පෞරුෂ හැකියාවන් වර්ධනය නොවීමට එක් කරුණක් වේ. තවද ශිෂ්‍යයන් විවිධ සමාජ හා සංවිදාන ආදියෙහි ක්‍රියාකාරීව සිටීනම් එය රටක අභිවෘද්ධියට එක් පෙරහුරුවක් ලෙස දැක්විය හැකිය. මෙම හැකියාවන් ලබා ගන්නා ශිෂ්‍යයින් ඔවුන් ක්‍රියාත්මක කරන ඕනෑම කුඩා ව්‍යාපෘතියකින් වුවද ඔවුන් ලබා ගන්නා අත්දැකීම් ඔවුන්ගේ ජීවිතවල රඳා පවතී.

නමුත් මෙවැනි විවිධ පෞරුෂත්වයන් ඔවුන් තුළ දැකිය හැකි වුවත් රට වෙනුවෙන් ඔවුන්ගේ සේවය ඔවුන් කෙසේ කොහේ ලබා දිය යුතුද යන්න මා හට දැකිය හැකි සාධාරණ ප්‍රශ්නයක්. නමුත් එය පිළිතුරක් නොමැති ප්‍රශ්නයක්ද නොවේ. රටක සංවර්ධනය සලකා බැලීමේ දී එය විවිධ ක්ෂේත්‍ර වලින් සලකා බැලිය යුතුය. එනම් එය අධ්‍යාපන ,දේශපාලන, ආර්ථික, සමාජ හා සෞඛ්‍ය යන විවිධ ක්ෂේත්‍රයන්හි ඒකාබද්ධ දියුණුවයි. එයිනුත් අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ දී ගුරු සේවය ගැන සලකා බැලීමේදී දිවයින තුළ සමහර ගම් හා නගර වල විවිධ විෂයන් ඉගැන්වීම සඳහා ගුරු හිඟයක් පෙන්නුම් කරයි. එවැනි පාසල් වල උපාධිධාරීන් පමණක් නොව ස්වේච්ඡාවෙන් ඉදිරිපත් වන විශ්ව විද්‍යාල සිසුන් මඟින් තමන්ට කල හැකි උපරිම සේවය ලබාදීමෙන් රටක අධ්‍යාපන මට්ටම ඉහළ දැමිය හැක. මෙවැනි පාසල් වල දැකිය හැකි ගුරු පුරප්පාඩු විශ්ව විද්‍යාල සිසුන් සඳහා ඇති ඉල්ලුම බව ඔවුන් දැනුවත් වී සිටිය යුතුයි.

එපමණක් නොව දේශපාලන ක්ෂේත්‍රය තුළ සලකා බැලීමේදී විශ්ව විද්‍යාල සිසුන්ට සැලකිය යුතු වගකීම් රැසක් පවති. ඒවායින් එකක් ලෙස මුලින්ම අද දේශපාලනය විසින් හඳුන්වා දෙන විෂය කරුණු විවිධ සමාජ මට්ටම් වල සිටින පිරිස් දැනුවත් වී නොවන

අතර එම නොදැනුවත් කම තුරන් කිරීමට වැඩ පිලිවෙල් හඳුන්වාදීම සඳහන් කල හැකිය. අද සමකාලීන දේශපාලන නීති හා සංශෝධන නොදැනුවත්කම හා නොපැහැදිලි බව සමාජ මට්ටම් තුළ දැකිය හැකි පරම සත්‍යයකි. මෙවැනි නීති හා සංශෝධන ජනතාවට පෙන්වාදීමට ඇති හැකියාවන් විශ්ව විද්‍යාල මඟින් උත්පාදනය කල යුතුය. මෙයට යොවුන් පාර්ලිමේන්තුව සඳහා විශ්ව විද්‍යාල ශිෂ්‍යයින්ට ඇති ප්‍රතිශතය ඉහළ නැංවීම මඟින් දේශපාලනීය සහභාගීත්වය වැඩි කල යුතුය. මෙමඟින් නිසි උසස් අධ්‍යාපනය ලත් දේශපාලන නායකත්වයට අවශ්‍ය පසුබිම ඇති ගැලපෙන පිරිසක් හෙට රටට මුණගැසිය හැක.

එමෙන්ම සෑම විශ්ව විද්‍යාල සිසුවෙක්ම තමන් ජීවත් වන ප්‍රදේශයේ සංවර්ධනයට දායක වන්නෙකු ලෙස සිටිය යුතුය. එම ප්‍රදේශ වල සෑම සංවර්ධන අංශයක්ටම තමන්ගේ දායකත්වය ලබා දීම තුළින් ලබා ගන්නා ප්‍රාදේශීය සංවර්ධනය දේශීය සංවර්ධනයට අඩිතාලමක් වේ.

රටක ඇති විය හැකි මුදල් සංචිත හිඟකම් වලදී හා ආර්ථික ප්‍රශ්න වල දී ද ප්‍රායෝගික තීරණ ගැනීමේ හැකියාව විශ්ව විද්‍යාල ශිෂ්‍යයන්ට තිබිය යුතුය. රටක මෙතාක් නොවිසඳුණු ප්‍රශ්න වලට නිසි විසඳුම් ඉදිරිපත් කිරීමේ හැකියාව හා සෑම කෝණයකින්ම විශ්ලේෂණය කර නිවැරදි තීරණ ගැනීමේ හැකියාව ඔවුනට තිබිය යුතුය.

විශේෂයෙන් අප ජීවත් වන රට විවිධ ආගම් හා ජාතීන් ජීවත් වන සමාජයක් පවතින රටකි. ඔවුන් අතර ඇති වන විවිධ ප්‍රශ්න හා ගැටලු වලදී එය ජාතීන් අතර ඇති සංහිඳියාව පලුදු නොවන ලෙස පරිණතව විසඳීමට අවශ්‍ය පෞරුෂ වර්ධනය විශ්ව විද්‍යාල පරිසරය තුළ හඳුන්වා දී තිබිය යුතුය.

ශ්‍රී ලංකාව සංවර්ධනය වෙමින් පවතින කෘෂිකාර්මික රටකි. අප රටේ ආර්ථිකයෙ සේවා ආයෝජනයට වැය වන වියදම අධික වුවත් රටක දළ දේශීය නිෂ්පාදනයට කෘෂි කර්මාන්තයෙන් ලැබෙන ආදායම ඉහළ අගයක් ගනී. එම නිසා රටේ කෘෂි කර්මාන්තය සංවර්ධනය කිරීම විශ්ව විද්‍යාල සිසුන් මඟින් කළ හැක. ගෙවතු වගාවෙන් ආරම්භ කර අත්හල පුරන් වූ ඉඩම් භාවිතා කිරීමට විවිධ ක්‍රමෝපායන් ඔවුන් සොයා ගත යුතුය. ගොවි නිෂ්පාදන වැඩි කිරීමට අවශ්‍ය වන නව බීජ වර්ග හඳුනා ගැනීම සමඟ නවීන පරිසර හිතකාමී යන්ත්‍ර සූත්‍ර උපකරණ හඳුනා ගැනීම සහ නිපදවීම ඔවුන් විසින් කළ හැක. මෙමඟින් හිඟතාවයක් පවතින දේශීය නිෂ්පාදන හා ස්වයං රැකියා අවස්ථා ආදිය උත්පාදනය කල හැක.

රටක ඉතිහාසය හා පාරම්පරික චාරිත්‍ර වාරිත්‍ර මතු පරපුරට දායාද කරන පිරිසක් ලෙස විශ්ව විද්‍යාල සිසුන් හැඳින්විය හැක. ඔවුන් සාහිත්‍ය එළි දැක්වීම හා අනෙකුත් සෑම කලා අංශ වලට ඔවුන්ගේ දායකත්වය ලබා දිය යුතුය.

අද ලෝකයේ අර්බුදයක් ලෙස පවතින කොවිඩ්-19 වසංගතය තුරන් කිරීම හෝ අවම කිරීම සඳහා නව ඖෂධ හා ආදේශක සොයා ගැනීමට විශ්ව විද්‍යාල සිසුන් ඉදිරිපත් විය යුතුය. එපමණක් නොව සෞඛ්‍ය පිළිවෙත් නිසියාකාරව ඉටුවේ දැයි නිරීක්ෂණය කිරීමට ද ඔවුන්ට ඉදිරිපත් විය හැක.

තවද රටක ඉදිකිරීම් ක්ෂේත්‍රය සඳහා රටේ බිහි වන ඉංජිනේරුවන්ගේ දායකත්වය ලබා ගත යුතුය. මේ තුළින් විදේශිකයන්ගේ ඉදි කිරීම් සහාය සඳහා වෙන් කරන වැය ශීර්ෂය අවම වීම හා රටේ බුද්ධි ගලනය ද අවම කර ගත හැක.

සාරාංශයක් ලෙස ගත් කල සෑම විශ්ව විද්‍යාල ශිෂ්‍යයෙක්ම තමන්ගේ ජීවනෝපාය සඳහා රැකියාවක් සොයා ගැනීම අරමුණු නොකර තමන්ගේ විෂය පථය තුළ පවතින සේවාවන් මොනවා දැයි හඳුනාගෙන එය සිදු කිරීමට පවතින බාධක හා අභියොග නිසියාකාරව කළමණාකරණය කර එය හොඳින් ඉටු කරන්නේ කෙසේ දැයි විශ්ලේෂණය කර තමන්ගේ සමාජයට හා රටට අර්ථවත් පුරවැසියෙක් ලෙස ක්‍රියා කිරීමෙන් රටේ තිරසාර හා ඵලදායී දියුණුවට දායක විය හැක.

මූලාශ්‍රයන්


- Baker, Kate & Perkins, Joy & Comber, Darren. (2014). International students and their experiences of Personal Development Planning. Active Learning in Higher Education. 15. 10.1177/1469787414527388.
- ஆளுமைத்திறன் வளர்ப்போம், Dinamani., www.dinamani.com
- පෞරුෂ සංවර්ධනය ඃ මනෝවිද්‍යාත්මක සහ සමාජ විද්‍යාත්මක විග්‍රහයක්, Psychologysam. blogspot.com


"Service to others is the rent you pay for your room here on Earth."
– Muhammad Ali



# தெளிந்த இலக்கின் அடைவு

**ஹம்தா லதீப்**
முதலாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கனத்த இருட்பூக்கள் கானகத்தை தின்று கொண்டிருக்கும் மயான அமைதியில் முக்கால்வாசி வெளிக்காட்டிய தேகம் கொண்ட முழு நிலவின் சஞ்சரிப்பிற்கும் பஞ்சமில்லை. அடை மழையின் ஒய்விற்குப் பின்னர் வரும் அரிதான அமைதிப் பேரலையில் எங்கோ கத்திக் கொண்டிருக்கும் கோட்டான்களின் சத்தத்திற்கும் களைந்து போகாத சிந்தனை எனும் பெருஞ் சுவற்றிடையே தனது நினைவுச் சுழிகளை ஆணியாக அரைந்து கொண்டிருக்கிறாள் காமிலா. மங்கிப் போன நிலவின் ஒளியோ மாறிமாறி அவளது தோற்றத்தைக் காட்ட மறந்திடவில்லை போலும். அங்கொன்றும் இங்கொன்றுமாய் முகத்தைக் காண வந்த சில வடுக்கள், எத்தனை சோகத்தின் தாகத்தையும் நெஞ்சோடு வைத்திருந்த போதிலும் தன் எழுச்சி புன்னகை மறக்காத மெல்லிய உதடு, இருளை வேவு பார்க்குமளவில் கூர்மையான கண்கள் கரிய இருளைப் பற்றவைக்குமளவிலான நெருப்புக் காற்றை கனத்திற்கு கனம் வெளிச் செய்திடும் நாசி என மங்கலில் கூட பேரழகி என விண்மீன்கள் வியந்து நிற்கும் அழகியாய் அவள்.

அப்படி எதை தான் இச்சிலையாய் மாறி இவள் சிந்தித்திடக் கூடும் என்பதை அவள் சாய்ந்திருக்கும் வீட்டின் விராந்தை கூட எண்ணக்கூடும். களையாத மௌனத்துடன் கடந்து வந்த பாதையின் வழித் தடங்களுள் அவளோடு பயணிப்பதில் காலத்திற்கும் ஏக மகிழ்ச்சி எம்மைப் போல.

நினைவில் ஒருநாள் நிற்காத பேரூந்தினைத் துரத்திப் பிடிக்கும் கடுகதியோடு வாப்பாவின் சைக்கிளில் காமிலாவும் ஏறிக் கொள்கிறாள். பெரும்பாலும் அது அவளது பள்ளியின் இறுதிப் பருவமாகத் தான் இருக்க வேண்டும். வகுப்பில் தேர்ச்சிமிக்கோர் பட்டியலில் இவள் தான் முதலிடம் என்றே கூறலாம். அது ஒரு புறமிக்க எவ்வாறோ பேரூந்தைப் பிடித்தாகிற்று ஆனாலும் சைக்கிளை விட்டு கீழிறங்கி சுற்றிலும் பார்க்கும் போது தான் தெரிந்தது பேரூந்தை மட்டுமல்ல பாடசாலையையும் வந்தடைந்து விட்டோம் என்று வாப்பாவின் வியர்வையை அவராகவே அவரது சேட்டில் துடைத்துக் கொண்டு தெத்துப் பல்லின் தோற்றம் வெளிப்பட புன்னகைத்தார். அவரைப் பற்றிக் கூறப்போனால் ஈடுகொடுக்க முடியாத உழைப்பாளி. மகள் மீதான அன்பிலும் சரி. செய்யும் தொழிலிலும் சரி. பாடசாலை நுழைவாயிலுக்குச் சென்ற காமிலா தனது தந்தையைப் பார்த்து வாப்பா கொஞ்சம் இரியுங்கோ எட்மிசன் எடுத்ததும் வாரேன், எனக் கூற அவரும் தலையை அசைத்துச் சம்மதம் சொன்னார். தாமதிக்காமல் வேலைகளை முடித்துக் கொண்டு இருவரும் வீடும் திரும்பி விட்டார்கள்.

கொட்டில்களாக சிறந்து விளங்கும் குடிசைகளைக் கொண்டதே காமிலாவின் கிராமம். அங்கு படித்தவர்கள் என்றால் விரல் விட்டு எண்ணுமளவிலும் குறைவே அதிலும் படித்த பெண்கள் என்போர் அரிது என்றே கூற வேண்டும். அதனாலோ என்னவோ காமிலாவின் தந்தையை பழித்துக் கூறாதவர் என்று அவ்வூரில் யாரையும் காணவே முடிவதில்லை என்றே சுதாகரித்துக் கொள்ளலாம். இதைப் பற்றி காமிலா தந்தையிடம் பேசும் போது அவரது ஒரே பதில் “மகள் இன்னும் கொஞ்ச நாளைல எக்ஸேம் இருக்கு நீ படிக்கலியா?” என்பதாகவே இருக்கும். அவரின் எண்ணம் என்னவோ தனது மகளின் உயர்கல்வி என்பதாக மாத்திரமே இருக்கும்.

காமிலா எதிர்பார்த்த நாளும் பொழுதும் உதித்தது. தெளிந்த பால் போன்ற எண்ணம் கொண்ட காமிலாவின் ஆடைகளும் பால் போலவே தோன்றியது. அவளது தந்தையினால் வாங்கிக் கொடுக்கப்பட்ட புதிய சீருடையின் மந்திரமே அது. வழக்கம் போல தந்தையோடே தனது வாழ்வின் அடுத்த சவாலான உயர்தர பரீட்சை நிலையத்தை அடைந்தாள். வாழ்த்துவதற்கும் வழியனுப்புவதற்குமான ஒரே ஜீவனான தந்தையின் பிரார்த்தனைகளுடன் தனக்கான இடத்தை பரீட்சை மண்டபத்தில் தேடிப்போய் அமர்ந்தாள். வேண்டிக் கொண்ட பிரார்த்தனைகளின் கடைசி மீட்டலாக இறைவன் பெயரால் ஆரம்பிக்க, தயக்கம் என்பது சிறிதும் இல்லாமல் தனது வினாப்பத்திரத்தை நோட்டமிட்டு எழுதத் தொடங்கினாள். அங்கு கூட அவள் கேட்ட பிரார்த்தனையாக என்ட வாப்பாட கனவு என்னால நிறைவேறனும் என்பதாகவே காணப்பட்டதனால் தனது வைரம் போன்ற எழுத்துக்களினால் தனது அறிவுச் சுரங்கத்தை தோண்டி விடைகளால் நிரப்பிக் கொண்டாள்.

அறிவுச் சுரங்கத்தில் இத்தனை நாள் பெற்றுக் கொண்ட நன்கொடைகள் யாவற்றையும் பரீட்சையில் முழுமையாக செலவும் செய்தாள். தனது அடைவிற்கான அடிக்கல்லினை நட்டுவிட்ட பேரானந்தத்தில் அவனது நாட்களும் நடை போட்டுக் கொண்டிருந்தன. பொறுத்த வகையின் பெருமிதமாக அவளது தேர்வின் முடிவுகளைக் காண அவளது தந்தையும் எதிர்பார்த்த நாள் வந்தது. எதிர்பார்த்த வெற்றி ஏற்றஇரக்கமில்லாமல் பெறுபேறுகளாக வந்தடைந்தன.

வாப்பாவின் கனவு நனவாகிட்டு என்று மீண்டெழ முடியாத ஆனந்த சிரம்பணிதலில் விழுந்தாள் காமிலா. பொருளாதாரம் தடையென பொடுபோக்காக தனது கல்வியை விட்டுவிடாத தந்தையை ஆரத்தழுவி கட்டியணைத்தாள். காற்றின் அதிகரித்த வேகத்தால் வேலித் தகரங்களின் நரத்தனத்தில் நனவோடையை விட்டுக் களைந்தாள்.

வேலித் தகரங்களை வெறித்துப் பார்த்தப் படியே மீண்டும் அசைய மறந்த உடலுடன் இமைகளிடம் மட்டும் உயிர் இருப்பதைக் காணக் கூடிய சாறு பாலைநிலத்தின் தடங்களை புயல் மறைக்கும் முன் அவற்றை காணத் துணிவதாக புறப்படுகிறாள் தனக்கான சிந்தனைக் கோட்டைக்குள். “இவ்வளவு படிப்பிச்சாச்சி இன்னம் கஷ்டப்படாம புள்ளய கல்யாணம் பன்னிக் கொடு” என்று பலரும் காமிலாவின் தந்தைக்கு அறிவுறுத்துவதாக நச்சரிக்கத் தொடங்கினார்கள். பாவம் அந்த மனுஷன் அவர்கள் கூறிய எதையும் பெரிதுபடுத்தவில்லை.

கனவு காணத் தடையில்லாத உலகில் தனக்கெனவே விதைக்கப்பட்ட கனவுடன் பல்கலைக்கழகப் பிரவேசத்தில் சிறிது பெருமையுடனும் ஆனந்தத்துடனும் தனது வாழ்வின் அடுத்தகட்ட உயர்கல்விக்காக பயணப்பட்டாள். தனக்குள் இதுவரை காணும் தந்தையின் பக்கபலம் எனும் தன்னம்பிக்கை மிக்க ஆளுமையை அவள் பூணரப்படுத்த வேண்டிய கட்டம் வலுப் பெற்றது. தனது உயர்கல்வியில் அதிக நாட்டம் கொண்ட அவள் அதனைச் சமூகத்திடம் ஒப்புவைப்பதன் முக்கியத்துவம் என்ன என்பதை ஆராயத் தொடங்கினாள். வலுப் பெற்ற எதிர்பார்ப்புக்கள் பலரது வாழ்விலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதையே நோக்காகக் கொண்டாள். பெண்ணென பிறந்திடவும் பெரும் தவம் புரிதல் வேண்டும் என்ற கருத்தின் மாபெரும் வடிவம் என்றாலே அது காமிலா தான் எனுமளவிற்கு தனது வாழ்வைக் கட்டியெழுப்பத் துணிந்தாள். உண்மையில் இத்தனை காலமாய் அவளது தந்தை வேண்டியது இது தான் என்பதை அவளினாலே உணரப்பட்டது.

பாதைதான் தெரிந்து விட்டதே பயணத்தைத் தொடரலாமே என்று சிந்திக்கலாம். ஆனால் அதில் வரும் ஏற்றத்தாழ்வுகளையும் கரடுமுரடுகளையும் கடந்து தானே ஆக வேண்டும். தனக்கான அடையாளத்தை தனது உத்தியோகம் மூலம் மட்டும் அடையாளப்படுத்திக் கொள்ளாது தன்னைச் சார்ந்த சமூகத்தையும் அடையாளப்படுத்துவதையே நோக்காக கொண்ட காமிலா அதனை வலுப்படுத்தினாள்.

பல்கலைகழகத்திற்கு புதிதாக நுழையக் கூடிய மாணவர்களுக்கான வழிகாட்டல்களை தனது சகதோழிகளோடு ஆரம்பித்தாள். அநியாயம் நடைபெறக்கூடிய இடங்களில் தனது இறைவனுக்குப் பொருத்தமாகவும் சமூகத்திற்கு ஏற்புடையதாகவும் தனது கேள்விகளின் வீரியங்களைத் தனது குரலில் வெளிப்படுத்தினாள். எலும்பில்லாத நாக்குத் தானே கூறியதையெல்லாம் நினைவில் வைத்திருக்கவா போகிறது. மனமுடைந்து தந்தையின் ஆறுதலைத் தேடினாள். அவரினால் தனக்கென தெளிக்கப்படும் உரமான வார்த்தைகள் மீண்டும் அவளுக்குத் தேவைப்பட்டது. தனது மகளை சர்வாங்கமாக புரிந்திருந்த அந்த வைராக்கிய மிக்க தகப்பனாக தன் மகளுக்கான வார்த்தைகளைச் சொரியத் தொடங்கினார். மகள் உங்கட படிப்பு என்டு சொல்றது சமூகத்திற்கு நன்மையில்லாமல் போனால் வெறும் கடதாசிப் பத்திரம் மட்டும் தான். நீங்க வந்த வழிப்பாதை தெரியும், நீங்க போக வேண்டிய பாதையும் தெரியும், இடையில் ஏன் இவ்ளோ தயங்குறீங்க? எங்கட மார்க்கத்துக்கு நீங்க இது வர மாறு செய்யல்ல, எங்கட சமூகம் சிரிக்கிறதுக்கு வைக்கல்ல, அப்போ ஏன் நீங்க பயனில்லாத பேசிக்கொல்லாம் பயப்புடுறீங்க துணிவா நில்லுங்க, எங்கட சமூகம் வேண்டுற மாதிரி ஒரு துணிச்சல் மிக்க ஆளுமையை நீங்க உருவாக்குங்க.” என்பதாக வலுவிழந்த மகளை வலுப்படுத்த அந்த தகப்பன் தவறவில்லை.

காலத்தோடு பயணிக்கும் மனித இனம் அல்லவா நாங்கள்? நடக்க முடியாவிடினும் ஓடத்தானே வேண்டும். என்பதற்கிணங்க பல்கலைக்கழக இறுதியாண்டில் காமிலா தனது சமூகத்திற்காக தன்னைத் தயார்ப்படுத்த இருப்பதுவோ ஒரு வருடம் மட்டுமே. இத்தனை காலமாக தனது தன்னம்பிக்கையாகவிருந்த பக்கபலம் தன்னை விட்டு நெடுந்தூரம் பிரிந்தது. திரும்ப வரமுடியாத பயணம் சென்றுவிட்டது. ஆம், அவள் நினைவிலும் கண்ணீர் வடிக்கிறாள். காரணம் அவளது அரிய உயிரிலும் மேலான அவளையே சுமந்த தந்தையின் மரணம். எதுவும் நினைவில் வரவில்லை. ஏதே வழிதெரியா காட்டினுள் தனியாய் விடப்படுகிறாள்.

ஆனாலும் அவளது தந்தையின் வார்த்தைகள் அவளைக் கைவிடவில்லை. துணிவோடு கல்வியை நிறைவு செய்து கொண்டு சமூகத்தில் கல்வியின் தேவையை வலுவாக முன்வைத்தாள். நிச்சயமாக அவளது தந்தை எதிர்பார்த்ததும் இதுவே. என்ட பலமா இருந்த வாப்பா என்னோடே இல்லன்னாலும் அவர்ட ஆசைகளும் ஆதரவும் என்னோடே இருக்கு என்ற மனநிலையைப் பரிசாகப் பெற்ற காமிலா, நாளைய தினம் தான் நடத்த வேண்டிய மாணவர்களுக்கான ஆளுமை வழிகாட்டல் அலகிற்கான தயார்படுத்தலுக்காக விராந்தையிலிருந்து எழுந்தாள் நிச்சயமாக புதிய நாள் ஒன்றில் புதிய பயணத்திற்கான வரைபடத்தினை கையில் எடுத்த வண்ணமே.

*மனிதர்களும் அஞ்சல் பெட்டியில்*
*உள்ள கடிதங்களும் ஒன்றுதான்.*

*ஒருவரோடு ஒருவர் சேர்ந்து கூடி*
*குலாவிக்கொண்டு இருப்பார்கள்.*

*ஆனால் ஒருவருக்குள் என்ன*
*இருக்கிறது என்று மற்றவர் அறியமாட்டார்!*

**- முஹம்மது மாஊத்து**



# TOWARDS A NEW IDIOM TO EXPRESS HUMAN SUFFERINGS: A REVIEW ON CONTEMPORARY SRI LANKAN TAMIL WRITING

**Dr. Kandiah Shriganeshan**
Senior Lecturer,
English Language Teaching,
University of Jaffna.

### Introduction

Sri Lankan Tamil poetry was entirely identified with the traditional verse before the sixties expressing the conventional religious themes, nature adorations and some national and love sentiments. Even with modern themes like caste structure or class structure and nationalism poets like Mahakavi, Murugaian, Neelavanan did not change their traditional forms except the fusion of spoken rhythm with the traditional forms in the sixties. Kanaganayakam (2014) states that Sri Lankan Tamil poetry has already seen the shift from the traditional themes to the very modern ones and from the lyrical form to the free verse.

> *The shift in literary style began in the 1960s with a number of writers, including Mahakavi, Murugaiyan and Neelavanan, who in their poetry sought ways to break free from the stifling formal practices of traditional verse.(Kanaganayakam, 2014:41)*

A gradual shift is from description in rhetoric language to conversational in its diction and rhythm. The poetry has to change in its form and style for accommodating a different sensibility and a different sense of audience as there is a need to express the changing scenario in the political and social scene. Poets try to push the limits of the poetic language due to the horrendous political situation. Violence was the order of the day in the North and the East of Sri Lanka in the eighties. There were different forms of terror: terror of the state forces and the terror of the so-called freedom fighters. Both contributed much to the untoward suffering of the people. Subsequently they became the subject matters of the poems written by many a poet. The poets have to

look for a new language and a new set of symbols to record the state of affairs during the War. The challenge faced by the Tamil poets was to find proper diction to express new experiences: new suffering and new encounters. Diction in Tamil did not often possess the capacity to access the new and often traumatic experiences that confronted the Tamils (Kanaganayakam, 1998).

The language had to undergo changes to become capable of accessing new dimensions of experience in many a new landscape within their territories due to displacements and found in other lands in the Western and American cold lands. While Sri Lankan Tamil poetry in translation found accommodated in Canaganayagam, (2001) and (2013), Samarasinghe (2012) and Wijesinha (2013), the present collection, Time will Sing a Song for You: Contemporary Tamil Writing from Sri Lanka taken for study is an outcome of the research programme of Contemporary Tamil Culture at the French Institute of Pondicherry. The researchers who translated and edited the Sri Lankan pieces are not of Sri Lankan Tamil origin. Thus, the present study on the anthology under review gets the significance for research. Further, translations would be able to provide the true spirit of the sensibilities of the communities as the writers from the first language are able to speak out very well of their lives *(Shriganeshan, 2001).*

## The poets of the sixties

Mahakavi, Neelavanan and Murugaiyan are some of the poets who deal with the traditional themes in the traditional metres. Even in its free verse form, the Sri Lankan Tamil poetry, quite distinct from Indian Tamil poetry, sustains an element of lyricism derived from classical prosody accommodating folk and spoken Tamil. A major portion of this anthology consists of poetry, which remains without doubt the high point of achievement in Sri Lankan Tamil Literature (Kannan et al 2014). Though the first group of poets are categorised under traditionalists Mahakavi moves away from the traditional themes and deals with the theme of caste in ***The Temple car and the Moon:***

> *there was a struggle/ and a man killed.*
> ……………………………………….
> *look, there rolls in dirt /and kin of the one / who touched the full moon/*
> *just the day before!" (p.2)*

Neelavanan's poem in rhythmic pattern with high lyrical quality speaks of a common theme like perseverance to induce man to work hard and complete the task before the limit of time and amidst all odds and ends:

> *Oh…oh…driver/ even before the path disappears/*
> *in the sorrowful tear dropmseamof the fog/*
> *even before the moon's sickened shadow/ behind us begins to follow along…*
> *(p.24).*

## The shift from the traditional themes to the very modern

Ponnampalam, Nuhuman, Shanmugam Sivalingam and many others accommodated social and political contexts in their poems. M.A.Nuhuman breaks away from the

tradition of speaking of typical themes of the seventies like caste struggle, proletarian concepts and dowry system and includes the contemporary problems of shooting and burning of the city by the Security forces.

> *"so this morning dawned/ in the city streets we had been walking/*
> *rifles were roaming in khaki uniforms/ bullets were raining down/*
> *boring into bodies/ they were drinking souls (p.28)*

Jesurasa 'In your plight also" portrays how an ordinary man would be branded as a terrorist.

> *you may be returning from the beach/*
> *or you may be returning home/*
> *from the theatre/ sudden sound of a gun shot/*
> *followed by the sound of hurrying boots/*
> *you having died/ will lie/*
> *fallen in the street/ a knife will sprout in your hand:/*
> *a gun will sprout too!/*
> *you will make your name/*
> *as a 'terrorist'/*
> *no one can question anything. (p.29)*

With the 1983 riots Sri Lankan Tamil poetry was politicized very much (Kanaganayakam in Wijesinghe 2013: 131). V.I.S.Jeyapalan who simply sings of a common problem like drought and the hope for the rains to shower upon the land in his poem Hope (p.31) and poverty in 'Seashore' (p.32-33) started to sing about the effects of ethnic conflict. The trend was obviously noted by critics. Shanmugam Sivalingam commits himself to sing about the war effects in his 'Unsung Songs':

> *in the street the corpses stink,/*
> *when the bullets broke the lock/*
> *the white doves fell head down/*
> *wings broken, and lie cruelly curled/*
> *the boys leave without telling us/*
> *they tell us to look for corpses on the shore/*
> *they tell us the corpses heaped on the shore/*
> *are the ones that were dumped in the sea/ but still/*
> *you tell me to sing.*

## New Experiences in new forms

The poetry of the 1990s' breaks away from this lyricism, probably due to the stark reality of the war that surrounded them. The War, displacement, killings and deaths of kith and kin, humiliating experiences faced by the women folk, ejection of Muslims, water shortage, and the problems of the marginalized and the down-trodden in the time of war have become the subject matters of the poems in the latter part of the 20th century and the first decade of the 21st century.

> *a war-pinched life/*

*without courtyards to play in/*
*without alleyways for wandering cycles/*
*the ground has taken you away./*
*the gun was thrust on you/*
*is eating you up*
*- Deebachelvan (p.183)*

Displacement after displacement happened many a time during the final phase of war between the Tigers and the Sri Lankan security forces in 2008/09 and Deebachelvan records:

*At this time we have no city either/ we have no life/we who have nothing/ are ourselves absent. /still we need you/ to eat with us the little of the half-cooked rice and boiled lentils. /come quickly/ let's move on again, to yet another place. (p.184)*

S. Vinodhine in her poem titled *Those who killed them* records what the situation was during the war:

*they had no sense of it/ even in dreams/ that became in sleep/ it must not have happened*
*the weapons of sorcerers/ who blindfolded the night devoured them/ tomorrow they will lie drying in the sun/ before the next hunt. (174)*

T.Malarselvan narrates another experience in his poem *Barrel-toothed Ghost* as follows:

*the night is cruel now/ impossible to write in words/ the ghost climbed onto my shoulder*
*is ready at any moment/ to destroy my head/ he's only an infant/ what does he understand? (p. 177)*

The poems found in this anthology lead us to think about unthinkable experiences of violence, displacement, dispossession and vulnerability. Sivaramani records:

*when guns are thrust / at society's birth cord/ the dream of a butterfly*
*that might sit/ on the soft edge of a flower/ is nothing to me (p.50)*

Sivaramani also questions the very existence of the woman in the society and speaks about humiliating experiences of the womenfolk at the hands of the male chauvinists in *Woman humiliated* (p. 72). While Vilvaratnam depicts the plight of the people who fight the summer days for a drop of water in 'Summer scorches day after day', may be symbolically the horrendous situation at that time in the Northern and Eastern parts of Sri Lanka Ilavalai Wijayendran points to the violent approach the opponent party adopted in his poem '*To those who come with sticks'*

*'when you have lost to words/ and come with sticks/ to show your strength/ what can I say?' (77)*

Aswagosh in his poem, *Darkness* calls and complains to the Almighty about the situation:

*oh merciful one, did you hear/ crows are cawing/ a cock is crowing/ trees are waving in the wind/ deaths are taking place (p.75)*

Pa. Ahilan describes in 'Days in the trenches' what happened to his society on a good Friday the day which reminds Jesus' Crucifixion on the Cross,' the day was our last day in town/ we came to the seashore. It speaks of the displacement of the society due to the war. Cheran who has been recording each phase of human suffering faced by the Tamils in Sri Lanka has pointed out that the illusion of heroism in the name of language would not be meaningful unless and otherwise there is humanness in every move of the society:

*do not trust words completely/ for within these heroes*
*dwell those who crushed/ their enemies' military might / and also those/ who chopped the heads and breasts of innocent people? (Heroes Rest Here, p.94-97)*

V.I.S.Jayapalan condemns the ejection of Muslims from Jaffna and has this to say:

*oh my neighbour, oh my neighbour/oh suns glowing in skullcaps and veils/*
*oh moons playing joyfully on the sands/oh stars smiling in every cradle/our children have lost their way/they tore you apart/they wounded our Ealam soil…*
*R.Muraleeswaran in his poem 'Lost Life':*
*Why is he looking at the sky? /She could have looked at the earth/ since that was where/she lost her son*

Bose Nihale too has to speak about lost life:

*Yesterday /I felt like an old man/ my nerves trembling with fear of the dark/ in the poems I wrote in war-filled days/ you can smell bones and hear the sounds of men and even nerves/ oh god! / I have lost/ even the last note of the veena that faded away in the wind/ there was nothing in it but the waning moon/ afterwards, everyday/ dawned by the sun/ a poem long and dark.*

Nilanthan describes the situation in Vanni during the last phase of war. All the people were marginalised. No one is spared. Everybody has to contribute to the collective suffering:

*Those were cruel days/ Weapons were blunted/ Or bounced back/ All those who thought with their blood/ Went off to the heaven of heroes/ and oh, the people who gave up their firstborn children/ became prisoners or refugees/ on a day given up/ even by loving people/ the unparallel hero/ his unparallel sacrifice/ a rare heroic era/ with dreams frozen in its eyes/ and garland of fading sirissa/ vanished, sunk in the mud of the seashore.*
*Nilanthan continues in Part iii:*
*in Nandhikadal lagoon/ man from Vanni once more became a refugee/ from among long-gone corpses/ from among/ rejected prayers/ he came fleeing*

N.Sathyapalan uses the image of a flickering flame symbolically suggesting the contemporary humanity which fights for survival in this part of the globe ends with an agonising note:

*not knowing how to write to the wind/ to submit their prayers/ the flame and the wick suffocate/ the moments roll along and dissolve.*

Thus the marginalised become the subject matter of the poetry which undergoes much transformation during and after the war.

## Conclusion

The Tamil poetry in general and the Sangam poetry in particular worked within a static spatial framework. The statis accounted for the five-fold division – called *Tinai* in Tamil poetics – where each landscape generated its own specific experience of love. Hilly regions, paddy fields, forests, seashore and the barren lands are the five landscapes where people lived and experienced and shared their feelings of love, separation, frustration, longing for the love, and petty quarrels of a wife over her husband's flirtations. With migration of the Tamil people from their homelands to colder regions in the Western lands, the Tamil community faced another landscape with much cold climate and the literary pieces produced based on the life in the colder regions have to be identified with another spatial frame work. Cheran, a Sri Lankan Tamil poet who lives in Canada theorized the Diaspora as the sixth Thinai, the biome of snow. Kanaganayakam (2014) says this sense of innovation is in itself is a point of departure, a point of growth for Tamil poetry.

**References**


- *Cheran, et al. (eds.), Maranthul Valvom – Living within Deaths. Jaffna:Thamiliyal, 1985.*
- *Kanaganayagam, Chelva in Innumoru Kaladi: A Book of International Tamil Writings. Janarthanan, V. et al (eds.), United Kingdom: Tamil Welfare Association, 1998.*
- *Kanaganayagam, Chelva. (ed.) Lutesong and Lament: Tamil Writing from Sri Lanka, Canada: TSAR Publications, 2001.*
- *Kanaganayakam, Chelva. (ed.) In Our Translated World: Contemporary Global Tamil Poetry. Canada: TSAR Publications, 2013.*
- *Kannan et al. (eds.). Time will Sing a Song for You: Contemporary Tamil Writing from Sri Lanka. India: Penguin Books, 2014.*
- *Nuhuman, M.A. and Yesurasa, A. (eds.). Pathinoru Eelathuk Kavignarkal - Eleven Eelam poets. Madras: Cre-A. 1984.*
- *Samarasinghe Wimaladasa. (ed.) Poems from the SAARC Region. Sri Lanka:SAARC Cultural Centre, 2012.*
- *Selvamanoharan Thiruchelvam and Shriganeshan Kandiah (eds.). SOPA 75: So.Pathmanathan's 75th Birthday Felicitation Number. Jaffna: Thoondi, 2014.*
- *Shriganeshan Kandiah in Silva Neluka and Wijesingha Rajiiva (eds.) 2001. Across Cultures: Issues of Identity in Contemporary British and Sri Lankan Writing. Colombo: The British council, 2001.*
- *Wijesinha, Rajiva, (ed.) Mirrored Images: An Anthology of Sri Lankan Poetry. India: National Book Trust, 2013.*




# இஸ்லாமிய புனர்வாழ்வு மையங்கள் காலத்தின் தேவை

**சுமையா எம் ஆர்.எப்**
இரண்டாம் வருடம்,
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம்,
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**“என்னுடைய வாழ்க்கையில் குடிக்கொண்டிருந்த போதைப் பழக்கத்தையும் விட்டுவிட்டேன். என்னுடைய மார்க்கத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டேன்.”**

என கிறிஸ்தவ புனர்வாழ்வு நிலையத்தின் உறுப்பினர் பெரேரா என்பவர் கூறினார்.

இது அண்மையில் கேள்விப்பட்ட ஒரு உண்மை நிகழ்வாகும். ‘நான் 25 வருடங்களுக்கு முன்னால் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி அதில் மூழ்கியிருந்தேன். மனிதன் என்பதை விட ஒரு மிருகமாக இப்பூமியில் உலாவிக் கொண்டிருந்தேன். ஒரு நாள் அதிகமாக போதைப் பொருட்களைப் பாவித்ததால் உணர்விழந்து ஒரு நாயைப் போல் வீதியில் படுத்துக் கிடந்த போது எனது நண்பர் ஒருவர் என்னை இந்த கிறிஸ்தவ புனர்வாழ்வு நிலையத்திற்கு அழைத்து வந்தார். சத்தியமாகச் சொல்கின்றேன், 3 மாதங்கள் குளிக்காத என்னை நிலையத்தின் பணிப்பாளர் கட்டித்தழுவி முத்தமிட்டு, உங்களுடைய உள்ளம் எவ்வளவு வெண்மையாக இருக்கின்கிறதே! எனக் கூறினார். அந்த மூல மந்திரம் தான் எனது வாழ்வை வளமாக்கியது. மேலும் தற்போது இந்நிலையத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடமையாற்றுகின்றேன்’ என புன்னகைத்துக் கூறியுள்ள அவர் மேலும் தன்னை இவ்வாறு அறிமுகப்படுத்தியுள்ளார். நானும் இஸ்லாம் மதத்தில் பிறந்தவன் தான். என்னுடைய பெயர் அஸ்லம் தௌபீக் எனக் கூறி தனது மத மாற்றத்திற்கான காரணத்தை தெளிவுப்படுத்தியுள்ளார்.

நான் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டதால் எனது சமூகமே என்னை வெறுத்து ஒதுக்கி, ஏன் எனது தாயும் கூட என்னை தூரமாக்கிய போது என்னை அன்பெனும் தேனூற்றால் அரவணைத்து, என்னைப் போல் வாழ்க்கை எனும் பாதையில் தடம்புரண்ட எத்தனையோ

உள்ளங்களுக்குப் புனர்வாழ்வளித்து அதற்கான தனி நிலையத்தை உருவாக்கி செயற்படக்கூடிய கிறிஸ்தவம் எவ்வளவு அழகான மார்க்கம். இந்த நாட்டில் இஸ்லாமிய புனர்வாழ்வு நிலையம் ஒன்றைக்கூட நீங்கள் நிர்மாணித்துள்ளீர்களா? போதையில் அடிமையாகியிருக்கும் எத்தனையோ இஸ்லாமிய உள்ளங்களை தகாத வார்த்தைகளைக் கூறி சமூகத்தை விட்டும் துரத்தினீர்களே தவிர மறுவாழ்வு பற்றி சிந்தித்துள்ளீர்களா? அல்லது அதற்கான ஒரு நடவடிக்கையேனும் எடுத்துள்ளீர்களா? என ஆவேசத்துடன் கூறியிருக்கின்றார்.

உலகளாவிய மனித சமூகத்திற்கு மிகப்பெரும் சவாலாகவும், இன்றைய காலகட்டத்தில் உருவெடுத்திருக்கும் பாரிய விவகாரமாகவும் போதைப்பொருள் முன்னிற்கின்றது. அரச அபாயகர ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் (NDDCB) புள்ளி விபரங்களும் கோடிட்டுக் காட்டுகின்றன. அதுமட்டுமல்லாமல் நாளாந்தம் நாம் பார்க்கும் செய்திகள் ஊடாகவும் போதைவஸ்துக் கடத்தல், போதைப் பாவனைகள் தொடர்பான நிலைமைகள் கட்டுக்கடங்குவதாக இல்லை என்பதை உணர முடிகின்றது. நாட்டின் பல பாகங்களிலும் இந்த போதைவஸ்துப் பாவனை பரந்து விரிந்து வயதுவேறுபாடின்றி அனைவரையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் ஒரு தொற்று நோயாக உருவெடுத்திருக்கின்றது. திடீர் மரணம், இள வயது மரணம், பயங்கர நோய்கள், சமூக சீர்கேடுகள், கொலை, கொள்ளை, பொருளாதார நெருக்கடி, சமூக விரக்தி, அதிக சிறைச்சாலை பிரவேசம் போன்ற பல விவகாரங்களுக்கான முதன்மை காரணமாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது.

**போதைப்பொருளும் முஸ்லிம்களும்**

இக்கொடிய பாவனை இன, மத பேதமின்றி அனைவரிலும் குடிகொண்டுள்ளது என்றாலும் எம்மதம் இது பற்றிப் பல கட்டுப்பாடுகளையும் எச்சரிக்கைகளையும் விதித்திருக்கின்றதோ அவ்வுயர் மதத்தை தழுவிய முஸ்லிம்கள் இப்போதைப்பொருள் பாவனையில் முன்னிற்கின்றனர் என்பது சமூகப்பற்றுள்ளவர்களை கவலையில் வாட்டுகின்றது.

போதைப் பொருள் கண்காணிப்பு மையத்தின், சென்ற ஆண்டிற்கான 2009 – 2020 ஜுன் மாதம் வரையிலான அறிக்கையின் படி போதைப்பொருள் விவகாரத்தில் முஸ்லிம்கள் 13 வீதத்தால் இரண்டாம் இடத்தில் தொடர்ந்தும் இருக்கின்றனர். மேலும் இந்த நாட்டில் நிரூபிக்கப்பட்ட 60,000 முதல் 80,000 வரை போதைக்கு அடிமையானவர்களில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், எனவும் அவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

ஒவ்வொரு வருடத்தினதும் 2015, 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளின் தரவுகளைப் பார்க்கும் போது முஸ்லிம்கள் விகிதாசாரத்தில் போதைப்பொருள் பாவனையில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான தரவுகளின் படி போதைக் கட்டுப்பாட்டில் மிக உயர்ந்த எழுச்சியைக் கண்டுள்ளனர். ஆனால், நாளுக்கு நாள் முஸ்லிம்கள் போதைப்பாவனை, கடத்தல் அனைத்திலும் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர்.

**இதைத் தடுப்பதற்கான வழி என்ன?**

போதைக்கு அடிமையானவர்களை எவ்வாறு மீட்பது தொடர்பாக நாம் சிந்திக்கும் போது, முதலில் இவர்களும் எங்களைப் போன்ற மனிதர்களே என்ற மனிதநேயம் எம் உள்ளங்களில் ஏற்பட வேண்டும்.

போதைக்கு அடிமையானவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி ஓரம் கட்டுவதன் மூலம் சமூகம் சிறக்குமா? மேலும் அவர்களை வன்சொற்களால் தூற்றுவதன் மூலமாகவும், கண்டிப்பதனாலும் இதற்கான சிறந்த தீர்வைக் காணமுடியுமா? இதற்கான சிறந்த திட்டமிடப்பட்ட ஒரு மாற்றுவழியின்றி நிர்கதி நிலையில் முஸ்லிம் சமூகம் நின்றுகொண்டிருக்கின்றது.

போதைப்பொருட்களின் விபரீதம், விளைவுகள் பற்றி எழுத்தாளர்கள் எழுதியும், பேச்சாளர்கள் பல தலைப்புக்களில் உரை நிகழ்த்தியும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ள போதிலும் இன்று வரை போதையின் பாவனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற சோகமான செய்தியைத் தான் கேட்க வேண்டியுள்ளது.

இதற்கான சிறந்த, நிரந்தரத் தீர்வு போதைப் புனர்வாழ்வு மையங்களை நிறுவுவது தான் என்பது தேசிய அபாயகர ஔடதங்கள் சபையின் கணிப்பீட்டு முடிவாகும்.

**சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள்**

போதைவஸ்து நுகர்வினை ஒழிப்பதற்கான சிறந்த மாற்றீடாக, புனர்வாழ்வு மையங்கள் விளங்குகின்றன. போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீட்சி பெறுவதற்காக அரச அமைப்புகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் சேவைகள் பல வழங்கி வருகின்றன. போதை வஸ்துக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து சிகிச்சை பெறுவதைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் 2017 ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்தில் சட்ட உறுப்புரை "இலக்கம் 54 சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு" என்ற பெயரில் இயற்றப்பட்டது.

அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை இது போன்ற 4 வதிவிட வசதியுள்ள நிலையங்களை நடத்தி வருவதுடன், சேவைகளையும் வழங்கி வருகின்றது. இந்நிலையங்கள் **கொழும்பு (தலங்கம), கண்டி, காலி மற்றும் ஊராபொல (நிட்டம்புவ)** ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளுடன் போதைத் தடுப்பு மற்றும் வெளியக சேவைகளையும் சபை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் இச்சேவைகளை வழங்கும் பல தனியார் நிறுவனங்களும், கிறிஸ்தவ, பௌத்த, இந்து மத அடிப்படையிலான புனர்வாழ்வு மையங்கள் மற்றும் சிகிச்சை சேவைகள் நாடு முழுவதும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்நிலையங்களில் உளவளசிகிச்சை, குடும்ப ஆலோசனை சேவை, விசநீக்கம், உடற்பயிற்சி, மனத்தளர்ச்சிக்கான சிகிச்சைகள், உட்புற மற்றும் வெளிப்புற செயற்பாடுகள், உளநோய் சிகிச்சை, சுகாதாரமான வாழ்வு முறையான கல்வி, ஊக்கமுண்டாக்குதல், திறன் அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்கள் இம்மையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வடிப்படையில் அண்மைக் காலமாக போதைப் புணர்வாழ்வு மையங்களுக்குச் சென்று சிகிச்சை பெற்றவர்களின் புள்ளிவிபரம் பாரிய முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

| ஆண்டு | அரச புனர்வாழ்வு மையங்களில் சிகிச்சை பெற்றோர் | தனியார் நிறுவனங்களில் சிகிச்சை பெற்றோர் | சிறைச்சாலை திணைக்கள புனர்வாழ்வு திட்டங்களினூடாக சிகிச்சை பெற்றோர் | கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சை பெற்றோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2015 | 866 | 212 | 317 | 87 | 1482 |
| 2016 | 826 | 474 | 684 | 371 | 2355 |
| 2017 | 1286 | 608 | 294 | 523 | 2706 |
| 2018 | 1142 | 415 | 1048 | 1842 | 4447 |

**புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகம்**

இவ்வாறான புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சை பெறுபவர்கள் சிறந்த நற்பண்புகளுடனும், ஆளுமை விருத்தியுடன் கூடிய ஆற்றல் மிக்கவர்களாகவும் வெளியேறுவதாகப் போதைக் கட்டுப்பாட்டு கண்காணிப்பு மையம் தெரிவிக்கிறது.

**மதங்களும் புனர்வாழ்வு மையங்களும்**

புனர்வாழ்வு மையங்களில் மதங்கள் மிகக் கூடிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. போதைக்கு அடிமையானவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்க பல மாற்றீடுகளை மேற்கொண்டாலும் ''யார் இறை நம்பிக்கையில் தன் மனதைச் செலுத்தி இத்தீய செயலை கைவிடுகின்றாரோ அவர்களால் மட்டும்தான் இத்தகைய பழக்கங்களிலிருந்து மீள்வது சாத்தியமாகும்" என்பது உலக ஆய்வுகளின் முடிவாகும்.

இலங்கையில் கிறிஸ்தவ, பௌத்த புனர்வாழ்வு மையங்கள் வெற்றிகரமான செயற்பாடுகளை மேற்கொண்டு தங்கள் சமூகத்தை இக்கொடிய அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்கான காத்திரமான பங்களிப்பை ஆற்றிவருகின்றன.என்றாலும் இவ்விடயத்தில் கூடிய கரிசனை செலுத்த வேண்டிய சமூகமாக முஸ்லிம் சமூகம் இருந்தும் கூட பொறுப்பற்ற விதத்தில் அசிரத்தையாக இருப்பது எதிர்கால முஸ்லிம் சமூகம் சமூகசீர்கேடுகளால் தலைவிரித்தாடுவதற்கு தீனி போடும் செயலாக அமைகின்றது.

**இஸ்லாமிய புனர்வாழ்வு மையம்**

இஸ்லாமிய புனர்வாழ்வு மையம் அமைப்பது தொடர்பாக 2015 ஆம் ஆண்டு வை.எம்.எம்.ஏ, அரச அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையுடன் இணைந்து செயற்திட்டம் ஒன்றை மேற்கொண்டது. அவுஸ்திரேலியாவில் குடியிருக்கும் இலங்கைத் தம்பதியினரான ஸனீர் மிஸ்கீன் மற்றும் காமிலா மிஸ்கீன் அவர்களின் நன்கொடையால் மினுவாங்கொடையில் இந்நிலையம் அமைப்பது தொடர்பாக வை.எம்.எம்.ஏ யின் தலைவர் சாதிக் எம் சலீம் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் டாக்டர் சாமிரா நிலங்க ஆகிய இருவருக்குமிடையில் சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற இஸ்லாமிய புனர்வாழ்வு தொடர்பான நிகழ்வின் போது ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

ஆனாலும் நான்கு வருடங்கள் கடந்த நிலையில் அது தொடர்பான எவ்வித வெற்றிகரமான செயற்திட்டங்களுமின்றி அவ்விவகாரம் தோல்வியடைந்ததாகவே தெரிகின்றது. அண்மையில் மீண்டும் இது தொடர்பாக, போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் சமூகமயப்படுத்தும் கருத்திட்டமொன்றை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா , அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உலமா சபையின் இவ்வினைத்திறன் மிகுந்த செயற்பாடு வரவேற்கத்தக்கதாகும். இவ்வாறு பல இஸ்லாமிய புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை மையங்கள் தேசிய ரீதியில் மாவட்டம் வாரியாக அமைக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

**சமூகத்தின் பங்களிப்பு**

போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு போதைக்கு முற்றுப்புள்ளி திட்டம் மட்டும் போதுமானதல்ல. சகலரது பூரண ஒத்துழைப்பின் மூலமே போதைப்பொருள் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். போதைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு புனர்வாழ்வு மையங்கள் தான் மிகச் சிறந்த வழியாக அமைகின்றது.

எனவே தற்போது முஸ்லிம் சமூகத்தின் அத்தியாவசியத் தேவையாகக் கருதப்படும் இஸ்லாமிய புனர்வாழ்வு மையங்கள் அமைக்கப்படுவது முஸ்லிம் சமூகத்தை போதை அற்ற உயர்ந்த சமூகமாக பரிணமிப்பதற்கான அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

புனர்வாழ்வு மையங்கள் அமைப்பது தொடர்பாக வெறுமனே அரசாங்கம் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. சமூக நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும், வாழ்க்கையில் சிதைந்து போனவர்களை மீட்டெடுக்க இவ்வாறான வேலைத் திட்டங்களை செயற்படுத்துவது தலையாயக் கடமையாகும்.

**எவ்வாறு செயற்படுத்துவது ?**

இதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் பங்காற்ற வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. இயக்கவெறி, அரசியல் கட்சிப்பாகுபாடு போன்ற அனைத்துப் பிரிவுகளையும் களைந்து முஸ்லிம் சமூகம் என்ற மகுடத்தின் கீழ் தேசிய ரீதியில் அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் மீடியா போரம், சூரா கவுன்சில் போன்ற நிறுவனங்களோடு சமூக நலன்புரி நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், துறைசார்ந்தோர், தனவந்தர்கள் என சமூகத்தில் அனைத்து மட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தனிநபர் மற்றும் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இஸ்லாமிய புனர்வாழ்வு மையம் தொடர்பான உள்ளக கலந்துரையாடல்கள், திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்வது சமூக பிரக்ஞை கொண்ட அனைவரினதும் தார்மீகக் கடமைப்பாடாகும்.

எனவே, முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் வித்தாக அமையும் இஸ்லாமிய புனர்வாழ்வு மையங்களை உருவாக்கி இதயசுத்தியுடன் நம்மாலான பணிகளை மேற்கொண்டு நமது சமூகத்தைக் காத்துக்கொள்வோம்!

## *References*



- *http://www.nddcb.gov.lk*
- **இலங்கையில் இஸ்லாமிய புனர்வாழ்வு மையங்கள் அமைப்பது தொடர்பான அகில இலங்கை ஜமிய்யதுல் உலமாவின் இளைஞர் விவகாரப் பிரிவின் செயற்திட்ட கருத்தரங்கு – 2020 மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் கருத்தரங்கின் ஒலிப்பதிவுகள்.**

# Blood Donation Camp - March 7

























வடக்கில் அச்சுப் பதிப்பில் தனித்துவமான நிறுவனம்
ANDRA
PRINTERS
முப்பரிமான விளம்பரப்பலகை
3D Name Boards
Digital Light Boxes
Stainless Steel Letters
PVC Vinyl Cuttings
Hoardings
Awards Shields Medals Trophies
T Shirt Printing
ID Card Printing
Mug Printing
புத்தகங்கள் | சஞ்சிகைகள்
லேபிள்கள் | விசிற்றிங் காட்
போஸ்ரர்கள் | துண்டுப்பிரசுரங்கள்
021 222 8929 / 077 66 22 981
379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# பல்கலைக்கழக மாணவிகளும்



# சமூக மட்ட கண்ணோட்டமும்

**ரிப்னா ஆர்.எஸ்**
2ஆம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**"அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு...?"**

என்ற கருத்து தொடங்கிய காலம் முதல் இன்று வரை பெண்களின் கல்விக்கு, மேலோட்டமாக இல்லாத போதும் பரவலாக பலரிடத்தில் முடக்கக் கருத்துக்களும், தாழ்த்தும் கருத்துகளும் கூறப்பட்டு வருகின்றமையை மறுக்க முடியாது. ஒரு ஆண் மகன் பொருளியல் ரீதியாகவோ, சமூகவியல் ரீதியாகவோ கற்றவனாக இருப்பதை விரும்பும் இச்சமூகம், அதே சமத்துவத்தைப் பெண் சமூகத்தை நோக்கி திருப்புகையில் பாரபட்சம் காட்டுவதில் தயங்குவதில்லை. தலைமுறை தலைமுறையாக அடிமைத்தனம் பேணப்பட்டு வந்து, நாகரீகம் தோன்றவே பெண் சமத்துவமும், பெண்கள் கல்வியின் முக்கியத்துவமும் மேலோங்கியது எனலாம். இதனாலேயே அன்று தொட்டு இன்றைய நவீன யுகம் வரை எண்ணிலடங்கா பெண் ஆளுமைகளும், முன்மாதிரிகளும் வளர்ச்சியுற்று பெண் கல்விக்கு அடிக்கோலிடப்பட்டது என்றால் அது மிகையாகாது.

கண் திறக்கும் கல்வியை பெறுவதில் பெண்ணுக்கு மட்டும் ஏன் தயக்கம்? என எண்ணுமளவிற்கு இன, மத, கலாசார, மொழி பேதம் இன்றி அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் முன்மாதிரிகளாக வெளிப்படும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளமையே இதற்கு தக்க சான்றாகக் கொள்ளலாம். தனிக்குடும்பம் தொட்டு வெளியுலக சமூகம் வரை சவால்களையும், பிரச்சினைகளையும் மனதளவில் எதிர்கொள்ளக்கூடிய வல்லமை பெற்ற பெண்களுக்கு கல்வித்துறை மட்டும் விதிவிலக்கானது அல்ல. இன்றைய கால அனைத்து சமூக அடைவு மட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு மற்றும் பெண் கல்வியின் பங்களிப்புக்கள் சொல்லிலடங்காதது என்பதே நிதர்சனம்.

பெண்களின் கல்விப் பயணம் என்பது வெறுமனே தொழில் ரீதியான தேவை நோக்கங்களையும் தாண்டி சுயவாழ்வுக்கான ஒரு தனிப்பட்ட வாழ்வியல் ஒழுங்கு முறையை பேணுவதற்கு வழிகோலுகிறது. தன் குடும்பம், அயலவர், தன் இனம், மதம், மொழி, தான் சார்ந்த சமூகம் என அனைத்து அலகுகளிலும் தன் நிலையை உறுதிப்படுத்த, தனக்குரிய ஒரு சுயத்தைப் பெற, தனக்குரிய ஒரு அந்தஸ்தை சமூகத்தில் நிலைநாட்ட கல்வித்தேவை உடையவள் என்ற ரீதியில் ஒவ்வொரு பெண்ணும் கல்வியையே சிறந்த ஆயுதமாக கொள்கிறாள் என்றால் அதற்கு மாற்றுக்கருத்துக்கள் எழாது எனலாம்.

குறிப்பாக பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பெண் மாணவிகள் சமூகமானது சற்று அதிகமாகவே தனிப்பட்ட ரீதியிலும் சரி, சமூக ரீதியிலும் சரி பலவகையான எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. "பல்கலைக்கழக மாணவி" என்றாலே

சற்று வித்தியாசமாக பார்க்குமளவிற்கு இருந்த சூழல் அண்மைக்காலங்களிலேயே சற்று தளர்வைக் கொண்டு இருந்தாலும், மாணவிகள் மீதான சமூகத்தின் கண்ணோட்டமானது சிலரிடத்தில் புரிந்துணர்வோடு காணப்பட்ட போதிலும், இன்று கூட பலரிடத்தில் எதிர்மறையான சிந்தனைகளையும், சில தவறான கண்ணோட்டங்களையும் கொண்டு காணப்படுவது உண்மையில் கவலைக்குரியது.

ஏனெனில், கல்விமயமான இம்மிலேனிய யுகத்தில் தற்போதைய மாணவர்களின் உயர்மட்ட இலக்காக காணப்படுவது பல்கலைக்கழகக் கல்வியாகும். தற்கால சமூகம் கல்வியை கொண்டே ஒருவனது அடையாளத்தை மேற்கோளிடுகிறது. அவ்வாறிருக்க, ஆண்–பெண் வேறுபாடின்றி இன்று அனைத்து துறைகளிலும் இருபாலாரும் போட்டி போடும் அளவிற்கு தம் திறமைகளை முன்கொண்டு வருகின்றனர். பல்கலைக்கழகங்களுக்கு உட்செல்லும் மாணவர்களின் வீதம் அதிகரித்து வருவதோடு பெண் மாணவிகளின் உள்ளீட்டு வீதம் வெகுவான முன்னேற்றத்தை கொண்டுள்ளமையை அண்மைக்கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சமூக மேம்பாடு, தன்னார்வத் தொண்டுகள் என சமூகம் வேண்டி நிற்கும் பல ஆளுமைகளை உள்ளடக்கிய பெண் மாணவச்சமூகம் உயர்த்தும் கரங்களால் தூக்கிவிடப்படுகிற போதும், தாழ்த்தும் மனங்களும் அதன் செயலை ஒருபோதும் மறக்கவில்லை..!

“பல்கலைக்கழக மாணவி” என்றாலே ஏனைய கலாசாரங்களுக்குட்பட்டவள், நாகரீகத்தின் பிடிக்குட்பட்டு வாழ்பவள், வரையறைகளுக்கு அப்பாற்பட்ட செயல்களில் ஈடுபடுபவள், ஏனைய மத, கலாசாரங்களின் பால் கவரப்படக்கூடியவள் என இட்டுக்கட்டி பேசுபவர்கள் நாகரீக சமூகத்திலும் தாராளம் என்பது உண்மையில் வியப்புக்குரியது. அதுமட்டுமன்றி, கல்விக்காலம் தாண்டி அடுத்த கட்ட நகர்வுகளை நோக்கி அடியெடுக்கையில், அதிகம் படித்தவள்–அதிகம் பேசுவாள் என்ற முகஞ்சுளிப்புகளும், “பெண் தானே!” என்ற ஏளனங்களும், அலட்சிய வார்த்தைகளும் சில கணங்களில் எதற்காக படித்தோம்? என சிந்திக்கத் தூண்டும் அளவிற்கு அவர்களை மாற்றிவிடுகிறது என்பது கண்கண்ட உண்மை.

பலவிதமான தடைகளைத் தாண்டி, குடும்ப சொந்தங்களைத் தொலைத்து, தன் கனவிற்காக, தன் எதிர்காலத்திற்காக, தன்னை சார்ந்த சமூகத்திற்காகப் பசி, தூக்கம் மறந்து இரவு பகலின்றி பட்டினி காத்து, விடுதி வாழ்வை சகித்து பிறிதொரு சமூகத்தின் பிடியில் வரையறைகளுக்குட்பட்ட வண்ணம் தன் ஒழுக்கநெறிகளையும் நெறிமுறைகளையும் பேணி, கண்ணுக்கெட்டா தூரத்தில் தான் வாழ விரும்பும் ஒரு எதிர்காலத்திற்காய்: தன் நிகழ்காலங்களை தொலைத்து வாழும் பல்கலைக்கழக மாணவியரை தவறான எண்ணங்களோடு விளிக்கும் முன்

**ஒரு கணம் சிந்தியுங்கள்...!**
**அவள் படும் துன்பங்கள் அவளுக்கு மட்டுமானதல்ல.....!**
**ஆளுமை வேண்டி நிற்கும் அவள் சமூகத்திற்கானது.....!**
**முழு பெண் சமூகத்திற்கும் முன்மாதிரியானது.....!**

இதே கஷ்ட துன்பங்களின் பிடிக்கு பல்கலைக்கழக ஆண் மாணவ சமூகமும் விதிவிலக்கானதன்று. இருந்த போதிலும் பெண் மாணவிகள் மீதான சமூகத்தினது அழுத்தமும், உள ரீதியான பாதிப்புகளும் பெண் என்ற ரீதியில் எதிர்கொள்வதில் ஏற்படும் சவால்களும், தாக்கங்களும் அதிகம் என்பதே குறிப்பிடத்தக்க கருத்தாகும்.

ஒழுக்கத்தில் தப்பிப் போகும் ஒன்றிரண்டினை கொண்டு, சமூக கண்ணோட்டத்திற்குப் பொருந்தாத ஒரு சோறு பதத்தின் அடிப்படையில் “பல்கலைக்கழக மாணவி” என பொதுவாக விளித்து நிற்கும் இருட்டிற்குள் வாழும் சமூகம் தெளிவடைய வேண்டும். **பல்கலைக்கழக மாணவி** என்ற பதத்திற்குள் உள்ளடங்குவதே உண்மையில் பெருமைக்குரியது என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். ஏனெனில், உயர்கல்வி முடித்து பட்டத்தை கையில் பெறும் வரை அவளுக்கு நேரும் அவமானங்களும், கஷ்டங்களும் அவள் செய்யும் தியாகங்களும், பெறும் வீழ்ச்சிகளும் “பட்டம்” என்ற தகைமையைத் தாண்டி: உலக வாழ்வியலை சிந்தைக்கு ஏற்றும் ஓர் அற்புத பயணம் **பல்கலைக்கழக வாழ்வு!** அதன் மூலம் கிடைக்கப்பெறும் அறிவை விட அனுபவத்திற்கு பலம் அதிகம் என்பதை அதனை தாண்டி வரும் ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவியரும் அறிவர்.

இன்று எத்தனையோ சமூக சேவைகள், தன்னார்வத் தொண்டுகள் மற்றும் சமூக நலன் பேணும் செயற்பாடுகள் எனப் பல்கலைக்கழக மாணவர்கள் இலாப நோக்குகளின்றி கல்வி, கலாசார, மொழி ரீதியான பலவிதமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் பெண் மாணவியரின் பங்களிப்பு அளப்பரியது. மேற்கண்டவாறான பொதுவியல், சமூக மற்றும் கல்வி சேவைகளுக்கு ஆதரவு வழங்கி அவர்களை ஊக்குவித்து முன்னோடியான வினைத்திறன் மிக்க எதிர்காலமொன்றை பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதே பல்கலைக்கழக மாணவி என்ற ரீதியில் எனது கருத்தாகும்.

“ஆயிரத்தில் ஒன்று தவறாகலாம், அதனால் ஆயிரமும் பிழை தான்” என கூறும் சமூகமும் இருக்கத்தான் செய்யும். அதற்காக அனைத்தும் பிழைத்து விடப்போவதில்லை. **பல்கலைக்கழக மாணவி** என்ற பதத்திற்குள் கண்ணியம் தவறாத, நெறிமுறைகளை மீறாத, இயல்பில் மாற்றம் கொள்ளாத ஒழுக்கத்தோடு கல்விப் பயணங்களை தொடரும் மாணவியர் சமூகமொன்றும் காலங்காலமாக வளர்ந்து வருவதையும் அறியாச் சமூகம் சிந்தையில் கொள்ள வேண்டும். பெண் பட்டதாரியை சமூகம் ஊக்குவிப்பதன் அவசியம் உணரப்பட வேண்டும். அவர்களுக்கு உறுதுணையாக ஒப்புரவோடு நடந்து எழுச்சி மிக்க உலகில் பெண் சமூகம் ஓங்க வேண்டும்.....! இன்று போல் என்றும்....!

**“சொல்வார்கள் சொல்லட்டும்–நித்தம் அவளை நிந்திக்கட்டும்**
**அவளுக்கும் உண்டு எதிர்காலம்...! ”**

உசாத்துணைகள்.


- **பெண் கல்வியின் முக்கியத்துவம்** – *www.islamkalvi.com*
- **பெண் கல்வியின் முக்கியத்துவம்** – *newsplus.lk*
- **பெண் கல்வியும் சமுதாய முன்னேற்றமும்** – *www.battinews.com*

# பல்கலைகற்க பல்கலை நுழைந்த உனக்காய் பவ்வியமாய் என் வரிகள் இதோ!

**அஸ்மா பய்ஸர்**
முதலாம் வருடம், சட்டத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாடத்தோடு நிறுத்திக் கொள்வது கல்வியன்று – பலவும்
பயின்று உன்னை பட்டைத் தீட்டிக் கொள்வதே கல்வி..
பட்டம் பெறுவதை மட்டும் திட்டமாக்காதே! – உன்னை
வேண்டி நிற்கும் சமூகம் மட்டமாகி விடும்..

சிறுபான்மை எம்முள் சிறந்தவர்கள் – நீங்கள்
சிதைந்து விடாமல் சிறகடித்து முன்னேறுங்கள்!
ஆண்டுகள் கடந்தாலும் மாண்டு போய் விடாதே! – நல்ல
ஆளுமைகளாய் அலங்கரித்து வெளியேறு!

அனுபவங்களை நல்ல அடையாளங்களாய் பதித்துவை – நாளை
தொடரும் சந்ததி சிந்தித்து நடக்க
கனவுகள் சுமந்து காலடி பதித்ததை அவ்வப்போது மீட்டிப்பார்
உன் உறுதிகள் உரமாகும்

வாசிப்பின்றி ஆளுமைகள் வரலாற்றில் வளரவில்லை – தோழா
வாசிப்பை நேசித்து உன்னை போஷித்துக் கொள்!
சமூகப்பற்றை பற்றிப் பிடித்துக் கொள் – உன்னை
எதுவாலும் எட்டிப்பிடிக்க முடியாது

புத்தகப்பூச்சிகளை சமூகம் சலித்துக் கொள்ளும் – பெரும்
புலமை கொண்ட ஆளுமைகளையே வரவேற்கும் பொக்கிஷம் நீ
பொன் எடுக்க மூழ்கியிருக்கிறாய்! – உன்
பொறுமைகள் மிகப் பெறுமதியானவை..

உதவியை உற்ற நண்பனாக்கிக் கொள்! – உன்னை
உடைக்க ஒன்றாலும் முடியாது...
உன் அறிவு அற்பமானது என்று எண்ணி விடாதே! – சமூகத்தின்
கண்கள் திறக்கப்படும் உன்னால்..
வேதனைகள் உன்னை வாட்டி எடுத்தாலும்
சாதனைகள் பதித்து சாந்தமாய் முன்னேறு!
உன்னை சமூகம் கொண்டாடியே தீர்த்து விடும்.



# இளைஞர்களின் சமூகப் பொறுப்புணர்வு: ஓர் இஸ்லாமிய பார்வை

**இக்பால் சௌஜான்**
இஸ்லாமிய கற்கைகள் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

இவ்வுலகில் படைக்கப்பட்டுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் பிற உயிரினங்களுடன் இணைந்தே வாழவேண்டியுள்ளது. இதற்கு மனிதனும் விதிவிலக்கானவன் அல்ல. இவ்வுணர்வு இறைவனால் இயற்கையாகவே மனிதர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் என்பவர்கள் 15 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் என ஐ.நா. சபை வரையறை செய்துள்ளது (Kumarawal, 2021). உலக மக்கட் தொகையில் ஆறில் ஒரு பங்கினர் இளைஞர்களாவர் (Kumarawal, 2021). நாளைய சமுதாயத்தின் தூண்களாகவும், வருங்காலத் தலைவர்களாகவும் அறியப்படும் இன்றைய இளைஞர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேம்பட்ட சமுதாயத்தை உலகத் தரத்தில் ஏற்படுத்த முடியும். சமூக மேம்பாட்டிற்கான மாற்றங்களையும், அதற்கான வழிமுறைகளையும் பற்றி சிந்திப்பதே சமூக பொறுப்புணர்வாகும் (Kumarawal, 2021). மேலும், மற்றவர்களின் பண்பாட்டு மதிப்பீடுகளைப் பாராட்டுதல், குடி உரிமையை மதித்தல், தீண்டாமையை எதிர்த்தல், நட்புறவு, தேசப்பற்று, மனித நேயம், சகோதரத்துவம், அனைத்து மதங்களையும் நேசித்தல் போன்றன சமூக உணர்வை வளர்க்கும் பிரதான அம்சங்களாகும். இவைகள் ஒரு மனிதனிடத்தில் காணப்படுமாயின் அவன் சமூகப் பொறுப்புணர்வு கொண்ட மனிதனாக கணக்கிடப்பட முடியும். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், சமுதாயத்தை நல்லவர்களாகவும், உன்னதமானவர்களாகவும் மாற்றுவது இளைஞர்களின் பொறுப்பாகும். இளைஞர்களால் சமூகத்தையும், கலாச்சாரத்தையும் மேம்படுத்தவும் முடியும் (Radheshyam Acholiya, 2017).

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் மீதும் அக்கறை செலுத்தும் ஒரு முதன்மை சமயம் இருக்குமானால் அது இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர வேறு இருக்க முடியாது. இவ்வுலக பிறப்புக்கும்,

இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் மனிதன் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் (ஹுகூகுல்லாஹ்) எவை? சக மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் (ஹுகூகுல் இபாதா) எவை? என்பன பற்றி இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது. இஸ்லாத்தில் சமூகப் பொறுப்பு என்பது மனிதன் பிற மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுடன் இணைந்ததாகும். இது மறுமை நாளில் இறைவனால் கேள்விக்குட்படுத்தப்படக்கூடிய ஒன்றுமாகும். இதற்கு மாற்றமாக இன்றைய இளம் தலைமுறையினர் சமூக நல பணிகளிலும், சமூகத்திற்கு ஊறு விளைவிக்கும் தீய செயற்பாடுகளை தட்டிக்கேட்பதில் இருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டும், சமூகநல தன்னார்வக்குழுக்களில் இருந்து தன்னை தூரமாக்கிக் கொண்டும் நானும் எனது வேலையும் என்னும் சுயநலப் போக்குடன் வாழ்ந்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக இன்றைய இளைஞர்களுக்கு மத்தியில் இந்நிலை அதிகரித்து வருவது பல தரப்பினரும் முன்வைக்கும் விமர்சனமாகும். இதற்கு சிறந்த உதாரணம் பொதுச்சிரமதானப் பணிகளுக்கோ அல்லது சமூக நலச் செயற்பாடுகளுக்கோ அழைப்பு விடுக்கப்படுகின்றபோது முன்னணியில் நின்று உணர்வுடன் செயற்படுபவர்களாக முதியோர்களும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில இளைஞர்களுமே காணப்படுகின்றனர். ஒரு சமூகத்தின் முதுகெலும்பு அச்சமூகத்தில் உள்ள இளைஞர்கள். ஒரு சமூகத்தில் உள்ள இளைஞர்களின் நாடித்துடிப்பை பரீட்சித்துப் பார்த்து சமூகத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால நிலையை மட்டிட்டுக் கொள்ள முடியும் (உஸ்தாத் மன்ஸூர், 2012). இவர்கள் சமூக உணர்வற்றுச் செயற்படுவது கவலை அழிக்கின்றது. இந்நிலை எதிர்காலத்திலும் நீடிக்குமிடத்து முஸ்லிம் சமூகம் வெறுமனே சுயநலம் கருதும் சமூகம் என்ற இழி சொல்லைச் சுமக்கும் நிலை ஏற்படும். இது தொடர்பில் ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் விழிப்புணர்வு பெறுவது காலத்தின் தேவையாக எழுந்ததுவே இக்கட்டுரை வரையப்பட்டதன் பிரதான நோக்கமாகும்.

**இஸ்லாம் கூறும் சமூகப் பொறுப்புணர்வு**

இஸ்லாம் கூறும் சமூகப் பொறுப்பு என்பது பிறர் நலம் பேணல், மற்றவர்களின் பண்பாட்டு மதிப்பீடுகளைப் பாராட்டுதல், குடி உரிமையை மதித்தல், தீண்டாமையை எதிர்த்தல், நட்புறவு, தேசப்பற்று, மனித நேயம், சகோதரத்துவம், அனைத்து மதங்களையும் நேசித்தல் போன்றவற்றின் மூலம் முழுமை அடைகின்றது. இவைகள் பற்றி ஒரு முஸ்லிம் விழிப்புடன் செயற்படுவது அவசியமாகும். குறிப்பாக, இன்றைய இலங்கைச் சூழலில் அத்தியவசியத் தேவையாகவும் இவை உள்ளன. ஒரு மனிதன் சக மனிதன் மீது அக்கறையுடன் செயற்படுகின்ற போது அவன் வசிக்கும் சமூகம், தேசம், முழு உலகு (உம்மாஹ்) என அனைத்தும் தன்னிறைவுடன் வளம்பெற வழி ஏற்படும்.

இச் சமூகப் பொறுப்புணர்வு எவ்வாறு பார்க்கப்பட வேண்டும் என்றால், நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் உயிர் உள்ளது. அந்தச் செயல் வளரும். சிலபோது அது மறுமை வரை வளர்ந்து கொண்டே இருக்கும். அதாவது நாம் செய்யும் ஒரு சிறு செயல், ஒரு குளத்தில் கல்லெறியும் போது உருவாகும் அலைகளைப் போன்று சமூகத்தில் அதிர்வுகளையும், தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தும். அதுதான் நமது செயலின் உயிர். சிலபோது அந்த செயல் வளர்ந்து கொண்டே இருக்கும். நல்லதோ கெட்டதோ அது மறுமை வரை நீண்டு செல்லும்.

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யாக் கால மக்களிடம் காணப்பட்ட உயர்ந்த ஒரு உணர்வு தான் “அஸபியத்” என்பது. தான் சார்ந்துள்ள கோத்திரத்தின் மீது நிபந்தனைகள் இன்றி

பற்று வைப்பதாகும். இதன் நடைமுறை பல விடயங்களில் பிழையாக பிரயோகிக்கப்பட்டாலும் அடிப்படையில் தான் வாழும் சமூகத்திற்காகவும், தனது சகோதரனுக்காகவும், சமூக உறுப்பினர்களின் நலனுக்காகவும் என்ற பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வந்துள்ளமையை இஸ்லாமிய வரலாற்றைப் படிக்கும் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும்.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது வாழ்க்கையை சமூகத்திற்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணித்தார்கள். இறைத்தூதராக இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் ''ஹில்புல் புலூல்'' என்னும் இயக்கத்தை ஆரம்பித்து செயற்படுத்தி வந்துள்ளார்கள் (Bint Aaysha, 2018). இது அன்றைய ஜாஹிலிய்யாக் கால சமூகத்தில் இடம்பெற்ற சீர்கேடுகளை இல்லாதொழிப்பதற்காகவும், அக்காலத்தில் இடம்பெற்ற உரிமை மீறல்களையும், அநீதிகளையும் தட்டிக்கேட்டு சமூகத்தை வழிப்படுத்துவதற்காகவும் என உருவாக்கப்பட்ட சமூக நல இயக்கமாகும். பிற்காலத்தில் இது பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது **''இப்போதும் அவ்வாறான ஒரு இயக்கத்திற்கான அழைப்பு என்னை நோக்கி வருமாக இருந்தால் நான் செல்வேன்''** எனக் குறிப்பிட்டார்கள். இச்சமூக உணர்வே அவர்களை முஸ்லிம் உம்மத்தின் தலைவராகவும், மாற்றுமத்தவர்களினால் கூட ஏற்றுக் கொள்ளும் அளவிற்குச் சிறந்த உத்தமராகவும் மாற்றியது என்றால் அது மிகையாகாது.

இஸ்லாம் ஒரு மனிதன் சுயநலப் போக்குடன் வாழ்ந்து மரணிப்பதை ஒரு போதும் விரும்புவதில்லை. "இஸ்லாம்" என்றாலே அது பிறர் நலன் நாடக்கூடியதாகும். இது பற்றி தமீமுத்தாரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் **"இந்த (இஸ்லாமிய) மார்க்கம் என்பது பிறர் நலம் நாடக்கூடியது." அப்போது நாங்கள், யாருக்கு நலம் நாடுவது? என்று கேட்டோம். அதற்கு நபியவர்கள், "இறைவனுக்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும் (நலம் நாடுவது)"** என பதிலளித்தார்கள் (முஸ்லிம்: 205). இதன் மூலம் இஸ்லாம் எந்தளவிற்கு அடுத்தவர்களின் நலனில் அக்கறை செலுத்துகின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஒரு முஸ்லிம் இறைவனை ஈமான் கொண்ட பின் புரிய வேண்டிய மிக முக்கியமான செயல் இஸ்லாமிய ஷரீஅத்தை தான் கற்று பிறருக்கும் அவற்றைக் கற்றுக் கொடுப்பதாகும். இவ்வாறு கற்றுக்கொடுக்கும் போதே சமூகத்தை நோக்கிய தனது சீர்திருத்தப் பணிகள் தொடங்கி விடுகின்றன. இதனை அல்குர்ஆன் **"முஃமின்கள் ஒட்டு மொத்தமாக புறப்பட்டுச் செல்லலாகாது. ஆனால் அவர்களில் ஒவ்வொரு வர்க்கத்தாரிலிருந்தும் ஒரு சிறிய கூட்டத்தார் சன்மார்க்க (ஞானத்தைக்) கற்று கொள்வதற்காகவும், (வெளியேறி சென்ற அவர்கள் பின்னே தங்கியவர்களிடம்) திரும்பி வந்தால் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் புறப்பட வேண்டாமா? இதைக் கொண்டே அவர்கள் தங்களை(த் தீமையினின்றும்) பாதுகாத்துக் கொள்வார்கள்"**(அல்குர்ஆன் 9:122). இவ்வாறு கூறுகின்றது. இன்று மார்க்கத்தைக் கற்றுக் கொண்டவர்கள் கூட இயக்கப் பிரிவினைகளைக் காரணம் காட்டி தவறுகளை கவனியாது விட்டுவிடுகின்றனர். சமூகத்தில் கல்வியை மார்க்கக் கல்வி, உலகக் கல்வி என வேறுபடுத்தி புரிந்து கொள்பவர்கள் மார்க்கத்தை கற்பதும் அதனைக் கற்றுக் கொடுப்பதும், அதனைக் கொண்டு சமூகத்தை சீர்திருத்துவதும் அறிஞர்களினதும் ஆலிம்களினதும் ஏகபோக உரிமை. இதற்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது என கூறி தம்மை சமூக நலப் பணிகளிலிருந்து விடுவித்துக் கொள்வதை காணமுடிகின்றது.

**சமூக பொறுப்புணர்வற்ற மனிதர்களின் பண்புகள்**

சமூகப் பொறுப்புணர்வற்ற ஒரு மனிதனிடம் காணப்படும் மூன்று பண்புகளை இஸ்லாமிய அறிஞர்கள் அடையாளப்படுத்துகின்றனர் (உஸ்தாத் மன்ஸூர், 2012). அவை பெரும்பாவத்தை பெற்றுத்தரக்கூடிய பண்புகளாகும்.

முதலாவது 'இக்னரன்ஸ்' எனும் பொடுபோக்கு. இதன் பொருள் அறியாமை அல்ல. 'நடப்பது நடக்கட்டும் நமக்கு என்ன?' என்ற அலட்சிய மனோபாவம் தான் பொடுபோக்கு ஆகும். இது சமூகத்தின் மீதான ஈடுபாட்டையும், அக்கறையையும் இல்லாமல் செய்து விடும் ஒரு இயல்பாகும். இன்று உள்ள பெரும்பாலான மக்களிடம் காணப்படும் ஒரு இயல்பாகும். உலகிலேயே அதிக அறிவு கொடுக்கப்பட்டவன் இப்லீஸ். அவனது செயல்கள் அனைத்தும் அறியாமையில் வெளிப்பட்ட செயல்கள் அல்ல. மாறாக அலட்சியத்துடன் வெளிப்பட்டவை. ஆகவேதான் அவன் இறைவனால் சபிக்கப்பட்டவனாக மாறினான். அவ்வாறே அபூஜஹ்ல் என்பவனும். அவன் "அபுல்ஹிகம்" என்று அழைக்கப்பட்டான் (நூஹ் மஹ்ழரி, 2017). அதாவது "அறிவின் தந்தை" என்பது இதன் பொருள். ஆனால் அவனது செயல்கள் அனைத்தும் சமூகத்திற்கு எவ்விதத்திலும் நன்மை அளிக்கவில்லை. ஆகவேதான் அவன் அபூஜஹ்ல் – "மடமையின் தந்தை" என்ற சிறப்புப் பெயருடன் இஸ்லாமிய வரலாற்றில் அறியப்பட்டான் (நூஹ் மஹ்ழரி, 2017).

இரண்டாவது 'அரொகன்ஸ்' எனும் அகம்பாவம். ஏனைய மனிதர்களைத் தன்னைவிட கேவலமாகக் கருதுவது. இக்கர்வ உணர்வு ஏழை– பணக்காரன், படித்தவன்– படிக்காதவன் என்ற ஏற்றத்தாழ்வுகளை சமூகத்தில் ஏற்படுத்தி மனிதர்களையும், சமூக ஒற்றுமையையும் சீர்குலைத்து விடுகின்றது. மூன்றாவது 'அக்ரெஷன்ஸ்' எனும் ஆதிக்கம். தன்னுடைய சுய இலாபத்திற்காக மற்றவர்களை கடும்போக்குடன் நடத்துவது.

எனவே, இந்த மூன்றும் பெரும்பாவங்கள் என்று திருக்குர்ஆன் பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. திருக்குர்ஆனின் இந்தப் பார்வை சமூகப் பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்டது எனலாம். எல்லா விவகாரங்களிலும் மனிதன் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இஸ்லாம் கற்றுத்தருகிறது. வீதியில் நடக்கிறீர்கள். அங்கே ஒரு கல் கிடக்கிறது. அதை உடனே அப்புறப்படுத்துகிறீர்கள். அதுதான் சமூகப் பொறுப்புணர்வு. அதேசமயம். வீதியில் செல்வோரைக் கவனிக்காமல் அந்தக் கல்லைத் தூக்கி எறிந்து விடுகின்றீர்கள். அது பின்னால் வந்துகொண்டிருக்கும் ஒருவரின் மண்டையை உடைக்கிறது என்றால் அதுதான் அக்ரெஷன்ஸ். இப்பண்புகள் எங்களிடம் உள்ளதா என்பதை சுய மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

**இஸ்லாமிய வரலாற்றில் அறியப்பட்ட சமூகப் பொறுப்புணர்வுடைய இளைஞர்கள்**

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு அளப்பரியது. இவர்கள் ஒரு சமூகத்தின் பாதுகாப்பு அரணாகவும் அமைகின்றனர். வரலாற்றில் சமூகத்திற்காக போராடிய வீரமிக்க இளைஞர்களைப் படிப்பினையாக அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது.

அல்குர்ஆன் மூஸா (அலை) அவர்களின் பிரச்சார வாழ்வு பற்றி இவ்வாறு கூறுகின்றது. **"பிர்அவ்னுக்கு அஞ்சியும் அவன் கொடுமைப்படுத்துவானோ எனப் பயந்து தம் சமூகப் பிரமுகர்களுக்கு அஞ்சியும் மூஸாவை அவர்களுடைய சமூகத்தாரில் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. சில இளைஞர்களைத் தவிர"** (யூனுஸ்:

83). இங்கு பனூ இஸ்ரவேல் சமூகத்தினர் பிர்அவ்னின் அடிமை முறையில் சிக்கித்தவித்த போது சமூக விடுதலைக்காக நபி மூஸா (அலை) அவர்களுடன் தோளோடு தோள் நின்று போராடியவர்கள் சமூகப்பற்றும் உணர்வும் கொண்ட சில இளைஞர்களே என்பதை அல்குர்ஆன் குறிப்பிட்டுக்காட்டுகின்றது.

மேலும் சூறா கஹ்ப் கூறும் குகைவாசிகளின் சம்பத்தில் ஏகத்துவத்தை சமூகத்தில் நிலைநாட்டுவதற்காக கொடுங்கோல் மன்னனுக்கு எதிராக போராடியவர்களும் இளைஞர்களே. இவர்கள் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

**"அவர்கள் தமது இரட்சகனை நம்பிக்கை கொண்ட இளைஞர்கள். அவர்களுக்கு தாம் மேலும் நேர்வழியை அதிகரித்துக் கொடுத்தோம்" (கஹ்ப்: 13).**

நபி (ஸல்) அவர்களின் மக்கா கால தஃவாப் பணிக்கு உறுதுணையாக நின்றவர்கள் இளைஞர்கள். மக்காவில் மறைமுக தஃவா பிரச்சாரத்திற்காக தனது வீட்டை வழங்கிய அர்க்கம் இப்னு அபில் அர்க்கம் (ரழி) என்பவர் 16 வயதை உடைய இளைஞரே. மதீனா ஹிஜ்ரத்தின் போது இறைத்தூதர் அவர்களின் கொலை முயற்சியை முறியடிப்பதற்காக நபி (ஸல்) அவர்களின் படுக்கையில் துணிச்சலாக உறங்கியவர் இளைஞர் அலி (ரழி) அவர்கள். அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை தொகுக்கும் பெரும் சமூகப் பொறுப்பு வழங்கப்பட்டது ஸைத் இப்னு தாபித் என்னும் இளைஞரிடமே. வடஆபிரிக்காவை வெற்றி கொண்ட உக்பா பின் நாபிஃ 18 வயதுடைய இளைஞரே. நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் யுத்த படைகளை நகர்த்திச் சென்று நாடுகளை கைப்பற்றியவர்களில் உஸ்மான் இப்னு ஸைத் 16 வயது பூர்த்தியான இளைஞரே, வடஇந்தியவைக் கைப்பற்றிய முஹம்மட் பின் காஸிம் அதே வயதுடைய இளைஞரே (Bint Aaysha, 2018).

இவ்வாறு இஸ்லாமிய வரலாற்றில் இளைஞர்கள் வீரர்களாகவும், சமூகத்தின் மாற்றத்திற்காக போராடிய போராளிகளாகவும் அறியப்படுகின்றனர். இதற்குக் காரணம் இவர்கள் தம் சமூகத்தின் மீது வைத்த பேரன்பும், தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்ந்தமையாகும்.

அல்லாமா இக்பால் முஸ்லிம் இளைஞனில் வைத்துள்ள ஆழமான நம்பிக்கையை பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

**"நட்சத்திரத்தை நோக்கி தனது கணையைத் தொடுக்கும் இளைஞனை நேசிக்கிறேன். இறைவா, முஸ்லிம் இளைஞனுக்கு எனது அதிகாலைப் புலம்பல் போன்ற உணர்ச்சியை வழங்குவாயாக! பூமியில் உள்ள அந்த ராஜாளிக்கு வானின் உச்சியை நோக்கிப் பறக்கும் இறக்கைகளை மீண்டும் வழங்குவாயாக!"**

நபி (ஸல்) அவர்கள் ஐந்து விடயங்கள் உங்களுக்கு ஏற்படுவதற்கு முன்னர் ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என குறிப்பிட்டார்கள். அவை உங்கள் இளமையை முதுமை வந்தடையும் முன்னரும், உங்களது உடல் ஆரோக்கியத்தை நோய் வர முன்னரும், உங்களது ஓய்வை வேலைகளும் பொறுப்புக்களும் வர முன்னரும், உங்கள் வாழ்க்கையை மரணம் வந்தடையும் முன்னரும், உங்களது செல்வத்தை வறுமை பீடிக்க முன்னரும் நன்மை புரிவதில்

பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்ற நீண்ட ஹதீஸில் ஒருவனை முதுமை வந்தடைந்து, உடல் பலவீனமுற்று, நோய்களுக்கு ஆளாகி தளர்ந்த நிலையை அடைய முன்னர் – உடல் பலமும் உணர்ச்சித் துடிப்பும் மிக்க இளமைப் பருவத்தை நன்மை புரிவதில் பயன்படுத்திக் கொள்ளும்படி நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள்.

**தேசிய அபிவிருத்தியில் இளைஞர்களின் பொறுப்பு**

பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்த தன்மைக்கும் உந்து சக்திகளாக பல்வேறு காரணிகள் அறியப்பட்டாலும் அவற்றுள் முதன்மையானது மட்டுமல்ல தவிர்க்க முடியாத சக்தியாகவும் முன்நிற்பது அந்நாட்டின் இளைஞர்களே ஆவர். புதிய சிந்தனைகள், மேம்பட்ட திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, தளராத முயற்சி, வளர்ச்சி நோக்கிய இலக்கு, நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்கள் இளைஞர்களின் தகுதியையும் தரத்தையும் உயர்த்திப் பிடிப்பதால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது இயலாததாகும். எனவே தான் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இளைஞர்கள் தான் நாட்டின் எதிர்காலம் அவர்களின் கைகளில் தான் நாடு உள்ளது என்று இளைஞர்களின் சக்தியை உலகிற்கு பல அறிஞர்கள் உணர்த்தியுள்ளனர்.

இன்றைய இலங்கைச் சூழலில், இளைஞர் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக பயிற்றுவிப்பதற்காக 1983ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்களினால் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் உருவாக்கப்பட்டு இன்று வரை இயங்கி வருகின்றது. இதன் பிரதான பணிகளாக இளைஞர் யுவதிகளது தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல், விளையாட்டுத் திறன்களை விருத்தி செய்தல், கலைத் திறன்களை விருத்தி செய்தல், தேசிய மற்றும் சமய நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்களை முன்னெடுத்தல், சமூக நலனோம்பல் நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல், நாட்டிலுள்ள இளைஞர்களது பிரச்சினைகளுக்கு முன்னின்று செயற்படல் போன்ற சமூக மற்றும் தேசிய நலப்பணிகளை ஆற்றி வருகின்றது. இவ்வாறு இலங்கை அரசு இளைஞர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான பல திட்டங்களை வரைந்து அமுல்படுத்தி வருகின்றது. இவற்றில் தங்களை இணைத்துக் கொண்டு தேசிய பங்களிப்பில் ஈடுபடுத்திற் கொள்ள விரும்பாத இளைஞர்களும் எம் சமூகத்தில் உள்ளனர் என்பது ஆச்சரியம் நிறைந்த கவலையே. இதற்கு பிரதான காரணம் சமூக உணர்வு முறையாக வழங்கப்படாமையாகும். ஒரு பிள்ளையின் முதல் பாடசாலை குடும்பம். இங்கு அசிரியர்களாக உள்ள தாய் தந்தையர்கள், குடும்ப உறவினர்கள் மூலம் சமூகப் பொறுப்பு பற்றியும், சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் போதிக்கத் தவறுகின்றமையே இன்றைய இளைஞர்கள் இது பற்றி பராமுகமாக இருப்பதற்கான முக்கிய காரணமாகும்.

**முடிவுரை**

இன்று இளைஞர்களுக்கு மத்தியில் சமூக பற்றையும் சமூக உணர்வையும் விதைப்பதில் எங்கு தவறு விடப்படுகின்றது என்பதை அடையாளம் கண்டு அதனை மாற்றியமைப்பதில் அதிகம் பிரயத்தனம் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. ஒரு சமூகத்தில் அறிஞர்கள், ஆலிம்கள் உருவாக்கப்படுவதை விடவும் சமூக உணர்வும், தேசப்பற்றும் உடைய இளைஞர்கள் உருவாக்கப்படுவது அவசியமாகும். அறிஞர்களும், ஆலிம்களும் உருவாக்கப்பட்டு அவர்களைக்

கொண்டு சமூகமும், தேசமும் முன்னேற்றம் அடையாது போகின்ற போது அச்சமூகம் சுயநல அறிவு ஜீவிகளால் நிரப்பப்படுமே தவிர அவர்களால் எப்பயனையும் வெளியீடாக பெற்றுக் கொள்ளாது.

**"எந்த ஒரு சமூதாயத்தவரும், தம் நிலையயைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை" (அல்குர்ஆன் 13:11)**

இஸ்லாம் காட்டித்தந்த உன்னத வழியில் பயணிக்கும் நீங்களும் நானும் இஸ்லாமிய வரலாற்றில் இளைஞர்களால் நிகழ்த்தப்பட்ட மாற்றங்களை விளங்கி, சமூக உணர்வு சார்ந்த நடவடிக்கைகளையும், பணிகளையும் புரிந்து, நாம் வசிக்கும் சமூகம் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்கி அதில் ஈடுபாடுகாட்டி, தேசத்தை எழுச்சி பெறச் செய்ய எல்லாம் வல்ல அல்லாஹ் அனைவருக்கும் அருள் புரிவானாக.

**உசாத்துணைகள்**


- *Bint Aaysha. (2018, February 19). Responsibilities of Youths in a Muslim Society. Retrieved from www.islamicteachings.org: https://www.islamicteachings.org/forum/topic/23602-responsibilities-of-youths-in-a-muslim-society/*


- *Farhat Naiser. (2020). The Role and Responsibilities of Youth in Islam . Research Journal Al Bashirah , 25-41.*

- *Jamathul Muslimeen . ( 2017, April 22).* **பிற முஸ்லிம்களின் நலனில் அக்கறை கொள்ளல்.**

- **உஸ்தாத் மன்ஸூர்** *(2012, May 09). www.Jafnamuslim.com. Retrieved from* **சமூக புணரமைப்பில் முஸ்லிம் இளைஞர்களின் பங்கு:** *http://www.jaffnamuslim.com/2012/05/blog-post_09.html*

- **குமாரவேல்** *(2021, May 1). www.azimpremjifoundationpuducherry.org. Retrieved from* **மாணவர்களிடம் சமூக உணர்வை விதைப்பதில் ஆசிரியர்களின் பங்கு:** *https://www.azimpremjifoundationpuducherry.org/perspectives/*

- **நூஹ் மஹ்ழரி.** *(2017, August 01).* **இஸ்லாம்: சமூகப் பொறுப்புணர்வு அவசியம்.** *Retrieved from www.maalaimalar.com: https://www.maalaimalar.com/devotional/devotionaltopnews/2017/08/01141256/1099816/islam-worship.vpf*



# பாகிஸ்தானின் தோற்றத்தில் முகமது அலி ஜின்னாவின் வகிபாகம் :

## ஓர் வரலாற்று நோக்கு

**சஞ்சிகா புவனதாஸ்**
விரிவுரையாளர், வரலாற்றுத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கி.பி 16ஆம் நூற்றாண்டு முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரினால் வர்த்தகம் மற்றும் சமயம் பரப்புதல் எனும் கொள்கைகளை முதன்மைப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட காலணித்துவ ஆட்சியானது தென்னாசிய வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றால் மிகையாகாது. இவ்வாறான காலணித்துவ ஆதிக்கத்துக்கெதிராக போராடிய நாடுகளில் இந்திய தீபகற்பமும் ஒன்றாகும். இந்தியாவினை ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு போராடிய தலைவர்களினால் உருவாக்கப்பட்டதே இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கமாகும். இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தைப் போன்று இந்தியாவின் விடுதலைக்காக பாடுபட்ட பிறிதொரு இயக்கமாக முஸ்லிம்களுடைய முஸ்லிம் லீக் இயக்கத்தைக் குறிப்பிடலாம். இம்முஸ்லிம் லீக் இயக்கத்தின் தலைவரே முகமது அலி ஜின்னா ஆவார். ஆரம்பத்தில் தேசிய காங்கிரஸ் இயக்கத்துடன் இணைந்து இந்திய விடுதலைக்காகக் குரல் கொடுத்து பின்னர் தனிநாடு எனும் கோரிக்கையை முன்வைத்து பாகிஸ்தானின் தோற்றத்துக்கு அத்திவாரம் இட்டவராக இந்திய வரலாற்றில் முகமது அலி ஜின்னா முக்கியம் பெற்று விளங்குகின்றார். இந்தவகையில் முஸ்லிம்களுக்கு ஒரு தேசம் என்ற சிந்தனையையும், முஸ்லிம்களுக்கான தனிநாடு பாகிஸ்தான் எனும் கொள்கையையும் இந்திய முஸ்லிம்களிடையே வளர்த்தெடுத்து பாகிஸ்தான் நாடு உதயமாக வழிவகுத்த பெருமை

ஜின்னாவையே சாரும். ஆகவே பாகிஸ்தானின் தோற்றத்துக்கு ஜின்னா எவ்வெவ் வழிகளில் தனது பங்களிப்புக்களை வழங்கினார் என்பது தொடர்பாக ஆராய்வதாக இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

இந்திய இஸ்லாம் மக்களினால் பெருந் தலைவராகப் போற்றப்பட்ட முகமது அலி ஜின்னா, ஜின்னாபாய் பூஞ்சா மற்றும் மித்திபாய் என்பவர்களுக்கு புதல்வராக 1876ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ஆம் திகதி கராச்சியில் பிறந்தார். சிந்த்மதரஸா–அல்–இஸ்லாம் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியினையும், கத்தோலிக்க மிஷனரிக் கல்லூரியில் உயர் கல்வியையும் நிறைவுசெய்து கொண்ட இவர், தனது இருபதாவது வயதில் லண்டனில் பாரிஸ்டர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் 1896இல் இந்தியாவுக்குத் திரும்பி பம்பாயில் சில காலம் வழக்கறிஞராகக் கடமையாற்றினார். ஜின்னா 1905இல் வழக்கறிஞர் தொழிலை ஒதுக்கிவிட்டு 1906இல் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் கோபால கிருஸ்ண கோகலேயுடன் இணைந்து பணியாற்றிய ஜின்னா பின்னர் தாதாபாய், நௌரோஜிக்கு துணையதிகாரியாகவும் விளங்கினார். அதுமட்டுமன்றி காந்தி, நேரூ, சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோர்களுடனும் இணைந்து கடமையாற்றினார். ஆரம்பத்தில் ஜின்னாவும் காந்தியும் தோழமையுடன் பழகினாலும், நாளடைவில் காந்தியின் அமைதி வழியான போராட்ட முறைக்கு மாறான சட்ட ரீதியான போராட்ட முறைக்கு ஜின்னா முதன்மை கொடுத்தமையினால் 1920இல் காங்கிரஸை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் 1921–1935 வரையிலான காலப்பகுதியில் ஜின்னாவின் அரசியல் வாழ்க்கையில் ஒரு தேக்கநிலையே காணப்பட்டது.

1935இல் லண்டனில் இருந்து திரும்பிய முகமது அலி ஜின்னா முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டு அதன் இணையற்ற தலைவராக திகழ்ந்தார். குறிப்பாக காங்கிரஸில் இருந்த போதே பம்பாய் முஸ்லிம் லீக் கிளையின் பொறுப்பையும், ஹோம்ரூல் இயக்கத்தின் பொறுப்பையும் நிர்வகித்து வந்தார். அதன் பின்னணியில் லியாகத் அலிகான், கவிஞர் இக்பால் ஆகியோரின் வற்புறுத்தலுக்கு இணங்க முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று அக்கட்சியின் வளர்ச்சிக்காக செயலாற்றினார். முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக பதவியேற்றது முதலாகவே ஜின்னா, தன் தோற்றத்திலிருந்து சிந்தனையிலிருந்து செயல் வரை ஒரு முழுமையான உண்மையான முஸ்லிமாக மட்டும் வெளிப்பட ஆரம்பித்தார். சிறப்பாக கூறுவதாயின் ஆரம்பத்தில் ‘இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர்களிலேயே தலை சிறந்த செயல் வீரர் இவர் தான்’ என்று கோகலேயால் பாராட்டப்பட்ட ஜின்னா, பின்னாளில் காங்கிரஸ ிடம் ஏற்பட்ட பிணக்கால் முஸ்லிம் லீக்கை வளர்ப்பதையும், பாகிஸ்தான் எனும் தனிநாட்டுக் கோரிக்கையை செயல்படுத்துவதையும் தனது முழுநேர தொழிலாகக் கொண்டு செயற்பட்டமை வரலாற்று உண்மையாகும்.

ஜின்னா முஸ்லிம்களுக்கென தனிநாடு அவசியம் என்ற கொள்கையை முன்வைப்பதற்கு காங்கிரஸின் நடவடிக்கைகளில் கொண்ட காழ்ப்புணர்வுகளும் பிரதான காரணமாக அமைந்து கொண்டது. குறிப்பாக 1937இல் நடைபெற்ற மாகாணத் தேர்தலின் பின்பாக முஸ்லிம் லீக்கின் விருப்பு வெறுப்புக்களை பெரியளவில் கருத்தில் கொள்ளாது காங்கிரஸ் செயற்பட்டது. அத்தோடு காங்கிரஸானது முஸ்லிம் லீக் கட்சியினூடாக ஏழை முஸ்லிம் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தாது நேரடியாகத் தொடர்புகளை வைத்துக் கொள்ளப் போவதாகக் கூறியது. காங்கிரஸின் இத்தகைய செயற்பாடுகளானவை முஸ்லிம் லீக்கின் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதாகவும், முஸ்லிம் லீக்கின் அரசியல் கோரிக்கைககளையும், முஸ்லிம் சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை

மழுங்கடிப்பதாகவும் ஜின்னா கருதினார். அத்தோடு இந்து மகா சபை போன்ற அமைப்புக்கள் காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்ததும் இந்து – முஸ்லிம் அரசியல் மற்றும் சமுதாய உறவுகளில் மேலும் விரிசலை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் 1937இற்கு பின்னர் இந்து – முஸ்லிம் முரண்பாடுகள் பல இடங்களில் கலவரங்களாக வெடித்தன. மேலும் காங்கிரஸ் முஸ்லிம் லீக்கின் கோரிக்கைகளான முஸ்லிம் சமூதாயத்தின் இறையாண்மை, சுதந்திரம் ஆகியவற்றை உத்தரவாதப்படுத்த வல்ல அரசியல் தீர்வுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தவில்லை. இந்நிலையில் முஸ்லிம் லீக் கட்சி ஆங்கில ஆட்சி இந்தியாவில் நீடித்திருக்கும் போதே தமது கூட்டு நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பியது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் 1940ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் முஸ்லிம்களுக்கென தனிநாடு வேண்டுமென்ற தீர்மானத்தை ஜின்னா முன்வைத்தார். குறிப்பாக 1930ஆம் ஆண்டு நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் முகமது இக்பாலினால் முஸ்லிம்களுக்கு தனிநாடு தேவை என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருந்த போதும் பாகிஸ்தான் நாடு என்ற கொள்கை 1940இலேயே கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் ஒவ்வொரு முஸ்லிம் லீக் மாநாட்டின் போதும் ஜின்னாவினால் இத்தீர்மானம் வலியுறுத்தப்பட்டு வந்தது. அத்தோடு பாகிஸ்தான் நாடு முஸ்லிம் மக்கள் அதிகளவிலுள்ள மாகாணங்களான அஸ்லாம், வங்காளம், பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுனெவும் ஜின்னா வலியுறுத்தினார். அதுமட்டுமல்லாது காங்கிரஸ் தேசிய கட்சியல்ல அது இந்துக்களின் கட்சி என்றும், காங்கிரஸிடம் அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றால் முஸ்லிம்களுக்கு அக்கட்சி நியாயம் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாதென்றும் ஜின்னா வாதிட்டார். இவ்வாறு பாகிஸ்தான் எனும் கோரிக்கையை முன்மொழிந்ததோடு அதனை சாத்தியப்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் வரலானார். இந்நடவடிக்கைகளை மகாத்மா காந்தி போன்ற தலைவர்கள் கடுமையாக எதிர்த்த போதும், தேசியவாதிகளின் சக்கரவர்த்தியான சி.இராஜகோபாலாச்சாரியார் 1944ஆம் ஆண்டு சூழ்நிலையில் பாகிஸ்தான் பிரிவது நல்லது என்ற கருத்தை முன்வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஜின்னா பாகிஸ்தான் நாடு என்ற கொள்கையை முன்வைப்பதற்கு பின்வரும் காரணிகள் பின்புலமாக அமைந்து கொண்டன.

- கூட்டு அமைச்சரவை அமைக்க முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்ள காங்கிரஸ் கட்சி விரும்பாதது நாட்டில் முஸ்லிம்களிடையே சிறுபான்மையினரான தாங்கள் நசுக்கப்படுகின்றோம் என்ற உணர்வை ஏற்படுத்தியது.
- ஜவஹரின் தீவிரச் சுதந்திர இயக்கச் செயல்கள் மக்களிடையே பரவிய போது இது முஸ்லிம்களைத் தனித்து ஒதுக்கியது போல் அவர்களுக்குத் தோன்றியது.
- இந்து மகா சபைத் தலைவர்கள் குறிப்பாக சவர்க்கார் போன்றோர்களின் இந்து மதப்பற்று முஸ்லிம்களின் சந்தேகத்தினையும், தனியரசு பெற வேண்டுமென்ற எண்ணத்தையும் தூண்டின.
- பெரும்பான்மையினரான இந்துக்கள் வாழுகின்ற இந்தியாவில் தமக்கு சிறப்பான எதிர்காலம் இராது என்றும், உயர் பதவிகள் கிடைக்காதென்றும் முஸ்லிம் மக்கள் கருதினர்.
- இந்துக்கள் தங்களை முஸ்லிம்கள் தீண்டக் கூடாது என்று கூறிய மதக் கட்டுப்பாடுகளினால் முஸ்லிம்கள் தாழ்ந்தவர்கள், இந்துக்கள் உயர்ந்தவர்கள் என்று இந்துக்கள் கருவதாக எண்ணியதால் பிரிந்து செல்ல விரும்பினர்.

- செகோஸ்லாவாகியின் சுபீடன் இயக்கம் பாகிஸ்தான் இயக்கத்திற்கு ஊக்கம் அளித்தது.
- ஆங்கிலேய அரசு இந்துக்கள், முஸ்லிம்கள் தனியாகப் பிரிவதற்கான மறைமுகமான வழிகளை ஏற்படுத்தியிருந்தது.

ஜின்னா ஆங்கிலேய அரசின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தமையும் பாகிஸ்தான் நாடு வேண்டுமென்ற சிந்தனைக்கு மேலும் உரமிட்டதென்றால் அது மிகையாகாது. குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் இந்தியர்கள் ஈடுபடுத்தப்பட்டமையினாலும், இந்திய வளங்களைப் பயன்படுத்தியமையினாலும் இந்திய நாட்டில் ஏற்படவிருந்த கொந்தளிப்பைக் கட்டுப்படுத்த முஸ்லிம் லீக்கின் தலைமையை ஆங்கில அரசு நாடியது. அதன் போது ஆங்கில அரசு பாகிஸ்தான் கோரிக்கை தொடர்பாக சிந்திப்போம் என்ற வாக்குறுதியை ஜின்னாவுக்கு வழங்கியிருந்தது. ஆனால் வேவல் பிரபுவினால் கொண்டுவரப்பட்ட அரசியல் திட்டங்கள் சிக்கல்களும், முரண்பாடுகளும் கொண்டதாகக் காணப்பட்டதனால் ஜின்னாவுக்கு அதுவரை காலமும் ஆங்கிலேய அரசு மீது கொண்டிருந்த நம்பிக்கையைத் தளரச் செய்தது. அதுமட்டுமன்றி ஆங்கிலேய அரசு இந்தியாவை விட்டு வெளியேறும் தருவாயில் காங்கிரஸை முன்னிறுத்தும் வகையில் செயற்பட்ட பாங்கானது ஜின்னாவுக்கு மேலும் ஏமாற்றத்தை அளித்தது. இதன் பின்னணியில் தனிநாட்டைப் பெறுவதற்கு இந்துக்களுடன் நேரடியாக மோதுவதைத் தவிர வேறு வழியில்லையெனக் கருதிய ஜின்னா 1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதியை தனிநாடு கோரிக்கையை முன்னெடுத்துச் செல்லும் நாளாகப் பிரகடனப்படுத்தினார்.

இதன்பொருட்டு ஜின்னாவினால் நேரடி நடவடிக்கை தினம் முன்னெடுக்கப்பட்டது. அதாவது மந்திரி சபையில் கலந்து கொள்ளுவதற்கு ஜின்னா மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 05 மேல் வகுப்பு இந்துக்கள், 01 ஹரிஜன், 02 முஸ்லிம்கள், 01 சீக்கியர், 01 கிறிஸ்தவர், 01 பார்ஸி ஆகியோர்களை கொண்ட மந்திரி சபையை நேரு அமைத்தார். இதற்கு பதில் கூறுவதாக ஆகஸ்ட் 16ஆம் திகதி நேரடி நடவடிக்கை தினத்தை முன்னெடுத்தார். இதனால் கல்கத்தாவில் 04 நாட்கள் கலவரம் நடைபெற்றது. இக்கலவரத்தில் 5000 பேர் இறந்ததோடு, 15000 பேர் காயமடைந்ததாகவும் பெதிக் லாரென்ஸ் தெரிவித்தார். அதுமட்டுமன்றி நேரூவின் மந்திரி சபை உறுப்பினரான சிம்லாவும் முஸ்லிம்களினால் கொல்லப்பட்டார். இவ்வாறான ஜின்னாவின் செயற்பாடுகள் காங்கிரஸ் மத்தியில் முஸ்லிம் லீக்கின் மீதான வெறுப்பைத் தூண்டுவதாகவும், பாகிஸ்தான் எனும் தனிநாட்டுக் கோரிக்கையை நிறைவேற்றுவது நன்மையளிக்கும் என்ற சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்துகொண்டது.

ஜின்னாவின் பாகிஸ்தான் நாட்டுக் கோரிக்கையின் பொருட்டு அவரால் வெளியிடப்பட்ட துக்க தின அறிவிப்பு முக்கியமானதாகும். அதாவது 1946.09.02ஆம் திகதி நேரூ இந்தியாவின் பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட தினத்தை ஜின்னா துக்க தினமாகப் பிரகடனப்படுத்தினார். இதன் பொருட்டு முஸ்லிம் மக்களை கறுப்புக் கொடி பிடிக்குமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்வு முஸ்லிம்களுக்கு எதிராக இந்தியர்களின் வெறுப்பையும், ஆத்திரத்தையும் தூண்டியது. இதன் விளைவாக பம்பாயில் இரு இனத்தவர்களுக்குமிடையே கலகம் ஏற்பட்டது. அதனைப் பின்பற்றிய வகையில் பஞ்சாப், பீஹார், வங்காளம் முதலிய மாகாணங்களுக்கும் இக்கலகம் பரவியது. இக்கலகத்தை முதன்மைப்படுத்தி அரசியல் சட்டநிர்ணயசபையில் கலந்து கொள்ளுவதற்கு ஜின்னா மறுப்புத் தெரிவித்தார்.

இவ்வாறு ஜின்னாவின் ஒத்துழைப்பில்லாமல் கூட்டப்பட்ட மந்திரி சபையால் உள்நாட்டுக் கலகங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து இரு பகுதியினரையும் ஐக்கியப்படுத்துவதற்கான

முயற்சிகளை மீண்டும் வேவல் பிரபு மேற்கொண்டார். இதன்பொருட்டு வேவல் பிரபு மீண்டும் ஒரு மந்திரி சபையை அமைப்பதற்கு ஜின்னாவிடம் வேண்டுகோள் விடுத்த போது, அதற்கு ஜின்னா ஆரம்பத்தில் மறுப்புத் தெரிவித்திருந்தாலும் இறுதியில் ஒப்புதல் அளித்தார். மந்திரி சபைக்குரிய உறுப்பினர்களாக 04 முஸ்லிம்களையும், காந்திக்கு விரோதமான ஹரிஜன் என்ற இந்துவையும் ஜின்னா அனுப்பினர். ஜின்னா எப்பொழுதும் முஸ்லிம் லீக் முஸ்லிம்களுடைய கட்சி என்ற கருத்தோட்டத்தைக் கொண்டவராக இருந்தபோதும் ஹரிஜனை மந்திரி சபை உறுப்பினராக நியமித்ததற்கு அவரது தந்திர நோக்கமே காரணமாகும். குறிப்பாக மேல்வகுப்பு இந்துக்களுக்குத் தொல்லை கொடுப்பதனை நோக்காகக் கொண்டே ஜின்னாவால் ஹரிஜன் நியமிக்கப்பட்டார். குறிப்பாக ஜின்னாவினால் எத்தகைய நோக்கத்துக்காக இவர்கள் அனுப்பப்பட்டார்களோ அதைப் போன்றே அவர்களும் நேரூ தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதையே நோக்ககாகக் கொண்டு செயற்பட்டனர்.

ஜின்னா தனது பாகிஸ்தான் கோரிக்கையை முன்வைப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் எப்பொழுதெல்லாம் கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் அச்சந்தர்ப்பங்களை அவர் நழுவ விடுவது கிடையாது. குறிப்பாக 1946ஆம் ஆண்டு லண்டனில், சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டத்தை எழுதும் போது முஸ்லிம் லீக் இணைந்து கொள்ள மறுத்தால் எவ்வாறு சுதந்திரம் வழங்க முடியும்?, யாரிடம் அதன் அதிகாரங்களைக் கைமாறுவது? போன்ற வினாக்களுக்கான பதில்களை பெறுவதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதன்போது ஜின்னா இந்தியா ஒரு இந்து இராச்சியமாகவும், முஸ்லிம் இராச்சியமாகவும் பிரிக்கப்படுமென தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். அத்தோடு இந்திய முஸ்லிம் – இந்துக்கள் இடையே கலகம் ஏற்படுமென்று அஞ்சுவதாகவும் தெரிவித்தார். குறிப்பாக காங்கிரஸ், அகில இந்திய சட்டம் ஆகியவற்றிற்கு எதிரான போக்கைக் கொண்டு தனது பாகிஸ்தான் நாட்டு கொள்கையை நிறைவேற்றுவதிலேயே அதிக பிரயத்தனம் கொண்டிருந்தார்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட டவன் செய்திப் பத்திரிக்கையும் ஜின்னாவின் கொள்கைகளுக்கு காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியிருந்தது. குறிப்பாக இப்பத்திரிக்கையின் ஊடாக காங்கிரஸின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பாகவும், இந்தியாவில் முஸ்லிம் மக்களது நிலைகள் தொடர்பாகவும் பல்வேறு தகவல்கள் பிரசுரிக்கப்பட்டன. இச்செய்திகள் முஸ்லிம் மக்களிடையே தமக்கென தனிநாடு தேவை என்ற உணர்வைத் தூண்டுவதாக அமைந்து கொண்டது.

ஆங்கிலேய அரசின் சில நடவடிக்கைகளும் பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவளிப்பதாக காணப்பட்டது. உதாரணமாக 1942ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு இந்தியாவின் அரசியல் சூழ்நிலைகளை அவதானித்து அதற்கேற்ற வகையில் இந்தியர்களுக்கு அரசியல் சீர்திருத்தங்களை வடிவமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கிரிப்ஸ் தூதுக்குழுவை அனுப்பியது. ஆனால் இத்தூதுக்குழு மறைமுகமாக முஸ்லிம் லீக் கட்சியின் தீர்மானமான பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவளித்து செயற்பட்டதென்பதை இத்தூதுக்குழுவின் அறிக்கை தொடர்பாக டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜியின் கூற்று வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

> **‘கிரிப்ஸ் தூதுக்குழு அறிக்கை இந்தியாவின் ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் கொண்டுவரப்பட்ட சாவுமணி’** எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இரண்டாம் உலகப் போரின் பின்னர் இந்திய மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்ட 495 தொகுதிகளில் 446 தொகுதிகளில் முஸ்லிம் லீக் கட்சியே

வெற்றி பெற்றது. இதன் பின்னணியில் ஜின்னா முஸ்லிம் லீக் கட்சியினருக்கு பலத்த செல்வாக்கு இருக்கின்றதெனக் கூறி பாகிஸ்தான் பிரிவினை ஏற்படுத்தப்பட வேண்டுமென கூறினார்.

இவ்வாறு காங்கிரஸில் இருந்து விலகிய காலம் முதலாகவே பாகிஸ்தான் பிரிவினையை வலியுறுத்தி வந்த ஜின்னாவின் கனவு லார்டு மவுண்ட் பேட்டன் அறிக்கையின் மூலம் சாத்தியமானது. அந்தவகையல் 1947இல் மவுண்ட் பேட்டன் காந்தியுடனும் ஜின்னாவுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்திய பின் தனது அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையில் வங்காளத்திலும், பஞ்சாப்பிலும் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழுகின்ற மாவட்டங்கள் முஸ்லிம் நாட்டுடனும், மற்றயவை இந்தியாவுடனும் இணைக்கப்படுதல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. அதன்பிரகாரம் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், பலுசிஸ்தானம், சிந்து, மேற்குப் பஞ்சாப், கிழக்கு வங்காளம் ஆகியன பாகிஸ்தானுடன் இணைத்துக்கொள்ளப்பட்டன. அத்தோடு பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு ஆரம்பத்தில் டொமினிக்கன் அந்தஸ்து வழங்கப்படுமெனவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. லார்டு மவுண்ட் பேட்டனின் அறிக்கையினை முஸ்லிம் லீக் கட்சியும், காங்கிரஸ் மகா சபையும் ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் இந்திய சுதந்திர மசோதா ஆங்கிலேய பாராளுமன்றத்தில் 1947.07.01இல் நிறைவேற்றப்பட்டது. அதன்படி 1947.08.15இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. 1947.08.14 பாகிஸ்தான் உருவாக்கப்பட்டு அதன் முதல் கவர்ணர் ஜெனரலாக முகமது அலி ஜின்னா நியமிக்கப்பட்டார்.

எனவே ஆரம்பத்தில் இனத்துவ அடிப்படையில் செயற்படாது இந்திய தேசத்திற்காகப் போராடிய ஜின்னா காங்கிரஸின் மீது கொண்ட கசப்புணர்வினால் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அதில் வெற்றியும் பெற்றுக்கொண்டார். பாகிஸ்தானின் உருவாக்கத்தின் பின்னர் கல்வி, பாதுகாப்பு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் புதிய நிர்மாணமொன்றை ஜின்னா வடிவமைத்ததால், அவரை மக்கள் தேசத்தின் பிதாவாகப் போற்றினர். இவ்வாறு பல தடைகளைத் தாண்டி பாகிஸ்தானைப் பெற்றுக்கொண்டாலும் 1948ஆம் ஆண்டு கராச்சியில் ஜின்னா காலமானார். அந்தவகையில் ஜின்னா இல்லாதுவிட்டால் பாகிஸ்தான் என்ற நாடு இன்று உலகில் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. இதனை 'அவர்(ஜின்னா) இத்தனை சீக்கிரம் இறந்து விடுவார் என்று தெரிந்திருந்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் பாகிஸ்தான் பிரிவினைக்கே சம்மதித்திருக்காது' என்று மவுண்ட் பேட்டன் கூறியதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே பாகிஸ்தான் நாட்டினை உருவாக்குவதில் ஜின்னா காட்டிய பிரயத்தனமே இன்றும் அவர் தேசத்தின் தந்தையாகவும், இஸ்லாமியரின் தந்தையாகவும் போற்றப்பட பின்னணியாக அமைந்து கொண்டதென்றால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


- நிழல்வண்ணன்., 2008, இந்தியாவும் பிரிட்டிஷ் ஆட்சியும், விடியல் பதிப்பகம், கோயம்பத்தூர்.
- கலியாணசுந்தனார். வி., 1988, இந்தியாவும் விடுதலையும், பாரதி நிலையம், சென்னை.
- மலிந்த மொறகொட., 2009, என்னைக் கவர்ந்த உலகத் தலைவர்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- ராஜகோபால். கொ., 1942, அகண்ட இந்தியா, சக்தி காரியாலயம், காரைக்குடி.
- Bipan Chandra., 1989, India's Struggle for Independence, Penguin Books, London.
- French, Patrick., 1997, Liberty or Death: India's Journey to Independence and Division, London.




# ISLAMIC CONTRIBUTION TOWARDS ELIMINATING DRUG USE.

**Benasil Sifna M.M.F**
First year, Faculty of Arts,
University of Jaffna.

Islam stresses the merits of and the need to protect five basic categories: They are religion, the human mind, the human body, wealth and human dignity. Anything that may adversely affect the soundness of any of these five categories are strictly forbidden in the Islamic perspective. There is no need to mention that the consumption of drugs badly affects all those five categories together mentioned above. This is the reason why Islam totally forbids consuming of all kinds of drugs.

In Islam abusing the human body is forbidden. No one is allowed to kill or take away his own life. Likewise, wealth is not to be abused, misused, or to be wasted. The human mind is not only to be maintained in sound condition but is to be nourished and developed by feeding it with knowledge. Therefore, seeking knowledge is the greatest virtue in Islam.

Conversely, any practice that would reduce the capacity of the human mind is strictly forbidden, and even punished by law, such as drinking wine and consumption of harmful drugs. The holy Quran declares:

> *"Intoxicants, gambling and dedication of stone and divination of arrows are an abomination of shythaan" (Quran 05: 90)*

Consumption of harmful drugs that reduces the capacity of the human mind temporarily or permanently is strictly forbidden, because that is self destruction. Allah says that in the noble Quran:

> *"Never make your own hands contribute to your destruction" (Quran 02:195)*

In the present world, almost all the countries including our nation feel that the anti-drug war is as important as the fight against terrorism. The governments are committed to providing a strong means to control drugs, narcotics, and substance abuse.

The United Nations has recognized the need for awareness and co-operation at the international level by instituting an International day against drug abuse and illicit trafficking and by creating the United Nations International drug control program (UNDCP). The UNDCP is a product of the recognition that effective and concerted action and expanded international cooperation depend on improved coordination of all drug control related activities within the United Nations system.

Good manners and good characters are very much demanded in Islam. In fact, it is one of the matters that can weigh heavily in our good deeds in the hereafter. Allah's messenger Sallallahu alaihi wasallam said

> *"There is none heavier in the scales of the hereafter than good characters". (Thirmidhi and Abu Dawood).*

Islamic ideology for fourteen hundred years has worked in such a manner that drugs, alcohol, tobacco and substance abuse are removed from the society on a great deal. Islam has taken all the steps to control the drug menace in Islam, no one is allowed to go to a mosque and pray after having consumed raw garlic and onions. So surely tobacco is forbidden in Islam. The holy Quran says,

> *"Oh you who believe, don't approach the prayer when you are under intoxication" (Quaran 5: 43)*

The following hadeeth clearly states that the noble prophet (Sal) prohibited intoxicants: Ibnu umer (Rali) reported that the prophet (Sal) said, "Every, intoxicant is haram (unlawful) whoever drinks wine in this world and dies while having consumed it and not having repented from it will not drink it in the next world" (Saheeh Muslim). Ibnu Abbas (Rali) reported that the messenger of Allah said, "If a habitual drunkard dies, he will meet Allah like the one who worships idols" (Ahmad and Ibnu Majah).

Alcohol consumption is the world's third largest risky factor for disease and disability. In middle income countries, it is the greatest risk. Harmful use of alcohol results in the death of 2.5 million

people annually, causes illness and injury to millions more, and increasingly affects younger generations and drinkers in developing countries. Alcohol is a causal factor in 60 types of diseases and injuries and a component cause in 200 others. Almost 4% of all deaths worldwide are attributed to alcohol. This is surprisingly greater than deaths caused by HIV / AIDS, violence or tuberculosis.

At this background, we clearly understand the strict rules of Islam against drugs, alcohol, narcotics, tobacco etc. Because Islamic religious teachings tell the story of a pre-Islamic society where people consumed very large quantities of alcohol, leading to moral and social dissolution, when prophet Muhammed (Sal) declared all alcoholic substances haram, he restored order, safety and morality to the society.

Islamic rulings and teachings brought several unbelievable changes and revolutions in the whole life of the companions of Rasoolullahi (Sal). As a result, they broke the pots of alcohol, they stored at their home and they put an end to the drinking of alcohol. Following the guidance of Al Quran and Assunnah in their life. They emerged as the great scholars and great leaders and rulers away from their earlier position as the great drinkers. This revolution created by the sahaba in a short period of time should be a great lesson to be learned by all the human beings in every nook and corner where we all hear the cries and complaints of the worst effects of drug use.

Good character is a key of pleasing almighty allah and his beloved prophet by maintaining good character, one can be loved by Allah pophet (sal) said

> *"The most beloved to god are those who have the best manners"*
> *(Al-Haakim).*

Good conduct is a key to enter the paradise Islam states that anyone with good characters will be with Prophet (sal) on the day of Qiyam, Because the prophet (Sal) was so kind with everyone. He was the best father, the best teacher, the best husband to his wives, the best companion to his companions, and the best leader to his followers. This teaches us that we should be noble and kind to others as much as we can and even to those who are rude and not kind to us. We can reflect our good character and conduct in every act of us, even they are small thing. We should never underestimate even the little good characters. This is why Prophet Muhammed (Sal) said, "Don't degrade any good thing or character, even if it is you meet your brother with a smiling face". How wonderful it will be, if we can internalize the good characters as taught by Islam. Without good character a Muslim will not be completed; his faith will not be completed. So, we must eliminate drug use among us because it kills our good characters and provokes bad characters.

# MMPL Cricket Tournament- 2019

























# BAYAN PROGRAM - 2020




# APP FOR RAMADAN FOOD ORDER




# MUSHABAHATHUR RAMADAN 2020 & 2021






# உயரும் கைகள்

**சஹ்னா எம்.வய்.எப்**
மூன்றாம் வருடம்,
முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

விழித்து வாழ வேண்டும்.
பரந்து வாழ வேண்டும்.
சிகரம் தொட
என்பனரே பலர்...
தனி மனிதன் உணரும் வரை
சிறுதாள் கூட சிகரமாகதடா

உன் பிறப்பு உனக்கானதல்ல
இறப்பு உனக்கானது என்பதை
புரிய வைத்துக் கொள்ளடா
மானிடா...
நீ செய்யும் செயல்களில்
மற்றவன் பலனை பெறுகிறான்
என்பதை மறந்து
நீ பலனடைகிறாய் என்று
தெரிந்து கொள்ளடா...

பல்கலைகழக வாழ்க்கை
விசித்திரமான
மறுவாழ்வு போன்ற
இடமென்று பட்டப்படிப்பு
முடிந்த பின் புரிந்துகொள்வாய்
அப்போது புரிவது
புரிந்துணர்வல்ல
முதல் நாள் நீ வைக்கும் பாத
எட்டு உனக்கு
உணரவைக்கும் உணர்வை
புரிந்து கொள்ளடா

உன்னால் முடியாது
என்று நீ
பள்ளிப் பருவத்தில் ஒதுங்கி
இருந்தாலும் கூட
பல்கலைகழக வாழ்வு
உன்னை முன்வரவைக்கும்...

தன்னார்வ செயற்பாடு
இந்த வாசகம்
இன்று வெறும்
வாசகமாகுதடா மானிடா...

உன் ஆளுமையை
வளர்க்க வேண்டும் என்கிறாய்!
புத்தக எழுத்து வழியே!
வாழ்வில் வென்றிட
வேண்டும்
என்கிறாய்!
பரீட்சை புள்ளி வழியே!

உன் பல்கலைகழக
விடுதி வாழ்க்கையை
நீ எண்ணிப் பாரடா...
சந்தோசமென்று
வீட்டு, நண்பர் பாசத்தை
சொகுசு வாழ்வை
விட்டு வந்து
ஏழை குடிசை வாழ்வு போல
உன்னை அனுபவமாக்குகிறது

இன்று மட்டுமின்றி
பலவருட காலமாக
பல்கலைகழக மாணவரால்
பல பரிமாணங்கள்

உயர்ந்திடு...
உயர்த்திடு...
உன் கைகளை...
உன் தைரியத்தை...
மனிதம் உன்னை
வேண்டி நிற்குதடா
ஏதிர்கால உலகு

பசியுடன் வாழ்ந்தனரே
வெயிலினில் காய்ந்தனரே
தேவை உடையவராய்...
வீதி விழிந்திடும்
யாரவன் வந்திடுவான்
என்று

செல்லும் வழிபாராமல்
உன் கஷ்டம் உணர்ந்தும்
வழங்குகிறாய் ஒருபிடி
உணவு...

ஆரம்ப வருட
மாணவராய் நீ
செய்யும் செயற்பாடுகள்
உன்னை பலப்படுத்துகிறதே
உன் ஆளுமை கண்டு...

என்னால் பெரிய உதவி
செய்ய முடியாதென்று
ஒதுங்காமல்
இளம் இரத்தம் துடிக்கிறதே
கரம் தருவதற்கு...

ஊசி போடுவது
முக்கியமல்ல
யாருக்கு போட வேண்டுமென்று
அறிந்து உதவினாயே
உன் வளர்ச்சி...
நான் பட்ட

வேதனை
மற்றவள் படவேண்டாமெ–
ன்று
தினவாரமும் வழங்குகிறாயே
ஒரு கை உணவு...

என் பாடசாலை
என்பதை மறந்து
பல்கலைகலைகழக
நண்பர் கூட்டம்
ஒன்று சேர்ந்து
பணம் தான் படிப்பல்ல
என்பது உணர...
உன்னை மறந்து
கஷ்டம் பாராமல்
கருத்தரங்கு மூலம்
உயர்த்துகிறாயே
மாணவனை...

ஏன் செய்கிறேன் என்று
தெரியாமல்
எதற்கு செய்ய வேண்டும்
என உணர்ந்து
வழங்கும் சேவைகள்
பலவிதம்

நீ செய்யும் செயலால்
ஒன்றா!!! இரண்டா!!!
பல பலன்
நீ இருக்கும் இடம்
பாலைவனமா
சோலைவனமா
உணர்ந்து கொள்வது
உன் திறனே...

இருக்கும் கையால்
இருக்காத கையிற்கும்
இருக்கும் காலால்
இல்லாத காலிற்கும்
மனம்படைத்து
கொடுத்தாயே
ஆறுதலும்
படிப்பினையும்...
உன் தைரியம்
வளர்ந்ததடா...
உன் நேசம் வளர்த்ததடா...
புரியாத புதிராய் நீ
செய்யும் செயலாம்...

யாரென்று அறியாமல்
எதற்கென்றும் அறியாமல்
சிறுசந்தோஷ மழலைக்கு
வழங்குகிறாயே
பாடசாலை உபகரணங்கள்...
இதனை வேண்டி நிற்குதடா
சமூகம்...
பல்கலைகழக மாணவனான
உன் செயலை கண்டு

உயர்த்திடு...
உயர்ந்திடு...
உன் கைகளை...

நீ செய்யும் செயல்
உனக்கே பாதுகாப்பாய்
அமைகிறது.
உன் பயவிரக்தியை
உதறுகிறது.
தனித்து செயற்படுவேன்
என்ற ஆளுமையை
உயர்த்துகிறதடா...

தற்காலத்தில்
எங்கு சென்றாலும்
உன் பெயர்!
உன் பெருமை!
உன் உயர்ந்து நிற்கும்
கைகள்!!!
இயலாமை மூலம்
கஷ்டபடுவரை
தேடி தேடி
உதவுகிறாயே
பிறக்கையிற்கு
கூட தெரியாமல்...

உற்று தேடுகிறது
சமூகம் இன்று
உன் சேவைகளை....
உன் ஆளுமை தேடி...
நீ செல்லும் பாதை
உனக்கென அமைய
வேண்டும்
அதில் ஒரு பாகமடா
தன்னார்வச் செயல்...

கல்வெட்டு பொறிக்கும்
அளவுக்கு
இளம் இரத்தம் சீறிப்
பாய்கிறது
ஒவ்வொரு விடயத்திலும்...

அரசியல் தலைவனை
எதிர்பார்த்து
செய்வோம் என்ற
காலம் கடந்து
முயன்றால் முடியும்
என்ற காலம் இது...

கிராமம் கிராமமாக
சென்று மக்களின்
கதறல் குமுறல்களை
ஓரளவு துடைக்கிறது
இளம் இரத்தம்

இச்செயலையே
வேண்டி நிற்குதடா
சமூகம்
வியந்து
நிற்குதடா சமூகம்...

சூழல் மாசடைகிறது
ஏன் மாசடைகிறது
என்பது புத்தகம்
தெரியப்படுத்தினாலும்
நாம் சுத்தம் செய்வோம்
என்றல்லவா
நீ சொல்கிறாய்...

நீ தொடாத
சாக்கடையும்
நீ போடாத
குப்பை கழிவுகளையும்

உன் கைப்பட
சுத்தம் செய்கிறாயே...

சுயநலம் பாராமல்
பிறநலம் வேண்டி
வெளிச்சம் தருகிறது
பசுமை வளமாய்...

எத்தேசம் சென்றாலும்
தனித்து போரிடும்
ஆற்றல் உன்னிடம்
உயர்கிறது
உன்னை அறியாமல்
கூட...

எதிர்கால சந்ததி
நீ
பிறரை வேண்டி
வாழாமல்
நாட்டை கட்டியெழுப்ப
ஆற்றல் வளர்த்திட
வேண்டும் என்கிறது.
சமூகம்...
எங்கு சென்றாலும்
உயரட்டும் கைகள்
உயர்ந்திடு...
மாணவர் குழு
சுத்தம் நிறைந்த
கடலலை உடன்
ஒவ்வொரு மூலை
முடுக்கிலும்

மாணவர் ஒன்றியம்...
இன,மத வேறுபாடு பாராமல்
பெயருக்கு ஒன்றியமல்ல
பெயரை நிலை நாட்ட
ஒன்றியம்...

ஒரு வருடம்,
இரு வருடமல்ல
பலவருடமாக தொடரும்
மாணவர் செயல்கள்
பாராட்டு எதிர்பாராது
இன்று...
புகழ் எதிர்பாராது
கரம் நீட்டும்
இளம் கைகள்...

நாட்டை மாற்றினாலும்
மாணவர் செயல்கள்
தொடர்கின்றன
தொடர் கதைகளாக...
பற்பல அபிவிருத்தி
பல சேவைகளாக
தொடருகிறதே...

தாம் படித்த பாடசாலை
நன்றி மறவாத நன்றிகடன்
காட்ட கட்டுகின்றேன் பல
கட்டிடங்கள்...

பல்கலைகழக வளாகமுள்ளே
மாணவர் சேவை
பிறந்த வீடுபோல்
தன்னார்வ சேவைகள்...

கூட்டு குழுவினுள் தனித்து
செயற்படு!
முயன்று செயற்படு!
துணிந்து செயற்படு!
உயரட்டும் கைகள்...
உயர்த்திடு கைகளை ...

மாணவன் உருவாக்கினான்
கண்டுபிடிப்பு
புதிய தலைமுறைக்குள்
இலகு வழி காட்டுகிறான்
அபிவிருத்திக்கு...
இதனை எதிர்பார்கிறது
உன் ஆளுமை
உன்னால் முன்வர வேண்டும்
என்று..

தன்னைத் தானே மடமை
என்று சொல்லாமல்
தானே முதல்வன்
என்ற படி உயர
ஆளுமை வளர்த்திடு...
தனித்து வந்தனராம்...
கரம் நீட்டினராம்...
குழுவாய் சென்றனராம்...
கரம் கொடுத்தனராம்...
வயோதிப முதியவருக்கு

உடமை பறிக்கொடுத்தவர்
பலரின் நிலை
உச்சம் தொடுகிறது

படும் வேதனை
கதறும் அலறல்
பட்ட கஷ்டம்
செய்ய வைத்தும்
செயலை...
ஆளுமை வளர்த்து
துணிவாய்...
அபிவிருத்தியடைய
துடிக்கும் நீயும்
நாடும் ஒன்றடா!
உன் முயற்சியை
கண்டு நிற்குதடா
நாடு வளம் பெற...
பொருளாதாரம், சமுகம்
சூழல் அபிவிருத்தி
என்கிறது ஐக்கிய நாடு...
ஒன்றாய் வென்று
காட்டுவாய் நாடாய்

இருட்டு பட்டறை
விட்டு
வெளி உலகில்
சென்று பாரடா
மாணவன்
முயற்சியை...

எங்கும் ஓங்குகிறது
எதிர் ஒலி
மாணவனாய்...

பூட்டி வைத்த கிளி போல
அங்கும் எங்கும்
உதவி செய்திடவே...
சின்னஞ்சிறு

செயலால்
வெற்றி நோக்கி
செல்கின்றனரே
ஆளுமை மூலம்...

தனித்து வெல்வேன்
துணை வேண்டாமடா
என்ற துணிவை
உள்ளே வரவைத்தது
சமூகம்...

உன் செயலை கண்டு
பிறர் முன்வர
நிலை நாட்டிடு...
வழியே...
ஏன்
வரண்ட பூமி
பூஞ்சோலை ஆகிறது
உன் சேவை மூலம்...
மனம் இருந்தால்
இடம் உண்டு
என்பது போல்
தன்னால் முடியும்
என்ற உதவி
உன்னை
வெல்ல வைக்கும்...

தன்னார்வ செயல்
அறிந்தும்
அறியாமலும் உன்னை
உயர்த்துகின்றது
பலவழி...

எதிர்கால வாழ்வு
இருள் படாமல்
ஒளி ஊட்டப்படுகிறது

உன் முயற்சியால்...
வென்று வா மகனே
என்ற தாயோசை...
வென்று காட்டிடு
பிதாவின்ஓசை...
ஒலிக்கும் வரை
உன் கனவை
நோக்கி சென்றிடு.
இதுவும் கனவு தான்
கனவின் படிகள் தான்.
தற்கால வாழ்வு
மனிதனை
வெறுமையாக்கினாலும்
ஒன்றுபட்டு செயல்படுவோம்
என்று
பல வழிகளில் மாணவன்
உன் செயல்கள்...

எதனை சந்தித்தோம்...
எதனை வென்றோம்...
என்று கவலை கொள்ளாதடா
உன் பெயர்
நீ மறைத்தாலும்
ஒலித்து கொண்டுயிருக்கும்
பாரடா...

மனிதன் மனம்
வைத்தியசாலை நினைவிடம்
வழியே...
பாடசாலை கட்டிடம்

உன் பல்கலைகழக
இதழ் வழியே
புகழ் ஓங்கும்...

தன் பணம்
தன் வீடு
தன் குடும்பம்
என்ற வாழ்வை விட்டு
தன் சமூகம்
தன் நாடு
என்று வா என
எதிர் பார்க்கிறது
சமூகம்...

பாதுகாப்பு,வீரம்
துணிவு
எதிர்கால சந்ததி
என்ற பற்பல
தகுதிகளை உயர்த்துகிறது
மானிடா...
எதையும் வெல்வேன்
என்ற உறுதியுடன்
நீ வாழ
உன்னை கைகோர்த்தது
செய்திடும்
தன்னார்வ செயல்'

நீ தொலை தூரம்
சென்றாலும் உன்
செயலை மூட்டை
கட்டிவிடாதே
மானிடா...

உனக்கு விடியும்
என கீழ் இறங்கு
விடிந்த பின்
மேல் உயரு...
உன் செயல் மூலம்
நீ செய்திடும் உதவி
உனக்கு சுயமரியாதை
தருமடா...
சமூகம் மதிக்கும்
மனிதனாக பெருமையுடன்
வாழடா...
உன் எண்ணங்களை
நேர் எண்ணங்களாக
மாற்றடா...

உன் வாழ்வு மட்டுமின்றி
பிறர் வாழ்வுடன்
வெற்றி பெறும்
உனக்காய் காத்திருக்கும்
மக்கள் பலர்
தேவை என்று கருதாமல்
சந்தோஷமென்று
உன் செயலை
தொடரடா...
வென்றிடடா
மானிடா...



# தடைக்கல் தாண்டி

**பாதிமா நஸீபா பீ.**
முதலாம் வருடம், மருத்துவப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"அஸ்ஸலாமு அலைக்கும்" என்று வாசல் கதவை தள்ளித் திறந்து கொண்டு மனம் முழுவதும் மகிழ்ச்சியுடன் தனது வீட்டினுள் நுழைந்தாள் பாத்திமா. ‘‘வஅலைக்கும் ஸலாம். வாங்க மகள்’’ என்று நீண்ட நாட்களுக்கு பிறகு மகளை நேரில் பார்த்த மகிழ்ச்சியோடு அவளை அன்போடு வரவேற்றனர் மகளின் வருகையை ஆர்வமாக எதிர்பார்த்திருந்த பாத்திமாவின் பெற்றோர்.

மகளின் முகத்தில் பயணக் களைப்பை கண்ட பாத்திமாவின் அன்னை "கொஞ்ச நேரம் தூங்குங்க மகள். பகலைக்கு உங்களுக்கு பிடிச்ச சமையல் தான் செய்யப் போறன்" என்றார். "நானே சொல்லனும் என்டு இருந்தேன் உம்மா. வீட்டு சாப்பாடு சாப்பிட்டு எவ்வளவு நாள் ஆகிட்டு... என்ன தான் பெரிய பெரிய ஹோட்டல்ல வகை வகையா வாங்கி சாப்பிட்டாலும் வீட்டு சாப்பாட்டுட ருசி வராதும்மா. இன்டைக்கு உங்கட கையால சமைச்சி தரப் போற சாப்பாட்ட சாப்பிட போறன்’’ என்று உற்சாகமாக கூறிக் கொண்டு ஓய்வெடுக்க சென்றாள் பாத்திமா.

அன்று மாலை குடும்பத்தினர் எல்லோரும் ஒன்றாக கூடி இருந்து மாலை நேர தேநீரும் சிற்றுண்டியும் எடுத்துக் கொண்டிருந்த வேளை, பாத்திமாவின் தந்தை மகளை கனிவோடு நோக்கி "மகள், இப்ப நீங்க படிப்ப முடிச்சி கடைசி எக்ஸாமும் எழுதிட்டிங்க... இன்னும் ஒரு மாசத்துல ரிசல்ட்ஸும் வந்துடும்... பிறகு இன்டேர்ன்ஸிப், வேலை என்டு வாழ்க்கை ஓடிடும்... வயசும் ஏறிட்டு போகுது... அதனால இப்ப மேரேஜ் செய்யிறது நல்லம்" என்று சொல்ல, இடையில் குறுக்கிட்ட பாத்திமா ‘‘வாப்பா என்ன நீங்க இப்படி சொல்றிங்க... நான் இப்ப தான் வீட்ட வந்திரிக்கேன்... அஞ்சு வருஷம் கழிச்சி உங்களோடவே இருக்க எனக்கு இப்ப தான் வாய்ப்பு கிடச்சிருக்கு...

எவ்வளவு எதிர்பார்ப்புக்களோட வந்திரிக்கேன் தெரியுமா... இப்ப மேரேஜ் வேணாம் வாப்பா" என்றாள் கெஞ்சலாக.

"என்ன மகள் இப்படி சொல்றிங்க... இதெல்லாம் காலா காலத்துல நடக்கனும்... ஒரு இடத்துல இருந்து உங்கள மேரேஜ் பண்ண கேட்டு வந்திருக்காங்க... பொடியன் இஞ்சினியர்... கை நிறைய சம்பாதிக்காரு... குடும்பமும் நல்லம்... நம்முட குடும்ப நிலமைக்கு இப்பிடி ஒரு சம்மந்தம் கிடச்சது அல்லாஹ்ட அருள்... அதை வேணாமென்டு சொல்லாதிங்க" என்று பாத்திமாவின் தந்தையும் தாயும் ஏராளமாக பேசி மகளை சம்மதிக்க வைக்கும் முயற்சியில் இறங்கினர். ஆனால் பாத்திமாவுக்கோ இதில் முழுமையான மகிழ்ச்சியோ ஈடுபாடோ இருக்கவில்லை. 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்பார்கள். பெற்றோரின் விருப்பத்திற்காக இந்தக் கல்லும் கொஞ்சம் கரைந்தது.

மாலை நேர சில்லென்ற குளிர் காற்று முகத்தில் மோத கடற்கரை மணலில் இருந்து கொண்டு கடலலைகளின் விளையாட்டை இரசித்துக் கொண்டிருந்தாள் பாத்திமா. இரசனையில் இலயித்திருந்தவளின் மனம் முழுவதும் மகிழ்ச்சியில் நிரம்பியிருந்தது. மருத்துவ படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி மட்டுமல்ல அது. அதையும் தாண்டி அவளது இத்தனை வருட இலட்சியத்தை அடையப் போவதை நினைத்து ஏற்பட்ட மகிழ்ச்சி அது. தனது இலட்சியத்தை நோக்கி வைக்கப் போகும் அடுத்த அடிகளை நினைக்கையில் அவளது உள்ளத்தில் சந்தோச ஊற்று பீறிட்டு ஓடியது. கனவுகளை தேக்கிய விழிகளில் ஆனந்த ஒளி வீசியது.

தனது நிலையை எண்ணியவளுக்கு சற்று கவலையாகவும் இருந்தது. இந்தக் கடற்கரையில் இந்த நொடிகள் போன்று இறைவனின் படைப்புக்களை ஆற அமர ஆழ்ந்து இரசிக்கும் பாக்கியம் தனக்கு இனி மேலும் கிட்டுமா என்பது மிகப் பெரிய கேள்விக்குறியே. இப்போது போன்று குடும்பத்தினரோடு சேர்ந்து சாப்பிட்டு, கதை பேசி சிரிக்கும் தருணங்கள் கூட குறைந்து போகலாம். இருப்பினும் மருத்துவம் என்பது மிகப் பெரிய சேவை. ஓர் உயிரின் வலியை குறைப்பதும், இயலாமையை சரி செய்வதும் அந்த உயிருக்கு எவ்வளவு மகிழ்ச்சியை தருமோ, அந்த மகிழ்ச்சியை காட்டிலும் பல மடங்கு அதிகமானது குறித்த மருத்துவருக்கு கிடைக்கக் கூடிய திருப்தி. அத்தகைய திருப்தியின் முன்னால் இத்தகைய இழப்புக்கள் ஒன்றும் அவ்வளவு பெரிதாய் தோன்றவில்லை அவளுக்கு.

தான் நினைத்ததை அவ்வாறே தன் குடும்பத்தினரோடும் பகிர்ந்து கொண்டாள். இடையில் குறுக்கிட்ட பாத்திமாவின் தம்பி "திருப்தி மட்டுமில்ல, நிறையவே காசு சம்பாதிக்கலாம்... அதுவும் வெளிநாட்டுல வேலை பார்த்தா இங்கே சம்பாதிக்குறத விட பல மடங்கு கூடுதலா சம்பாதிக்கலாம். உனக்கு அந்த வாய்ப்பு கிடச்சிருக்கு" என்றான் மகிழ்ச்சியோடு. தம்பியின் பேச்சை கேட்டு குழம்பிய பாத்திமா "என்ன சொல்றாய் நீ... எனக்கு வெளிநாட்டுக்கு போற வாய்ப்பு கிடச்சிருக்கா... வாப்பா, தம்பி என்ன சொல்லுது... எனக்கு ஒன்டும் விளங்கல" என்றாள் எல்லோரது முகத்தையும் கேள்விகள் தேக்கிய விழிகளால் பார்த்துக் கொண்டு.

"மகள், அவங்கட வீட்ட இருந்து நேற்று இரவு கோல் பண்ணினாங்க. நீங்க அந்நேரம் தூங்கிட்டீங்க. அந்தப் பொடியனுக்கு வெளிநாட்டுல வேலை பார்க்குறது தான் இலட்சியமாம். அங்கே போனா இங்கே சம்பாதிக்கிறதை விட கூடுதலா சம்பாதிக்க ஏலுமாம். அதனால கல்யாணத்துக்குப் பிறகு உங்களையும் கூட்டிட்டுப் போய் அங்கேயே ரெண்டு பேரும் வேலை பார்க்குற ஐடியாவாம் அவருக்கு" என்று பாத்திமாவிடம் சொன்னார் அவளது தந்தை.

இதைக் கேட்டு எல்லையில்லா அதிர்ச்சியில் உறைந்தாள் பாத்திமா. அவள் மனம் விரும்பியது இது அல்லவே. அவளது கனவை சுக்கு நூறாக உடைத்துப் போடும் இந்த முடிவில் அவளுக்கு துளி கூட விருப்பமில்லை. ஆனால் இதை அறியாது பெற்றோரிடம் திருமணத்திற்கு சம்மதம் கூறிவிட்டாள். இப்போது என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. குழப்பத்தை தத்தெடுத்துக் கொண்ட முகத்துடனே வீட்டை அடைந்தாள்.

வீட்டில் யாருடனும் சரியாகப் பேசவில்லைளூ சரியாக சாப்பிடவில்லை. தனது எதிர் காலம் பற்றிய கேள்விகளே அவளது மனக்கண் முன் வலம் வந்து கொண்டிருந்தன. அன்றிரவு தனது அறையில் வந்து தஞ்சமடைந்தவளின் விழிகளில் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ஒரு வேளை தான் இந்த திருமணத்தை வேண்டாமென சொன்னால் தனது பெற்றோர் வேதனைப்படுவார்களோ என எண்ணி மருகினாள். திருமணத்திற்கு சம்மதித்தாலோ இத்தனை வருடங்களாக தான் கண்டு வந்த இலட்சியக் கனவு நனவாகாமலே போய் விடும். இந்த இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என புரியாமல் குழம்பினாள். அவளின் நிலை மதில் மேல் பூனையின் நிலையானது. சில மணித் துளிகளாக சிந்தனைக் கடலில் மூழ்கியிருந்தவள் இறைவனிடம் பிரார்த்தித்து விட்டு தூங்கினாள்.

அதிகாலையில் துயில் களைந்தெழுந்த பாத்திமாவின் உள்ளம் தெளிவடைந்திருந்தது. அவள் தனது எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவை எடுத்து விட்டிருந்ததை தெளிவடைந்திருந்த அவளது முகம் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

வழக்கம் போல் மாலை நேரம் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடியிருந்த வேளை "நான் ஒரு முக்கியமான விசயம் சொல்லனும். எனக்கு இந்த மேரேஜ்ல விருப்பமில்ல" என்றாள் பாத்திமா. இதைக் கேட்ட அவளது பெற்றோர் அதிர்ந்தனர். "என்ன விளையாடுறிங்களா மகள்... நீங்க ஒத்துக் கொண்டதால அவங்கட வீட்ட சம்மதமும் சொல்லியாச்சு. இப்ப வந்து மேரேஜ் வேணாமென்டு சொன்னா என்ன அர்த்தம்... என்ன காரணத்தால வேணாமென்டு சொல்றிங்க... எதுவா இருந்தாலும் சொல்லுங்க" என்றார் அவளது தந்தை.

''வாப்பா, உங்களுக்கு நல்லாவே தெரியும் என்ட இலட்சியம் என்ன என்டு. அந்த இலட்சியத்தை அடைய தடையா நிக்கிற இந்த மேரேஜ்ல எனக்கு விருப்பமில்ல. சின்ன வயசுல இருந்தே என்ட இலட்சியம் டொக்டர் ஆகுறது தான்... நான் ஏ லெவல்ல பயோ செய்யப் போறன் என்டு சொன்ன நேரம் நீங்க சொன்னது ஞாபகம் இருக்கா வாப்பா... 'மகள், டொக்டர் ஆகுறது பெரிய விசயமில்ல... நம்மால நம்முட சமூகம் பிரயோசனம் அடையனும்... நம்முட ஊர்ல ஒரு லேடி வீஓஜி டொக்டர் கூட இல்ல... இங்க பார்க்குற எல்லா வீஓஜிமாரும் ஆண்கள் தான்... லேடி வீஓஜி இல்லாததால எல்லாரும் அவங்களட்ட தான் கன்ஸல்ட் பண்றாங்க... ஆனால் அந்த நேரம் ஒவ்வொரு பெண்ணும் அவ்வளவு வேதனைய அனுபவிக்காங்க... பிள்ளைய நல்லபடியா பெத்தெடுக்கிறதுக்காக எல்லாத்தையும் பொறுத்துக் கொள்றாங்க. லேடி வீஓஜி நம்முட சமூகத்துக்கு ஒரு முக்கியமான தேவை... நீங்க விரும்பினா இன்ஷா அல்லாஹ் வீஓஜிக்கு படிக்கனும் மகள்' என்டு சொன்னிங்க. எனக்கு வாய்ப்பு கிடச்சா இன்ஷா அல்லாஹ் இதுக்காக முயற்சி செய்யனுமென்டு அப்பவே முடிவெடுத்துட்டேன் வாப்பா" என்றாள் பாத்திமா.

மகளின் முடிவை நினைக்கையில் பாத்திமாவின் தந்தைக்கும் சந்தோசமாக இருந்தது. 'விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை' என்பார்கள். தான் என்றோ

விதைத்த இலட்சிய விதை மகளின் மனதில் ஆழமாக வேர் விட்டு விருட்சமாக வளர்ந்து நிற்பதை புரிந்து கொண்டார் அவர். இருப்பினும் இது எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்பது அவருக்கு கேள்விக்குறியாகவே இருந்தது. மகளுக்கு வாழ்க்கைத் துணையாக வரப் போகிறவரின் சம்மதமும் ஒத்துழைப்பும் இருந்தால் மாத்திரமே இது சாத்தியம். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கைத் துணை அமையும் என்பதிலும் எவ்வித நிச்சயமுமில்லை. இந்நிலையில் தேடி வந்த சம்மந்தத்தை வேண்டாமெனக் கூறுவது அவருக்கு முட்டாள் தனமாகவே பட்டது. தனது கருத்தை மகளிடமும் எடுத்துச் சொன்னார். ஆனால் பாத்திமாவோ தனது முடிவில் உறுதியாக இருந்தாள்.

மகளின் உறுதியைக் கண்டவர் ஒரு முடிவுக்கு வந்தவராக "எதுக்கும் அவங்கட வீட்டுல இதைப் பத்தி ஒரு தடைவ கேட்டுப் பார்ப்போம்" என்று விட்டு அங்கே போனவர் வீட்டுக்கு திரும்பி வந்து "நான் போய் பேசினேன் மகள்... நீங்க வெளிநாட்டுலயே நீங்க விரும்பின படிப்ப படிக்கலாமாம்... அவருக்கு அதுல சம்மதம் தானாம்... ஆனால் வெளிநாட்டுக்கு போற முடிவை மாத்த ஏலாதாம்" என்றார்.

"என்ட படிப்பு நம்முட சமூகத்துக்கு பிரயோசனப்படனுமெங்குறது தான் என்ட விருப்பம் வாப்பா. வெளிநாட்டுல வேலை செய்யனுமெங்குறது அவர்ட இலட்சியம். யாரா இருந்தாலும் அவங்கட இலட்சியத்தை அவ்வளவு ஈஸியா விட்டுக் கொடுக்க மாட்டாங்க. இந்த சம்மந்தம் வேணாம் வாப்பா. நாம சமூகத்துக்கு பிரயோசனமா இருக்கனுமெங்குற தூய்மையான எண்ணத்துல தான் இதை செய்யிறம். இந்த சம்மந்தம் அமையல என்டு எந்த வருத்தமும் படத் தேவையில்ல. அல்லாஹ் நம்மள ஒரு நாளும் கைவிட மாட்டான். நல்ல வழியைக் காட்டுவான்" என்ற பாத்திமாவின் கருத்தை அவளது குடும்பத்தினரும் ஏற்றுக் கொண்டனர்.

கால ஓட்டத்தில் எட்டு வருடங்கள் உருண்டோடின. பிறந்து இரண்டே வாரங்கள் ஆன சகோதரியின் குழந்தையைப் பார்ப்பதற்காக தனது கணவன் மற்றும் பிள்ளைகளோடு அங்கு வந்திருந்தாள் பாத்திமா. சகோதரி கருவுற்றதிலிருந்து பிரசவிக்கும் வரை பரிசோதித்து ஆலோசனைகள் வழங்கியது பாத்திமா தான். சகோதரிக்கு மட்டுமல்ல, மற்றும் பல பெண்களுக்கும் தான். ஆம், பாத்திமா தனது இலட்சியத்தை அடைந்து விட்டாள். தனது கல்வி சமூகத்துக்கு பிரயோசனப்பட வேண்டுமென்ற அவளது விருப்பம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அவளை முன்னுதாரணமாகக் கொண்டு இன்னும் சில பெண்களும் இப்பிரிவில் கால் பதிக்க ஆரம்பித்துள்ளனர்.

தக்க சமயத்தில் தான் எடுத்த சரியான முடிவும், தந்தையின் வழிகாட்டுதலும், மனைவியின் இலட்சியத்திற்கு துணையாக நிற்கும் கணவனின் ஒத்துழைப்பும், இறைவனின் அருளுமே தன்னை இந்த நிலைக்கு கொண்டு வந்திருப்பதை நினைத்தவள் இறைவனுக்கு நன்றி சொன்னாள்.

☆☆☆


01
02
03
04
05
UNIVERSITY MASJID
06
07
08
09
10
11
12


13
14
15
16
17
UNIVERSITY MASJID
Kilinochchi Premises, University of Jaffna.
18
19
20
21
22
23
24



# தமிழ் நடை மீட்சி

**மணி வேலுப்பிள்ளை**
மொழிபெயர்ப்பாளர் (இலங்கை 1970 – 1988, கனடா 1988 – 2015),
வருகைதரு விரிவுரையாளர்,
மொழிபெயர்ப்புக் கற்கைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பொருள்: "…தமிழ் நாட்டிலோ முழுவதும் தமிழ் நடையை விட்டு, இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது" (பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1997, ப.207).**

இன்று ஒரு நூற்றாண்டு கழிந்த நிலையில், அந்த நிலைவரம் இன்னும் மோசமடைந்துள்ளது. தமிழ் எழுத்து, சொல், தொடர், வசனம் அனைத்தையும் ஆங்கிலம் ஆட்கொண்டுள்ளது. ஆங்கிலமயம் என்பது தமிழ் எழுத்திலிருந்து சொல்லுக்கும், சொல்லிலிருந்து தொடருக்கும், தொடரிலிருந்து வசனத்துக்கும்… தாவியுள்ளது. ஒவ்வோர் எடுத்துக்காட்டு:

**எழுத்து:** 'எனக்கு ஓர் அழைப்பு வந்தது. அழைப்பிதழில் கனகரட்ணம் என்று இருந்தது. இந்த **ரட்ணம்** என்பது **இரத்தினம்** என்பதன் திரிபு. **கனகரத்தினம்** என்ற பெயர் ஆங்கிலத்தில் *Kanagaratnam* என்று எழுதப்பட்டு, பின்னர் அதன் தமிழ் வடிவத்தைக் கைவிட்டு, ஆங்கில உச்சரிப்பையே **கனகரட்ணம்** என்று எழுதி வருகிறார்கள். இப்படியே செல்வரட்ணம், தவரட்ணம், நவரட்ணம் போன்ற பெயர்களும் பவனி வருகின்றன. எனது பெயரும் ஆங்கிலத்தில் *Kandavanam* என்றுதான் இருக்கிறது. ஆனால் நான் **காண்டாவனம்** என்று எழுதுவதில்லை' (கவிஞர் கந்தவனம், **கனடிய காட்சிகள்**, தமிழர் தகவல், ரொறன்ரோ, தை 2007, ப.8)

**சொல்: புண்படுத்து** என்னும் தமிழ்ச் சொல் கண்டுகொள்ளப் படுவதில்லை. Hurt அல்லது offend என்னும் ஆங்கிலச் சொல் கண்டுபிடிக்கப்பட்டு, அது காயப்படுத்து என்று வழங்கப்படுகிறது! ஓர் எடுத்துக்காட்டு: **எனது மகிழ்ச்சிக்காக மற்றவர்களின் உணர்ச்சிகளைக் காயப்படுத்துவது எனக்கு மகிழ்ச்சி**

**தராது** (ஜெயகாந்தன், சபை நடுவே, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1997, ப.126). I won't enjoy hurting others' feelings! ஒருவரை இன்னொருவர் **புண்படுத்திவிட்டார்** என்றால், முன்னவரைப் பின்னவர் மனம்வருந்தச் செய்துவிட்டார், அடித்து உதைக்கவில்லை என்று துணிந்து கூறலாம். ஆனால், ஒருவரை இன்னொருவர் காயப்படுத்திவிட்டார் என்றால், முன்னவரைப் பின்னவர் மனம்வருந்தச் செய்தாரா, அடித்து உதைத்தாரா என்பதை அறுதியிட்டுரைக்க முடியாது. ஆதலால்தான் **உள்ளத்தை** அல்லது **உணர்ச்சிகளைக் காயப்படுத்து** என்று குறிப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

**சொல்–தொடர்:** தமிழ் மரபில் நிலைத்த **சிறுபான்மை இனத்தவர், சிறுபான்மை மதத்தவர், சிறுபான்மை மொழியினர்...** போன்ற தொடர்களைப் பலரும் கண்டு கொள்ளவோ செவிமடுக்கவோ தவறுவதுண்டு. ஆதலால் அவர்களின் கண்களில் படும், காதுகளில் விழும் ethnic minorities, religious minorities, linguistic minorities என்னும் ஆங்கிலத் தொடர்கள் முறையே **இனச் சிறுபான்மையோர், மதச் சிறுபான்மையோர், மொழிச் சிறுபான்மையோர்...** ஆகி வருகின்றன. ஆங்கிலச் சொல்–தொடர் ஒழுங்கு, தமிழ்ச் சொல்–தொடர் ஒழுங்காய் மாறி வருகிறது!

**மரபுத்தொடர்: தண்டத் தீனி, வீண் உருப்படி, வீண் வில்லங்கம், வீண் செலவு...** போன்ற தொடர்களின் பொருளைப் புரிந்துகொள்வதில் எமக்கு மிகுந்த சிரமம் நேர்கிறது என்பதற்குத் திட்டவட்டமான சான்று வெள்ளை யானை ஆகும். ஆங்கிலக் காட்டினுள் அகப்பட்ட இந்த White Elephant என்னும் **வெள்ளை யானை**யின் தோற்றுவாய் ஒரு தாய்லாந்துக் கதை ஆகும். அந்த நாட்டு மன்னன் ஒருவன், தனக்குப் பிடிக்காதவர்க்கு ஒரு வெள்ளை யானையைப் பரிசாகக் கொடுத்துவிடுவான். அந்த அரிய யானையைப் பரிசாகப் பெற்றவர் அதனைப் பராமரிப்பதற்கு தன் வாழ்நாள், வருவாய் முழுவதையும் செலவழிக்க நேரும்! முன்பு அதிக செலவு கொடுத்து ஈட்டிய ஒரு பொருள் பின்பு வீணே கிடந்து தொடர்ந்தும் செலவு விளைவிப்பதுண்டு. ஆங்கிலத்துக்கு இது White Elephant ஆகலாம். தமிழுக்கோ **வெள்ளை யானை** ஒரு வீண் உருப்படி ஆகும்.

**தேராதுதெளிதல்:** பயண அடுக்கு, பயண ஏற்பாடு, பயண ஆயத்தம்... எல்லாம் மக்கள் வழக்கில் நிலைத்த தொடர்கள். அவை கண்டுகொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. ஆங்கிலத்தில் அது preparations for the journey எனப்படுவதுண்டு. அந்த ஆங்கில வழக்கு கண்டறியப்பட்டதன் விளைவாக கடந்த ஒரு தசாப்தத்துத்துள் **பயணத்துக்கான தயாரிப்பும், தயாரிப்புகளும், தயார்ப்படுத்தலும், தயார்ப்படுத்தல்களும்** உருவாகியுள்ளன. அதனைப் **பயண(த்துக்கான) அடுக்கு** அல்லது **பயண(த்துக்கான) ஏற்பாடு** அல்லது **பயண(த்துக்கான) ஆயத்தம்** என்று குறிப்பிடுவதை விடுத்து, **பயணத்துக்கான தயாரிப்பு (அல்லது தயார்ப்படுத்தல்)** என்று குறிப்பிடுவதற்கு (1) தமிழ் வழக்கு கண்டுகொள்ளப்படாததும், (2) கண்டுகொள்ளப்படும் ஆங்கில வழக்கு தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதுமே காரணங்கள். **தயாரி, தயாராகு** இரண்டையும் prepare என்னும் ஆங்கிலச் சொல் குறிக்க வல்லது. **தயாரி** என்னும் (செயப்படுபொருள் குன்றா) வினையின் பெயர் உருவம் **தயாரிப்பு.** Food preparation அல்லது preparation of food என்பது **உணவு தயாரிப்பு** ஆகும். **தயாராகு** என்னும் (செயப்படுபொருள் குன்றிய) வினையின் தொழிற்பெயர் உருவம் **தயாராகுகை** அல்லது **தயாராகுதல்.** அந்த வகையில் preparations for the journey என்பது பயணத்துக்குத் தயாரகுவதைக் கருதுமேயொழிய, எதுவித தயாரிப்பையும் கருதாது.

**வசனம்: துன்புறுத்தப்படுவதற்கு ஒரு நல்ல–அடிப்படையுள்ள பயத்தினால், அவனுடைய அல்லது அவளுடைய நாட்டை விட்டுத் தப்பி ஓடி, அத்துடன் கனடா அரசாங்கத்தால் பாதுகாப்பு கொடுக்கப்பட்ட ஒருவரே அகதி**. இது ஒரு கனடிய அரசின் அதிகாரபூர்வமான வெளியீடு ஒன்றில் காணப்படும் வசனம்! ஆதலால் அதன் தோற்றுவாயைக் கண்டறிவதில் எமக்கு அதிகம் சிரமம் ஏற்படவில்லை: A refugee is a person who has had to flee his or her country because of a well-founded fear of persecution and has been given protection by the Government of Canada. ஈ அடித்த பிரதிக்காரரைப் போன்று his or her என்பது அவனுடைய அல்லது அவளுடைய என்று பெயர்க்கப்பட்டுள்ளது. ஆண்பால், பெண்பால் இரண்டையும் மாத்திரமன்றி, ஒருமை, பன்மை இரண்டையும் உணர்த்தும் அவருடைய என்னும் அருந்தமிழ்ச் சொல் இங்கு பயன்படுத்தப்படவில்லை. Persecution என்பது **கொடுமை**, வெறும் **துன்புறுத்தல்** அல்ல. A well-founded fear என்பதை ஒரு நல்ல–அடிப்படையுள்ள பயம் என்பது ஒரு நிறைவான தமிழாக்கம் ஆகாது. **தகுந்த காரணங்களுடன் கூடிய பயம்** என்பதே இதன் பொருள். A well-founded fear of persecution என்பது **தகுந்த காரணங்களுடன் கொடுமைக்கு அஞ்சுதல்** ஆகும். அந்த வகையில் மேற்படி தமிழாக்கத்தை நாம் பின்வருமாறு செம்மைப்படுத்தலாம்: **தகுந்த காரணங்களுடன் கொடுமைக்கு அஞ்சி, தனது நாட்டை விட்டுத் தப்பி ஓடி, கனடிய அரசாங்கத்தின் பாதுகாப்பில் உள்ள ஒருவரே அகதி.**

**வேற்றுமை:** தமிழில் வேற்றுமை உருபுடன் அமையும் சில கூற்றுகள் ஆங்கிலத்தில் வேற்றுமை உருபின்றியே அமைவதுண்டு. சில எடுத்துக்காட்டுகள்:

நாங்கள் உங்களைச் சந்திப்போம் (2ம் வேற்றுமை) = We will meet you
எம்முடன் தொடர்புகொள்ளவும் (3ம் வேற்றுமை) = Please contact us.
மறவருக்கு மதிப்பளிக்கப்பட்டது (4ம் வேற்றுமை) The veterans were honoured.

**தமிழில் எம்முடன் தொடர்புகொள்ள**… எனப்படுவதே ஆங்கிலத்தில் To contact us… எனப்படுகிறது. 3ம் வேற்றுமையுடன் கூடிய இத்தமிழ் வழக்கு கண்டுகொள்ளப்படாது, To contact us என்னும் ஆங்கில வழக்கு கண்டுபிடிக்கப்பட்டு, அந்த ஆங்கில வழக்கு தமிழின் 2ம் வேற்றுமையுடன் குழப்பியடிக்கப்பட்டு, எம்மைத் தொடர்புகொள்ள… என்று குறிப்பிடப்படுகிறது! எமது திட்டம் **இரண்டு காரணங்களால் தோல்வியடைந்தது** என்பது 3ம் வேற்றுமையில் அமைந்த இன்னோர் இயல்பான வசனம். இது, எமது திட்டம் இரண்டு காரணங்களுக்காகத் தோல்வியடைந்தது என்று குறிப்பிடப்படுகிறது. இதன் தோற்றுவாய்: Our plan failed for two reasons. **இரண்டு காரணங்களால்** என்னும் தமிழ் வழக்கு for two reasons என்னும் ஆங்கில வழக்கினால் **இரண்டு காரணங்களுக்காக** என்று உரு(பு) மாறியுள்ளது!

மறவர்களுக்கு **மதிப்பளிக்கப்பட்டது, மறவர்களுக்கு கௌரவமளிக்கப் பட்டது,** (4ம் வேற்றுமை), **மறவர்கள் கௌரவிக்கப் பட்டார்கள்.** The veterans were honoured. இவை நான்கும் இயல்பான கூற்றுகள். **கௌரவி** ஒரு வடமொழிச் சொல். ஆதலால் அது **மதிப்பளி** என்று மாற்றப்படுவதுண்டு. **கௌரவிக்கப்பட்டார்கள்** என்னும் வடமொழிக் கலப்புச் சொல்லுக்குப் பதிலாக **மதிப்பளிக்கப்பட்டார்கள்** என்னும் சொல் கையாளப்படுகிறது. **மதிப்பளிக்கப்பட்டார்கள்** என்பதை மீண்டும் வடமொழிக் கலப்புடன் மாற்றினால், **கௌரவமளிக்கப்பட்டார்கள்** என்று அமையுமே ஒழிய, **கௌரவிக்கப்பட்டார்கள்** என்று அமையாது.

அதாவது **கௌரவிக்கப் பட்டார்கள்** என்பது **மதிக்கப்பட்டார்கள்** என்று மாறுமே ஒழிய, **மதிப்பளிக்கப் பட்டார்கள்** என்று மாறாது. ஆனால் **மதிக்கப்பட்டார்கள்** (… were respected) என்பது இங்கு உரிய பொருளை முழுமையாய் உணர்த்தாது. ஆதலால் அது **மதிப்பளிக்கப்பட்டார்கள்** என்று மாற்றப்படுகிறது. **கௌரவி** என்னும் ஒரே சொல்லுக்குப் பதிலாக **மதிப்பு, அளி** என்னும் இரு சொற்களின் சேர்க்கையாகிய **மதிப்பளி** என்பதை இடும்பொழுது, அதனை 4ம் வேற்றுமையுடன் கூடிய கூற்றாக்கி, **மறவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டது** என்று குறிப்பிடும் பொழுதே இயல்பான தமிழ் கைகூடும்.

**அரசு சிறுபான்மை இனத்தவருக்குத் தீங்கிழைத்தது** போன்று செய்வினையில் அமையும் வசனங்களும், **அரசினால் சிறுபான்மை இனத்தவருக்குத் தீங்கிழைக்கப்பட்டது** போன்று செயப்பாட்டு வினையில் அமையும் வசனங்களும் இயல்பான தமிழ் நடையில் அமைந்தவை. அவற்றுக்கு மாறாக, **சிறுபான்மை இனத்தவர் அரசால் தீங்கிழைக்கப்பட்டனர்** போன்ற செயற்கை நடைகள் மேலோங்கி வருகின்றன. The minorities were abused by the government என்னும் ஆங்கிலக் கூற்றே இவ்வேற்றுமைக் குலைவின் தோற்றுவாய். இவ்வாறே அகதிகளுக்கு **மறுவாழ்வு அளிக்கப்படுகிறது** என்பது **அகதிகள் மறுவாழ்வு அளிக்கப்படுகிறார்கள்** என்றும், **நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது** என்பது **நோயாளிகள் சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள்** என்றும் உருக்குலைந்து (உருபிழந்து) வருகின்றன.

ஆங்கில மொழியும் நடைதளர்ந்து வருகிறது. **ஆங்கில எழுத்தாளர்கள் ஓர் இலக்கண நூலை அல்லது கட்டுரை நூலை அரிதாகவே புரட்டிப் பார்ப்பதில் பேர்போனவர்கள் -** It is notorious that English writers seldom look into a grammar or composition book - என்று பவுலர் சகோதரர்கள் தமது பெயர்போன நூலுக்கு எழுதிய முன்னுரையில் சாடியுள்ளார்கள் (H.W.Fowler & F.G.Fowler, The King's English, Oxford, 1906-1970).

**ஆங்கில மொழியில் வேற்றுமை பெரிதும் பொருளற்றதாகிவிட்டது. வேற்றுமையைப் பொறுத்தவரை சில தவறுகள் அடிக்கடி இழைக்கப்படக்கூடியவையே. அவற்றுள் ஒருசில மேன்மேலும் இழைக்கப்படுகின்றன. ஆதலால் அத்தவறுகள் திருத்தமானவை என்றே வகுக்கப்பட்டுவிட்டன –** The sense of case being almost lost, the few mistakes that can be made often–some of them so often that they are now almost right by prescription (அதே நூல், ப.69).

பவுலர் சகோதரர்களின்திறனாய்வுக்கு உட்பட்டவர்களுள்திரும்பத்திரும்ப இடம்பெறுபவர்களின் துறைகளைக் கருத்தில் கொண்டபொழுது, எமக்கு ஏற்கெனவே புலப்பட்ட ஓர் உண்மை வியக்கத்தக்க முறையில் உறுதிப்பட்டது. அதாவது மொழியைக் கையாளப் போய், பவுலர் சகோதரர்களிடம் வகையாக மாட்டுப்பட்டோருள் தலையாய பங்கு வகிப்பவர்கள் மூன்று தரப்பினர் என்பது புலனாகியது: (1) படைப்பாளிகள், (2) ஊடகத் துறைஞர்கள் (3) அரசியலாளர்கள். திரும்பத் திரும்ப பவுலர் சகோதரர்களின் சல்லடைக்கு உட்பட்ட தரப்புகளுள் நாம் கோலியெடுத்த ஒரு கூறு வருமாறு:

| படைப்பாளிகள் | ஊடகங்கள் | அரசியலாளர்கள் |
|---|---|---|
| Carlyle (1795-1881) | Cambridge Univ.Reporter | Borrow (1952-) |
| Dickens (1812-1870) | Daily Telegraph | Burk (1729-1797) |
| Eliot (1888-1965) | Outlook | Choate (1832-1917) |

| | | |
|---|---|---|
| Huxley (1864-1963) | Spectator | Ferrier (1800-1888) |
| Kipling (1865-1936) | Times | Gladstone (1809-1898) |
| Macaulay (1876-1962) | Westminister Gazette | Morley (1838-1923) |
| Stevenson (1850-1894) | Windsor Magazine | Sladen (1816-1884) |

பல்லாண்டுகளாக மக்களை ஆட்கொண்ட மாபெரும் எழுத்தாளர்களை உள்ளடக்கிய மேற்படி நிரல் புலப்படுத்தும் சங்கதியை பவுலர் சகோதரர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்: **இங்கு படைப்பாளி எவரின் பெயரும் அல்லது செய்தித்தாள் எதன் பெயரும் திரும்பத் திரும்ப இடம்பெற்றிருக்கக் கூடும். அப்படைப்பாளியே அல்லது செய்தித்தாளே பிறரை அல்லது பிறவற்றை விட அதிகமாய் இலக்கண விதிகளையும் மொழிநடை விதிகளையும் மீறுவதாக இது பொருள்படாது. எடுத்துக்காட்டுகளைத் திரட்டுவதற்காக மட்டுப்பட்ட அளவில் தேர்ந்தெடுக்க நேர்ந்தவர்களுள் அல்லது நேர்ந்தவற்றுள் அப்பெயர்கள் இடம்பெற்றிருப்பதை மட்டுமே இது புலப்படுத்துகிறது** (The frequent appearance in it of any author's or newspaper's name does not mean that the author or newspaper offends more often than others against rules of grammar or style; it merely shows that they have been among the necessarily limited number chosen to collect instances from).

ஒரு கனடியப் பேராசிரியர் எழுதிய கடிதம்: **மேற்கு ஒன்ராறியோ பல்கலைக் கழகத்தில் நான் 'முகாமைத்துவ தொடர்பாடல்' கற்பித்த வேளையில் ஒரு சங்கதியைக் கண்டறிந்தேன். அறிவுக் கூர்மை மிகுந்த எனது மாணவர்கள் தமக்கு அடிப்படை ஆங்கில இலக்கண அறிவு இல்லை என்பதை அறிந்து குழப்பமும் கொதிப்பும் அடைந்தார்கள். தொடர்பாடல் துறைகள் அனைத்திலும் திட்பமான முறையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளைப் பள்ளிக் கல்வி அவர்களுக்கு ஊட்டத் தவறியது குறித்து அவர்கள் சீற்றம் அடைந்தார்கள். தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவே அவர்கள் எண்ணினார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் எனது மாணவர்களுக்கு ஊட்டப்பட்டிருக்க வேண்டிய தேர்ச்சிகளை இப்பொழுது ஊட்ட முயல்வதற்கு நானே நேரம் ஒதுக்க வேண்டியிருந்தது. அந்த வகையில் நானும் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவே எண்ணினேன். நாங்கள் பாடம் படிப்பதே இல்லையா? –** (Professor Alexandra Hurst, The Globe and Mail, Toronto, 2007/02/14). தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பல்கலைக்கழக மாணவர்களும் தமது அடிப்படைத் தமிழ், ஆங்கில இலக்கண அறிவு இரண்டையும் குறித்து குழப்பமும் கொதிப்பும் அடையும் நிலையில் இருக்கக்கூடும்.

ஒரு கனடிய மூதவையாளர் தேசிய நாளேடு ஒன்றுக்கு எழுதிய கடிதம்: **இதுவே எனது கடைசி அரசியல் கடிதம். இனிமேல் இலக்கணம், சொல்தொடரியல், பதப்பயன்பாடு என்பவற்றில் நீங்கள் தாராளமாய் இழைக்கும் தவறுகளுக்கு உங்களைக் கடிந்து நான் குறுகிய கடிதங்களை எழுதி அனுப்புவேன் –** This is my last political piece. Hereafter, I shall write brief letters chiding you for your far too frequent errors in grammar, syntax and terminology (Senator Philippe Gigantes, The Globe and Mail, Toronto).

**பதிப்பாளர்கள் பலரும் கையாளும் நடை, பொருள், சந்தர்ப்பம் என்பவற்றை விட்டுவிடுவோம் — வெறும் எழுத்துக்கூட்டல், இலக்கணம், நிறுத்தக்குறியீடு, சொல் தொடரியல் என்பவற்றையே அவர்கள் புரிந்துகொண்டது மிகவும் குறைவு. அதுவே எமக்குத் திகிலூட்டுகிறது** – Many editors have a frighteningly minimal grasp of spelling, grammar, punctuation and syntax – to say nothing of style, substance and context… (Ian Alterman, The New York Times, 1998/07/01).

**முதலாவதாக, ஒரு குறுஞ் சொல் பயன்படுமாயின், பெருஞ் சொல்லை என்றுமே பயன்படுத்தக் கூடாது. (இரண்டாவதாக) பற்பல வரையறைகளுடன் கூடிய ஒரு கூற்றினை நீங்கள் முன்வைக்க விரும்பினால், அவ் வரையறைகளுள் சிலவற்றைப் புறம்பான வசனங்களில் இடவும். மூன்றாவதாக உங்கள் வசனத்தின் தொடக்கம் அதன் இறுதிக்கு முரணான ஓர் எதிர்பார்ப்புக்கு வாசகரை இட்டுச்செல்லும் வண்ணம் அமையக்கூடாது** - First: never use a long word if a short word will do. So, if you want to make a statement with a great many qualifications, put some of the qualifications in separate sentences. Third: do not let the beginning of your sentence lead the reader to an expectation which is contradicted by the end (Robert E.Egner, Bertrand Russell's Best, Routeledge, 1981, p.213).

எப்படி எழுதக்கூடாது என்பதற்கு றசலின் எடுத்துக்காட்டு: Human beings are completely exempt from undesirable behavior patterns only when certain prerequisites, not satisfied except in a small percentage of actual cases, have, through some fortuitous concourse of favorable circumstances, whether congenital or environmental, chanced to combine in producing an individual in whom many factors deviate from the norm in a socially advantageous manner. இதனைப் பின்வருமாறு "**ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலாம்**"

என்று றசல் ஓர் எள்ளலுடன் கூறுகிறார்: All men are scoundrels, or at any rate almost all. The men who are not must have had unusual luck, both in their birth and in their upbringing **(மனிதர்கள் எல்லோரும் கயவர்கள், அல்லது போனால் அநேகமாக மனிதர்கள் எல்லோரும் கயவர்கள். கயவர்கள் அல்லாத மனிதர்கள் தமது பிறப்பையும் வளர்ப்பையும் பொறுத்தவரை அரிய பேறு படைத்தவர்களாய் இருந்திருக்க வேண்டும்). தொடர்ந்து றசல் கூறுகிறார்**: This is shorter and more intelligible, and says just the same thing **(இக்கூற்று மிகவும் குறுகியது, புரியக்கூடியது, அதே பொருளையே உணர்த்துவது).**

றசல் முன்வைக்கும் வேறோர் எடுத்துக்காட்டு: Some people marry their deceased wives' sisters (**சிலர் தமது இறந்த மனைவியரின் சகோதரிகளை மணம் முடிக்கிறார்கள்**). I can express this in a language which only becomes intelligible after years of study, and this gives me freedom **(இதனைப் பல ஆண்டுகாளக ஆய்விட்ட பின்னரே புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் என்னால் எடுத்துரைக்க முடியும். அப்படிச் செய்வது எனக்குச் சுதந்திரமும் அளிக்கும்**).

இளம் பேராசிரியர்களுக்கு றசல் கூறும் புத்திமதியில் ஒரு வேடிக்கை வேறு சேர்கிறது: I suggest to young professors that their first work should be written in a jargon only to be understood by the erudite few. With that behind them, they can ever after say what they have to say in a language 'understand of the people' **(இளம் பேராசிரியர்களுக்கு நான் கூறும் யோசனை இதுவே: அவர்களின் முதற் படைப்பு, புலமை வாய்ந்த சிலருக்கு மாத்திரம் புரியக்கூடிய துறைமொழியில் எழுதப்பட வேண்டும் அதற்கடுத்த படைப்புகளில் அவர்கள் கூறவேண்டியதை மக்களுக்கு விளங்கும் மொழியில் கூறவேண்டும்).**

மீண்டும் ஓர் எள்ளலுடன் றசல் விடைபெறுகிறார்: In these days, when our very lives are at the mercy of the professors, I cannot but think that they would deserve our gratitude if they adopted my advice **(எங்கள் வாழ்வே பேராசிரியர்களின் தயவில் தங்கியுள்ள இக்காலகட்டத்தில், அவர்கள் எனது புத்திமதியைக் கைக்கொண்டால் எமது நன்றியறிதலையாவது ஈட்டும் அருகதை அவர்களுக்குக் கிட்டும் என்று நான் நினைக்கிறேன்).**

இத்தகைய பிரச்சனைகள் மொழியினால் விளைபவை ஆகா. அவை மொழியைக் கையாள்பவர்களால் விளைபவை. அவ்வாறே மொழிபெயர்ப்பில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், மொழிபெயர்ப்பாளர்களால் விளைபவையே ஒழிய, மொழிகளால் விளைபவை ஆகா. **நீதிமன்றின்முன் தோன்றுவோர் இரண்டு வகையானோர் என்பதை நன்னடத்தைச் சேவைத் துறை கண்டறிந்துள்ளது. ஒரு வகையினரைப் பொறுத்தவரை, அவர்களுக்குப் பிரச்சனை உண்டு. மறு வகையினரைப் பொறுத்தவரை, பிரச்சனையே அவர்கள்தான்!** (The probation service have found out that there are two types of person appearing before the courts – those who have problems and those who are problems, Simon Cohen, Magistrate, June 1983, The Globe and Mail, Toronto, 2007/02/27). அது போலவே மொழிபெயர்ப்பாளர்களுள் ஒரு வகையினர் தமிழாக்கத்தில் பிரச்சனைகளை எதிர் நோக்குவோர். மறு வகையினரைப் பொறுத்தவரை, பிரச்சனையே அவர்கள்தான்!

மருத்துவர் சிகிச்சையளிப்பது நோயாளிக்கே ஒழிய, நோய்க்கல்ல (The doctor treats a patient, not a disease) என்றார் ஒரு மருத்துவரின் மகனாகிய அரிஸ்டோட்டில். **ஓர் ஆளை எத்தகைய நோய் பீடித்துள்ளது என்பதை விட, எத்தகைய ஆளை அந்த நோய் பீடித்துள்ளது என்பதை அறிவதே மிகவும் முக்கியம்** – It is much more important to know what sort of a patient has a disease than what sort of disease a patient has (Dr. Sir William Osler, 1849-1919). அது போலவே, எத்தகைய கூற்று மொழிபெயர்க்கப்படுகிறது என்பதை விட, அதனை எத்தகைய ஒருவர் மொழிபெயர்க்கிறார் என்பதே மிகவும் முக்கியம்.

நாம் இதுவரை சுட்டிக்காட்டிய பிரச்சனைகளிலிருந்து கடைத்தேறுவதற்கு தமிழாக்கவியல் ஒரு தனித் துறையாக (சிறப்புத் துறையாக) மேலோங்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. ஆங்கில நடையிலிருந்து தமிழ் நடையை மீட்டெடுப்பதே தமிழாக்கத் துறையின் தலையாய குறிக்கோளாய் அமைய வேண்டும்.

தமிழ் நடையில் அமையும் தமிழே தமிழாக்கத்தைச் செம்மைப்படுத்தும். அதற்கு, தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்றவர்களாய் மட்டுமன்றி, தமிழையும் ஆங்கிலத்தையும் கற்றவர்களாய் விளங்குவோர் மனமுவந்து களமிறங்க வேண்டும். இரு மொழிகளின் பாணியையும் தேர்ந்து, தெளிந்து பெயர்க்கும் பணியை அவர்கள் முன்னெடுத்துச் செல்லவேண்டும். தமது தமிழாக்கங்களில் செம்மை (accuracy), சீர்மை (uniformity), திண்மை (specificity) என்னும் மூன்று சிறப்புகளையும் அவர்கள் பொறிக்க வேண்டும்.

தமிழாக்கத்தைச் செம்மைப்படுத்துவதில் ஈடுபடக்கூடிய துறைஞர்களுக்கு சொல் தொகுதிகளும் அகராதிகளும் கைகொடுக்க வல்லவை. ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் பல்வேறு சொல்தொகுதிகளும் அகராதிகளும் வெளிவந்துள்ளன. இவ்விரு நாடுகளிலும் வெளிவந்த அகராதிகளை நாம் நால்வகைப்படுத்தலாம்:

1. தமிழ்–தமிழ் அகராதி (எ–கா: யாழ்ப்பாண அகராதி—1842, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2006).
2. தமிழ்–ஆங்கில அகராதி (எ–கா: தமிழ் அகராதி—1926, சென்னைப் பல்கலைக்கழகம், 1982).
3. ஆங்கிலம்–தமிழ் அகராதி (எ–கா: ஆங்கிலம்–தமிழ்ச் சொற்களஞ்சியம்—1963, சென்னைப் பல்கலைக்கழகம், 1992).
4. ஆங்கில–ஆங்கில அகராதி (Oxford, Webster's…)

தமிழ்–தமிழ் அகராதிகளின் மகிமைக்கு ஓர் எடுத்துக்காட்டு: 1842ல் சந்திரசேகரப் பண்டிதர், சரவணமுத்துப் பிள்ளை ஆகிய இருவரும் தொகுத்து வெளியிட்ட யாழ்ப்பாண அகராதியில் **குடியாட்சி** என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. தமிழில் 165 ஆண்டுகளுக்கு மேல் மண்டிக் கிடக்கும் ஓர் அரிய சொல் இது. 1958ல் வெளிவந்த ஓர் ஈழநாட்டுச் சொல்–தொகுதியில் **குடியாட்சி**, *democracy* இரண்டும் நேரொத்த சொற்களாய் எடுத்தாளப் பட்டுள்ளன (**குடிமையியலும் ஆட்சியியலும்**, இலங்கை அரசகரும மொழித் திணைக்களம், கொழும்பு, 1958). 1992ல் வெளிவந்த கிரியாவின் தமிழ்–ஆங்கில அகராதியில் **குடியாட்சி, மக்களாட்சி,** *democracy* மூன்றும் நேரொத்த சொற்களாய் இடம்பெற்றுள்ளன. இவை மக்கள் வழக்கிற்கும் துறைஞர் வழக்கிற்கும் உகந்த சொற்கள் என்பதில் ஐயமில்லை.

1958ல் (மீள்பதிப்பாக) வெளிவந்த The Concise Oxford English Dictionary-I அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டு, 1963ல் வெளியிடப்பட்ட ஓர் அகராதி: **சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம்–தமிழ்ச் சொற்களஞ்சியம்**. ஆங்கிலத்தில் ஆண்டுதோறும் 400 சொற்கள் புதுக்கப் புகுவதைக் கருத்தில் கொள்ளும்பொழுது, இந்த ஆங்கிலம்–தமிழ் அகராதியில் 20,000 ஆங்கிலச் சொற்கள் துண்டு விழுவது தெரியும். இவ்வாறு, எமக்குக் கிடைக்கும் ஆங்கிலம்–தமிழ் அகராதிகளின் சொல்வளமும் பொருள்வளமும் பெரிதும் மட்டுப்பட்டவை. தற்பொழுது புதிய பாணியில் எடுத்தாளப்படும் ஓர் ஆங்கிலச் சொல்லைப் பெயர்ப்பதற்கு, எந்த ஆங்கிலம்–தமிழ் அகராதியும் கைகொடுத்தல் அரிது. உலகளாவிய தரவுப் பரிமாற்றத்தின் பெருக்கத்துக்கும், திட்பத்துக்கும், வேகத்துக்கும் எந்த ஆங்கிலம்–தமிழ் அகராதியாலும் ஈடுகொடுக்க முடியாது. பழைய அகராதிகளை நம்பி, பழைய விடயங்களை மொழிபெயர்ப்பதே கடினம். புதிய விடயங்களை மொழிபெயர்ப்பது அதனிலும் கடினம்.

ஆங்கிலத்தில்கூட இதே பிரச்சனை உண்டு. சாக்கிரத்தீசின் தத்துவத்தை மீள்நோக்கத் தலைப்பட்ட ஓர் அமெரிக்க அறிஞர் கூறுகிறார்: **மொழிபெயர்ப்புகளைக் கொண்டு ஏற்புடைய முறையில் அரசியல், தத்துவ அனுமானங்களை எவராலும் மேற்கொள்ள முடியாது என்பதை நான் கண்டுகொண்டேன். மொழிபெயர்ப்பாளர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல அதற்கான காரணம். கிரேக்க மொழிப் பதங்கள் – கேத்திரகணிதத்தில் கூறப்படுவதுபோல் – அவற்றுக்கு நிகரான ஆங்கிலப் பதங்களுடன் முற்றிலும் ஒத்திசையாமையே அதற்கான காரணம். ஆங்கிலத்தில் பருமட்டாகப் பொருந்தும் பல்வேறு பதங்களுள் ஒன்றைத் தெரிவுசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் மொழிபெயர்பாளருக்கு ஏற்படும். கிரேக்க மொழியிலுள்ள கருதுபொருட் பதம் ஒன்றை விளங்கிக்கொள்ள முற்படும் ஒருவர், கிரேக்க மொழியிலேயே அந்தப் பதத்துடன் மல்லாடி அதனை விளங்கிக் கொள்வதற்குப் போதிய அளவுக்காவது கிரேக்க மொழியைக் கற்றிருக்க வேண்டும். அந்தப் பதம் உணர்த்தக்கூடிய கருத்துகள், நயம் அனைத்தையும் ஒருவரால் அந்த மொழியிலேயே புரிந்துகொள்ள முடியும்:**

*I found that one could not make valid political or philosophical inferences from translations, not because the translators were incompetent, but because the Greek terms were not fully congruent – as one would say in geometry- with their English equivalents. The translator was forced to choose one of several English approximations. To understand a Greek conceptual term, one had to learn at least enough Greek to grapple with it in the original, for only in the original could one grasp the full potential implications and color of the term - I.F.Stone, The Trial of Socrates, Little Brown & Co., Boston-Toronto, 1988, p.x).*

அவ்வாறே ஆங்கிலப் பதங்களை (1) ஆங்கிலத்திலேயே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். (2) ஓர் ஆங்கிலம்–தமிழ் அகராதியிலோ சொல்தொகுதியிலோ காணப்படும் பொருள், அந்த விளக்கத்துடன் உடன்படுகிறதா என்று பார்க்க வேண்டும். (3) உடன்பட்டால், அதனை நாம் எடுத்தாளலாம். (4) உடன்படாவிட்டால், ஆங்கில விளக்கத்தின்படி அதனை நாம் செம்மைப்படுத்தலாம்.


**யாதும் ஊரே, யாவரும் கேளிர்** என்று முழங்கி, உலகளாவிய பண்பாட்டுப் பன்மையை விதந்துரைத்த கணியன் பூங்குன்றனாரின் வழித் தோன்றல்களாகிய தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமிழ்மொழி போல் நெகிழ்ந்து நிலைகொள்ளக் கடமைப்பட்டவர்கள். எமது சொந்தக் காலில் நாம் நிற்கவும் வேண்டும், பிறர் கைகளை நாம் பற்றவும் வேண்டும். அதேவேளை, ஐயுறவு எம்மைத் தடுக்கவும் வேண்டும், ஆய்வு எம்மை முடுக்கவும் வேண்டும். அதனை விடுத்து, '**எமது அறியாமையை நாம் தமிழின் வறுமை ஆக்கலாகாது**' ஹன்டி பேரின்பநாயகம், 1899–1977).

வாழ்க்கை என்ற பாதையில் உள்ள
பெரும் சிக்கல் என்ன தெரியுமா?

எப்போதும், எதிலும் ஒரு சொட்டாவது தீவினை இல்லாது ஒரு
நல்வினை செய்ய முடியாதுள்ளது.

ஒரு சொட்டாவது நல்வினை இல்லாது
ஒரு தீவினை செய்ய முடியாதுள்ளது.

– **அலி அல்வர்தி /ஈராக்கிய சமூக ஆய்வாளர்**




# பட்டம் தேடும் பல்கலை மாணவன்

**நுஸ்லா ஸுலைஹா ஸுலைம்**
மூன்றாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பல்கலைகளைக் கற்க
பல்கலை சென்றோம்.
பல்லின சமூகத்துடனும்
பழக வாய்ப்புப் பெற்றோம்.

பட்டம் பதவி பெற்றாலும்
பண்பட்ட பண்புகளை
படிப்பித்த ஆசான்
பல்கலைச் சமூகம்.

பள்ளிப் பருவத்தில்
படித்திடாத அனுபவங்களை
பாங்காய் படிப்பித்தது
பல்கலைச் சமூகம்.

பாலாவும் பத்மினியும்
பாரூக்கும் அல்பிரட்டும்
பந்த பாசத்துடன்
பழகினர் எம் கலையகத்தில்.

படித்து முடித்து
பட்டம் பெற்று வெளியேறுவோம்.
பார் போற்றும் உத்தமராய்
பண்போடு வாழ்ந்திடுவோம்.

பட்டாம் பூச்சியாய்
பறந்து திரிந்து
பழகிய அனுபவங்களை
பரைசாற்றுவோம் உலகுக்கு!

பல்லின சமூகத்துடன்
பாலும் பழமும் போல
பாசத்தோடு பழகிடுவோம்.

பதவி மோகம்
துடைத்தெரிவோம்
நான் நீ எனும்
பாகுபாடு களைந்திடுவோம்.
பல்கலை தந்த
பாடத்தால் பார் ஆழ
படை திரள்வோம்!

பக்குவமாய் வாழ்ந்திடுவோம்....



# இஸ்லாமிய நோக்கில் ஆவணப்படுத்தலும், இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஆவணப்படுத்தலின் அவசியமும்

**சாக்கீர் எம்.ஐ.எம்.**
BSc.MLS (Jaffna),
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானி.

மனித சமுதாயம் காலத்தின் பயணத்தில் விருத்தியடைந்து நீடித்து நிலைத்து வந்தமைக்கு, அவர்களின் மொழிக் கையாளுகை மற்றும் சந்ததிகளுக்கு தங்களின் செய்திகளையும் வரலாறுகளையும் கடத்தியமை என்பவை ஊடாகவே சாத்தியப்பட்டுள்ளது. வாய் வழிச்செய்திகள், கதைகள், கவிகள் மூலம் வாய்ப்பாடங்களாக கடத்தப்பட்ட தகவல்கள் பின்னர் கல்வெட்டுகள், ஓலைக் குறிப்புகள் என்று பரிணமித்து அச்சுப் புத்தகங்கள், மின்நூல்கள் வரை விருத்தியடைந்துள்ளன.

எதிர்காலத்தின் தேவைகளின் பொருட்டு அவசியப்படும் தகவல்களை உரிய முறையில் பேணுவது ஆவணப்படுத்தல் எனப்படும். மனித சமூகத்தின் விருத்தி மற்றும் ஒரு இலட்சிய வாழ்க்கைமுறையை நோக்கிய அதன் நகர்ச்சி என்பவற்றிற்கு ஆவணப்படுத்தல் இன்றியமையாததாக அமைந்திருக்கின்றது. இது கடந்தகாலத்தின் படிப்பினைகளினூடாக, முந்தைய தலைமுறை விட்டுச் சென்ற இடத்திலிருந்து சமூகத்தின் அடுத்த கட்ட நகர்ச்சியைத் தொடரவும் மற்றும் எதிர்காலத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கவும் அவசியமாகின்றது.

**ஆவணப்படுத்தல் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்**

இஸ்லாமிய மார்க்கம் மத்திய கிழக்கில் தோற்றம் பெற்றது. இருப்பினும் இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கை மனித தோற்றத்தின் ஆரம்பத்திலிருந்து விருத்தியடைந்து வந்தவையாகவே இஸ்லாமிய நம்பிக்கைகள் கூறுகின்றன. அதனடிப்படையில் இஸ்லாமிய புனித நூலிலும் மார்க்கப் போதகர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் உபன்னியாசத் தொகுப்புக்களிலும் வரலாற்றுச் சம்பவங்களினூடாக படிப்பினைகள் போதிக்கப்படும் பாங்கு காணப்படுகின்றது. அதே போன்று அறிவை வளர்த்துக் கொள்ளுதல், அறிவுப் பரவலாக்கம் செய்தல் என்பதனை இஸ்லாமிய மார்க்கம் உயரிய அந்தஸ்தில் வைத்து நோக்குகின்றது.

**“கல்வியை தேடும் வழியில் ஒருவன் நடந்தால் அவனுக்கு அல்லாஹ் சுவர்க்கத்திற்கு செல்லும் வழியாக அதை ஆக்குகின்றான். மலக்குகள், கல்வியை தேடுபவனை திருப்தியுற்று தங்களின் இறக்கைகளை தாழ்த்துகின்றனர். ஒருவர் கல்வியை எடுத்துக்கொண்டால் அவர் மாபெரும் பாக்கியத்தை எடுத்துக் கொண்டவராவார்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.** இஸ்லாமிய சமயம் ஆவணப்படுத்தலை பெரிதும் ஆதரிக்கின்றது. குறிப்பாக உண்மையை அறிதலிலும், பக்கசார்பின்றி அறிக்கையிடுதலையும் வலிமையாகப் போதிக்கின்றது. உள்ளதை உள்ளபடி பேணுதல் என்பது ஆவணப்படுத்தலில் மிக முக்கிமான அடிப்படையாகும்.

ஆவணப்படுத்தலின் தொடர்ச்சியை இஸ்லாத்தின் இறைத்தூதரின் வாழ்வியலில் இருந்து அறிய முடிகின்றது. தனக்கு வேத வெளிப்பாடாக வருகின்ற செய்திகளை மனனமிட்டு வந்த அவர் அதனை எழுதத்தெரியாதவராக இருந்தார். எனினும் அவரது சீடர்கள் குர்ஆனிய வாசகங்களை எழுதி வைக்க ஒட்டகங்களின் தோல், எலும்புகள், பேரீச்சம் மட்டைகள் என்பவற்றைப் பயன்படுத்தி வந்தனர். அதே வேளை முஹம்மது நபி அவர்கள் புனித நூலை எழுதும் பொறுப்பையும் சிலருக்கு ஒப்படைத்திருந்தார். அவர்கள் **‘குத்தாபுல் வஹி’** என அழைக்கப்பட்டனர். பலர் மனனமிட்டும் பாதுகாத்து வந்தனர். அதே வேளை ஒப்பந்தங்கள் கடன் பத்திரங்கள் என்பவற்றை எழுத்து மூலம் பேணும் வழக்காறும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மார்க்கக் கல்வியுடன் பிற துறைகளிலும் தனது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என வழிகாட்டுகின்றது. எடுத்துக் காட்டாக பிற மொழிகளை கற்றல், பிற கலாசாரங்களைக் கற்றல், அறிவியல், கணிதம், வியாபாரம், அரசியல், நிர்வாக நுட்பங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமாக நபித்தோழர்களில் ஒருவரான ஜைத் (ரழி) அவர்களை யூதர்களின் மொழியைக் கற்றுக் கொள்ளுமாறு நபியவர்கள் அறிவுறுத்தினார்கள். இது அவர்களுடனான எழுத்து மூல உரையாடல்களுக்கு இலகுவாக அமைந்தது. குர்ஆன் பிரதியாக்கலில் தவறுகள் நிகழ்ந்துவிடக் கூடாது எனும் கரிசனையில் கலீபா உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரசின் அனுசரனையில் குர்ஆனின் பல கையெழுத்துப் பிரதிகள் உத்தியோகபூர்வமாக உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. அதே போல் நபி (ஸல்) அவர்களினால் கூறப்பட்ட நற்செய்திகளின் தொகுப்பும் மிகுந்த அவதானத்துடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதைக் வரலாற்றில் காணலாம். அதாவது குறித்த ஒவ்வொரு செய்தியையும் நேரடியாக நபியவர்களிடமிருந்து யார் யார் வாயிலாக அச்செய்தி கடத்தப்பட்டு வந்ததென்ற வரிசையும், அவர்கள் ஒவ்வொருவரினதும் சங்கிலித் தொடரும், வாழ்க்கை வரலாறும், குணப்பண்புகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

ஆவணப்படுத்தலின் இதே கரிசனை மத்திய காலத்திலும் தொடர்ந்தது. குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தில் பிற நாடுகளிலிருந்து பல்வேறு அறிவுத்துறைச் சார்ந்த நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. ஐரோப்பாவின் இருண்ட காலமான அக்காலத்தில் இஸ்லாமிய உலகு மேலைத்தேய அறிவியல் வளர்சிக்கும், கீழைத்தேய அறிவு மூலங்களின் நகர்ச்சிக்குமான பாலமாக திகழ்ந்தது. அறிவியலின் வெகு துரித வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் புலமைத்துவ ஈடுபாடு பெரிதும் பங்களித்தது. கி.பி.8ம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை அரபுலகின் நாகரீகம் “வரலாற்றின் கலாசார அதிசயங்களில் ஒன்று” என அறிஞர்களால் வர்ணிக்கப்படுமளவு அறிவுவளர்ச்சிச் சங்கிலியின் தொடர்ச்சியை அறுபடாமல் பாதுகாத்து இருண்ட ஐரோப்பாவிற்கு மறுமலர்ச்சியை ஊட்டியது. பைத்துல் ஹிக்மா போன்ற அறிவுமையங்கள் பல்வேறு அறிவுத்துறைகளின் விருத்திக்கும் பங்களித்தன. குறிப்பாக ஸ்பெய்ன் குர்துபா, பக்தாத், ஷாம், எகிப்து போன்ற மத்திய நிலையங்களும் நூலகங்களும் இவ்வறிவுப்புரட்சியில் பெரும் பங்காற்றின.

இவ்வாறான ஆவணப் பாரம்பரியமிக்க முஸ்லிம்களின் நம்பிக்கைசார் தொடர்ச்சி இலங்கையில் எவ்வாறு அமைந்தது? தற்காலத்தில் அதன் நிலை எவ்வாறு விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் இக்கட்டுரை கரிசனை கொள்கின்றது.

**இலங்கை முஸ்லிம்கள்**

“இலங்கை முஸ்லிம்கள்” எனும் பதம் இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றும் குழுக்கள் பலவற்றைக் குறிக்கப் பயன்படுகின்றது. உத்தியோகபூர்வ ஆவணங்களில் இன அடிப்படையில் இலங்கைச் சோனகர்கள், இந்திய முஸ்லிம்கள் உள்ளிட்டவர்களைக் குறிக்கப் பயன்படுகின்றது. எனினும் மலாய் முஸ்லிம்கள், போராக்கள் போன்றவர்களும் நம்பிக்கைப்பகுப்பு அடிப்படையில் இலங்கை முஸ்லிம்களாகக் கொள்ளப்படுவர். மொழிவாரியாகவும் இலங்கை முஸ்லிம்களை ஒரே குழுவாக வகைப்படுத்துவதிலும் சிக்கல்கள் உள்ளன. பெரும்பாலானவர்கள் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் பிரயோகிக்கும் அதேவேளை, மலாய், சிங்களம், ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளையும் பிரதானமாகப் பயன்படுத்தும் குழுக்களும் இவர்களிடையே உள்ளனர்.

மேலும் சிந்தனைப் பிரிவுகள் சார்பாக ஸுன்னி முஸ்லிம்கள், ஷியா முஸ்லிம்கள் உள்ளிட்ட குழுக்களும் ஸாபி, ஹனபி சிந்தனைப் பள்ளிகளை பின்பற்றுபவர்களும் உள்ளனர். மேலும் ஸுபி முஸ்லிம்கள், தரீக்கா பாரம்பரியத்தை பின்பற்றுபவர்கள், பக்கீர் சமூகம் என கிளைப் பிரிவுகளும் உள்ளன. இவை எவ்வாறிருந்த போதிலும் இஸ்லாத்தின் உலகளாவிய சகோதரத்துவ நோக்கில் வரையறையிலுள்ள சிக்கல்கள் (மொழி, சமயம், சிந்தனைப் பிரிவுகள், பூர்வீகம், பிராந்தியம்) இலகுவாகத் தீர்க்கப்பட்டு நம்பிக்கை அடிப்படையில் இஸ்லாமிய புனித வேதநூலை நம்பிக்கை கொள்கின்ற மற்றும் தம்மை இலங்கை முஸ்லிம்கள் என அடையாளப்படுத்தும் குழுக்கள் அனைவரும் இலங்கை முஸ்லிம்களாகக் கொள்ளப்படுவர்.

மேலுள்ள பல்வகைமை அடிப்படையில் நோக்குகின்ற போது இலங்கை முஸ்லிம்களிடையே பல்வேறு பண்பாட்டு பல்வகைமையுள்ள சமூகக்குழுக்கள் இயங்குவதை அவதானிக்கலாம். எனவே ஒவ்வொரு பண்பாட்டுக் குழுக்களுக்குமான பூர்வீகம் பாரம்பரியங்கள், வழக்காறுகளில் தனித்தன்மைகள் உள்ளதை குறிப்பிட முடியும். உதாரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே வழக்கிலுள்ள தாய்வழி குடிமரபு, தென் பிராந்திய முஸ்லிம்களிடையே வழக்கிலுள்ள பிரத்தியேக சொற்களைக் கொண்ட மொழிப்பாவனை, மத்தியமலைநாட்டு, வடமேல் வடமத்திய தென்மாகாண முஸ்லிம்களின் பெயர்களின் பின்னொட்டாக வரும் சிங்கள பெயரொட்டுக்கள், மலாய் முஸ்லிம்கள் மற்றும் போரா முஸ்லிம்களின் பிரத்தியேக மொழி, அகமண முறைகள், ஆடைக் கலாசாரம் மற்றும் ஆகாரப் பல்வகைமை, தூரக்கிழக்காசிய பூர்வீகம் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

எனினும் இலங்கை முஸ்லிம்களின் சுவாரஸ்யமிக்கதும் வரலாற்றுப் பெறுமானமிக்கதுமான தனித்துவத்தை வெளிப்படுத்தும் மேற்போந்த விடயங்களை கற்றுக் கொள்வதிலும், வருங்கால சந்ததிகள் மற்றும் ஆய்வாளர்களுக்கு இலகுவில் அறிந்து கொள்வதிலும் பெருத்த இடர்பாடுகள் காணப்படுகின்றன. சமூகத்தின் முறையான ஆவணப்படுத்தலில் சமூகக் கூட்டுப்பொறுப்பு உணரப்படாமையே இதற்கு முக்கிய காரணமாக அனுமானிக்க முடிகின்றது.

**இலங்கை முஸ்லிம்களும் ஆவணப்படுத்தலும்**

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு இலங்கையின் ஆதிக் குடிகளுடனான அரேபிய தீபகற்பம் மற்றும் பாரசீகம், தூரக்கிழக்காசிய நாடுகள், சோழமண்டலக் கரையோரம்–மலபார் போன்ற

பிரதேசங்களுடனான வர்த்தகத் தொடர்புகளுடன் ஆரம்பமாவதாகக் கொள்ள முடியும். அதே வேளை இலங்கை முஸ்லிம்களிடையே நிலவுகின்ற பூர்வீக தொன்மங்களின் படி மனித சமூதாயத்தின் முதல் இறைதூதர் இலங்கையில் இறக்கப்பட்டதாகவும் அவர்களின் சந்ததிகளே ஆதிக்குடிகள் என்ற கருத்தியலும் நிலவுகின்றது. இது போன்ற தொன்மம் செமிட்டிக் மதத்தவர்களான கிருஸ்தவர்கள் மற்றும் யூதர்களிடையேயும் நிலவுகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான மூலாதாரங்களாக முஸ்லிம்களிடையே இருந்து பெறக்கூடிய ஆவணங்கள் பெருமளவில் கிடைக்கக் கூடியனவாக இல்லை. அதேவேளை முஸ்லிம்களின் ஆவணப்படுத்தலுக்கான தேவை பின்வரும் காரணங்களினால் உணரப்பட்டது.

1. ஆதிகாலம் தொட்டு வசித்து வரும் முஸ்லிம்கள் இந்த நாட்டின் பிரஜைகளாகவே வாழ்ந்து வந்தனர். ஆயினும் பிரதானமாக கிழக்கில் சோழர் படையெடுப்பு, மற்றும் தெற்கு மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற ஐரோப்பிய ஆக்கிரமிப்பு போன்றவற்றின் பின்னரேயே இலங்கை முஸ்லிம்களிற்கு இந்நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு தங்களின் இருப்பை சட்டபூர்வமாக உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் கட்டாயமும் ஏற்பட்டது.

2. தனித்துவமான பண்பாட்டம்சங்களுடன் காணப்படுகின்ற சமூகமாக இருந்த போதிலும் பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட சட்ட சீர்திருத்த முயற்சிகளின் ஒரு அங்கமாக 1833 இல் நிறுவப்பட்ட சட்டநிரூபன சபையில் இன ரீதியான அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்ட போது முஸ்லிம்களுக்கான பிரதிநிதிகள் முஸ்லிம் சமூகத்தில் இருந்து தெரிவு செய்யப்படாமல் இலங்கைத் தமிழர்கள் சார்பில் நியமிக்கப்பட்ட அங்கத்தவருக்கே இப்பொறுப்பு வழங்கப்பட்டது. இதன் பின்னரே முஸ்லிம்கள் தமது தனித்துவத்தை மேலும் வலுவாக நிறுவ வேண்டிய தேவைப்பாடு அவர்களுக்குள் எழுந்தது.

3. 1880இல் முஸ்லிம்கள் சட்டசபையில் தமது இனத்தைப் பிரதிநிதித்தவப்படுத்த தனியான அங்கத்துவத்தைக் கோரினர். இதன் போது இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய திரு பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இலங்கை முஸ்லிம்களது பூர்வீகம் தென் இந்தியா என்றும் இனத்தால் அவர்களும் தமிழர்களே என்றதுமான வாதத்தை முன்வைத்தார். இதை மறுத்துரைத்து அப்போது கிடைத்த ஆவணங்களைக் கொண்டு ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்கள் 'இலங்கைச் சோனகர் இன வரலாறு' எனும் நூலை வெளியிட்டார். இது முஸ்லிம்களின் வரலாற்று ஆவணப்படுத்தலுக்கான தேவையை உணர்த்தியதோடு, இவ்வாவணம் சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தியது.

4. இதே வரிசையில் உள் நாட்டுப் கலவரங்களின் போது முஸ்லிம்கள் அந்நியர் என்ற தோற்றப்பாடு கொண்ட கருத்தியல்கள் விதைக்கப்பட்டது. இதனால் தமது சுயநிர்ணய உரிமையை வலுப்படுத்தவும், அதனைப் பிற சமூகங்களுக்கு பிரக்ஞைபூர்வமாக நிறுவுவதற்கும், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் தமது சமூகப் பிரச்சினைகளிற்கு தம் தரப்பு நியாயங்களை தெரிவிப்பதற்கும், பொதுச்சபைகளில் தனித்துவமான இனம் என்றவகையில் சமவாய்ப்பைக் கோருவதற்கும் முறையான ஆவணப்படுத்தல் அவசியப்பட்டது.

5. காலனித்துவ ஆட்சிக்குப் பின்னரான மிகநீண்ட உள்நாட்டுப் போரின் முடிவின் பின்னர் இனவாதிகளின் இலக்கு முஸ்லிம்கள் மீது திரும்பியதை அவதானிக்க முடிந்தது. இலங்கையைக் கலவரபூமியாகவே வைத்திருக்க விரும்புகின்ற, தேசவிரோத சக்திகளும் விதேசிய புவிசார் அரசியலாளர்களின் முகவர்களும் முஸ்லிம்களின் இருப்பையும்,

தேசாபிமானத்தையும் வினாவெழுப்பத் தொடங்கினர். பூர்வீக வணக்கஸ்தலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. வழிபாட்டுரிமைகள், பண்பாட்டம்சங்கள் என்பன படிப்படியாக தடை செய்யப்படும் நிகழ்ச்சி நிரல்களினையும் அவதானிக்க முடிந்தது. இந்நிலமைகளில் முஸ்லிம்களின் தரப்பு நியாயங்களை வலுப்படுத்த ஆவணப்படுத்தலின் தேவை பெரிதும் உணரப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தின் ஆவணப்படுத்தல், காலாகாலமாக ஆர்வலர்களினாலும், தனிப்பட்ட ஆய்வாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதே வேளை அரச ஆதரவில் கலாசார அமைச்சின் மூலம் மாவட்டங்களின் வரலாறுகளும் தொகுக்கப்பட்டன. இருந்த போதிலும் ஆயிரமாண்டுக்கு மேற்பட்ட முஸ்லிம் சமூகத்தின் வரலாறு தொடர்பில் முழுமைப் படுத்தப்பட்ட ஆவணவாக்கம் இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது.

ஆவணங்களை பாதுகாப்பதற்கான பொறிமுறைகளாக பண்டைக்காலம் தொட்டே நூலகங்கள் இயங்கி வந்தன. முனித வரலாற்றின் அறிவுச்சேகரங்கள் நூலகங்களிலேயே பாதுகாக்கப்பட்டன. அதே வேளை நூலகங்கள் அழிக்கப்பட்டும் வந்தன. நூலகங்களின் அழிவுகளில் செயற்கையான அழிப்புகள் பெரும்பாலும் ஒரு கலாசார துடைப்பிற்கான முயற்சியாகவே இடம்பெறுகின்றன.

உலக வரலாற்றில் இடம்பெற்ற நூலக அழிப்புகளில், பொ.ஆ.மு 206 இல் இடம்பெற்ற சீனாவின் ஷியான் யங் மாளிகை ஆவணக அழிப்பு, அலக்ஸாந்திரிய நூலகம், கொரடோபாவின் அல்–ஹகம் நூலகம் போன்றவையும் மத்தியக் கிழக்கு மோதல்களில் அழிக்கப்பட்ட திரிப்பொலி, பக்தாத், மொசூல், நூலகங்களும் அமெரிக்க காங்கிரஸ் நூலகம், மெக்ஸிகோ நூலகம் எனப் பல்வேறு நூலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இருந்த அரிய நூற்சேர்க்கையைக் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981இல் தீயிட்டு அழிக்கப்பட்டது. இவ்வாறு அழிவடைந்த பல நூலகங்கள் மீள உயிர்ப்பித்துள்ளன என்றாலும் அவை இழந்த பல அரும் பொக்கிஷங்களும் புராதன அறிவு மூலங்களும் மீண்டும் மீளநிரப்ப முடியாத ஆற்றொணாத வரலாற்று காயத்தைக் கொண்டிருக்கின்றன.

எனவே இலங்கை முஸ்லிம்களின் ஆவணப்படுத்தல் காலதாமதமின்றி முடுக்கப்பட வேண்டிய சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்பதனை முஸ்லிம் சமூகம் உணர வேண்டியுள்ளது. இது துறைசார்ந்த அறிஞர்கள், செல்வந்தர்கள் மீதுள்ள சமூகக் கடமையுமாகும் என்பது மார்க்க அறிஞர்களின் கருத்தாகவும் உள்ளது.

தேசப்பற்று தொடர்பில் நபிகளாரின் பின்வரும் பிரார்த்தனையை எடுத்துக்காட்டாகக் கூறமுடியும்.

> **“இறைவா மக்கா மீது உள்ள அன்பைப் போல் அல்லது அதனை விடவும் அதிகமாக மதீனா மீது அன்பை ஏற்படுத்துவாயாக. மதீனாவை சீர்படுத்தி விடு, மதீனாவின் உற்பத்தியிலும் வியாபாரத்திலும் எமக்கு பறகத்தை தந்துவிடு. அதன் நோயை நகர்த்தி விடு” என்றார்கள்.**

### இலங்கை முஸ்லிம்களின் ஆவணப்படுத்தலில் உள்ள சவால்களும் கரிசனை கொள்ள வேண்டிய அம்சங்களும்

1. தற்கால முஸ்லிம்களிடையே வரலாற்று பிரக்ஞையை மீட்டுதல் அவசியமாகின்றது. உலகவாழ்வின் நிலையாமையில் தீவிர நம்பிக்கை கொண்ட முஸ்லிம் சமூகம் வரலாறு தொடர்பான கரிசனையைக் குறைவாகவே கொண்டுள்ளது. எனினும் பூமியை வளப்படுத்துதல் (இமாரதுல் அர்ழ்) தொடர்பில் மேலும் சமூகத்தை ஊக்கப்படுத்த வேண்டியுள்ளது.

2. இலங்கை முஸ்லிம் சமூகங்களின் வரலாற்று மூலங்களை இனங்காணுதலும் அவற்றை விஞ்ஞான ரீதியிலான ஆய்வுக்குட்படுத்துதலும் அவசியமாகும். முஸ்லிம் சமூகத்தில் வரலாற்றுத் துறையில் நிபுணத்துவம் மிக்க புலமையாளர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களே உள்ளனர். மேலும் இத்துறையில் ஈடுபாடு காட்டிவரும் பலர் பெரிதும் சுயமுயற்சியாகவே இவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, முஸ்லிம் பிராந்தியங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் விஞ்ஞானபூர்வமாக செயற்படக்கூடிய தொல்பொருளியல், மானுடவியல், வரலாறு தொடர்பிான மேற்படிப்புகள் உள்ளடங்கலான பீடங்களை நிறுவுதலும் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களையும் அவற்றில் ஈடுபடுத்துவதும் அவசியப்படுகின்றது. அதே வேளை முஸ்லிம் சமூக வரலாற்றாய்வில் ஆர்வமுள்ள பிறசமூக ஆய்வாளர்களை ஊக்குவிக்க வேண்டிய கடப்பாடும் உள்ளது.

3. நெதர்லாந்து, போர்த்துக்கல்லிலுள்ள லிஸ்பன் நகர் போன்ற இடங்களிலுள்ள நூலகங்களில் அவர்களின் மொழியில் இலங்கை பற்றியும், இலங்கை முஸ்லிம்கள் பற்றியும் ஏராளமான தகவல்கள் இருப்பது நாம் கேள்விப் பட்டிருக்காத விடயங்களாகும் நமது பல்கலைக்கழகங்கள் இத்துறைசார்ந்த ஆய்வாளர்களை குறித்த தேசங்களுக்கு அனுப்பி அவர்களின் மொழியூடான தகவல்களை அறிந்து வர முயற்சிக்க வேண்டும், மேலும் ஆவணப் பிரதிகள் பரஸ்பரம் பரிமாரப்பட வேண்டும்.

4. கொள்கை மாறுபாடுள்ள சம்பவங்களாயினும், வழக்காறுகளாயினும் முன்னைய சமுதாயங்களின் வாழ்க்கை முறையைப் பதிவு செய்கின்ற போது உள்ளதை உள்ளபடி பதிதல் மிக அவசியமாகின்றது. பிரதேசவாதம், கொள்கை வாதங்கள் மூலம் திரிபுகள், அழித்தல், மறைத்தல், மிகைப்படுத்தல் ஏற்படாவண்ணம் ஆவணப்படுத்துவது அவசியமாகின்றது. அதே போன்று ஆய்வாளர் அல்லது தொகுப்பாளர் தமது சுயவிருப்புகளை திணித்தல் தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் ஒரே விடயம் தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் கிடைக்கப் பெறும் போது நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை பயன்படுத்தல் வேண்டும்.

5. மிகப் பிரதானமாக முஸ்லிம் சமூகத்தின் வெளியீடுகள் பெருமளவில் சமூகத்திற்குள்ளும் பொதுவாக பிரதேச மட்டத்திற்கு வெளியே நுகரப்படுவது குறைவாக உள்ளது.

6. தற்போது முஸ்லிம் ஆவணவாக்கத்துக்கான நடைமுறையிலுள்ள பொறிமுறைகள் பல குறுகிய வட்டத்திற்குள் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. மையப்படுத்தப்பட்ட நம்பகமான, இலாப நோக்கற்ற, பக்கச்சார்பற்ற நிறுவனமொன்று இவ்வரலாற்றுப் பணியை செய்ய வேண்டியது காலத்தின் அவசியமாக உள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் இருப்பினை ஆவணங்களுடாக உறுதிப்படுத்தவும், பிறசமூகங்களுடனான ஆரோக்கியமான கலந்துரையாடல்களுக்கு வழிவகுக்கவும் ஆவணங்களின் பரிமாற்றம் அவசியமாகின்றது. முஸ்லிம் சமூகத்தின் சமூகவியல், தொல்லியல், மொழியியல், வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுகளை இலகுபடுத்தவும் அறிவுமூலங்களை ஒன்று திரட்டவும் காலப் பரிமாணத்தில் முஸ்லிம் சமூகத்தின் அசைவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை இலக்கியங்களினூடாகவும் ஆவணங்களினூடாகவும் அறிந்து கொள்ளவும் முஸ்லிம் ஆவணகம் அவசியமாகின்றது. தற்கால மின்னணு யுகத்தில் ஆவணப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப ஆவணப்படுத்தல் நடைமுறைகள் இற்றைப்படுத்த வேண்டியுள்ளமையும் அவசியமாகும்.

**தற்காலம் வரையான முஸ்லிம் ஆவணவாக்கத்தில் ஏற்பட்டுள்ள அடைவுகள்**

1. இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பான சிலாசானசங்கள், நாணயங்கள் உள்ளிட்ட தொல்பொருட்கள் இலங்கை நூ தனசாலைகளில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

2. தேசிய சுவடிகள் கூடத்தில் முஸ்லிம்களின் ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

3. முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு தொடர்பில் தனியாட்களின் முயற்சியிலும் பல்கலைக்கழகங்களின் முயற்சியிலும் கலாசார அமைச்சின் அனுசரனையிலும் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. தனியாட்களின் சேகரங்களாக சிலர் ஆவணங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

5. தென்கிழக்குப் பல்கலைக்கழத்தில் அரும்பொருட்காட்சிசாலையும், அரிய ஆவணங்களின் சேகரிப்பும் பேணப்பட்டு வருகின்றது.

6. காத்தான்குடியில் முஸ்லிம்களின் பூர்வீக நூதனசாலை தொல்பொருட் திணைக்களத்தினால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

7. நூலகம் இணைய ஆவணவாக்கல் செயற்றிட்டத்தில் முஸ்லிம் ஆவணகம் பிரிவு முஸ்லிம்களின் ஆவணங்களை இலத்திரனியல் ஆவணங்களாக பேணி வருகின்றது.

**முஸ்லிம்களின் ஆவணவாக்கத்தில் அடையப்பட வேண்டிய எதிர்கால இலக்குகள்**

- இதுவரை ஆவணப்படுத்தப்படாத ஆயிரக்கணக்கான நூல்கள், மற்றும் பத்திரிகைகள். வெளியீடு இடைநின்ற பத்திரிகைள், தற்போது வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவை இலத்திரனியல் வடிவிலும் பௌதீக வடிவிலும் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிராந்தியங்களில் பாதுகாக்கப்பட வேண்டும்.

- வரலாற்றுக் காலம் முதல் முஸ்லிம்கள், ஆளுமைகள் தொடர்பான ஆவணங்கள், செவ்விகள், ஒளி மற்றும் ஒலிக்கோப்புகள் போன்றவை பிரதி செய்யப்பட்டு ஆவணக் காப்பகங்களில் சேமிக்கப்பட வேண்டும்.

- அழிவடைந்து வரும் நாட்டார் கவிகள், முஸ்லிம் கலைகள் போன்றவை ஆவணப்படத் தொகுப்புகள் வாயிலாக மிக நுண்மையான தரவுகளும் விடுபாத வண்ணம் தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

- முஸ்லிம் சமூகம் தொடர்பான புகைப்பட சேகரங்கள், வரைபடங்கள், கையெழுத்துப் பிரதிகள், சுவடிகள், முத்திரைகள், நாணயங்கள், ஒப்பந்தங்கள் போன்றவை சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

- வரலாற்று இடங்கள், பள்ளிவாசல்கள், நினைவுத் தலங்கள் போன்றவற்றின் வரலாறுகள் தகவல்கள் விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்பட்டு பிரசுரிக்கப்பட வேண்டும்.

- பிறநாட்டு சுவடிகூடங்களில் காணப்படும் தகவல்கள் பரிமாறப்பட வேண்டும்.

- யுத்த காலத்திலும், அதற்குப் பின்னரும் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட சவால்கள், அனர்த்த கால முன்னெடுப்புகள் சமூகம் அவற்றை எதிர்கொண்ட விதம் என்பன தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

- ஒவ்வொரு காலகட்டத்திலும் முஸ்லிம் சமூகத்திற்குள் ஏற்பட்ட சீரதிருத்தங்கள், பண்பாட்டுப் படிநிலை மாற்றங்கள் துறைவாரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

- தற்போதுள்ள சுவடிகூடங்களில் ஆவணங்களை ஒப்படைப்பதில் மக்கள் தயக்கம் காட்டிவருகின்றனர். அவர்களின் நியாயபூர்வமான சந்தேகங்களை நிவர்த்திக்கும் வகையிலான பொறிமுறையுடன் கூடியதும், வெளிப்படைத்தன்மையானதுமான ஆவணகூடங்கள் அவசியமாகின்றது.

இப்பணிகள் அனைத்தையும் நிறைவேற்ற சமூக அக்கறையுள்ள தன்னார்வலர்களின் உயரிய பங்களிப்பு அவசியமாகின்றது. முறைப்படுத்தப்பட்ட இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஆவணப்படுத்தலை நோக்கி முஸ்லிம் சமூகம் காலதாமதமின்றி செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இதன் மூலம் எதிர்கால சந்ததிகளின் படிப்பினைக்கும், அவர்கள் தங்களை முன்னோரின் அனுபவங்களிலிருந்து திறம்பட விருத்தி செய்து கொள்வதற்கும் மேலும் அவர்களின் இருப்பினை உறுதிப்படுத்தவும் பங்களிக்கும். இது மொத்த சமூகத்தின் மீதான கடமையும் கூட்டுப் பொறுப்புமாகும்.

**துணைநூல்கள்**


1. Abdul Azeez I.L.M, ‘A criticism of Mr Mr.Ramanadhen’s Enthology of Moors od Sri Lanka’. Colombo, (1889)
2. இத்ரீஸ் ஏ.பி.எம், “சோனக தேசம்”, (2011)
3. இன்கிலாப்–7, முஸ்லிம் மஜ்லிஸ் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் (2017)
4. சுக்ரி எம்.ஏ.எம், “இலங்கை முஸ்லிம்கள் – தொன்மைக்கான வரலாற்றுச்சான்றுகள்”, (2010)
5. பக்தவச்சல பாரதி, “வரலாற்று மானிடவியல்”, (2013)
6. முஹம்மது அலி அல் ஹாஸிமி, முன்மாதிரி முஸ்லிம், (2010)
7. யூஸுப் அல் கர்ளாவி., இறைதூதரும் கல்வியும் இரண்டாம் பதிப்பு, (2015)
8. வீரமந்திரி .சி.ஜி, இஸ்லாமிய சட்டவியல் ஒரு சர்வதேசப்பார்வை, (2009)
9. Moulana Abul Ala Maududi (Rah), Risala-E-Diniyath (Tamil), 11thEdition.(2002)



# கட்டமைக்கப்பட வேண்டிய கட்டாயம் தேவைப்படும் கருத்தரங்குகள்

**அர்ஷத் ஆஹாஸ் அ.ஜ.**
விலங்கு விஞ்ஞான இளமானிப் பட்டதாரி,
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.

பல கலைகளையும் கற்கும் இடம் பல்கலைக்கழகம் என்று வாய் வார்த்தையில் சொல்லும் பலர் இங்கு வந்து கற்றுக்கொண்டு செல்வதென்னவோ பாடப்பரப்புக்களை மாத்திரம் தான். பலருக்கு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும்போது மனமாற திருப்தியடைய முடிவதில்லை. காரணம் அவர்கள் செய்து பார்க்காத விட்டகுறை தொட்ட குறையான ஏதோவொன்று அவர்களின் மனதின் ஒரு மூலையில் சிறு கொழுக்கியைப் போட்டுத் தொங்கிக் கொண்டிருப்பதனாலாகும். வரும் விடுமுறைகளுக்கும் வராத விடுமுறைகளை வரவழைத்துக் கொண்டும் ஏன் வீடுகளிற்குப் போனோம் என்று பட்டமளிப்பு விழாவிலோ அல்லது அதற்கு முன்னைய பல்கலைக்கழகத்தின் கடைசி நாளிலோ சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் இருக்கத் தான் செய்கின்றனர். மஜ்லிஸ் சார்பான பணிகளும் இவ்வாறுதான். இல்லாதவர்களுக்கே அதன் அருமை புரியும் என்பர். அந்த வகையில் மஜ்லிஸின் அருமை புரிந்தவர்களில் நானும் ஒருவன்.

உண்மையில் மஜ்லிஸ்களின் நோக்கம் அவை கட்டமைக்கப்பட்டிருக்கும் விதம் என்பன பல்கலைக்கழகங்களுக்கும் அவை அமைந்துள்ள இடத்திற்கேற்ப வேறுபடுகின்றன. பல்கலைக்கழகம் எனும் மூடிய சூழற்தொகுதிக்குள் வரும் பல மாணவர்கள் அந்த மூடிய சூழற்தொகுதி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் காலூன்ற முனைவதில்லை. பல்கலைக்கழகத்தை விட்டு வெளியில்

உள்ள எந்தவொன்றும் அவர்களால் மாற்றத்திற்குட்படுவதில்லை. இன்னும் சிலரின் கால் படாத இடங்கள் மிகக் குறைவாக இருக்கும். அவர்கள் பல்கலைக்கழகம் தவிர்ந்த பிற சூழலிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தியிருப்பார்கள். பொதுவாகப் பல்கலைக்கழக மாணவன் எனும் தலைப்பின் கீழ் நாம் எதிர்பார்ப்பது இந்த இரண்டாம் நிலையில் உள்ளவர்களையே. காரணம் ஆளுமை மிக்க இந்த மாணவர்களினாலேயே சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் தமது பங்களிப்பை வழங்கக் கூடியதாய் இருக்கும். சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளுமே ஆளமை மிக்க மனிதர்களை உருவாக்குகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு நாம் எம்மை வலிந்து உட்படுத்திக்கொள்வதன் மூலமே எம்மை ஆளுமை மிக்க மனிதர்களாக உருவாக்கிக்கொள்ள முடியும். இதனால்தான் தற்போது கருத்தரங்குகள் மீது எம் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

பொதுவாக கருத்தரங்குகள் எம் மத்தியில் காலம் காலமாகப் புழக்கத்தில் உள்ள ஒன்று தான். இந்த கருத்தரங்குகளுக்கும் மஜ்லிஸ்களுக்கும் ஆளுமைக்கும் இடையே இழையோடும் மெல்லிய கோட்டை கூர்மைப்படுத்திக் காண்பிப்பதே இங்கு என் நோக்கமாகும். பொதுவாக மாணவர்கள் மத்தியில் மஜ்லிஸ் எனும் ஒரு அமைப்பின் பார்வை ஒன்றுபட்டதல்ல. மாணவர்களின் கல்விச்சூழல், வீட்டுச் சூழல் மற்றும் ஈமானியத் தன்மை என்பவை மஸ்லிஸ் எனும் ஒரு கட்டமைப்பைப் பார்க்கும் விதத்தில் ஒன்றுக்கொன்று வேறுபட வைக்கின்றது. இவ்வாறானப் பார்வைகளையும் மீறி பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுபடுவது மஜ்லிஸ்களால் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகளில் தான். இதில் தன்னார்வ நிகழ்வுகளில் முக்கியமான ஒன்றாய் விளங்குவது பாடசாலை மாணவர்களுக்காகப் பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்படும் கருத்தரங்குகளே நான் இங்கு கட்டமைக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைப்பதும் இவற்றைத்தான்.

இவ்வாறான பல கருத்தரங்குகளிற்கு நானும் எனது நண்பர்களும் வழங்கிய பங்களிப்புக்களும் அவை எம்முள் ஏற்படுத்திய ஆளுமை மாற்றங்களுமே நான் இக்கட்டுரையை எழுத மூல காரணங்களாகும். பொதுவாகப் பாடசாலைகளில் மஜ்லிஸ்களின் ஏற்பாடுகளில் கல்விக் கருத்தரங்குகள் நடைபெறுவதுண்டு. ஒவ்வொரு கருத்தரங்ககளிற்குப் பின்னரும் மாணவர்களிடம் ஒரு தாள் வழங்கப்பட்டு அவற்றில் அன்றைய கருத்தரங்குகள் தொடர்பான குறை நிறைகளை எழுதிக் கேட்பது வழக்கம். மாணவர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் அதன் குறை நிறைகளை எழுதி எம்மிடம் கையளிப்பார்கள். இவ்வாறான நேரங்களில் பெரும்பாலும் குறைகளைவிட நிறைகளே அதிகமாகக் காணப்படும். அவ்வாறான கருத்துக்களை பின்வரும் மூன்று வகைகளுக்குள் உட்படுத்தலாம்,

1. இன்றைய நிகழ்வு மிகவும் சிறப்பாக அமைந்தது, எங்களுக்கு இதுபோன்ற மேலும், பல நிகழ்வுகளை நடாத்துமாறு உங்கள் மஜ்லிஸிடம் கேட்டுக் கொள்கிறோம்.
2. இன்று கற்பித்த அனைத்தும் இலகுவாய் விளங்கக்கூடியதாய் இருந்தது. இது போன்ற கருத்தரங்குகளை ஆரம்பத்திலிருந்து நடாத்த முடியுமானால் மேலும் பயனுள்ளதாக இருக்கும்.
3. இந்தக் கருத்தரங்கு மிகவும் சிறப்பாக இருந்தது, எங்களுக்குப் புதிய விடயங்களையும் புதிய முறைகளையும் கற்கக்கூடியதாய் இருந்தது. ஏனைய பாடங்களிற்கும் இவ்வாறான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தால் மேலும் பயனுள்ளதாய் இருக்கும்.

எழுதப்படும் கருத்துக்கள் அனைத்துமே மேற்படி மூன்று கருத்துக்களையும் மையப்படுத்தியதாக அமைவதால் இவற்றையும் இவை தவிர்ந்த புதிதாக ஏதும் கூறப்பட்டிருப்பின் அவற்றையும் சேர்த்து ஒரு சிறு குழுக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அடுத்து நாம் செல்லவிருக்கும்

பாடசாலைகளில் சேர்க்க வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய விடயங்களைப் பட்டியலிட்டுக் கொள்வது எமது வழக்கம். இங்கு பொதுவாக மாணவர்கள் தமது கல்வியாண்டின் ஆரம்பத்திலிருந்தே இவ்வாறான கருத்தரங்குகளை எதிர்பார்ப்பது வழமை, இருந்தும் பல்கலைக்கழக மாணவர்களின் பாடப்பரப்பு மற்றும் தாம் கற்றுக்கொண்டிருக்கும் வருடம் (1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் வருடங்கள்) என்பன கொண்டுள்ள வேலைப்பழு காரணமாக இவ்வாறான கருத்தரங்குகள் ஆரம்ப நாட்களிலிருந்தே அவர்களால் மேற்கொள்ள முடிவதில்லை. இதையும் முயற்சித்துப் பார்த்து தோல்விகண்ட அனுபவங்களும் பல மஜ்லிஸ்களுக்கு உண்டு. ஒரு வேளை ஒரு வருடம் இவ்வாறானதொரு தேவையுள்ள பாடசாலையைத் தெரிவுசெய்து ஓரளவுக்கு அந்த மாணவர்களின் கல்வியில் தங்கள் பங்களிப்பைச் செலுத்தினாற் கூட அடுத்த வருடமும் அதே போன்றதொரு ஆரம்பநிலை முதலான உதவியை வழங்கமுடியாமல் போவது இயல்பு. இதற்கு நான் மேலே குறிப்பிட்ட வேலைப்பழு மற்றும் கற்றல் செயற்பாடுகளைக் காரணங்களாகக் கூறலாம்.

குறித்த பிராந்தியப் பாடசாலைகளுக்கான கருத்தரங்கின் தேவைப்பாடும் இத்தன்னார்வச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக சில பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் தங்கள் மெச்சத்தக்க பெறுபேறுகளின் காரணமாகவும் தங்கள் பாடசாலையில் காணப்படும் போதிய ஆளணியின் காரணமாகவும் இவ்வாறான கருத்தரங்குகளை எதிர்பார்ப்பதில்லை. அதன் மறுதலையாக மேலும் சில பல்கலைக்கழகங்களின் அமைவிடம் சார்ந்த மாவட்டம் மற்றும் பிரதேசங்களில் அதிகமாக இவ்வாறான கருத்தரங்குகள் அல்லது தொடர் வகுப்புக்களின் தேவை இருக்கத்தான் செய்கின்றன.

நாங்கள் ஒரு கணிதக் கருத்தரங்கிற்காக ஒரு பாடசாலைக்குச் சென்றிருந்த போது, அது ஒரு சிறிய பாடசாலை. அங்கு குறித்த ஒரு பாடம் கற்பிப்பதற்காக வந்திருந்த அந்த ஆசிரியரே அதிகமான பாடங்களைக் கற்பிக்கக்கூடிய சூழ்நிலையைக் காண முடிந்தது. அந்தப் பாடசாலைக்கு ஆசிரியர் பற்றாக்குறையாக இருந்ததையும் அதனைத் தன்னால் இயன்றவரை பூர்த்தி செய்ய முனைந்த அந்த ஆசிரியரையும் கண்டு வியப்படையாமல் இருக்க முடியவில்லை. நாம் அணுகிய பெரும்பாலான பாடசாலைகள் இவ்வாறானதொரு தேவையைத் தம்மிடையே வைத்துக்கொண்டு தான் இருந்தன. மறுபக்கம் முழுவதுமாகக் கற்றலில் ஆர்வம் காட்டும் மாணவர்களையும் அதற்கு போதிய வளமின்றியிருக்கும் அவர்களின் நிலையையும் கண்டோம். இவ்வாறான பாடசாலைகளுக்கு அரசு தன் கடமையை ஏதோவொரு வகையில் சரிவரச் செய்துவிடும். இருந்தாலும் ஒரு பல்கலைக்கழகத்தில் அங்கத்துவம் பெற்றுக் கல்வி கற்கும் எமது தன்னார்வத் தொண்டுகள் வெறுமனே ஏழைகளுக்கானப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்தல், மையவாடிகளைச் சுத்தம் செய்தல் மற்றும் இப்தார் நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றோடு முடங்கிவிடாது இவ்வாறான கல்விசார் நடவடிக்கைகளிலும் போதிய பங்களிப்பைச் செய்தல் அவசியமாகும்.

தலைப்பிற் குறிப்பிட்டது போன்று இது கட்டாயம் தேவைப்படும் பணியாக இருந்தாலும் கூட இதனைக் கட்டமைப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் புரியாதவனாய் இங்கு வெறுமனே கருத்துக்களை முன்வைக்கவில்லை. குறிப்பாக இவ்வாறான கருத்தரங்குகளை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருதல் என்பது முடியாத காரியம். எனவே இங்கு கட்டமைத்தல் என்பது தத்தமது பல்கலைக்கழகம் சார்பாகவே அமைதல் வேண்டும். கோவிட் மற்றும் பிற காரணங்களினால் பல்கலைக்கழகங்கள் இன்னும் வழமையான நிலைக்குத் திரும்பாமையினால் இவ்வாறான கருத்தரங்குகள் கடந்த இரு வருடங்களாக மாணவர்களுக்கு வழங்கப்படாமையினை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வாறானதொரு நிலையைக் கடந்து மீண்டும் ஒரு

சுமுகமான வாழ்வினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாம் பல்கலைக்கழக ஆரம்பத்துடன் இந்தக் கருத்தரங்குகளுக்கு மீள உயிர்ப்பூட்டுவது அவசியமாகும். இங்குதான் இந்தக் கட்டமைத்தல் எனும் சொல்லின் ஆழம் மற்றும் தன்மையினைக் கவனிக்க வேண்டியுள்ளது. நான் முதலில் குறிப்பிட்டாற் போல அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இணைந்து இதனை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருதலிலுள்ள நடைமுறைச் சிக்கலாக இருப்பது பல்கலைக்கழகங்களுக்கிடையில் வேறுபடும் தவணைக் காலங்கள் மற்றும் கற்றற் செயற்பாடுகளேயாகும். குறிப்பாக ஒரு பல்கலைக்கழகத்தில் மும்முரமாகக் கற்றல் செயற்பாடுகள் நடைபெறும் நேரத்தில் மற்றைய பல்கலைக்கழகத்தில் விடுமுறையும் இன்னுமோர் பல்கலைக்கழகத்தில் பரீட்சையும் நடைபெறலாம். எனவே தான் மேற்படி கட்டமைப்புக்கள் அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் சார்பானதாக அமைதல் அவசியம்.

அடுத்து முன்னர் குறிப்பிட்டது போல இவ்வாறான கருத்தரங்குகள் தேவையற்ற பிரதேசங்களில் இருக்கும் மஜ்லிஸ்களும் ஏனைய தேவையுள்ள பிரதேசங்களிற்குச் சென்று தமது சேவையை வழங்குதல் மிகவும் பொருத்தமானதாக அமையும். இங்கு பிரதேசங்களைப் பிடித்து வைத்திருத்தல் அல்லது இந்தப்பிரதேசங்களில் நாங்கள் மட்டுமே இவ்வாறான சேவைகளில் ஈடுபடவேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்தல் போன்றன தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். அடுத்து முடியுமான சந்தர்ப்பங்களில் இரு பல்கலைக்கழகங்களது மாணவர்கள் இணைந்து இவ்வாறான பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்குகளை மேற்கொள்வது மேலும் பயனுடையதாய் அமையும். அது போன்று மேலே பொதுமைப்படுத்திய கருத்துக்களில் மூன்றாம் கருத்திலுள்ள ஒரு முக்கியமான அம்சம் தான் ஏனைய பாடங்களிற்கும் இவ்வாறான கருத்தரங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். அதாவது பாடசாலை மாணவர்களுக்கான இவ்வாறான கருத்தரங்குகள் பெரும்பாலும் தரம் 10 மற்றும் 11ஐச் சேர்ந்த மாணவர்களுக்கே நடாத்தப்படுவது வழமை. அதுவும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை மையப்படுத்தியதாகவே அமைகின்றன.

இங்கு நான் மேலும் ஒரு சம்பவத்தை நினைவுகூர வேண்டிய தேவை உள்ளது. ஒரு முறை ஒரு குறித்த பாடசாலைக்குச் சென்று வந்த என் உற்ற நண்பனின் கவலைக்குக் காரணமாயிருந்த சில மாணவர்கள் பற்றிய நினைவே அது. அந்த மாணவர்கள் தரம் 11இல் கல்வி கற்றும் கூட அவர்களுக்கு கூட்டல் மற்றும் கழித்தலில் பல பிரச்சினைகள் இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் அந்தக் கருத்தரங்கிற்காய் அவர்கள் ஏற்கனவே தயார் நிலையில் வைத்திருந்தவற்றைக் கற்பிக்காமல் மிகவும் அடிப்படையான கணிதச் செய்கைகளையும் அவை சார்ந்த பிரசினங்களையுமே கற்பிக்க நேர்ந்தது. இவ்வாறான நிலைமைகள் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு சீர் செய்யப்படுவது எந்தளவுக்கு அவசியம் என்பது மேற்படி சந்தர்ப்பத்திலவிருந்து தெளிவாகியிருக்கும் என நினைக்கின்றேன். எனவேதான் இவ்வாறான கருத்தரங்குகள் வெறும் சாதாரண தர பரீட்சையை மையப்படுத்தி இறுதி நேரத்தில் செய்யப்படுபவையாக இல்லாமல் மாணவர்களுக்கு தொய்வு ஏற்படும் ஆரம்ப நிலைகளிலேயே கண்டறிந்து அவற்றை சரிசெய்ய முடியுமாயிருந்தால் அவை எமது சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றங்களை நான் விவரிக்க வேண்டியதில்லை. எனவே இங்கு சாதரண தரம் எனும் தலைப்பிற்குள் மட்டும் மஜ்லிஸ்களின் தன்னார்வக் கருத்தரங்குகள் அமைவதை தவிர்த்து அதன் எல்லைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அடுத்து கணிதப் பாடத்திற்காக மட்டுமே அதிகமான கருத்தரங்குகள் நடைபெறுவதும் மாற்றப்படல் வேண்டும். பொதுவாக மஜ்லிஸ் கருத்தரங்குகள் என்றாலே அவை மாணவர்களுக்கான கணிதப் பாடங்களுக்கு மட்டுமே உரியவையாய் வலம் வருவது வெள்ளிடை

மலை. இது பெரும்பாலும் நடைமுறைச் சாத்தியங்களைக் கருத்திற் கொண்டும் கணித பாடத்தின் தேவை மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டும் அமைந்து விட்டது. எனினும் ஏனைய பாடங்களுக்கான (குறிப்பாக வரலாறு போன்ற பாடங்களைக் குறிப்பிடலாம்) கருத்தரங்குகள் அல்லது தொடர் வகுப்புக்கள் ஏற்படுத்தப்படுவதன் மூலம் மாணவர்கள் மத்தியில் பல வருடகாலமாக இருந்து வந்துள்ள தேவையையும் எம்மால் பூர்த்தி செய்ய முடியுமாய் இருக்கும்.

நிலமைகள் வழமை போன்று திரும்பிய பிறகு எதிர்வரும் காலங்களில் மேற்கூறப்பட்டவைகள் கருத்திற் கொள்ளப்பட்டு கரத்தரங்குகளோ தொடர்வகுப்புக்களோ இடம்பெறுமேயானால் அவை பாடசாலை மாணவர்களின் வளர்ச்சியிலும் ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதிலும் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. இதற்காக பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்ற நாம் ஒரு பாடசாலையைக் குத்தகைக்கு எடுத்து நடாத்த வேண்டுமா? என உங்கள் உள்ளம் இப்போது கேள்வியெழுப்பியிருக்கக்கூடும். அதிலும் ஞாயமில்லாமலில்லை. அதனால் தான் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளுக்குப் பங்கம் விளைவிக்காத வகையில் இரண்டு மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து இவ்வாறான தேவையுள்ளப் பாடசாலைகளை இனங்கண்டு மேற்படி கருத்தரங்குகளை மேற்கொள்வது சிறந்ததாய் அமையும். இதனால் இதற்கென்றே முற்றுமுழுதாக நேரம் ஒதுக்கிச் செயல்பட வேண்டும் என்கிற தேவை இருக்காது. மேலும் அவ்வாறு முற்றுமுழுதாக செயல்பட வேண்டும் எனும் கருத்தை யார் முன்வைத்தாலும் அது தவறானதும் கூட.

இப்போது எனது மற்றுமொரு நண்பனின் கருத்தையும் இங்கு பகிர்ந்துகொள்ள எண்ணுகிறேன். அதாவது, ஒரு மஜ்லிஸின் கல்விக்குப் பொறுப்பான கிளையின் செயற்பாடானது வெளியே சமூகத்திலுள்ள மாணவர்களின் கல்வி நிலையில் அக்கறை கொள்வது மாத்திரமன்றி அந்தப் பல்கலைக்கழக மாணவர்களினது பல்கலைக்கழகத்தினுள் உள்ள கல்வி சார் நடவடிக்கைகளிலும் அக்கறை கொள்ள வேண்டும் என்பதே. உண்மையில் மஜ்லிஸானது பல்கலைக்கழகம் முடித்து அதன் உயர் சித்தியுடன் மாணவர்களை வெளியேற வைப்பதற்கான பிரயத்தனங்களை எடுத்தலே இங்கு கூறப்படுகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக இந்தக் கருத்தரங்குகள் செய்வது எம்மில் எவ்வாறான மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தும் எனும் கேள்வி எழுப்புபவர்களுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்த நினைக்கின்றேன்.

இவ்வாறான கருத்தரங்குகள் செய்வதில் பங்கேற்றதன் விளைவு எனக்குக் கிடைத்த அதிகமான ஆசிரியர்களின் தொடர்புகள் தான். அவ்வாறு தொடர்புற்ற ஒரு ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க, சாதாரண தரக் கணிதப் பாடத்தில் சித்தியெய்தத் தவறி மீண்டும் ஒருமுறை முயற்சித்துப் பார்க்கவிருந்த சில மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்போது பரீட்சைக்கு வெறும் மூன்று மாதங்களே எஞ்சியிருந்தது. ஒரு சாதாரண அல்லது கடைநிலையில் இருக்கும் மாணவனுக்கு வெறும் மூன்றே மாதங்களில் கணிதத்தில் (C) திறமைச்சித்தி எடுக்க வைக்கும் சூட்சுமத்தை அப்போது தான் நான் கண்டு கொண்டேன். இது இன்றுவரை கணிதப் பாடத்தை மிகவும் நுணுக்கமாகக் கற்பிக்கவும் அதில் மாணவர்கள் எந்தெந்த இடங்களில் சறுக்குகிறார்கள் என்பதை அடையாளப்படுத்தவும் முடியுமாயிருந்தது. இது போன்று பல்வேறு சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம். எனவே இங்கு ஒரு பல்கலைக்கழக மாணவனாக உங்களுக்குக் கிடைப்பது பல்வேறு மனிதத் தொடர்புகளும் நீங்கள் எதிர்நோக்கும் பாடசாலை மாணவர்களின் தன்மைக்கேற்ப உங்களுக்குள் விருத்தி செய்யப்படும் ஆளுமைகளுமேயாகும்.

தர்மம் செய்வது எவ்வாறு செல்வத்தை இரட்டிப்படையச் செய்யுமோ அவ்வாறே கற்பிப்பது உங்கள் அறிவையும் ஆளுமையையும் விருத்தியடையச் செய்யும். எனவே இவ்வாறான கருத்தரங்குகளை உங்கள் ஆளுமை விருத்திக்கான வாய்ப்பாகப் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். இதன் போது மேடைக் கூச்சமுள்ளவர்கள் அறிமுக நிகழ்வுகளை நடாத்துவதும், ஒரு நிகழ்வை ஒழுங்கு செய்ய முடியாதவர் நிகழ்வு ஒழுங்கு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதும் மேலும் நேரமுகாமைத்துவமற்ற ஒருவர் நேரம் குறிக்கப்பட்ட பொறுப்புக்களை வலிந்து ஏற்றுக்கொள்வதும் உங்களுக்குள் முடியாமல் அல்லது குறைபாட்டுடன் இருந்த திறமைகளையும் இயலாமைகளையும் செப்பனிடவும் களைந்தெறியவும் உதவி புரியும். இவ்வாறாக நான் என்னை செப்பனிட்டது போன்று என்னுடன் இருந்த நண்பர்கள் அவர்களது தேவைப்பாடுகளிற்கேற்ப அவர்களை செப்பனிட்டுக் கொண்டது போன்று தற்போது பல்கலைக்கழகங்களில் இருக்கும் மாணவர்களும் இனிமேல் வரப்போகின்ற மாணவர்களும் உங்களது ஆளுமைகளை செப்பனிட்டுக் கொள்ள ஒரு பாரிய வாய்ப்பாக இக்கருத்தரங்குகள் அமையும் என்பதை அனுபவ ரீதியில் நான் முழுமையாக நம்புகின்றேன்.


எனவே, இந்தக் கருத்தரங்குகள் மேற்கூறப்பட்ட அம்சங்களை மனதிற் கொண்டு கட்டமைக்கப்படுவதோடு கடந்த இரண்டு வருட இடைவெளியைப் பூர்த்தி செய்யும் வகையில் மீண்டும் நடைமுறைக்கு வருதல் வேண்டும். மேலும் இதன் மூலம் பாடசாலை மாணவர்களின் கற்றல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆளுமை விருத்தி என்பன உரிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறாகக் கட்டாயமாகத் தேவைப்படும் கருத்தரங்குகளைத் திறம்படக் கட்டமைத்து அதன் மூலம் சமூகம் வேண்டி நிற்கும் ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்ய ஏக இறைவன் அருள் புரிவானாக.

**மனிதர்களும் அஞ்சல் பெட்டியில்**
**உள்ள கடிதங்களும் ஒன்றுதான்.**

**ஒருவரோடு ஒருவர் சேர்ந்து கூடி**
**குலாவிக்கொண்டு இருப்பார்கள்.**

**ஆனால் ஒருவருக்குள் என்ன**
**இருக்கிறது என்று மற்றவர் அறியமாட்டார்!**

– முஹம்மது மாஊத்து







**4th Batch Technology**
Welcome - 2021

**7th Batch Engineering Batch**
Welcome - 2021





**Agriculture Students**
Farewell - 2019

**4th Batch Engineering Batch**
Farewell - 2021







# ANNUAL GATHERING 2021





**Eng. Nimas**
Farewell - 2019

**3rd Batch Engineering Batch**
Farewell - 2019







**2nd Batch Engineering Batch**
Farewell - 2021

**1st Batch Technology**
Farewell - 2021







**1st Batch Technology**
Farewell - 2021

**1st Batch Technology**
Farewell - 2021



# சமூகம் வேண்டி நிற்கும் பல்கலைக்கழக மாணவர்கள்

**சஹ்ரானா எம்.ஏ.எப்.**
மூன்றாம் வருடம்,
முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தகப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியானது அந்நாட்டு மக்களின் பூரண ஒத்துழைப்பினில் முழுமையாக தங்கியுள்ளது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பார்கள். அதற்கமைய தனித்து ஓர் இலக்கினை அடைவதைக் காட்டிலும் கூட்டாக ஒன்றிணைந்து செயற்படுவதால் இலக்கினை இலகுவாக அடைந்து கொள்ளலாம். அபிவிருத்தியை நோக்கி பயணித்து கொண்டிருந்த நமது நாட்டின் நிலைமையினை சற்று உற்று நோக்குவோமேயானால், இன்று உலகம் முழுவதையும் உலுப்பிக் கொண்டிருக்கும் சர்வாதிகாரியான கொரோனாவிற்கு (கோவிட் – 19) மாங்காயப்பிஞ்சு போன்ற நம் இலங்கை நாடு மட்டும் என்ன எட்டாக் கனியா? கொரோனாவும் இலங்கையை முயற்சி செய்து பறித்து விட்டது. பறித்தது என்னவோ உண்மை என்றாலும் பாதிக்கப்பட்ட இலங்கையின் தற்போதைய நிலை தான் என்ன? அபிவிருத்தியை நோக்கிப் பயணம் செய்த இலங்கை அடங்கிப் போய்விட்டதே. இச்சவாலுக்கு மத்தியில் இலங்கை சிறிது சிறிதாக எழுந்து வருகின்ற போதும் பாடசாலைக் கல்வியில் இருந்து பல்கலைகழக கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், ஏற்றுமதி இறக்குமதி வணிகம், பொழுதுபோக்கு, சுற்றுலாத்துறை என பல துறைகள் பாதிக்கப்பட்டே இருக்கின்றன.

இந்நிலையிலிருந்து நாட்டினை மீட்டு அபிவிருத்தி நோக்கிப் பயணம் செய்வதற்கு நாடானது பல்கலைகழக மாணவர்களின் பங்களிப்பினைப் பெரிதும் எதிர்பார்த்து நிற்கின்றது. ஏனெனில், பாடசாலைக் கல்வியினை முழுமையாகப் பெற்று பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்கள்

தமது பட்டப்படிப்பினை முடித்து வெளியேறுகையில் சிறந்த ஆளுமை மிக்க, தன்னார்வ செயற்பாடுகளைக் கொண்ட, நவீன, தொழில்நுட்ப, அறிவியல் நுட்பங்களைப் பெற்ற, சிறந்த தலைமைத்துவப் பாங்கினைக் கொண்ட முன்மாதிரியான மாணவர்களாக வெளியேறுகின்றார்கள். இவ்வாறான திறமைமிக்க மாணவர்களைக் கொண்டு முன்னெடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் நாட்டின் அபிவிருத்திக்கு வழிகோலும் எனக் கூறுவதில் எவ்வித தயக்கமும் இல்லை. ஆதலால் சமூகமானது தன்னார்வமிக்க இளைஞர் சமுதாயத்தை பெரிதும் வேண்டி நிற்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் உயர்தரக் கல்வியில் சித்தியெய்திய மாணவர்களில் 100,000 மாணவர்களே பல்கலைகழகத்திற்குத் தெரிவாகிறார்கள். இவ்வாறு தெரிவாகும் மாணவர்கள் தமது உயர் கல்வி மூலமாகப் பல துறைகளில் பயின்று தேர்ச்சி பெற்று சிறந்த ஆளுமைகளைக் கொண்டு சமூகத்திற்குள் நுழைகிறார்கள். இவ்வாறான சிறந்த ஆளுமைகளைக் கொண்டு மிளிரும் இளைஞர் சமுதாயத்தையே சமூகமும் வேண்டி நிற்கின்றது. பல்கலைக்கழகக் கல்வி மூலமாக நமது எதிர்காலத்தைச் சிறந்த முறையில் வழி நடாத்த இருக்கும் இவ்வாறான ஆளுமைமிக்க மாணவர்கள் தமது கல்வியை முழுமையாக நிறைவு செய்யும் வரையிலும் அரசு அவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குகின்றது. இவர்கள் கற்று வெளியேறும் வரையிலும் அரசு முழுமையாக இலவசக்கல்வியினை இவர்களுக்கு வழங்கி வருகின்றது. பல்கலைக்கழகக் கல்வியின் மூலமாக உள்நாட்டு உயர்கல்வியையும் பல்கலைக்கழகக் கல்வி முறைமையினையும் உயர்த்துதல் என்பவற்றுடன் இதனூடாக அனைத்துலக கல்வித் தரத்திற்கு ஏற்ப மாணவர்களை உருவாக்குவதே அரசின் மாபெரும் நோக்கமாகும்.

இவ்வாறு பல துறைகளில் ஆளுமை பெற்ற மாணவர்கள் தமது பங்களிப்பின் மூலமாக நாட்டின் அபிவிருத்திக்கு மாபெரும் பங்களிப்பினை வழங்குவதனையே சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இதுவே எதிர்கால இளைஞர் சமுதாயத்தின் தலையாய கடமையும் கூட. இதன் மூலமாக சமூகமும் முழு நாடும் நன்மையைப் பெற முடியும்.

தற்போது பல்வேறுபட்ட கழகங்கள், குழுக்கள் மூலமாக இச்செயற்பாடானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் என்ற வகையில் எம்மால் சமூகத்திற்கு வழங்கக் கூடிய பங்களிப்புக்களாக சிலவற்றை இங்கு குறிப்பிட முடியும். தற்போது நாட்டில் நிலவுகின்ற நெருக்கடியான இச்சூழ்நிலையானது கல்வி இணைய மயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்தியுள்ளது. இந்நிலையில் உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்குக் கடந்தகால பரீட்சை வினாக்களை மையப்படுத்திய நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி சூழலைப் பாதுகாக்கும் வகையில் மரநடுகை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், பொலித்தீன் பாவனையை தடுக்கும் வகையில் சூழலுக்கு ஏற்ற மாசற்ற பொருட்களை உபயோகிக்கும் அவசியத்தை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல், கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் கலாசார நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், பல்கலைக்கழகக் கல்வியின் அவசியத்தையும் தெளிவினையும் மாணவர்களுக்கு வழங்க சிறந்த வழிகாட்டல்கள், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், மது ஒழிப்பின் அவசியத்தையும் விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தல், சுயதொழில் வேலைவாய்ப்புகளின் அவசியத்தையும் வழிகாட்டல்களையும் மாணவர்களுக்கு வழங்குதல், நவீன கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளித்தல், வறுமையின் காரணமாக கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்குக் கல்வியைத் தொடர்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூகத்திற்கு எதிராகவும் பெண்களுக்கு எதிராகவும் ஏற்படும் சமூக சீரழிவுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல் மற்றும் வளமுள்ள இளைஞர் சமுதாயத்தைக்

கட்டியெழுப்ப அயராது உழைத்தல். இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தமது பங்களிப்பினை வழங்குவது ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனின் மீதும் தலையாய கடமையாகும்.

இதற்காக வேண்டி பல்வேறு அமைப்புகள், தன்னார்வமுள்ள தொண்டர் குழுக்கள் உருவாக்கப்பட்டு தமது பங்களிப்புகளைச் செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் அமைப்பானது வெற்றிகரமான பல செயற்றிட்டங்களை ஆரம்பித்தும் செயற்படுத்தியும் வருகின்றது. அவர்களது முதற்கட்டமாக எதிர்கால உணவுப் பற்றாக்குறை, பொருளாதார ரீதியிலான சவால்கள் ஆகியவற்றை வினைத்திறனாக முகம்கொடுக்கும் நோக்குடன் ஆயிரம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் திட்டத்திற்கான வழிகாட்டல்களைச் செயற்படுத்தி வருகிறது. இவ்வமைப்பானது தன்னார்வ செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் பல்கலைக்கழக மாணவர்களை ஒன்றிணைத்து தன்னார்வ தொண்டர் குழு ஒன்றினை உருவாக்கியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களது திறமைகளை வெளிக் கொண்டுவரும் நோக்கில் சமூகத்திற்கு பயனுடைய தலைப்புகளிலான கட்டுரைகளை வழங்கி கட்டுரை செயற்றிட்டம் ஒன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்குத் தன்னார்வ செயற்பாடுகளில் ஆர்வமுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் பலர் தமது பங்களிப்பினைச் செலுத்தி வருகின்றனர். இதனையே சமூகமும் வேண்டி நிற்கின்றது. பல்கலைக்கழக மாணவர்களால் இவ்வாறு மேற்கொள்ளும் பங்களிப்புகள் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு முன்மாதிரியாகவே திகழும் இவ்வாறான சிறந்த ஆளுமைமிக்க மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வி மூலமாக உருவாக்கப்படுகிறார்கள்.

இவ்வாறான தன்னார்வ செயற்பாடுகளை இளைஞர்கள் மத்தியில் ஊக்கப்படுத்துவதன் மூலம் சமூகத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஏனெனில், நாட்டின் பாரிய வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கும் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகின்ற இளைஞர் யுவதிகள் பல்கலைக் கல்வி மூலமாக உருவாக்கப்படுவதால் பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வ செயற்பாடுகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் வருங்கால இளைஞர் சமூகம் சீரழியாது அவர்களைப் பாதுகாக்க முடியும்.


ஆகவே, இப்படியான பாரிய பொறுப்பினைச் சுமந்தவர்கள் தமது பொறுப்பினை செம்மையாக நிறைவேற்றுவதற்கு தமது ஆளுமைகளை மேலும் திறம்பட வளர்த்துக் கொள்ள கூடிய வழிமுறைகளான சுயகற்றலில் ஈடுபடுதல், மும்மொழிகளிலும் தமது திறனை வளர்த்துக் கொள்ளுதல், இறை வழிகளில் தமது நேரத்தை செலவழித்தல், தான் தெரிவு செய்யும் துறையில் ஆழமான அறிவினைக் கற்றுக் கொள்ளல். சமூக நல்லிணக்க விடயங்களில் அதிக அக்கறை காட்டல் மற்றும் நல்ல நூல்களை வாசிப்பதிலும் அதிலிருந்து நல்ல விடயங்களை கற்பதிலும் ஆர்வம் காட்டுதல் என்பவற்றை குறிப்பிடலாம். அத்துடன் ஒரு மனிதன் தனது ஆளுமையை வளர்த்துக் கொள்ள மேம்படுத்த இந்த மூன்று கூறுகளும் மிக முக்கியமானவையாகும். முக்கிய மூன்று கூறுகளாக தன்முனைப்பு, சமூகதிறன் மற்றும் சுயபிம்பம் ஆகியவற்றினை குறிப்பிடமுடியும். தன்முனைப்பு என்பது ஒரு குறிப்பிட்ட இக்கட்டான சூழ்நிலையிலோ அல்லது சவால்கள் நிறைந்த கட்டத்திலோ வெற்றி பெறுகின்ற ஒருவரது திறமையின் மீது அவர் வைக்கும் நம்பிக்கைதான் தன்முனைப்பு ஆகும். குறிக்கோளை அடைய, சவால்களை எதிர்கொள்ள, இலக்கை சாதிக்க ஒருவர் எப்படிப்பட்ட அணுகுமுறையை கையாளுகின்றார் என்பதில் தான் ஒருவரது தன்முனைப்புத் தன்மை மிகப் பெரும் பங்காற்றுகிறது. இரண்டாவது சமூகத்திறன் என்பது, பிறருடன் கலந்துறவாடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும், பிறருடன் தகவல் பரிமாற்றத்தை

ஏற்படுத்திக் கொள்வதும் ஆகும். சமூக விதிகளும் உறவுகளும் முறையான வழியிலும், முறைசாரா அமைப்பிலும் உருவாகக்கூடியவை, தகவல்களை பரிமாற்றம் செய்யக் கூடியவை மற்றும் மாற்றக்கூடியவை. இதனடிப்படையில் சமூகத்தில் உள்ள பிற மனிதர்களுடன் மோதல்களை ஏற்படுத்தாமலும் நல்லுறவை சீர்குலைக்காமலும் தகவல் பரிமாற்றம் செய்தல், அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல், அவர்களுடன் கலந்துரையாடல் என்பன ஆகியவற்றுக்கான திறமையைக் குறிக்கும். மூன்றாவது சுயபிம்பம் என்பது நம்மை நாம் எப்படி பார்க்கிறோம் என்பதை குறிக்கும். இது சாதாரணமாக சுய கருத்து என அழைக்கப்படுகிறது. தன் மதிப்பையும் தன்னம்பிக்கையையும் இது பாதிப்பதால் இது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. பல்கலைக்கழக வாழ்க்கையில் ஒரு மாணவன் பல சோதனைகளையும் சவால்களையும் எதிர் கொள்கின்றான். தனது நண்பர்கள் மூலமாக, குடும்பப் பின்னணி மூலமாக, பல்கலைக்கழக சூழலின் மூலமாக, சமூகத்தின் மூலமாக எனப் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது. ஆகவே ஒரு மாணவன் தனது ஆளுமைகளை இவ்வாறான பல்வேறுபட்ட முறையில் வளர்த்துக் கொள்வதன் மூலமாக இவ்வாறான பிரச்சினைகளையும் சவால்களையும் வெற்றிகரமாக முறியடித்து விட முடியும். தனது எதிர்கால வாழ்க்கைக்காக சமூகத்திற்குள் நுழையும் ஒரு மாணவன் சமூகத்திற்குள் அவனால் எதிர்நோக்கப்படும் எவ்வாறான பிரச்சினைகளையும் தனது ஆளுமைகளை திறம்பட வளர்த்துக் கொள்வதன் ஊடாக அவற்றினை இலகுவில் சமாளிக்க முடியும்.

ஆகவே, சமூகத்தினால் வேண்டப்படுகின்ற பாரிய பொறுப்பினைச் சுமந்த பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆளுமைகளையும் திறமைகளையும் மேம்படுத்தி சமூகத்தின் நலனிலும் நாட்டின் அபிவிருத்தியிலும் தமது பாரிய பங்களிப்பினை வழங்குவதே மிகப்பெரும் கடமையாகும்.

*"The best way to find yourself is to lose yourself in the service of others."*

– Mahatma Gandhi



# சமூக மாற்றத்தில் உன் வகிபாகம் எங்ஙனம்?

**அருஷா கே.எம்.எப்.**
முதலாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அளவற்ற அருளாளன்,
நிகரற்ற அன்புடையோன்,
பகுத்தறிவோடு உன்னை நிமிர்ந்து நிற்கச்
செய்ததன் நோக்கமறிவாயா?

உம்மி நபிகள் நாயகம்,
நடமாடும் திருமறையாகவே வாழ்ந்து
காட்டியதன்
வல்லமை கண்டாயா?

பணமும் பொருளும் பைநிறைய இருப்பதில்
பொருளில்லை!
பட்டமும் பதவியும் பெயர்பின் சேருதல்
மதியில்லை!
வெயிலிலும் மழையிலும்,
ஒளியிலும் இருளிலும்,
அலையிலும் புயலிலும்,
செல்வத்திலும் வறுமையிலும்,
இளமையிலும் முதுமையிலும்,
அறிவிலும் அறியாமையிலும்,
இன்பத்திலும் துன்பத்திலும்
சிக்கித் தவிக்கும் ஆன்மாக்களை கரைசே-
சர்க்கும் கடமையுண்டு!
மதிகெட்டு மறந்திடாதே!!!!
மரணக்கயிறு பிடரியோடு ஒட்டிக் கிடக்கிறது!!
தனக்கென வாழ்ந்தது போதும்,
இறைவனை முன்னிறுத்தி பிறர் குறை நீக்க
உறுதி பேணு!!!!
உள்ளமும் உடலும் ஒருங்கே சேர்த்து
உதவிகள் செய்!
மார்க்கப்பற்று மாறா வண்ணம
நாவாலும் நல்லதை நவிலு!
பாலைநில சுடுமணலில் உயிரும் கூட
துச்சமென,
வல்ல நாயன் வாக்கில் நின்ற,
வீரம் செறிந்த மாந்தர்களின் மைந்தர்கள்
நாம்!!
நாடகமாம் இம்மேடையிலே,
கடந்து செல்லும் வழிப்போக்கர் நாம்!!
பொய்யான உலகமிது,
மெய்யான மறுமைக்காக சாவி தேடும்
பயணமிது!!
நவீனம் பாடி,
ஜாஹிலிய்யத் நாடும்,
சமூகத்தை தூக்கி நிறுத்த,
பட்டம் பெற்ற உன் ஞானம் யாது செய்யும்?
இன்ஷாஅல்லாஹ் விழித்திடு!!!
முகமன் கூறி, இறைதிருப்தி நாடி,
இனியவை பலவும் மண்ணில் தெளித்திடு!!!!!



# இஸ்லாமிய நோக்கு நிலையில் தொண்டரியம்

**முஹம்மது பெளஸ்தீன் பமீஸ்**
B.A.(Hons) Special in Sociology,
விடுகை மாணவன் (2013/14).

இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டமானது நீண்டகால இலக்கினைக் கொண்டதுடன், தனிமனிதன், குழுக்கள், சமூகம் மற்றும் உலகளாவியம் எனப் பல்வேறு மட்டங்களிலும் முழுமையான கவனிப்பைச் செலுத்துகின்றது. இத்தகைய பின்னணியிலே இயல்பாகவே ஒரு மனிதன் இன்னொரு மனிதனிலும், ஒரு சாரார் இன்னொரு சாரார் மீதும் தங்கி நிற்பவர்களாகவும், உதவி சார்ந்திருப்பவர்களாகவும் உள்ளமை தவிர்க்க இயலாதது. அந்த வகையில் இஸ்லாத்தின் நோக்கு நிலையில் ஒரு மனிதனோ குழுவோ அல்லது சமூகமோ இன்னொரு மனிதனிலும் குழுவிலும் அல்லது சமூகத்திலும் தங்கி நிற்கின்ற போதும், உதவி வேண்டி நிற்கின்ற போதும் அப்படி உதவி செய்தல் கட்டாயக் கடமையாகவும், மார்க்கததின் ஒரு இபதத்தாகவும் (வணக்கமாக) உள்ளது. ஆகவே இஸ்லாமிய நோக்கு நிலையில் மக்களுக்கும் தனிநபர்களுக்கும் செய்யும் சமூக சேவைகள், சமூக நலன்புரிகள், சமூகப்பணிகள், சமூகத் தன்னார்வத் தொண்டுகள், சமூக அபிவிருத்த சார்ந்த செயற்பாடுகள் ஒரு இபாதத்தாக (வணக்கமாக) பார்க்கப்படுகிறது. இஸ்லாத்தின் இலக்கானது மனிதனுக்கு இம்மை, மறுமை வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகும் (முகமது இஸ்மாயில், ஹா:2013). ஆகவே இஸ்லாத்தின் பார்வையில் தன்னார்வத் தொண்டினைப் பற்றி இக்கட்டுரையானது ஆராய விளைகின்றது.

தன்னார்வத் தொண்டானது சமூக சேவை, சமூக நலன்புரி, சமூகப்பணி, சமூக அபிவிருத்தி என்பவற்றுடன் இணைந்த மனிதன் மீது கவனக்குவிப்பைச் செலுத்தும் முக்கிய செயற்பாடாகும். இது தனிமனித மற்றும் கூட்டு முயற்சியினை உள்ளடக்கியதுமாகும். அந்தவகையில் தன்னார்வத் தொண்டு என்பது ஓர் உன்னதமான நோக்கத்திற்காகவும் மற்றவர்களின் நன்மைக்காகவும் உறுதிமொழி கொள்ளுவதன் அர்ப்பணிப்புத் தன்மையாகும். தன்னார்வத் தொண்டு பற்றி ஜோன் வில்சன் (John Wilson : 2000) குறிப்பிடுமிடத்து "தன்னார்வத் தொண்டு என்பது மற்றொரு நபர், குழு மீது பயனளிக்கும் பொருட்டு இலவசமாக நேரத்தினை வழங்கும் எந்தவொரு செயற்பாடுமாகும். இது தன்னிச்சையான உதவியை விட அதிக அர்ப்பணிப்பைக் கொண்டதாகும். மேலும் தன்னார்வத் தொண்டு பற்றிய மற்றுமொரு வரைவிலக்கணமாகத் தன்னார்வத் தொண்டு ஓர் ஊதியம் பெறப்படாத செயலாக விபரிக்கப்படுகின்றது. அத்தொண்டு மூலம் இலாப நோக்கமற்ற

வகையில் அமைப்புகள் தமக்கு நெருக்கமில்லாத நபர்களுக்கு உதவத் தமது பங்களிப்பை வழங்குகின்றார்கள். ஆகவே இஸ்லாமிய மார்க்கமானது சமயம் என்ற வகையில் உலகலாவிய ரீதியில் தன்னார்வத் தொண்டினைத் தோற்றுவித்து, அதனை ஊக்குவித்ததுடன், அதனை ஒரு மார்க்கக் கடமையாகவும் இபாதத்தாகவும் (வணக்கமாகவும்) பார்க்கின்றது.

சமூகத் தன்னார்வத் தொண்டானது உலகலாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக சேவையாக 17ஆம் நூற்றாண்டின் பின்னரான காலப்பகுதியிலேயே பிரபலமடைந்தது. அன்றைய சூழலில் சம்பிரதாயபூர்வமான சமூகத்திற்குப் பதிலாக சமூக நிலைமைகளில் பல்வேறுபட்ட தேவைகள், விருப்பு வெறுப்புகள், பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் தோன்றின. இத்தகைய சூழ்நிலையே இது பற்றி சிந்திப்பதற்குத் தூண்டுதலாய் அமைந்தது. ஆனால் இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பே நபி முஹம்மது (ஸல்) அவர்கள் சமூகத்தின் மிகச் சிறந்த மனிதன் மனிதர்களுக்குப் பயனளிப்பவர் என்ற கோட்பாட்டினூடாகத் தன்னார்வத்தொண்டினை தன் 23 வருட வாழ்வில் அமுலாக்கிக் காட்டினார்.

அந்தவகையில் மதீனாவில் தன்னார்வத் தொண்டு மிக்க இஸ்லாமியச் சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு குர்ஆனியப் போதனை, சுன்னா (தனது வாழ்க்கை வழிமுறை), சகோதரத்துவக் கொள்கை, சமத்துவக் கொள்கை, பொருளாதாரப் பங்கீட்டுக் கொள்கை, நன்மைகள் அனைத்துமே இபாதத்தாக (வணக்கமாக) கருதப்படல், சமூகத் தொண்டர்களுக்கான முன்மாதிரியாகத் திகழ்ந்தமை, சமூக நலன்புரிச் செயற்பாடுகளை மார்க்கக் கடமையாக்கியமை, ஸகாத்தின் நடைமுறையாக்கம், ஸதகா நடைமுறையாக்கம், தன்னார்வத் தொண்டினை ஊக்குவித்தமை போன்ற பலவற்றைக் கொண்டு பிரயோகப்படுத்தினார்கள்.

ஆகவே தன்னார்வத் தொண்டானது ஏனைய மனிதர்கள் மற்றும் குழுக்கள் மீதும் நன்மையையும் நலவையும் நாடுதலாகும் என்றவகையில் இஸ்லாமானது பிறர் நலன் மீதும் கவனம் செலுத்துகின்றது. பிறருக்காத் தொண்டு செய்தல் பற்றியும் அதன் போது கவனத்திக் கொள்ள வேண்டிய குழுக்கள் பற்றியும் பின்வரும் நபிமொழி குறிப்பிடுகின்றது.

"தமீமுத்தாரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் "இந்த (இஸ்லாமிய) மார்க்கம் என்பது பிறர் நலம் நாடக்கூடியது." அப்போது நாங்கள், யாருக்கு நலம் நாடுவது? என்று கேட்டோம். அதற்கு நபியவர்கள், "இறைவனுக்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும் (நலம் நாடுவது)" என பதிலளித்தார்கள்" (முஸ்லிம்: 205).

அந்த வகையில் மேற்குறிப்பிட்ட நபிமொழியானது தன்னார்வத் தொண்டினை இறை நோக்குடன் வழிகாட்டுவதையும் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத அனைவருக்குமான செயற்பாடாகவும் காட்டுகின்றது. இஸ்லாமிய நேர்வழிகாட்டலின் கீழ் உள்ள ஒரு தலைவர் பிறர் மீது அக்கறை காட்டுவதை மார்க்கக் கடமைகளான தொழுகை, ஸகாத்துடன் இணைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இதனை இறைவன் குர்ஆனில் "இன்னும் நம் கட்டளையைக் கொண்டு (மக்களுக்கு) நேர்வழி காட்டும் இமாம்களாக – தலைவர்களாக – நாம் அவர்களை ஆக்கினோம் என்றும் மேலும், நன்மையுடைய செயல்களை புரியுமாறும், தொழுகையைக் கடைப்பிடிக்குமாறும், ஜகாத்தை கொடுத்து வருமாறும், நாம் அவர்களுக்கு வஹீ மூலம் அறிவித்தோம் – அவர்கள் நம்மையே வணங்குபவர்களாக இருந்தனர்." ஏன்றும் குறிப்பிடுகிறான்.

மேலும் இஸ்லாமிய நோக்கு நிலையில் தொண்டரியத்தினையும் சமூக நலனோம்பலின் அவசியத்தினையும் மேலும் இறைவன் குறிப்பிடுமிடத்து "புண்ணியம் என்பது உங்கள்

முகங்களைக் கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக்கொள்வதில் இல்லை. ஆனால் புண்ணியம் என்பது அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாளின் மீதும், மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதல் (தன்) பொருளை இறைவன் மேலுள்ள நேசத்தின் காரணமாக, இனபந்துகளுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன் (ஏழை)களுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகள், கடனாளிகள் போன்றோரின் மீட்புக்காகவும் செலவு செய்தல் இன்னும் தொழுகையை ஒழுங்காகக் கடைப்பிடித்து முறையாக ஜகாத் கொடுத்து வருதலாகும் (இவையே புண்ணியமாகும்). இன்னும் தாம் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும் (வறுமை, இழப்பு போன்ற) துன்பத்திலும், (நோய் நொடிகள் போன்றவற்றின்) கட்டத்திலும், யுத்த சமயத்திலும், உறுதியுடனும், பொறுமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்கள் இன்னும் அவர்கள் தாம் முத்தகீன்கள் (பயபக்தியுடையவர்கள்)..." (அல்குர்ஆன் 22:177).

மேற்குறிப்பிட்ட வசனமானது உதவி தேவைப்படும் குழுக்களின் மீது தொண்டினைக் கவனம் செலுத்துமாறு குறிப்பிடுகின்றது. மேற்குறிப்பிட்ட வசனம் தன்னார்வத் தொண்டின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய குழுவினை அடையாளப்படுத்துவதுடன், இஸ்லாத்தில் அதன் மீதான அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. மேலும் தன்னார்வத் தொண்டின்மை, பிறர் நலன் பேணாமை, நன்மையான காரியங்களில் ஈடுபடாமை மற்றும் நலிவுற்றவர்களின் மீது கவனம் செலுத்தாமை போன்றவை இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டை மறுப்பவரின் செயற்பாடு ஆகும். இதனை இறைவன் இறைமறையில் "மறுமையில் நற்கூலி – தண்டனை கொடுக்கப்படுவதை பொய்யென்று சொல்பவனை (நபியே) நீர் பார்த்திருக்கிறீரா? அவன்தான் அநாதையை விரட்டுகின்றான் மேலும், வறியவரின் நிலை கண்டு உணவளிக்கும் படி (யாரையும்) அவன் தூண்டுவதில்லை. (அல்குர்ஆன் 107: 1–3).

இஸ்லாத்தின் உன்னத தன்னார்வத் தொண்டரியக் கோட்பாடு மனிதர்களுக்குப் பயனளித்தல் என்பதாகும். மனிதர்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளுவதை உன்னத தர்மமாகவும், வணக்க வழிபாடாகவும் இஸ்லாம் பார்க்கின்றது. மேலும் மனிதர்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குறியவர் மக்களுக்கு அதிக பயனளிப்பவர் ஆவார். நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "மக்களிலேயே இறைவனுக்கு மிக விருப்பமானவர் மக்களுக்கு அதிக பயனளிப்பவரே! நற்செயல்களில் இறைவனுக்கு மிக விருப்பமானது நீ ஒரு முஸ்லிமை மகிழ்ச்சி அடையச் செய்வது அல்லது அவரை விட்டு ஒரு நெருக்கடியை அகற்றுவது அல்லது அவருடைய கடனை அடைப்பது அல்லது அவருடைய பசியைப் போக்குவது ஆகியவைகளாகும்".

ஆகவே மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் நற்செயல்கள் புரிதல், கடனை அடைத்தல், தனது நேரத்தினைப் பொதுச்சேவைக்குச் செலவிடல், இடர்நிலையில் உதவுதல் மற்றும் பசியின் போது உதவுதல் உட்பட நல்லறங்களினைச் செய்தல் அல்லாஹ்வுக்கு விருப்பமானது என மேற்குறித்த நபிமொழி குறிப்பிடுகின்றது. ஆகவே மனிதர்களுக்கு பயனுடைய வகையிலான செயற்பாடுகளில் தன்னார்வச் செயற்பாடுகளில் ஈடுபடுதலினை "மனிதர்களுக்குப் பயனளித்தல்" எனும் கோட்பாட்டினூடாக இஸ்லாம் ஊக்குவிக்கின்றது. இதனை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மார்க்கம் என்பது பிறர் நலம் பேணுதலாகும் (முஸ்லிம்) என்றார்கள்.

மேலும் ஒருவரின் தேவையை நிறைவேற்றுவதற்காக தன்னுடைய உடல், உள பொருளாதாரத்தினை அர்ப்பணிக்கும் செயற்பாடானது புனித மிக்க பூமியான மதீனாவின் பள்ளி வாசலில் தங்கி வணக்கத்தில் ஈடுபடுவதனை விட விருப்பமான செயலாக இறைத்தூதர் (ஸல்) குறிப்பிட்டுள்ளார்கள். "ஒரு சகோதரரின் தேவையை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக அவருடன்

நான் நடந்து செல்வது, நான் இந்த (மதீனாவின்) மஸ்ஜிதில் ஒரு மாதம் தங்கியிருந்து வணக்கத்தில் ஈடுபடுவதை விட எனக்கு மிக விருப்பமானதாகும். ஒருவர் தனது கோபத்தை அடக்கினால் அவரது குறையை இறைவன் மறைப்பான். ஒருவர் பிறரைத் தண்டிக்க நாடினால் தன்னால் தண்டிக்க இயலும் எனும் நிலையிலும் தனது ஆத்திரத்தை மென்று விழுங்கினால் மறுமையில் அவரது உள்ளத்தை இறைவன் நன்னம்பிக்கையால் நிரப்புவான். ஒரு சகோதரரின் தேவை நிறைவேறும் வரை அவருடன் ஒருவர் சென்றால் பாதங்கள் சறுகும் அந்த (மறுமை) நாளில் அவருடைய பாதத்தை இறைவன் உறுதிப்படுத்துவான். (நூல் : தப்ரானி)

எனவே ஒரு சகோதரர் பல சகோதரர்களினதும் தேவையை நிறைவேற்றும் பொருட்டு தன்னார்வத் தொண்டுகளில் இறைகூலியை எதிர்பார்த்து ஈடுபடுதலானது வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதனை விட ஒரு சிறந்த செயற்பாடாக உள்ளமையானது இஸ்லாத்தில் தொண்டரியத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தினையும், அந்தஸ்த்தினையும் வெளிக் கொணர்கின்றது. மேலும் இஸ்லாத்தில் "ஒன்றுக்கு பத்து" என்ற நன்மைக் கோட்பாடும் சமூக நலன்புரி மற்றும் சமூக சேவை சார்ந்த தன்னார்வத் தொண்டுச் செயற்பாடுகளுக்கு தூண்டற் காரணிகளாக உள்ளன. இதனையே இறைவன் குர்ஆனில் 7 நெற்கதிர்கள் 10 மடங்காகி விளைவது போல நன்மைகள் கிடைக்கின்றன எனக் குறிப்பிடுகின்றான். மேலும் ஒரு நல்ல அமலுக்கு 10 மடங்கு நன்மை உண்டு (அல்ஆன்ஆம் 6:160) எனக் குறிப்பிடுவதுடன், ஒரு நாய்க்கு நீரூட்டியதினால் துர்நடத்தை கொண்ட ஒரு பெண்ணுக்கு சுவனம் (புகாரி – 3551) கிடைத்தமை போன்ற ஆன்மீக சம்பவங்களின் கருத்துகள் பிறருக்கு உதவுவதற்காக நாம் எடுத்துக் கொடுக்கும் செல்வம் அருளும் வளமும் பெற்றதாகும் என்பதைப் புலப்படுத்துகின்றன. அதில் அபிவிருத்தியும் ஏற்படும். இதனையே நபி (ஸல்) அவர்கள் "தர்மம் செல்வத்தைக் குறைப்பதில்லை" என்று சொல்லி விளக்கினார்கள். இது தொண்டு மற்றும் நன்மையான காரியங்களினை செய்வதற்கான ஊக்க சக்தியாகவும் அதிகம் செய்யத் தூண்டுவதாகவும் இருக்கின்றது.

மேலும் தன்னார்வச் செயற்பாட்டினை இஸ்லாம் உறுதிப்படுத்தும் வகையிலான மற்றுமொரு கோட்பாடாக சகோதரத்துவக் கோட்பாடு உள்ளது. ஒரு முஸ்லிமுக்கும் இன்னொரு முஸ்லிமுக்குமிடையேயான உறவு, பரஸ்பரம், பாசம் போன்றவை ஓர் உடம்பினைப் போன்றதாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. மேலும் ஒரு கட்டடத்தில் செங்கற்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பது போன்று ஒருவர் இன்னொருவருடன் உள்ளத்தால் இணைந்திருக்க வேண்டுமென்கின்றது. ஆகவே சகோதரத்துவத்திற்கான எடுத்துக்காட்டாக ஒரே உடம்பு என்பது ஒரே கட்டடத்தின் செங்கல் பிணைப்புடன் ஒப்புநோக்கப்பட்டுள்ளதுடன், இவை ஒருவர் இன்னொருவருடன் இன்பம், துன்பம், கஷ்டம், நஷ்டம், கடினம், இலகு உட்பட்ட பல விடயங்களில் பரஸ்பரப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டுமென குறிப்பிடுகின்றது. இதனையே

"விசுவாசிகள் பாசம், பரஸ்பரம் காட்டுவதிலும், இரக்கம் காட்டுவதிலும் ஒரே உடம்பினைப் போன்றவர்கள் அதன் ஓர் உறுப்பு நோயால் அல்லல் படுமாயின் உடலின் ஏனைய உறுப்புகள் விழித்திருப்பதன் மூலமும் காய்ச்சலின் மூலமும் நோயில் பங்கேற்கும்" (முஸ்லிம்).

ஆகவே இவ் உடம்பு எடுத்துக்காட்டினூடாக சமூக நலன், பிறர் கவனிப்பு, தன்னார்வத் தொண்டின் போது அனைவரையும் கவனத்திற் கொள்ளல், இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொள்ளல் போன்றவை வலியுறுத்துப்பட்டுள்ளன.

மேலும் தன்னார்வத் தொண்டினைத் தூண்டிவிடும் சகோதரத்துவப் பிணைப்புக் கொள்கையினை இஸ்லாம் கொண்டுள்ளது. "யார் தன் சகோதரருடைய தேவையில் பங்கு கொள்கின்றாரோ அவனது தேவையில் அல்லாஹ் பங்கு கொள்கின்றான் (நபிமொழி). மேலும் யார் ஒரு முஸ்லிமுடைய

சிரமத்தினை நீக்குகின்றாரோ அவரின் சிரமத்தினை அல்லாஹ் நீக்குகின்றான் எனவும் யார் செலவு செய்கின்றாரோ அவர் மீது அல்லாஹ் செலவு செய்கின்றான்" என்பன போன்ற நபிமொழிகள் இது பற்றிக் குறிப்பிடப்பட்டு நிற்கின்றன. ஆகவே ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமிற்கு சகோதரன் ஆவான். அநீதி இழைக்க மாட்டான், கைவிடவும் மாட்டான். போன்ற நபிமொழிகள் சமூகத் தன்னார்வத் தொண்டு மற்றும் நலன்புரியின் அவசியத்தினைக் குறிப்பிட்டு நிற்கின்றன.

மேலும் இஸ்லாத்தின் பொருளாதாரக் கோட்பாடானது சமூகநலன், சமூகப்பணி, சமூக அபிவிருத்தி, சமூகச் சேவை போன்றவற்றின் மீது பாரிய கவனக்குவிப்பைச் செலுத்துகின்றது.

இஸ்லாத்தில் சமூகத் தொண்டிற்கான பொருளீட்டல் அடிப்படை விடயமாக உள்ளது. உலகின் அனைத்துப் பொருளீட்டலும் இறைவன் உங்களுக்கு அளித்தது ஆகும். தங்களிடம் இருப்பவற்றிலிருந்து நீங்கள் செலவு செய்யுங்கள் என இறைவன் வலியுறுத்துகின்றான். மேலும் இஸ்லாமானது மனிதர்களுக்கிடையே தொண்டு, அறம், சமூக நலனோம்புகை மேம்பட வேண்டும் என்பதற்காக செலவழிப்பதை ஊக்கப்படுத்துவதுடன், கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாப்புப் பெறுமாறும் வேண்டுகின்றது. இதனை இறைவன் "எந்தப்பொருளை நீங்கள் செலவு செய்த போதும் அதற்குப் பகரமாக அவன் அளிக்கின்றான்" (அல்குர்ஆன் 34: 49) என்கின்றான். மேலும் இஸ்லாம் சமூக ஏற்றத்தாழ்வை நீக்கும் பொருட்டு சிலவற்றினை கட்டாயமாகவும் சிலவற்றினை விருப்பத்திற்குரியதாகவும் பல்வேறு சமூக நலனோம்பல்களை தொண்டு வடிவங்களில் கொண்டுள்ளது.

அவையாவன:

- ஸக்காத் :– செல்வத்தின் அளவினை அடைந்த பொருளிலிருந்து கணக்கிட்டு குறிப்பிட்ட குழுவிற்கு வழங்குதல். (குர்ஆன் 2:223)
- ஸதக்கா :– நற்கருமங்கள், தானதருமம் வழங்குதலைக் குறிக்கும்.
- பித்ரா :– ரமலான் நோன்பு முடிவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பிருந்து வழங்கப்படும் தர்மம்.
- அகீக்கா :– குழந்தை பிறந்து ஏழாவது தினம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் முகமாக ஆடு அறுத்துத் தானம் கொடுத்தல்.
- குற்றப்பரிகாரம் :– ரமழான் நோன்புடன் உடலுறவு கொள்ளல், சத்தியத்தினை முறித்தல் போன்றவற்றுக்கான குற்றப்பரிகாரச் செயற்பாடுகளாக ஓர் அடிமை விடுதலை அல்லது இரண்டு மாதம் நோன்பு அல்லது அறுபது ஏழைகளுக்கு உணவு அல்லது பத்து ஏழைகளுக்கு உணவு அல்லது அடிமை விடுதலை என்பனவாகும்.
- நேர்ச்சை :– அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்றல், அல்லது உறுதி பூண்ட விடயத்தை நிறைவேற்றல்.
- குர்பான் :– இறைவனுக்குத் துதி செய்யும் பொருட்டு துல்ஹஜ் மாதம் ஆடு, மாடு, ஒட்டகங்களை அறுத்துப் பலியிடல்.
- வக்ப் :– குறிப்பிட்ட காரணத்துக்காக ஒரு குறிப்பிட்ட நபரின் விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்படும் நலன்புரிச் செயற்பாடு.
- ஸதகா ஜாரிய்யா :– குறித்த ஒன்றினை இறைவழியில் தூய்மையின் பொருட்டு அளிக்கும் செயற்பாடு.

குறிப்பாக இஸ்லாம் வறுமையைப் போக்குவதற்காகப் பங்கீட்டு நியாயம் மற்றும் சமமான வளக்கிடைப்பு எனும் கொள்கையைக் கொண்டு வழிகாட்டுகின்றது. இதற்கு ஸகாத் மற்றும் ஸதகா எனும் இரு அடிப்படைகளை இஸ்லாம் விதித்துள்ளது. "அவ்வூராரிடமிருந்தவற்றில் அல்லாஹ் தன் தூதருக்கு (மீட்டுக்) கொடுத்தவை, அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்குமாகும் மேலும், உங்களிலுள்ள செல்வந்தர்களுக்குள்ளேயே (செல்வம்) சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக (இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கக் கட்டளையிடப் பட்டுள்ளது) மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள் இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள் மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன்." (59:7)

இதில் ஸகாத் என்பது அதைக் கொடுக்கத் தகுதியான குறிப்பிட்ட குழுவினர்களுக்கு அது கட்டாயத் தொண்டுப் பணியாகவும், ஸதகா என்பது ஊக்குவிப்புத் தொண்டுப் பணியாகவும் இஸ்லாம் குறிப்பிடுகின்றது.

ஆகவே இஸ்லாமானது சமூகத் தன்னார்வத் தொண்டரியத்தை கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், சூழலியல், தனி மனித மற்றும் சமூகம் சார்ந்த பல்துறைகளிலும் கவனம் செலுத்துகின்றது.

இஸ்லாம் தன்னார்வத் தொண்டுச் செயற்பாடுகளின் போது இச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற தன்னார்வத் தொண்டர்களினைத் தன்னை விட அவர்களுக்கு (பிறருக்கு) முன்னுரிமையளிக்குமாறும் ஏவுவதுடன், அதனை நடைமுறைப்படுத்திக்காட்டியும் உள்ளது. மதீனாவாசிகளான அன்ஸாரிகள் மக்காவில் இஸ்லாத்தினை ஏற்றதன் காரணமாகக் கட்டாய இடப்பெயர்வுக்குள்ளாக்கப்பட்ட முஹாஜிரின்களை (இடம்பெயர்ந்த தோழர்கள்) இடர் சூழலில் மதீனாவில் வரவேற்று அடைக்கலமளித்து, வாழ்வாதாரமளித்தமை இதற்கு மிகப்பெரிய சான்றாகும். மக்காவிலிருந்து உள்நாட்டு இடப்பெயர்வுக்குள்ளாட்ட அகதிகளாக மதீனாவை நோக்கி தஞ்சமடைந்தவர்களினை வெறுமென வரவேற்றதுடன் மட்டுமன்றி தங்குவதற்கான வசதியளித்ததுடன், தொண்டு செயற்பாடுகளினை அவர்கள் நிறுத்தவில்லை. மாறாக அகதிகளாக வந்தவர்களுக்கான தன்னார்வத் தொண்டர்களாகத் தாம் செயற்படும் வண்ணம் மதீனா ஸஹாபாக்கள் தம்மை அனஸ் இப்னு மாலிக் (ரழி) என்ற தோழரின் வீட்டில் வைத்து ஒப்பந்தம் செய்தார்கள்.

இவ் ஒப்பந்தமானது கட்டாய இடப்பெயர்வுக்குள்ளாக்கப்பட்ட அகதிகளுக்குத் தேவையான நிதி, பௌதீக, மானுட, இயற்கை வாழ்வாதார மூலதனங்களின் கிடைப்பினை உறுதிப்படுத்துவதாக இருந்தது. அவர்களுக்கு மானுட மூலதனமாக சிறந்த சகோதரத்துவம், அன்பு, விட்டுக்கொடுப்பு, தங்களது தேவையையும் உணர்வுகளையும் பரிமாற்றுவதற்கான குடும்ப உறவு போன்றன இருந்தன. நிதி மூலதனங்களாக தன்னார்வத் தொண்டில் ஈடுபட்டவர்கள் தங்களது தோட்டத்திலும், தங்களது தொழிலிலும் அவர்களை இணைத்தது, பொருளாதார உதவியளித்தது, சொத்தில் பங்கீடு கொடுத்தது என்பன போன்ற பல செயற்பாடுகளை அது உள்ளடக்கியிருந்தது. மட்டுமன்றி விசேடமாக குறிப்பிடத்தக்க விடயமாக இரண்டு மனைவியர்களைக் கொண்டவர்கள் இடப்பெயர்வுக்குள்ளாப்பட்டவர்கள் விரும்பிய ஒரு மனைவியை விட்டுக் கொடுத்தமை போன்ற செயற்பாடுகள் தன்னார்வச் செயற்பாடுகள் சார்ந்து உலகளவில் இதுவரை இடம்பெறாத ஒன்றாகவும் உள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது. இதனையே அல்குர்ஆனில் அல்லாஹ் இவர்கள் தன்னை விட பிறரினை முன்னுரிமைப்படுத்தினை பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

"இன்னும் சிலருக்கும் (இதில் பங்குண்டு அவர்கள் மதீனாவில் முஹாஜிர்களுக்கு) முன்னரே

ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டவர்கள் அவர்கள் நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை நேசிக்கின்றனர் அன்றியும் அ(வ்வாறு குடியேறிய)வர்களுக்குக் கொடுக்கப் பட்டதிலிருந்து தங்கள் நெஞ்சங்களில் தேவைப்படமாட்டார்கள் மேலும், தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களைவிட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் – இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டார்களோ, அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். (5.59).

மேலும் தன்னார்வத் தொண்டுச் செயற்பாடுகளின் போது பாரபட்சம், ஏற்றத்தாழ்வு, பொருத்தமற்றவர்களைத் தெரிவு செய்தல், நன்மைக்காக, தொண்டாகக் கொடுத்து வந்த சேவையை அல்லது கொடையை வேண்டுமென்று நிறுத்துதல் போன்ற செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் அதனைத் தடை செய்தும் உள்ளது. மட்டுமன்றி ஒரு தனி மனிதன் அல்லது குழு செய்த தன்னார்வச் செயற்பாடுகளைத் தாமே சொல்லிக் காட்டுவதை இஸ்லாம் கடுமையாகக் கண்டிக்கின்றது. இவ்வாறு சொல்லிக்காட்டுவது இழி குணச்செயற்பாடாகவும், மறுமையில் இறைவன் இவர்களுடன் பேசமாட்டான் என்பதுடன், நோவினை தரும் வேதனை உண்டு எனவும் இறைத்தூதர் எச்சரித்துள்ளார்கள்.

இஸ்லாம் தன்னார்வத் தொண்டிற்கான தனிச் சிறப்புமிக்க கொள்கையைக் கொண்டுள்ளது. அந்த வகையில் சொற் தூய்மை, மனத் தூய்மை போன்ற இறைதிருப்தியை இலக்காகக் கொண்டதாகத் தன்னார்வத் தொண்டரிய செயற்பாடுகள் இருக்க வேண்டும் என்பது அடிப்படை நியதியாகும்.

இஸ்லாமியத் தன்னார்வத் தொண்டிற்கான செயல் வடிவமாக இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் திகழ்கின்றார்கள். இறைத்தூதரியத் தன்னார்வ தொண்டானது சமூக நலன்மிக்கதாவும், குறுகியஇ தனிப்பட்ட இலாபமற்றதாகவும் இருந்தது. மேலும் சமூகத்தில் நலிவு நிலை உள்ளவர்களை உள்ளீர்ப்புச் செய்வதில் கவனக்குவிப்பைச் செலுத்தியது. இஸ்லாமியத் தொண்டரியச் செயற்பாட்டின் விளைவு இறைகூலியை மாத்திரம் எதிர்பார்த்ததாக இருந்தது. மேலும் இறைத்தூதரியத் தன்னார்வத் தொண்டரியச் செயற்பாடுகளானவை நேர வீண்விரயமின்றி திட்டமிடல், மக்கள் ஆலோசனையைப் பெறல், சமூக நலனோம்பலுக்கான கலந்துரையாடலுக்கான மையமாக பள்ளிவாசல்களை அமைத்துக் கொள்ளுதல், தொண்டரியத்துக்காக சமூக அணிதிரட்டல் மற்றும் மக்கள் பங்கேற்பு போன்ற இயல்புகளைக் கொண்டதாக இருந்தது. குறிப்பாக இன்றைய தன்னார்வத் தொண்டரிய செயற்பாடுகளின் தூண்டற் காரணிகளாகவும் இயல்புகளாகவும் உள்ள மனிதப்புகழ், மனிதர்களைக் கௌரவப்படுத்தல், மனிதப் பாராட்டுதலினை எதிர்பார்த்தல், சுயநலம், வாக்கு வேட்டை, பிரதியுபகாரத்தினை எதிர்பார்த்தல், விளம்பரப்படுத்தல், புகைப்படம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் தொண்டினையும் பயனாளிகளையும் விளம்பரப்படுத்தல், முகஸ்துதி போன்றவற்றிலிருந்து முற்றுமுழுதாக விலகியதாக இருந்தது. வலது கரத்தால் கொடுப்பது இடது கரத்திற்குத் தெரியாமல் இருந்ததுடன், இறைகூலி இறுதி இலக்காக இருந்தது.

இறைத்தூதரிய மதீனத்து அரசாங்கத்தின்கீழ் தொண்டுச் செயற்பாடுகள் மக்களது பங்கேற்புடன் இடம்பெற்றமை அக்கால வரலாற்றுச் சம்பவங்களின் சான்றாகின்றன. மக்காவில் பஞ்சம் ஏற்பட்ட போது மதீனாவிலிருந்து கொண்டு உதவி செய்தமை, மக்காவில் இருந்த முஸ்லிமல்லாத கைதிகளுக்கு உதவி செய்தமை, கடன் நெருக்கீடு உடையவர்களின் கடனை நீக்க உதவியமை, முளர் கோத்திரத்தினர் சரியான ஆடையின்றி அரைகுறையாக வந்த போது அதான் சொல்லி

மக்களை வரவழைத்து உதவி செய்தமை, அஸ்அரி கிளையார் போரின் போது அல்லது பஞ்சத்தில் பாதிக்கப்பட்டபோது தங்களிடையே பொருட்களை பங்குகிட்டுக் கொண்டமை போன்றன தொண்டுச் செயற்பாடுகளுக்கான சில வரலாற்றுச் சான்றாகின்றன.

மேலும் உலகளாவிய ரீதியில் வரலாற்று நோக்கில் நோக்குமிடத்து தன்னார்வத் தொண்டர்கள் 1755ஆம் ஆண்டுகளின் பின்னரான காலப்பகுதியில் பிரசித்தம் பெற்றதுடன், குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் இது ஒரு சிறப்புமிகு சமூக சேவையாக இடம் பிடித்தது. அந்தவகையில் தன்னார்வத் தொண்டரியமானது உலக அளவில் இன்று கல்வி விழிப்புணர்வு சம்பந்தமான செயற்பாடுகள், இடர் சூழலுக்கான தொண்டு, போதைப்பொருள் மற்றும் மது ஒழிப்பு சார்ந்த தொண்டு, சிறுவர் மற்றும் பெண்களுக்காக வேண்டிக் குரல் கொடுத்தல், சமூக நீதிக்காக செயற்படுதல், திறன் விருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், மருத்துவச் சேவைகளை வழங்குதல், சமூகத்தொண்டுகள் அல்லது நாலனோம்பல் சார்ந்த தொண்டுகள் போன்ற பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில் உலக அளவில் தன்னார்வத் தொண்டரியமானது பிரசித்தம் அடைவதற்கு முன்பே இற்றைக்கு 1400ஆம் ஆண்டுகளுக்கு முன் இறைத்தூதர் தன்னார்வத் தொண்டரியம் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுத்தமை ஈண்டு நோக்கத்தக்கது. இதற்கு முக்கியமான சான்றாக ஒரு தடவை மக்காவில் கடுமையான பஞ்சம் நிலவிய போது மதீனாவிலிருந்து 500 தீனார்களைத் திரட்டி தன்னையும் தனது தோழர்களையும் கலாகாலமாக எதிர்த்துக் கொண்டிருந்த மக்கத்து இறை நிராகரிப்பாளர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் நிவாரணம் அனுப்பினார்கள். இது நபி (ஸல்) அவர்களை சிறந்த தொண்டரியத்திற்கான முன்மாதிரியாளராகக் எடுத்துக்காட்டுகின்றது.

இந்த வகையில் அவற்றுள் மிக முக்கியமான விடயமாக தொண்டு செய்யும் மத்திய நிலையமாக பள்ளிவாசல்கள் செயற்பட்டமையைக் கூறலாம். இறைத்தூதரின் தொண்டுச் சேவை மற்றும் தொடர்புடைய விடயங்களுக்கான மத்திய நிலையமாகப் பள்ளிவாசல்கள் செய்யப்பட்டன. ஏழைகள், பசித்தவர்கள், தேவையுடையவர்கள் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு பள்ளிவாசல்களை நாடி வருவார்கள். இறைத்தூதரவர்கள் தேவையுடையவர்களை இனங்கண்டு அவர்களது தேவையையும் நிறைவேற்றினார்கள். அனாதைகள், வறியவர்கள், கல்வித் தேவையுடையவர்கள் போன்றோருக்கு இலவசமாக இறை கூலியை எதிர்பார்த்து அவர்களுடைய தேவைகள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக குடும்பப் பிரச்சினைகள் மற்றும் இரு நபர்களுக்கு இடையிலான பிரச்சினைகளின் போது அவர்களது பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடி அவர்களுக்கான தீர்வினை வழங்குவார்கள. எனவே இறைத்தூதரியப் பாசறையானது இலவசமாக தனிமனித, குடும்பம், சமூகம் சார்ந்த சச்சரவுகளைத் தீர்க்கும் மையமாகத் திகழ்ந்தது. இறைதூதர் (ஸல்) அவர்களுடைய தொண்டின் மற்றொரு வடிவமான தனிநபர்கள் குழுக்களுக்கிடையே முரண்பாடு, சட்டச் சிக்கல்கள், சமூக நிலைமைக்கேற்ப அறத் தொண்டாற்றல், தூதுவர்களை வரவேற்றல், விருத்தாளிகளை வரவேற்றல், சமூக சார் முக்கிய விடயங்களினை கலந்துரையாடல் என எல்லா வகையான பிரச்சனைகளுக்கும் தீர்வுத் தளமாகவும், தொண்டுப்பணியாற்றல் தளமாகவும் பள்ளிவாசலே இருந்துது.

❖ கல்வி மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்

இன்று தொண்டு சார்ந்த செயற்பாடுகளில் முக்கிய வடிவமாகத் தோற்றம் பெற்றுள்ள இத்துறை

சார்ந்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் செயற்பட்டுள்ளார்கள். தன்னை நாடி வருகின்றவர்களுக்கும் கற்க விரும்புகின்றவர்களுக்கும் போதனைகளை வழங்கியதோடு சந்தேகம் உள்ளவர்களுக்கு சந்தேகங்களைத் தீர்த்து வைத்தும் ஸஹாபாக்களுக்கு அவ்வப்போது கருத்துரைகளை வழங்கியும் தேவையான கல்வி வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுத்தும் கல்வித் தொண்டினை எதுவித ஊதியமும் எதிர்பாராது வழங்கியமை பெரும் முன்மாதிரியாகும்.

❖ விருந்தோம்பல்

இஸ்லாம் ஊக்குவிக்கின்ற சமூக மற்றும் நலனோம்பல் சார்ந்த தொண்டரியச் செயற்பாடாக இது உள்ளது. "யார் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்புகிறாரோ, அவர் தனது விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். (புகாரி, முஸ்லிம்) அத்துடன், "யார் விருந்தழைப்பை ஏற்க மறுக்கிறாரோ, அவர் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் மாறு செய்துவிட்டார்" எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். (புகாரி, முஸ்லிம்) இவை விருந்தினரை உபசரிக்காதவரிடம் இறை நம்பிக்கையும், மறுமை நம்பிக்கையும் இருக்க மாட்டாது என்றும், விருந்தழைப்பை மறுப்பவர்கள் அல்லாஹ்விற்கும், தூதருக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்க முடியாது என்றும் தெளிவுபடுத்துகின்றன. எனவே இடர்ச் சூழலில் உபசரிப்பு, உறவு பேணல் மற்றும் பசித்தவர்களுக்கு விருத்தளித்தல் என்பன இஸ்லாத்தில் ஒரு தொண்டுச் செயற்பாடு ஆகும்.

❖ நீதி செலுத்துதல் மற்றும் அநீதிக்கு எதிராக இருத்தல்

இன்று உலகளவிலேயே சமூக அநீதி, மனித உரிமை மீறல்களுக்கு குரல் கொடுத்தல், சிறுவர்களது உரிமையை உறுதிப்படுத்தல் போன்ற பல செயற்பாடுகளுக்காக தன்னார்வ அமைப்புகள், அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற மையங்கள் மிக நுண்ணிய மற்றும் பருநிலை மட்டங்களில் மிகத் தீவிரமாகத் செயற்படுகின்றன. ஆனால் இஸ்லாம் இது சார்ந்த விடயங்களில் 1400 வருடங்களுக்கு முன்னர் கவனம் செலுத்தி உள்ளதுடன், இதனை வணக்கமாக (இபாதத்)ஆக பார்க்கின்றது. நீதி செலுத்துவதை தஃவாவிற்கு நெருக்கமான செயற்பாடாக இஸ்லாம் பாரக்கின்றது. நீதி கூறும் போது பாரபட்சமின்றி நீதி கூறுமாறு அல்குர்ஆன் (4:58) குறிப்பிடுகின்றது. அறியாமைக்கால (ஜாஹிலிய்யாக் கால) சூழலில் பெண்கள் அடிமைகளாகவும், இன்ப நுகர்ச்சி சாதனமாகவும், கணவனின் உடமைப் பொருளாகவும், நீதியற்ற உடமைப் பொருளாகவும், கோத்திரச்சார்பு வாதங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்ட சூழ்நிலையில் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைக் கூலியை எதிர்பார்த்து இந்நிலையை முற்றிலும் மாற்றியமைத்து விட்ட தன்னார்வத் தொண்டே அரேபியச் சமூகத்தின் சமூக நிலைமாற்றத்திற்கு வழிவகுத்தது.

❖ வாகனத்தில் ஏற்றி விடுதல் உட்பட சிறிய விடயங்களை செய்தல்

இஸ்லாம் சிறிய சிறிய செயற்பாடுகளைத் தன்னார்வச் செயற்பாடுகளாக ஊக்குவிப்பதுடன், இது இறைவனது கூலிக்காகவும் திருப்திக்காகவும் செய்யப்படுகின்றது., இஸ்லாத்தில் இது தர்மமாகவும் பார்க்கப்படுகிறது. "இருவருக்கிடையே நீதமாகத் தீர்ப்பளிப்பதும், ஒரு மனிதனை அவரது வாகனத்தில் ஏற்றி விடுவதும் அல்லது அவரது பொருளை வாகனத்தின் மீது ஏற்றிவிடுவதும், நல்ல வார்த்தைகளைக் கூறுவதும், தொழுகைக்காக எடுத்துவைக்கும் ஒவ்வொரு கால் எட்டும், தீங்கு தருபவற்றை பாதையை விட்டு அப்புறப்படுத்துவதும் தர்மமாகும் (ஸதகாவாகும்). என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்" (புகாரி, முஸ்லிம்).

❖ பாதையமைத்தல், பாதையில் பயணிப்பதற்கான இடர்களை அகற்றல்

மனிதர்கள் பயணிப்பதற்கான வசதியை ஏற்படுத்தல், பாதையமைத்தல், பாதையிலுள்ள இடர்தரும் பொருட்களை அகற்றுதல் போன்றன இஸ்லாமிய சூழலில் தன்னார்வத் தொண்டரியச் செயற்பாடாகக் காணப்படுகின்றன. இதனை இஸ்லாம் ஈமானியச் செயற்பாடாகக் குறிப்பிடுவதுடன் ஊக்கப்படுத்துகின்றது. “இறை நம்பிக்கைக்கு எழுபதுக்கும் அதிகமான கிளைகள் உண்டு. அவற்றில் சர்வசாதாரணமானது “துன்பம் தரும் பொருட்களைப் நடைபாதையிலிருந்து அகற்றுவது’ அவற்றில் உயர்வானது ‘லாயிலாஹ இல்லல்லாஹ்’ என்று கூறுவது” (திர்மிதி : 2614). என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் இச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு இறைவனின் மன்னிப்பும் நன்றியும் கிடைக்கின்றது. “ஒருவர் (தொழுவதற்காக) நடந்து வரும் பாதையில் ஒரு முள் மரக்கிளை கிடப்பதைக் கண்டு, அதை அந்தப் பாதையைவிட்டும் அகற்றும் பணியில் ஈடுபட்டால். அப்பணி அவரை (ஆரம்ப நேரத்தில் தொழுவதை விட்டும்) பிற்படுத்தி விட்டது. இத்தகைய மனிதருக்கு அல்லாஹ் நன்றி செலுத்துகிறான் அவருக்கு மன்னிப்பும் அளிக்கிறான்” (புகாரி : 652).

❖ நிதி மூலதனம் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்

இன்று ஒரு தன்னார்வச் செயற்பாடாகவும் விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயமாகவும் நிதி மூலதனம் சார்ந்த பிரச்சினைகள் உள்ளன. அவற்றுள் கடன், நுண் நிதிக் கடன், வங்கிக் கடன், வாழ்வாதாரத்தை முன்னெடுக்க நிதி இன்மை உட்பட பலவற்றினைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக இன்று அதிகமாக தற்கொலை, கொலை, வீட்டு வன்முறை, விவாகரத்து போன்ற சமூகப் பிரச்சினைகள் நிகழ்கின்றன. இஸ்லாத்தில் நிதி சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் மிகவும் நன்மையான கருமமாக ஊக்குவிக்கப்படுகிறது. கடன் நிறைவேற்ற அவகாசம் அளித்தல், அதனைக் குறைத்தல் என்பன போன்ற நற்கருமங்களுக்கு அர்ஷின்கீழ் நிழல் கிடைக்கும் (ஸுனன் திர்மிதி) என்பதுடன், மறுமையில ஏற்படவுள்ள துன்பங்களில் இருந்து தன்னைக் காப்பாற்ற ஆசைப்படுபவர்கள் கடனால் சிரமப்படுபவர்களின் கடனை நீக்கிவிடுங்கள் (ஸஹிஹ் முஸ்லிம்) போன்ற நபிமொழிகள் நிதி சார்ந்த தொண்டினை ஊக்குவிக்கின்றன. முஸ்லிம் சகோதரர் ஒருவரின் கடனை அடைக்கும் எந்த முஸ்லிமையும் அல்லாஹ் மறுமை நாளில் நரகிலிருந்து விடுதலை செய்யாமல் இருக்க மாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: ஷரஹுஸ் ஸுன்னா).

❖ மரம் நடுதல்

இஸ்லாமிய சூழலில் தொண்டரியச் செயற்பாடாக மரம் நடுகைச் செயற்பாடு காணப்படுகின்றது. இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “எந்த ஒரு முஸ்லிமாவது ஒரு மரத்தினை நாட்டி ஒரு வித்தை ஊன்றி அதன் மூலமாக ஒரு பறவை உண்ணுமாயின் அவருக்கு ஸதகாவின் நன்மை கிட்டும்” ( நபிமொழி)

❖ மனித அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்

மனிதன் உயிர் வாழ்வதற்கான அடிப்படையாக உணவும் நீரும் உள்ளது. இதனை நிறைவேற்றிக் கொடுத்தல் இதற்காகத் தொண்டாற்றல் இறைத்தூதரிய வழிகாட்டலாகும். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த புதிதில் முஸ்லிம்களுக்குத் தண்ணீர்த் தேவை அதிகரித்தது. இந்த

சந்தர்ப்பத்தில் ஒரு யூதனின் "பிஃர–ரூமா" என்னும் கிணற்றிலிருந்து தான் முஸ்லிம்கள் பணம் செலுத்தி தண்ணீர் பெற்றுக் கொண்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் இறைத்தூதர் விலையில்லாமல் அந்தத் தண்ணீரை மக்களுக்கு யாராவது பெற்றுத் தர மாட்டார்களா? எனக்கூற உஸ்மான் (ரழி) அவர்கள் 2,000 தீனார் கொடுத்துக் கிணற்றையும் வாங்கினார்கள். இத்தொண்டினால் இன்று வரை உஸ்மான் (ரழி) அவர்கள் நன்மை பெறுவதுடன், இவரது இத்தொண்டினால் இன்று ஒரு நட்சத்திர ஹோட்டல் ஒன்று கட்டப்பட்டடு வருவதுடன், இன்று வரை இதனது நன்மைகளை அவர் அனுபவித்து வருகின்றார்.

❖ அநாதைகளைுக்குத் தொண்டாற்றல்.

அநாதைகளைப் பாரமரித்தல், உணவளித்தல், அவர்களின் தேவையை நிறைவேற்றல் போன்றவற்றை இஸ்லாம் சுவனத்திற்குரிய தொண்டாக அடையாப்படுத்துகின்றது. ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரலி) அறிவித்தார். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் 'நானும் அநாதையின் காப்பாளரும் சொர்க்கத்தில் இப்படி இருப்போம்' என்று கூறியபடி தம் சுட்டுவிரலையும் நடுவிரலையும் இணைத்து அந்த இரண்டுக்குமிடையே சற்று இடைவெளிவிட்டு சைகை செய்தார்கள். (ஸஹீஹ் புகாரி 5304,6005) மேலும் அநாதைகளைப் பராமரிக்காதவர்கள் மறுமையை நிராகரிப்பவர்கள் ஆவர். நற்கூலி – தண்டனை கொடுக்கப்படுவதை பொய்யென் என்று சொல்பவனை (நபியே) நீர் பார்த்திருக்கிறீரா? அவன் தான் அநாதையை விரட்டுகின்றான் மேலும், வறியவரின் நிலை கண்டு உணவளிக்கும் படி (யாரையும்) அவன் தூண்டுவதில்லை" (அல்குர்ஆன் 107: 1–3) நபி (ஸல்) அவர்கள் குறைஷிப் பெண்களின் குணத்தைப் பற்றி கூறும் போது அனாதைகள் மீது அதிகம் பாசம் கொண்டவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்." அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒட்டகத்தில் பயணம் செய்த (அரபுப்) பெண்களிலேயே சிறந்தவர்கள் "குறைஷிப் பெண்கள் ஆவர்' அல்லது "நல்ல குறைஷிப் பெண்கள் ஆவர்'. அவர்கள் அநாதைக் குழந்தைகள் மீது அதிகமான பாசம் கொண்டவர்கள் தம் கணவனின் செல்வத்தை நன்கு பேணிக் காப்பவர்கள் ஆவர்." அறிவிப்பர் அபூஹ/ரைரா (ரலி), (நூல் : முஸ்லிம் 4946).

❖ குடும்பத்திற்குச் செலவிடல்

இறைத் திருப்தியை நாடி குடும்பத்திற்கு செலவிடல் நன்மையான செயலாகும். மேலும் மிகப் பெரிய உணரப்படாத தொண்டாகும். இதனை நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுமிடத்து "அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் செலவிட்டால் நற்கூலியைப் பெறுவீர் மனைவியின் வாயில் ஊட்டிவிடும் ஒரு கவள உணவிற்காகவும் நன்மை அளிக்கப்படும்" (புகாரி,முஸ்லிம்) என்ற நபி மொழியும் ஈகை, குடும்பத்திற்கு உணவளித்தல் போன்றவற்றின் சிறப்பினை வெளிக் கொணர்கிறது.

❖ நிலையான நன்மைக்காகத் தொண்டாற்றல்

சமூகத்திற்கு நிலையான நன்மையைத் தரும் பொது வேலைகளை முன்னெடுத்தல், பஸ் தரிப்பிடம் அமைத்தல், பொதுக் கிணறு அமைத்தல், கல்வி உதவி தேவையானவர்களுக்குக் கல்வி உதவியளித்தல், பொதுக் கட்டிடங்கள், மண்டபங்கள் அமைத்தல், பள்ளிவாசல், பாடசாலை என்பன முக்கியமான சமூகத் தொண்டாற்றக் கூடிய இடங்களாக உள்ளன. இதனையே "ஒரு மனிதனின் மரணத்திற்குப் பின் அவரது அமல்களில் மூன்றைத் தவிர மற்றவை எல்லாம் செயலற்றவை ஆகி விடுகின்றன. அம்மூன்று செயல்களாவன சதக்கத்துல் ஜாரியா, பலன் தரும் கல்வி, பெற்றோருக்காக

பிரார்த்திக்கும் நேர்மையான (ஸாலிஹான) பிள்ளைகள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி) (நூல்:முஸ்லிம்)

❖ தேவையில் பங்கு கொள்ளல் மற்றும் சிரமங்களை நீக்கி விடுதல்

இன்னொருவருடைய தேவையில் பங்கு கொள்ளுதல் மற்றும் சிரமத்தினை நீக்குதல் என்பவற்றை முக்கிய தொண்டாக இஸ்லாம் குறிப்பிடுகின்றது."யார் தன் சகோதரருடைய தேவையில் பங்கு கொள்கின்றாரோ அல்லாஹ் அவனது தேவையில் பங்கு கொள்கின்றான் (நபிமொழி). மேலும் யார் ஒரு முஸ்லிமுடைய சிரமத்தினை நீக்குகின்றாரோ அவரின் சிரமத்தினை அல்லாஹ் நீக்குகின்றான் எனவும் யார் செலவு செல்கின்றாரோ அவர் மீது அல்லாஹ் செலவு செய்கின்றான்" என்பன போன்ற நல்லம்சங்களை இந்நபிமொழிகள் குறிப்பிடப்பட்டு நிற்கின்றன. ஆகவே ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமிற்கு சகோதரன் ஆவான். அநீதி இழைக்க மாட்டான், கைவிடவும் மாட்டான். இந்நபிமொழிகள் சமூகத் தன்னார்வத் தொண்டு மற்றும் நலன்புரியின் அவசியத்தினைக் குறிப்பிட்டு நிற்கின்றன.

மேலும் இஸ்லாமானது மேலும் பல்வேறுபட்ட தொண்டுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதுடன், மேலும் தொண்டுப் பணியானது இபாதத்தாகவும், மறுமையில் பயன் பெறுவதற்கான இம்மையின் விளைச்சல் நிலமாகவும், சமூக நலனோம்பல், சமூக சமத்துவம், சமூக நீதி போன்ற நன்மைகளுக்கானதாகவும் உள்ளது. ஆகவே இஸ்லாமியத் தொண்டரியத்தினுடாக மானுடதேவைகள் பூர்த்தியடைந்த அகிலத்தினைக் கட்டியெழுப்புவோமாக.

**உசாத்துணைகள்**


- Aljijlasthani, Aboothauth. (1999). *Sunan Abu Dawud,* koyro: Makthaba Thijariyyah.
- Al Quran. (2002). (Tamil Translation) Ministry of Islamic affairs. Madeena; king Fahad publication.
- Hasan, A.U.(2013), Islam's encounter with women's rights and feminism : The need for greater engagement of Muslim womenVL - 2,JO - International Journal of Islamic Thoughts.
- Bin Yaeeh Alkasweenee, M. (1956). *Sunan Ibnu Maajah*. Egpt: Tharul Ihaaul kutub.
- Ismail Albuhaari, M. (1997). *Sahih al Bukhari*. Labanan: Tharul Arham.
- Mohammed Bin Isaah, Aththirmithi. (1970). *Sunan Attirmiti.* Egpt: lajnatul Tahleef. Hadees number 3470.
- Shankar Roa.C.N,(2019),Sociology: Principles of sociology with an introduction to social thoughts, S.Chand Publishing
- அப்துல் ஹமீது பாகவி ,ஆ.க. (1999). குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம். சென்னை. தாருல்ஹுதா வெளியீடு
- அலி அல் ஹாமி. முன்மாதிரி முஸ்லிம், தாருல் ஹுதா வெளியீடு.
- ஜாகிர் நாயக் — இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமைகள்., சாஜிதா புக் சென்டர்.



# தேடலிற்கான விடை

**ஆஸிபா எம்.ஜே.எப்.**
இரண்டாம் வருடம், பொறியியல் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வாய்ப்புகளை தேடிக்கொண்டிருப்போரில் அவனும் ஒருவன். ஆமாம் அவன் தான் அயான். கொஞ்சம் இல்ல நிறையவே கூச்ச சுபாவம் உடையவன். தன்னை பிறரின் முன் அடையாளப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். தனது திறமையை வெளிக்காட்டுவதற்காக சிறந்த களம் ஒன்றை தேடிக் கொண்டிருப்பவன். ஆனால் அவனின் எண்ணத்தை இவனின் மனம் முறியடித்து விடும். அதற்கு காரணம் அவனின் தாழ்வு மனப்பான்மை. என்னால் முடியாதோ என்கிற எண்ணம். அதுமட்டுல்ல, அவனின் A/L, O/L கால நட்புகளின் கேலிக்கணைகள் மற்றும் நையாண்டிகள். அவனின் பாடசாலையில் உள்ள சிலபல பாகுபாடுகள் என்று சில காரணங்களை அடுக்கலாம். அதனால் என்னவோ, அவனின் திறமைகளை அவனுள்ளே புதைத்து விட்டான். எதிலும் ஆர்வமின்றி ஒரு வெறுப்புணர்ச்சியோடு செயற்படத் தொடங்கினான். எப்படி இருந்தாலும், அவனின் இறைவன் மீதான நம்பிக்கை உறுதியாக இருந்தது. எப்பொழுதும் அவனின் மனவேதனையையும் அவனின் ஆசைகளையும் இறைவன் முன்னிலையில் பொறுப்புச்சாட்டி விடுவான். இதனால் என்னவோ அவனின் மனம் ஆறுதல் அடைந்து விடும். அடுத்து ஆறுதலிற்காய் அவன் நாடிச் செல்லும் இடம் அவனின் தாய் மடி. “உம்மா” என்றாலே எல்லோருக்கும் கொள்ளை பிரியம் தான். அதே மாதிரி தான் அவனுக்கும் என்று சொல்வதை விட அதற்கும் ஒரு படி மேலே என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். தாய் சொல் தட்டாத பிள்ளை அவன். உம்மாக்களிற்கும் ஆண்மகன் என்றால் உயிர் தானே. அது போல் தான் அவருக்கும். அவரின் தவப் புதல்வன் அல்லவா அவன். அவரின் வாழ்க்கையே அயான் தான். அவனின் கனவிலும் முதன்மை அவருக்கு.

அன்று ஒரு நாளும் இப்படித்தான், அவன் உயர்தரம் பயின்றுக் கொண்டிருக்கும் பாடசாலையினில் மாணவர் கலை விழா ஒன்று. அதற்கு அவனும் உரை ஒன்று நிகழ்த்துவதற்காக அவனின் பெயரினை பதிவு செய்திருந்தான். அவனின் நேரம் வரும் போது அவனும் மேடையேறினான் தான், ஏனோ தன்

உரையினை முழுமையாக அவன் கூறி முடிக்கவில்லை. காரணம், ஏதோ ஓரிடத்தில் அவனிற்கு ஏற்பட்ட வார்த்தைத் தடுமாற்றம். இது தான் சந்தர்ப்பம் என்று காத்திருந்த அவன் நண்பர் கூட்டமும் கைத்தட்டி அவனை மேடையில் இருந்து கீழ் இறக்கி விட்டனர். நண்பன் என்ற நாமத்தின் அர்த்தத்தை மறந்துவிட்டனர் போலும் அவர்களும். பாடசாலையில் இருந்து வீட்டிற்கு வந்த அவனும் தன் இறைவனிடமே முதலில் சரணடைந்தான். பின் அவன் அவனது நாட்குறிப்பேட்டை எடுத்து,

**“ என்னவோ ஒன்றை நினைத்து,**
**ஏதோ ஒன்றை மறந்து,**
**எதையோ ஒன்றை அலசி பாரக்கும்**
**நேரமதில்,**
**கண்களில் தத்துவமாய்**
**நீர் கசிய,**
**வானம் பார்த்து,**
**இறைவனை நோக்கி,**
**அழகிய வினாக்களை**
**தொகுத்து,**
**விடைகளிற்காய் ஏங்கி**
**காத்திருக்கும் ஒவ்வொரு**
**நொடி காத்திருப்புகளும் என்**
**வாழ்வில் அர்த்தமுள்ளதாகவே**
**கழிகின்றன...”**

என்று பொறித்து விட்டு தன் தாயை தேடிச் சென்றான். சாந்தமாய் அவரின் மடியில் தலையினை சாய்த்து வாகாய் அமர்ந்து தனது வழமையான புலம்பல்களை புலம்ப தொடங்கி விட்டான். அவனின் வழமையான முதல் கேள்வியே இது தான் “ஏன் மா எனக்கு மட்டும்? ஏன் நா நினைச்சது ஒன்னும் நடக்குதில்ல?” இப்படித் தான் அவனின் உள்ளக்குமுறல்களை இறக்கி விடுவான். இதற்கு அவனின் உம்மா அவனின் கேள்விற்கான பதிலை “அப்படி எல்லாம் நினைக்காதே தம்பி. எல்லாம் சரியாகி விடும். ஒன்னால முடியாதுண்டு யாரு சொன்னது? ஒன்னாலே எல்லாம் முடியும். எல்லாத்துக்குமே ஒரு காலநேரம் இருக்கிது. அந்தந்த டைம்ல தான் அது அது நடக்கும். அப்படித்தான் ஒனக்கும். நீ ஆசைப்பட்டது நினைச்சது எல்லாம் ஒரு நாள் நடக்கும் இன்ஷா அல்லாஹ். எப்பவுமே கஷ்டப்பட்டு முயற்சி செய்றவங்களே அல்லாஹ் ஒரு நாளும் கை விட மாட்டான். கஷ்டத்திற்கு பிறகு தானே இன்பம் இருக்கிது. பிறகு என்ன? எத பத்தியும் யாரை பத்தியும் யோசிக்காமே இப்போ நல்ல படி. பிறகு எல்லாம் தானா வரும்.” இப்படி அழகாக அவனின் தலையை கோதியவாறே சொன்னங்க. அவனிற்கு அவனின் உம்மா உண்மையிலும் ஒரு தேவதைப் போலத் தான். எந்த கஷ்டத்தைச் சொன்னாலும் அழகா இதமா சொல்லி மனதை ஒரு நிலைப்படுத்த வைச்சிருவாங்க. இவ்வாறே அவனும் அவனின் O/L, A/L காலங்களை கடத்தி விட்டான்.

ஒருவாறு தன் பழைய கால நினைவுகளில் இருந்து தன் நிகழ்கால உலகிற்கு தன்னை மீட்டெடுத்தான் அயான். ஆமாம், இதோ ஆயிற்று அவ்வளவு வேகமா ஆயிற்று, கால ஓட்டம் யாருக்காகவும் எதற்காகவும் நிற்பதில்லையே, அவனுக்கும் அப்படித்தான். அவன் சிறந்த பெறுபேறுகளோடு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி ஒன்பது மாதங்களையும் கடந்தாயிற்று. இதோ நாளை அவனும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டியே நாளாகவும் ஆயிற்று. அவனை விட அவனின் உம்மா தான் மிகவும் உற்சாகமாகவும் பரபரப்பாகவும் அவனுக்கு வேண்டியதை பார்த்துப் பார்த்துச் செய்து பம்பரமாய் சுழன்று கொண்டிருக்கிறார். பின் அவனின் ஊசலாட்டத்தை காணாமல் அவனைத் தேடி அவனது அறைக்குச் சென்றார். பின் அவனருகில் வந்து “என்ன தம்பி பலமான

யோசனை போல, உங்களுக்கு வேண்டியதெல்லாம் ரெடி பண்ணிட்டேன். ஓன்ட தேடலுக்கான விடை இனி கெடைக்கப் போகுது தம்பி. எத பத்தியும் வீணா யோசிச்சி மனச குழப்பிக்க வேணாம். நீங்க இதுவரைக்கும் ஓங்கட தெறமைகளை வெளிக்காட்ட தான் நல்ல களத்தை தேடிக்கிட்டு இருந்திங்க. அது ஒனக்கு நாளையிலே இருந்து கெடைக்க போகுது இன்ஷா அல்லாஹ். இங்கே பாகுபாடுகள் ஒன்னும் இல்ல. எல்லாருக்கும் சம உரிமை தான். ஒன்னயே கேலி பண்ண ஒன்ட ப்ரெண்ட்ஸ் இங்கே இல்ல. ஒன்ன தயார்படுத்துற ஒரு பயிர் நிலம் தான் இது. இதுல நீ முளைச்சி வளர்ரத்துக்கு ஒன்னாலே ஏலுமான முயற்சியே கொடு. ஓன்ட பயத்தை விரட்டி அடி. தயக்கத்தை விட்டு வெளியே வா. நீ இவ்ளோ காலம் படிப்பிற்கு எவ்ளோ முக்கியத்துவம் கொடுத்தியோ, அதே போல இங்கேயும் ஒன்ட திறமைகளை வெளிப்படுத்தவும் முக்கியத்துவம் கொடு. வெறும் ஏட்டுப் படிப்போட மட்டும் நிறுத்தி விடாமே வெளிச் செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடு. நீங்க இந்தக் கட்டத்தை அடைய எவ்ளோ கஷ்டப்பட்டிருக்கிங்கண்டு எனக்குத் தெரியும் தம்பி. அது அல்லாஹ்விற்கும் நல்லாத் தெரியும். ஓங்கட எதிர்பார்ப்பு, கனவு அது மட்டும் இல்லாம ஓங்களாலே இந்த சமூகத்திற்கு நடக்க வேண்டிய நலவுகளுக்காக தான் இறைவன் ஓங்களுக்கு இப்படி ஒரு கதவை திறந்து விட்டிருக்கான். இது அல்லாஹ்ட அருள். இது எல்லாருக்கும் அவ்வளவு இலகுவாய் கிடைக்கிறது இல்ல. ஓங்களுக்கு அது கெடைச்சிருக்கு தம்பி. அத நல்ல விதமா நீங்க தான் பயன்படுத்திக்கனும். அது ஓங்கட கையிலே தான் இருக்கிது.

இங்கே நம்மட சமூகத்திலே நிறையே அனாச்சாரங்கள் நடக்குது. அதே தட்டி கேட்க யாரும் இல்ல. **“உங்களில் எவராவது தீமையொன்றைக் கண்டால் அதைக் கையினால் தடுக்கவும், அதற்குச் சக்தியில்லாவிட்டால் நாவினால் தடுக்கவும். அதற்கும் முடியாவிட்டால் அதனை மனதால் வெறுக்கவும். இது ஈமானின் மிகப் பலவீனமான நிலையாகும்.”** என்று நபியவர்களும் சொல்லியிருக்காங்க. அப்போ இந்த அனாச்சரங்களை தட்டி கேட்கிற பொறுப்பு ஓங்களுக்கும் இருக்கிது. அதுமட்டுமில்லாமல் **“உம்முடைய சமூகத்தவரை இருளிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு செல்வீராக!” (14:5)** என்ற குர்ஆன் வசனமும் இருக்கிது. இவ்வளவு வழிகாட்டிகள் நம்மட மார்க்கத்துல இருந்தும் அத கண்டுக்காமே இருக்கிறது நம்மட அலட்சியத் தன்மையை காட்டுது. இந்த சமூகத்த பார்க்ககுள்ள நம்மட சமூக மக்களிற்கு மத்தியிலே தான் யாசகர்கள்ட தொகை அதிகமா வெளங்குது. **“நேர்வழியின் பக்கம் ஒருவர் அழைத்தால், அதைப் பின்பற்றுவருக்கு கிடைப்பதுப் போன்ற நற்கூலி, அழைத்தவருக்கும் கிடைக்கும்”** என்று ஒரு ஹதீஸும் இருக்கிது தம்பி. ஓங்களால ஏண்டளவு நல்லதை நிலைநாட்டுங்க. அது மட்டுமில்லாமே, அநாதைகள், விதவைகள் என ஒவ்வொரு வடிவங்களிலே பல இன்னல்கள நம்மட சமூக மக்கள் அனுபவிக்கிறாங்க. இதுகளிற்கானே தீர்வுகளே ஓங்களாலே ஏண்ட அளவு சிறு முயற்சியா எடுங்க தம்பி. இவ்வளவு காலம் ஓங்கட ஆசையும் இது தானே. என்னாலே சமூகம் பயன்படனும் அப்படிங்கிறது தானே.


இந்த சமூக பிரச்சனைகளிற்கான நடவடிக்கைகளே நீங்க ஸ்கூல் படிச்சிட்டு இருக்ககுள்ளே செய்றது சிரமம் தம்பி. அப்போ ஓங்களுக்கென்று ஒரு தனி அங்கீகாரம் இல்ல. இப்போ பல்கலைக்கழக மாணவன் என்கிற அங்கீகாரம் சமூகத்திற்கு மத்தியிலே இருக்கிது. இத தவற விட்றாதிங்க. ஒன்ட ஆர்வத்தை சமூகத்திற்கு தொண்டு செய்யவும் செலவளி. கடைசி மட்டும் சொல்றேன் தம்பி. இது தான் ஒனக்கான களம். ஒனக்கான சவால். ஓங்கட தேடலுக்கான விடை. நீங்க எப்படி படிச்சி முன்னேறுரிங்களோ அதுபோல ஓங்கள சுத்தியுள்ளே ஓங்கட சமூகத்தையும் முன்னேறச் செய்ங்க. ஓங்கள நல்ல சமூக நலன்விரும்பியாகவும், ஓங்கட மற்ற தெறமைகளையும் வளர்க்க இதத் தான் நீங்க பயன்படுத்தனும். இதுக்காகத் தான் இவ்ளோ நாள் நா துஆ கேட்டது. முயற்சி செஞ்சி வெற்றி அடைந்து திரும்பி வா தம்பி” என்று தனக்குத் தெரிந்த விடயங்களை அழகாகத் தொகுத்து, தனது பிரார்த்தனையை ஒரு சொற்பொழிவாக அளித்து விட்டு அவ்விடம் விட்டு நகர்ந்தார் அவர்.

அவரின் உரை என்னவோ ஒரு புதுத் தெம்பை, ஒரு புது உத்வேகத்தை அளித்தது வழமைப் போல் அவனுக்கு. அவனும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தன் அடுத்தக் கட்ட தேடலிற்கான விடையை அறிய ஆவலுடன் பல பல கனவுகளுடன் தன் அன்னையை பிரிந்து தன் பல்கலைக்கழக வாழ்க்கையினுள் புகுந்து விட்டான். அவனின் தேடல் இன்னும் அவனுள் ஊறிக் கொண்டு தான் உள்ளது. அது எப்பொழுதும் அவனுள் வற்றப் போவதில்லை. அது அவனின் முயற்சிக்கான இறைவனின் அருள். இங்கும் ஏனோ அவனுள் அதே பயம் தான். ஆனாலும் அவனின் உம்மாவின் ஞாபகமும் அவரின் சொற்பொழிவும் அவனிற்கு ஒரு உத்வேகத்தை அளித்துக் கொண்டே இருந்தது. அங்கே முதல் கட்டமாக orientation என்ற பெயரில் நிகழ்ந்த எண்ணற்ற தடவைகளிலான அறிமுகப்படலங்களிலே அவனின் பாதி தயக்கமும் பயமும் பறந்து விட்டது. அவனுள்ளும் புதுப் பிரகாசம், தன்னாலும் முடியுமென்ற அதீத நம்பிக்கை. அவை எல்லாவற்றிற்கும் காரணம் orientation பகுதியினில் கிடைத்த புது அறிமுகங்களும் அனுபவங்களுமே.

இப்படி கால கடிகாரமும் அதன் போக்கில் சுழன்றுக் கொண்டிருக்க, அவனிற்கான வாய்ப்புகள் அவனை நோக்கி பல்கலைக்கழக மாணவ சமூக நல கழகங்களாக மற்றும் வெளிக்கள செயற்பாடுகள் என சரமாரியாக வந்துக் குவிய, அதனை விட பல மடங்காக அவனின் கல்விசார் கற்றல் நடவடிக்கைகளும் exam, assignments, presentations, course works என்று பல கோணங்களில் அவனை கூறு போடவென அவன் மீது போர் தொடுக்க நிலைக்குலைந்து தான் போனான் அவனும். பல யோசனைகளின் பின் ஒவ்வொன்றாக அவனின் செயற்பாடுகளை அவன் பட்டியலிட ஆரம்பித்து நேர முகாமைத்துவம் பேணலானான். அவனுக்கு ஏற்றாற் போல அவனின் செயற்பாடுகளின் பட்டியலை வடிவமைத்து அதற்கேற்றாற் போல தன் யோசனைகளை செயற்படுத்தலானான் பல பல பிரார்த்தனைகளின் பின்னால். அவனின் நோக்கமும் **கற்றல் எவ்வாறு முக்கியமோ சமூகம் மீதான தன்னார்வச் செயற்பாடுகளும் முக்கியம்** என்ற தன் உம்மாவின் நோக்கமாகவே இருந்தது. தன்னால் இயன்றளவு தன் துறை சார்ந்த மற்றைய செயற்பாடுகளிலும் சமூகம்சார் நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுப்படுத்தினான். முதலில் கடினமாகத் தான் இருந்தது தன் கல்விச் சுமைகளோடு. இப்பொழுது அது தான் பழக்கமாயிற்றே. இதுதான் அவனின் தேடலுமாயிற்றே. இப்பொழுது அவன் புது மனிதன். தன் சமூகத்திற்காய் உழைக்கும் சிறந்த குடிமகன். தன் குரலினை எவ்வித தயக்கமுன்றி பயமுமின்றி தன் சமூகத்திற்கு எதிராய் நிகழும் செயற்பாடுகளிற்கு எதிராக உயர்த்தலானான். தன் பாடசாலை சகாக்களும் வாயடைத்துப் போய் அவனின் விழிப்புணர்வு உரைகளை கேட்கலானார்கள். இன்று அவனின் ஊரில் அவனைத் தெரியாதவர் எவருமில்லை. தனக்கான கல்வி மட்டும் போதும் என்று சுயநலவாதியாய் இருந்து விடாமல், அவனால் இயன்றளவு அவனின் ஊரிற்கும் சமூகத்திற்கும் கல்வி மேம்பாட்டு உதவிகளை செய்து தனக்கும் தன் சமூகத்திற்குமான பிணைப்பை உறுதியாக்கிய தாய் சொல் தட்டாத பிள்ளை அவன். அவனின் தேடலுக்கான விடையைப் பெற்ற தாய் போற்றும் ஆண் மகனாய் அவன் இப்பொழுது.

**" கண் கண்ட கனவை**
**மெய்யாக்கி இன்று உன்னால்**
**நான் தடம் பதித்து**
**வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன்**
**என் வாழ்க்கையினை...**
**--பல்கலைக்கழக வாழ்க்கை--"**

என்ற வரிகளை தன் நாட்குறிப்பேட்டில் பதித்த வண்ணம் தன் அடுத்தக் கட்ட நடவடிக்கைக்காய் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான் அயான். காலம் அதன் போக்கில் இன்னும் சுழன்ற வண்ணம் தான் உள்ளது.



# සමාජ සුබසාධනය හා නායකත්වයට අවනතවීමේ අවශ්‍යතාවය


**රසීනා ෆර්වීන් එම්.ටී.**
ශාස්ත්‍ර පීඨය,
ශ්‍රී ලංකා අග්නි දිග විශ්ව විද්‍යාලය.


සමාජ සුබසාධනය හා නායකත්වයට අවනතවීමේ අවශ්‍යතාවය පිළිබඳව සාකච්ඡා කිරීමට ප්‍රථම සමාජ, සුබසාධනය හා නායකත්වය යනු කුමක්දැයි අර්ථ විග්‍රහ කර දැක්වීම යෝග්‍ය වේ. සමාජ සුබසාධනය යනු සමාජ යහපතයි. එනම් මිනිසුන් වශයෙන් අප සමාජයක් ලෙස හා සමාජයකට අනුගතව ජීවත් වන්නෙමු. එම නිසාම මිනිසා සමාජ සත්ත්වයකු යැයි සමාජ විද්‍යාඥයන් පවසති. මෙසේ සමාජයක් ලෙස එක්ව ක්‍රියා කරන විට තමා ජීවත්වන සමාජයේ යහපත වෙනුවෙන් එනම් සමාජ සුබසාධනය වෙනුවෙන් කටයුතු කිරීම එක් එක් පුද්ගලයාගේ අනිවාර්ය වගකීමකි.

තවද නායකත්වය යනු මිනිස් කණ්ඩායමක නැතහොත් මිනිස් සමාජයක යහපත උදෙසා හා මිනිසුන්ට මග පෙන්වීම පිණිස මිනිසුන් විසින් ම පත් කරනු ලබන පුද්ගලයකු නායකයෙකු නම් වේ. නැතහොත් යම් කටයුත්තක් තමා විසින් ඉටු කළ හැකි යැයි ආත්මාභිමානයෙන් යුතුව ස්වේච්ඡාවෙන් ඉදිරිපත් වන අයෙකු නායකයෙකු ලෙස හැඳින්වේ. තවත් ආකාරයකින් පැවසුවහොත්, නායකත්වය යනු යම් අවස්ථාවන පරමාර්ථයක් ළඟා කර ගැනීම සඳහා එක් එක් පුද්ගලයින්ගේ හා පුද්ගල කණ්ඩායම් හි කටයුතු මෙහෙයවීමේ සහ බලපෑම් කිරීමේ ක්‍රියාවලිය භාර පුද්ගලයාය. මෙය නායකත්වය යන වචනයට සුදුසුම නිර්වචන වේ. තවද යම් කාර්යයන් සඳහා බලපෑම් කිරීම පිණිස නායකයෙකු විසින් තමන් සතු බලය සහ අධිකාරිය උපයෝගී කර ගනු ලබයි.

නමුත් එක් එක් ආගම්වලට අයත් ආගමික නායකයන් දෙවියන් වහන්සේ විසින් තම ගැත්තන් අතුරින් සුදුසු පුද්ගලයන්ව නායකයන් ලෙස එම එක් එක් ආගම අයත් වන සමාජයට මඟ පෙන්වීම පිණිස තෝරා ගන්නා ලදී. මෙය කෙසේ වෙතත් එසේ පත්වන්නාවූ

සියලුම නායකයන් හට අවනතවීම සමාජයේ අනෙකුත් සෑම පුද්ගලයෙකුගේම අනිවාර්ය වගකීමකි. එසේ පත්වන්නාවූ නායකයන් තම ආත්මාර්ථකාමී භාවයෙන් කටයුතු නොකොට සමාජයේ සියලුම දෙනා එක හා සමානව සිතා තම සමාජයේ යහපතට සහ ආරක්ෂාවට දිවිහිමියෙන් කැප විය යුතුය. මෙය ඔවුන් සතු අනිවාර්ය වගකීමකි.

ඉහත කරුණු මගින් සමාජ සුබසාධනය හා නායකත්වය යනු කුමක්දැයි අර්ථ විග්‍රහයක් ලබාගත හැකිය.එබැවින් අපගේ මාතෘකාව වන සමාජ සුබසාධනය හා නායකත්වයට අවනතවීමේ අවශ්‍යතාව පිළිබඳව සලකා බලමු. ප්‍රථමයෙන්ම නායකත්වය හා එයට අවනත්වීමේ අවශ්‍යතාව පිළිබඳව විවිධ ආගමික දෘෂ්ටි කෝණය හා එම ආගම් මේ පිළිබඳව සඳහන් කර ඇති මාර්ගෝපදේශයන් පිළිබඳව සලකා බලමු.

ලොව පහළ වූ සියලුම ආගම් හා දර්ශනයන් මෙම නායකත්වය පිළිබඳව කරුණු විග්‍රහ කොට ඇත. මුලින්ම ඉස්ලාම් දහමෙහි දෘෂ්ටියෙන් නායකත්වය පිළිබඳව සලකා බලමු ඉස්ලාමයේ "අල් කියාදා"යන අරාබි පදයෙන් නායකත්වය යන අර්ථය ලබාදේ. බලපෑමක් නැති ආකාරයෙන් මිනිසුන්ට ක්‍රියා කිරීමට ඉඩ හැරීම නායකත්වය යැයි හිෂාම් තාලිබ් මහතා විසින් නිර්වචනය කරනු ලැබ ඇත

මිනිසාගේ ලෞකික ජීවිතය හා පරලොව ජීවිතයට මග පෙන්වීම පිණිස මුහම්මද් (සල්) තුමාණන්ව අල්ලාහ් දෙවියන් තෝරාගන්නා ලදී. එතුමාණන් මුලු ලොවටම ආදර්ශමත් වූ උතුම් නායකයෙකි. නායකත්වයට සුදුසු සියලුම ගුණාංගයන් එතුමාණන් තුළ අනුගතව පැවතිනි. එතුමා අල්ලාක් දෙවියන් තමන් හට පැවරූ සියලුම කාර්යයන් මනා ලෙස ඉටු කළහ. තනි පුද්ගලයෙකු ලෙස හා ආදර්ශමත් නායකයකු ලෙස ජීවිතය ජයගත් පුද්ගලයන් අතුරින් මෙතුමාට සුවිශේෂී බවක් හිමිවේ. එබැවින් මයිකල් එච් හාට් විසින් තම ඔයැ ා්මබාරුා නැමති ග්‍රන්ථයේ මෙතුමා පිළිබඳව මුලින්ම සඳහන් කොට ඇත.

කිසිම තාක්ෂණික දියුණුවක් නොතිබු එම කාලයේ මුස්ලිම් සමාජයට උචිත සංස්කෘතියක් හා ශිෂ්ටාචාරයක් එතුමන් විසින් ගොඩනගා ඇත. මෙය නායකත්වය සතු උතුම් ගුණාංග යකි. තවද කුර්ආණයේ මෙම නායකත්ව ගුණාංගයන් පිළිබඳව හා එයට අවනතව කටයුතු කිරීමේ අවශ්‍යතාවය පිළිබඳව පැහැදිලි ලෙස සඳහන් කොට ඇත.

"විශ්වාස කළ වුනි! අල්ලාහ්ට කීකරු වනු, තවද ධර්මදූත වරයාටද කීකරුවනු, තවද නුඹලා අතුරින් බලතල පවරා ඇති අයට ද කීකරු වනු."

( සූරා අන්නිසා : 59)

මේ මගින් අල්ලාහ්ට හා රසූල්වරයාට පමණක් නොව සියලුම සමාජ නායකයන්ට ද අවනතව කටයුතු කරන මෙන් අල්ලාහ් දෙවියාණන් අල්කුර්ආණය සඳහන් කොට ඇත එසේ අල්කුර්ආණයේ පැවසීමට හේතුව මෙසේ යටත් වීම හෙවත් අවනතවීම සමාජයේ යහපතට හේතුවන කරුණක් බවය. තවද ඉතාමත් ප්‍රසිද්ධ කදිස් ග්‍රන්ථයක ද මේ බව සඳහන් වේ.

නබි (සල්) තුමාණන් සැවසූ ලෙස අබූ සුරරා (රළි) එතුමාණන් දැනුම් දෙයි. ඉමාම් වරයා එක් ආරක්ෂක පළිහක් ලෙස ක්‍රියාකරයි, ඔහුට පසුපසින් සිට මිනිසුන් යුදබිමේ යුද කරයි, ඔහු මගින් ඔවුන් (එම මිනිසුන්) ආරක්ෂාව සලසා ගනී. (මුස්ලිම් ග්‍රන්ථය)

තවත් හදීසයක මෙසේ ඉබ්නු අබ්බාස් (රළී) තුමා ණන් දැනුම්දෙයිඃ තම පාලකයාගෙ න් තමා අකමැති අඩුපාඩුවක් දකින්නේ නම් එය ඉවසීමෙන් යුතුව දරාගන්න, ඇයිද නම් කෙනෙකු එසේ ඉස්ලාමයේ මගපෙන්වීමෙන් මිදී මිය යන්නේ නම් ඔහු ජාහිලියා මරණයට පත්වූ කෙනෙකු මෙන් වේ. එනම් ජාහිල් යනු අනුවණ නම් තේරුමද දේ.

(මුහාරි ග්‍රන්ථය )

තවද නබිතුමාණන් මෙසේ පැවසීයඃ ඉස්ලාමයේ සම්පත් එකින් එක විනාශ වී යයි. එකක් විනාශ වන විට ජනයා අනෙක අත්පත් කර ගනී. එම ආකාරයට මුලින්ම විනාශ වන්නේ නායකත්වයයි. අවසානයට විනාශ වන්නේ සලාතයයි.

(අහ්මද් ග්‍රන්ථය )

තවද තවත් හදීසයක මෙසේ සඳහන් වේ. තිදෙනකු ප්‍රවාහනය යෙහි යෙදෙන්නේ නම් එයින් එක් අයෙකුව නායකයකු ලෙස පත් කරගන්න. (බුහාරි ග්‍රන්ථය )

තනියෙන් ක්‍රියාකිරීම හා වෙන්වීයාම ඉස්ලාමය විසින් තරයේ හෙළාදකියි. එබැවින් සමාජයක් ලෙෂ ජීවත්වීමේ අවශ්‍යතාවය හා නායකත්වයට අවනතවීමේ අවශ්‍යතාව ඉස්ලාමය පැහැදිලි කරයි.

තවද ශ්‍රී ලංකාවේ ඇති ප්‍රධානම ආගම වන බුද්ධ දර්ශනය මගින් ද නායකත්ව ගුණාංග යන් මනොව පැහැදිලි වේ. මිහි පිට උපන් ශ්‍රේෂ්ඨතම හා ආදර්ශවත් නායකයාණෝ බුදු රජාණන් වහන්සේ බව බෞද්ධයන් සඳහන් කරති. උන් වහන්සේ නායකයෙකු ලෙස හඳුන්වා ගනු නොලැබුවද උන් වහන්සේගේ චරිතය පුරාම උදාර නායකයකු සතු ලක්ෂණ දක්නට ලැබෙන බව කියති. බුදුරජාණන් වහන්සේ හැඳින්වීමට ශාන්ති නායක ලෝක නායක ආදී යෙදුම් ද භාවිත වේ. බුදු පියාණන් වහන්සේ තම ශ්‍රාවකයන් වහන්සේට ආදර්ශ සම්පත් ලෙස කටයුතු කළ ශාස්තෘන් වහන්සේ නමකි. ඒ බව බුද්ධ චරිතය තුළින් මනාව පැහැදිළි වේ. එමෙන්ම චරිතවත් බව, අගතිගාමී නොවීම, යථාවාදී තථාකාරී ගුණය, සමානාත්මතාව, ඉවසීම අනුකම්පාව, නම්‍යශීලී භාවය, නිවැරැදි දර්ශනය වැනි නායකත්ව ගුණාංග බුදු රජාණන් වහන්සේ තුළ නොඅඩුව පැවතිණි. එසේම තියන ආකාරයටම කරන, කරන ආකාරයටම කියන ලක්ෂණය එනම් යථාවාදී තථාකාරි ගුණය බුදු සිරිතෙන් ප්‍රකට විය. වර්ණ භේදය, ගෝත්‍ර භේද, නොසැලකිය යුතු බව බුදු රජාණන් වහන්සේ නොයෙක් අවස්ථාවලදී ක්‍රියාවෙන්ම සනාථ කළහ. උන් වහන්සේ සියලු මිනිස් වර්ගයාට දැක්වූයේ සමාන මෛත්‍රීයකි, සමාන දයාවකි. තමන් වහන්සේ අවබෝධ කරගත් උතුම් ධර්ම මාර්ග යට සෙස්සන්ද යොමු කරවීම සඳහා උන් වහන්සේ කුල, ජාති, ආගම්, භේද නොසලකා ඉදිරිපත් වූ සේක. තම අනුගාමිකයන්ගේ විවිධ වූ කුසලතා ශක්තීන් තේරුම් ගෙන ඔවුන්ට සුදුසු වගකීම් පවරා උපරිම සේවයක් ලබාගත් අයුරුද, අනුගාමිකයින්ගේ දුබලතා පෙන්වා දී සුමගට ගැනීමේ ලක්ෂණයද බුදු සිරිත තුළ මැනවින් දක්නට ලැබේ. කුටදන්ත සූත්‍රයෙහි නිවැරැදි නායකත්වය අංග අටකින් සමන්විත විය යුතු බව සඳහන් වේ. හෙතෙම බහුශ්‍රැත අයෙකු විය යුතුය. (බහුස්සුත) කාරය අකාරය පැනවින් වටහාගත හැකි පුද්ගලයකු විය යුතුය. බුද්ධිමත් විය යුතුය. (මේධාවී) ක්‍රියා ශූර විය යුතුය. (පටිබලො)

"බහුස්සුකො තස්ස තස්සෙව

සුභ ජාකස්ස - පණ්ඩිකො
ව්‍යක් කො මෙධාව
පටිබලො අතීතානාගක
පච්චුපපන්නෙ අත්දෙ
(කූටදත්ත සූත්‍රය)

ගුණයෙන් පිරි දැනුමෙන් ක්‍රියාශූරත්වයෙන් පොර නායකත්වය අඩු පාඩු සහිත ය. දැනුමෙන් පිරි ගුණයෙන් තොර නායකත්වය ද එවැනි ය. එබැවින් ගුණයෙන් හා නුවණින් යන දෙකින්ම එකසේ පරිපූර්ණ විය යුතුය. එය සර්ව සම්පූර්ණ නායකත්වයකි. ලෞකික ජන සමාජයෙහි නායකත්වය පිළිබඳ සංකල්පය බුදු දහම අනුව නව වටිනාකම් ලබන අයුරු මේ අනුව පැහැදිලි කර ගත හැකි ය. පුද්ගල නායකත්වය නැතත් සිල්වත්, ගුණවත් උගත් භික්ෂුවකට ගරු කිරීම හා ඔහු අනුගමනය කිරීම සාමාන්‍යයෙන් විනය ව්‍යවස්ථාවනට අනුකූලය.

ධාර්මිකත්වය හා සදාචාරාත්මක ජීවිතය හා මානුෂික අවශ්‍යතා පිළිබඳ මනා වැටහීමක් ඇති බව යනාදී නිවැරදි නායකත්වයක ලක්ෂණයකි. නායකත්වයෙහි ධාර්මික හෝ අධාර්මික බව කෙතරම් ප්‍රබලදැයි කිවහොත් එය ස්වාභාවික පරිසරයේ නියමයන් වෙනස් වීමට පවා තුඩු දෙන බව බෞද්ධ මූලාශ්‍රයන්හි සඳහන්ව ඇත. නායකත්වය අයහපත් වන විට දූෂිත වන විට භෞතික නියමයක් ඍතු ගුණයන් පවා වෙනස් වේ යැයි කියා ඇත්තේ නායකත්වය සදාචාරාත්මක පැවැත්ම කෙරෙහි යොමුවීමේ අවශ්‍යතාව අවධාරණය කිරීමටය. (අංගුත්තර නිකාය)

එහිදී අවධාරණය කරන්නේ සදාචාරාත්මක චරිතය, අවංක කම, කාර්යක්ෂමතාව, ඉවසීමේ හා ඇප කැපවීම පිළිබඳ අවශ්‍යතාවයි. නායකත්වය ශ්‍රී නාමයක් ලෙස නොව මිනිසා කෙරෙහි අර්ථවත් වන ප්‍රායෝගික ක්‍රියාකාරීත්වයන් පිළිබිඹු කරන මෙහෙයවීම පිළිබඳ වැදගත්ම වගකීම වශයෙන් බුදු සමයෙහි නව වටිනාකම් ලබන අයුරු මේ තුළින් මනාව පැහැදිලි වන බව බුද්ධ දර්ශනය පවසයි.

මේ ආකාරයටම හින්දු ආගම, කතෝලික ආගම ඇතුළු සියලුම ආගම් නායකත්වයට ඉතාමත් වැදගත්කමක් දී ඇති ආකාරය බයිබලයේ මෙන්ම භගවත් ගීතයෙහිද සඳහන්ය. මේ අයුරින් ලොව පහළ වූ සියලුම ආගම් හා ආගමික නායකයන් එම නායකත්වය මනාව පිළිබිඹු කළ බව පැහැදිලිය. විවිධ ආගම් නායකත්වය පිළිබඳව දැක්වූ කාරණාවන් පිළිබඳව සලකා බැලුවෙමු. දැන් එම නායකත්වයට අවනතවීමේ අවශ්‍යතාවය හා සමාජ සුබසාධනය කෙරෙහි එය බලපාන ආකාරය පිළිබඳව සාකච්ඡා කරමු. කයේ ජීවත්වන සෑම මිනිසෙකුම සමාජයක් ලෙස ජීවත් වීමට ප්‍රිය කරයි. මිනිසා සමාජ සත්ත්වයෙකි. සමාජයක් ලෙස ජීවත් වීමේ දී ඔවුන් මෙහෙයවීමට නායකයන් අවශ්‍ය වේ. ඔවුන් ආගමික නායකයන්, කණ්ඩායම් නායකයන්, රටේ නායකයා, ආදී වශයෙන් තවත් අය සඳහන් කළ හැකිය. මෙසේ ඔවුන්ට අවනතවීම සමාජයේ සෑම පුද්ගලයකුගේම අනිවාර්ය වගකීමකි. පුද්ගලයෙකු තවත් පුද්ගලයකු මත යැපී ජීවත් වීමේ අවශ්‍යතාවයක් මෙම සමාජ තුළ බිහිවේ. එවිට නායකත්වය ද අවශ්‍ය වේ. නබි සල් තුමාණන් මේ පිළිබඳව මෙසේ සඳහන් කර ඇත: ඔබලා සියලුම දෙනා පාලකයන්ය. ඔබලා අතරින් සෑම අයෙකුම තම පාලනය පිළිබඳව විමසුමට ලක්වේ. (බුහාරි ග්‍රන්ථය )

මෙසේ නායකත්වයට අවනත වන්න යැයි පවසන ඉස්ලාමය නායකයෙකු තුළ තිබිය යුතු ගුණාංගයන් පිළිබඳව පවසා ඇත. ඉස්ලාමය පවසන ආකාරයට ඉස්ලාමීය නායකයෙකු සතු පහත සඳහන් ගුණාංගයන් තිබිය යුතුය. ඉස්ලාමීය අංගයන් අනුගමනය කරන පුද්ගලයෙක් විය යුතුය. මිනිසුන් අතර නිත්‍යානුකූල තීන්දුවක් ලබාදෙන පුද්ගලයෙකු විය යුතුය. මිනිසුන් පාපයෙන් වැළැක්විය යුතුය.මෙම අංශයන්ගෙන් තොරව ක්‍රියා කරන නායකයන්ට අවනතවීම වගකීමක් නොවේ යැයි නබි (සල්) තුමාණන් සඳහන් කරයි. මෙසේ නායකත්වයට අවනතවීම මගින් සමාජයේ ඇතිවිය හැකි අයහපත් බලපෑම් වලින් සමාජය මුදවා ගත හැකිය. නූතන ලෝකය ගත් කළ මුළු මහත් ලෝකයම මෑත කාලයේ සිට කොරෝනා හෙවත්

ක්දඩසා 19 නමැති වෛරසයෙන් පීඩා විඳිමින් පවතී. මෙම වෛරසය මගින් ලක්ෂ ගණන් ලෝවැසියන්ව තම ගොදුරට ගිලගනිමින් පවතී. මේ අවස්ථාවේදී සමාජයේ විවිධ නායකයන් සමාජ යහපත උදෙසා විවිධ තීන්දු තීරණ ගෙන එය අනුගමනය කරන ලෙස ජනතාවට දැනුවත් කරමින් සිටි. නමුත් ජනතාව මේ පිළිබඳව එතරම් සැලකිල්ලක් නොදක්වා කටයුතු කිරීම දුකට හේතුවන කරුණකි. මේ හේතුවෙන් ශ්‍රී ලංකාව තුළ ද වෛරසය ආසාදනය වන සංඛ්‍යාව සහ මරණ ප්‍රතිශතය දිනෙන් දින වර්ධනය වෙමින් පවතී. මීට හේතුව ආගමික නායකයන්, වෛද්‍ය ක්ෂේත්‍රය, ආරක්ෂක අංශය, හා රාජ්‍ය නායකයන්ට ජනතාව අවනත නොවීම හේතුවෙනි. ඔවුන් හට අවනත වී කටයුතු කලානම් අද ශ්‍රී ලංකාවට මෙවැනි තත්ත්වයක් උදා නොවන්නට තිබිණි. නැතහොත් සිදුවන හානිය අවම වන්නට ඉඩ තිබුණි. මෙම සිදුවීම නායකත්වයට අවනතවීම පිළිබඳව පැවසීමට කදිම නිදසුනකි. එබැවින් මුලු මහත් සංහතියේම ජනතාව අවනත නොවීම හේතුවෙනි. ඔවුන් හට අවනත වී කටයුතු කලානම් අද ශ්‍රී ලංකාවට මෙවැනි තත්ත්වයක් උදා නොවන්නට තිබිණි. නැතහොත් සිදුවන හානිය අවම වන්නට ඉඩ තිබුණි. මෙම සිදුවීම නායකත්වයට අවනතවීම පිළිබඳව පැවසීමට කදිම නිදසුනකි. එබැවින් මුලු මහත් සංහතියේම සුබසාධනය උදෙසා නායකයින් විසින් ගනු ලබන තීන්දු තීරණ වලට අවනතවීමට වග බලා ගනිමු. එය අපගේ වගකීමක් ද වේ. එබැවින් යහපත් නායකත්වයකට අවනතවීමකින් තොරව සමාජ සුබසාධනයක් ද නොමැත.

## මූලාශ්‍රයන්


1. பிரைன் டிரேசி, நாகலட்சுமி சண்முகம். (2018). தலைமைத்துவம். 1ம் பதிப்பு. மஞ்சுல் பப்லிசிங் ஹவுஸ்.
2. இரா. சாத்ராக். (2020). தலைமைத்துவம், கிறிஸ்துவ தலைவனின் பண்புகள், 1ம் பதிப்பு. Nation Press.
3. மு. ஆஸிம் அலவி. தலைமைத்துவம் ஓர் இஸ்லாமிய அணுகல். (2005). 1ம் பதிப்பு. Millanium.

## THARAWEEQ 2021 AT MASJID



## IFTHAR - 2021






## SHRAMADANA CAMPAIGN AFTER COVID PANDEMIC - 2021







1ST ADHAN



1ST JUMMAH - 2019



1ST JUMMAH



1ST MASTER PLAN MEETING



SITE VISIT BY ENG. IMRAN



DEAN ENGINEERING VISITED SITE



ARMY SUPPLIED WATER FOR CONSTRUCTION



CONSTRUCTION VISITED BY ENG.AASHIQ, ENG.MOOFAJ AND ENG.NIMAS








UNIVERSITY MASJID




UNIVERSITY MASJID
Kilinochchi Premises, University of Jaffna.





# விழுதல் அல்லது வேர்படர்தல் அத்தோடு கவிஞன்

**சரிப்தீன் முஜாஹித் அஹமத்**
முதலாம் வருடம், விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உன் தொழில்
கவிதை எழுதுவது தானா ?
இல்லை
எப்போதும்
என் கவிதைகளின் நோக்கம்
ஊதியமாக இருந்ததில்லை

நேற்றைய வெடிப்பில்
குழந்தைகள் சிதறிக் கிடந்த
ஆலயத்தின் சிதைந்த பழங்கால சுவரொன்றில்
அந்த கவிதைகளின் நோக்கங்கள் என்னென்ன ?

சில ஆபிரிக்க குழந்தைகளுக்கு
தண்ணீர்ப்பை ஒன்றோடு ஒரு சில ரொட்டித் துண்டுகள்
சிரியாவின் மலர்ச்சி மிக்க குழந்தைகளுக்கு
மருந்து போத்தல்கள் சிலதோடு ஒட்டுத் துண்டுகள்
தவழ்ந்த இடத்தின் வாசத்துக்காய்
போராட்டங்களோடு புன்னகைக்கும்
பலஸ்தீன் குழந்தைகளுக்கு இன்னும் சில
இன்திபாழா கற்கள்–
நாடு துறந்த தூரப் பயணமொன்றில்
வழியில் நடக்கவியலாமல் வீழும்
பர்மாக் குழந்தைகளுக்கு உறுதி மிக்க
நடைவண்டிகள்

சிவப்பு ரோஜாக்களின் நிறத்தையெல்லாம்
மேலும் சிவப்பாக்கிய படிக்கு
அநீதிக் குருதி சிதறும் காஷ்மீர் குழந்தைகளுக்கு
மகிழ்ச்சி பொங்கும் தீச்சுடர்கள்–
இத்தனைக்காகவும் தான் எழுதினேன்

இத்தனைக்குப் பின்பும்
நீ ஒன்றை மறந்து விட்டாய் கவிஞனே
உன் குழந்தைகள்
அநாதைகளாகத் தானே போகிறார்கள்
இப்படித்தான்
அந்தக்கதை ஆரம்பித்தது–
இரத்தத்துளிகளின் மீதே
வீரம்மிக்க சரித்திரங்கள் முளைத்தன



# துவேசமும் பாரபட்சமும் களைந்த ஐக்கியம்

**ஷேக் கலாநிதி. அல் இஸ்ஸா**
பொதுச் செயலாளர்,
உலக முஸ்லிம் லீக், சவூதி அரேபியா.

**தமிழில்: எம்.ஆர். றிப்அத் முகம்மது**
B.A (Hons),
விடுகை மாணவன் (2013/14).

உலக முஸ்லிம் லீக் அமைப்பின் பொதுச் செயலாளர் என்ற வகையிலும் உலகின் பல தலைநகரங்களைச் சேர்ந்த ஒன்றுபட்ட இணக்கக் கழகங்களின் தலைவர் என்ற வகையிலும் நான் பல விடயங்களை வலியுறுத்தியாக வேண்டும். ஆரம்பமாக, முஸ்லிம் தேசங்களிலும் எமது உடன்பிறப்புகளுடன் இணைந்து வாழுகின்ற ஏனைய தேசங்களிலும் உச்சபட்சமாக நாம் கேட்கும் குரல்கள் கனிவான குரல்களே. அக்குரல்கள் சகலருக்கும் அன்பை வென்றெடுக்கும் குரல்கள், எவ்வடிவம் கொண்ட துவேசத்தையோ பாரபட்சத்தையோ புறக்கணிப்பையோ புறந்தள்ளும் குரல்கள்.

இக்குரல்களே உண்மையாக எமது மதங்களையும் சமூக, மனித விழுமியங்களையும் பறைசாற்றும் இன்றுள்ள குரல்கள்.

மற்றைய குரல்கள் தனித்த, தீவிரக் குரல்கள். அக்குரல்கள் மாறுபட்ட எண்ணங்களை வளர்ப்போரின் காழ்ப்புக் கண்ணோட்டத்தைப் பறைசாற்றும் குரல்கள்.

தீவிரவாதக் குழப்பம் என்பது மதக் கொள்கைகளின் மூலமோ தத்துவஞானிகள் மூலமோ சமூகவியலாளர்கள் மூலமோ ஏற்படுவதன்று. மாற்றுக் கருத்துகள் மூலமாகவோ கோட்பாடுகள் மூலமாகவோ எமது நன்மதிப்பைப் பெறும் கடந்தகாலப் படிப்பினைகள் மூலமாகவோ ஏற்படுவதும் அன்று.

இந்த விடயங்களையும் அவற்றின் பிரயோகத்தையும் விளங்கிக்கொள்வதிலும் திரித்துக் கூறப்படும் கருத்துகளிலிருந்து காத்துக் கொள்ளும் திறனிலுமே குழப்பம் உள்ளது. அத்திறன் மூலம் நெறியற்ற எண்ணங்கள் ஊடுருவிக் குழப்பங்கள் வெடிப்பது இல்லாமலாகும். உன்னதமான கருத்துகள் திரித்துரைக்கப்படுவதை நாம் தடுக்க வேண்டும்.

சில அரசியலமைப்புகளிலும் சட்டங்களிலும் காணப்படும் விளக்கமற்ற தன்மையாலும் அவை அளிக்கும் சுதந்திரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதிலுமே குழப்பம் உள்ளது.

துவேசம், பாரபட்சம், புறக்கணிப்பு போன்றவற்றை முன்னெடுப்பதற்கான சில நம்பிக்கைகளும் செயற்பாடுகளும் போலிப் பதாகைகளின் கீழ் தலைமறைந்து நடைபயில அவை வழிவகுத்துள்ளன.

அறிவார்ந்த, போற்றத்தக்க, ஒருங்கிணைந்த நீதியே உலகத்துக்கு வேண்டியுள்ளது. விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வதை மேம்படுத்துவதன் மூலம் மாத்திரமே இதனை ஈட்டிக்கொள்ள முடியும். அதுவே மத, இன அடிப்படையிலான அல்லது அத்தகைய கொடியின் கீழான எவ்வகையான துவேசத்தையும் இனவாதத்தையும் பாரபட்சத்தையும் புறந்தள்ளும்.

மேலும், பொருளீட்டங்களை நோக்கிய நாகரிகப் பாய்ச்சல்களை பண்பாட்டு விழுமியங்களை நோக்கிய நாகரிகப் பாய்ச்சல்களாக ஈடுசெய்ய வேண்டும் என்பதைக் காத்திரமாக உறுதி செய்வதே உலகின் தேவை. அல்லாது போனால் விளைவுகள் மரண பயத்தையே தோற்றுவிக்கும்.

இங்குதான் சமாதானத்தின் மெய்க் கதை உள்ளது.

சமாதானத்தை உருவாக்குதல் என்பது வெறும் வார்த்தைகளின் வடிவத்தால் அல்ல. அல்லது உடையும் போது ஓசையையே தருகின்ற எந்தவித உட்பொருளையும் கொண்டிராத நீர்க்குமிழிகளை விடுவது போன்றதும் அல்ல.

சமாதானத்தை உருவாக்குவதற்கு நியாய விரோதக் கோட்பாடுகள் தேவையற்றவை. அதை மேலும் சிக்கலுக்குள்ளாக்கக் கூடிய வேண்டுகோள் விடுப்புகளும் சுலோகங்களும் தேவையற்றவை. உளப்பூர்வமான, நேர்மையான எண்ணங்களுக்கும் எதிர்காலத்தைப் பற்றிய ஆழ்ந்த விழிப்புக்கும் துணை நல்காத பேச்சுவார்த்தைகளும் தேவையற்றவை.

சுருங்கக்கூறின், சமாதான முயற்சிகள் மனித சமுதாயம் உணர்ந்து அனுபவிக்க வல்ல காத்திரமான நலன்களைப் பலன்களாகக் கொண்டிருக்க வேண்டும். அவை பாதுகாப்பையும் சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதோடு சகோதரத்துவப் பிணைப்புகளை வலுப்படுத்தவும் வேண்டும்.

ஏமாற்றமான, உடைந்து போகக்கூடிய, மேலெழுந்தவாரியான ஒரு சமாதானத்தைக் கொண்டாடுதல் சமாதானத்தின் உண்மையான விழுமியங்களை நடைமுறைப்படுத்தும் நெறிகளுக்கு முரணான விடயத்தையே திண்ணமாகக் கொண்டிருக்கும் என்பதுடன் அதனையே அது ஊக்குவிக்கும்.

துவேசங்கொண்டோர், இனவாதங்கொண்டோரைப் பொறுத்தவரையில், அவர்களை எதிர்கொள்ளும் போது அவர்களுடைய மனோநிலைக்கு ஏற்றவாறு நாம் ஒருபோதும் சாய்ந்து விடக்கூடாது. அவர்களின் கொள்கைகளையும் செயல்களையும் நாம் புறக்கணிக்கின்ற போதிலும் அன்புடனும் தயவுடனுமே அவர்களை எதிர்கொள்ள வேண்டும்.

மதங்களையும் பண்பாடுகளையும் ஏனைய ஐதீகங்களையும் பின்பற்றுவோர் அனைவரும் எமது சகோதரங்களே. மதங்களையும் பண்பாடுகளையும் பின்பற்றுவோர் மத்தியிலும் வேறுபட்ட சிந்தனை கொண்டோர் மத்தியிலும் பொதுவாக இச்சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்காக நாம் மேலும் ஒன்றிணைவோம்.

இத்தகைய முயற்சிகளே தேசங்களுக்கும் மக்களுக்குமிடையே நற்புறவைக் கட்டியெழுப்ப எமக்குத் துணைபுரியும். அத்தகைய திறன்வாய்ந்த செயற்பாடுகளை அதிகளவில் தொடக்கி வைப்பதற்குப் பல வருடங்களாக நான் புறப்பட்ட பயணமும் அதுவே. இறைவனின் ஆசியுடன் இப்பாதையை ஒருபோதும் நிறுத்தாமல் தொடருவேன்.

**அண்மைய சம்பவம் ஒன்று யாதெனில் கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கையின் மேதகு அதிபர் என்னிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தது எனக்கு மகிழ்ச்சியளித்தது. கொழும்பு நகரில் நடந்த தீவிரவாத குண்டுத் தாக்குதல்களையடுத்து ஏற்பட்டுள்ள அமைதியின்மையையும் சமூகங்களிடையே ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பகைமையையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உதவுமாறும் அங்கு வருகை தருமாறும் அவர் கோரியிருந்தார். அங்குள்ள அச்சமான சூழ்நிலை உக்கிரமடைவதாகவும் அது பாரதூரமான சிக்கல்களுக்கு இட்டுச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.**

பாரிய முயற்சியின் மூலமாகவும் மிக நீண்ட கலந்துரையாடல்கள், பேச்சுகள் மூலமாகவும் மீண்டும் அனைவரும் ஒரே அணி சேர்ந்தனர். தத்தம் இன, மத, அரசியல் தலைமைத்துவங்களுடன் பன்முகப்பட்ட வரலாற்றுத் திருவிழாவை இலங்கை வாழ் சிறுவர்களும் இளையவர்களும் கொண்டாடினர்.

அடிப்படையில் மனித இயல்பூக்கம் நேரியது, அப்பாவித்தனமானது என்பதையே இத்தகைய முயற்சிகள் மீள உறுதி செய்கின்றன. இத்தூய இயல்பூக்கத்துடன் சம்பந்தமே இல்லாத சந்தர்ப்ப சூழ்நிலைகளும் கெட்ட கருத்துகளும் ஊடுருவும் போதே அனைவருமாகக் கட்டுப்பாடு இழந்து அடுத்த கட்டத்துக்குத் திரும்புகின்றனர். இதுதான் உண்மை. இதில் சிலர் தாம் வென்றுவிட்டோம் என்ற எண்ணத்தில் தமக்கே மண்ணை வாரிக்கொள்கின்றனர்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் போலாந்து நாட்டின் ஒஸ்விச் இறப்பு முகாமுக்குச் சென்றிருந்தேன். முஸ்லிம் தேசங்களைச் சேர்ந்த முக்கியமான இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்ட பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுத்தேன். உலக முஸ்லிம் அறிஞர்கள் சார்பிலும் உலக முஸ்லிம் மக்கள் சார்பிலும் இம்முக்கிய பயணத்தை முதன்முறையாக மேற்கொண்டோம்.

அமெரிக்க யூதர் குழாமைச் சேர்ந்த அதிகளவிலான யூத நண்பர்களுடனும் கிறிஸ்தவ நற்செய்திப் பணியாளர்கள் சிலருடனும் அந்தப் பயணத்தில் இணைந்திருந்தோம். இப்பயணத்தின் நோக்கம் உலக முஸ்லிம்களுக்கும் ஏனைய மக்களுக்கும் இச்செய்தியைக் கொண்டு செல்வதேயாகும். துவேசத்தையும் இனவாதத்தையும் விதைத்து நாசிசக் கொடுமைகளை வளர்க்கும் படுமோசமான கொள்கையை நாம் எதிர்க்கின்றோம்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதையும் சமூகங்களைப் பாதுகாப்பதையும் நோக்கிச் செல்லும் இத்தகைய முயற்சிகள்தான் எமது அறப் பணியின் முக்கிய அம்சம். குறிப்பாக நாளைய தலைமுறையினருக்கு அன்பையும் பண்பையும் கொண்ட கலாசாரத்தை உருவாக்கிக் கொடுப்பதே அதுவாகும். இதுவே நாம் எல்லோரும் ஆற்ற வேண்டிய பணி.

இத்தகைய நற்கருமங்களைக் கூட்டாக நிறைவேற்றுவது மிகுந்த தாக்கம் உண்டாக்குவதும் கைகூடக் கூடியதும் நின்று நிலைக்கக் கூடியதும் என்பது நாமறிந்ததே.

அனைத்து வகையான தீய செயல்களும் துவேசம் மூலமும் இனவாதம் மூலமும் புறக்கணிப்பு மூலமுமே உருவாகின்றன.

விழுமியங்களற்ற லௌகீக நெறியானது சுயநலம், சுய பெருமை, மற்றவர்கள் மீதான வெறுப்பு போன்றவற்றைக் கொண்டது.

இச்சுயநலம் ஊட்டி வளர்க்கப்படும் போது மற்றவர்களை அடக்கியொடுக்குவதையே அது நாடுகின்றது. அதற்குப் பலியாவது யாரென்றால் எமது உலகின் சமாதானமும் எமது சமூகங்களின் நல்லிணக்கமும் எமது பிள்ளைகளின் வருங்காலமுமே.

இனவாதம், துவேசம், புறக்கணிப்பு போன்ற அனைத்தையும் இல்லாதொழிக்கும் இத்தகைய திட்பமான முன்னெடுப்புகளை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

குறிப்பிட்ட மதங்களையோ குறிப்பிட்ட இனங்களையோ அல்லது வேறுயாரையுமோ இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் வெறுப்புணர்வுகளை முறியடிப்பதற்கு எல்லாம்வல்ல இறைவனின் உதவியால் மென்மையான தன்மையை சக்தியாகக் (Soft Power) கொண்டு மாத்திரமே நாம் தொடர்வோம். இஸ்லாம் பற்றிய வெறுப்பு, யூத எதிர்ப்பு நடவடிக்கை அல்லது வேறெந்த வடிவிலுமான எந்தவொரு வெறுப்புணர்வையும் இது உள்ளடக்கும்.

சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தைப் புறக்கணிக்க நாடுபவர்கள் போன்று உலகம் முழுவதிலும் குறிப்பிட்ட சிற்சில குழுக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் வஞ்சகமான நடவடிக்கைகளையும் நாம் முறியடித்துள்ளோம்.

ஆட்கடத்தல்கள் குறிப்பாக பெண்களதும் சிறுவர்களதும் இக்கட்டான சூழ்நிலைகளை வசப்படுத்தி அவர்களைச் சுரண்டுகின்ற குற்றவியல் நடவடிக்கைகளையும் முறியடித்துள்ளோம்.

மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதை விட எமக்கு மகிழ்ச்சியளிப்பது எதுவுமில்லை. தேசங்களுக்கும் மக்களுக்குமிடையில் நட்புறவை ஒருங்கிணைப்பது, இவ்வுன்னத விழுமியங்களை இழிவுபடுத்தும் எவற்றையும் குறிப்பாக துவேசம், இனவாதம், புறக்கணிப்பு போன்ற எல்லாவடிவங்களையும் முறியடிப்பது என்பனவே அம்மகிழ்ச்சியளிக்கும் விடயங்களாகும்.

துவேசம், இனவாதம், புறக்கணிப்பு போன்ற எல்லா வகையான விடயங்களும் பாரிய குற்றம் என்றவாறான சட்டத்தை இயற்றுமாறு உலகம் முழுவதிலுமுள்ள அதிகமான அரசியல் தலைவர்களுடனும் பாராளுமன்றத் தலைவர்களுடனும் பேச்சுகளை நடத்தி வருகின்றோம்.

உலகம் முழுவதும் கல்வியின் திறனை மேம்படுத்தல், இத்தகைய விழுமியங்களை எமது பிள்ளைகளுக்கும் இளையோருக்கும் போதிப்பதில் குடும்பத்தின் வகிபாகத்தை வளப்படுத்துதல் போன்ற விடயங்களை இலக்காகக் கொண்ட பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் உள்ளோம்.



# பல்துறை ஆளுமைகளை வேண்டி நிற்கும் சமூகத்தின் ஏக்கமும், பல்கலைக்கழகம் ஏற்படுத்தும் ஊக்கமும்

**ஹமாஸ் மொஹமட் எச்.எம்.**
முதலாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கைத் தீவானது இந்து சமுத்திரத்தின் முத்தாகவே இன்று வரைக்கும் விளங்கி வருகின்றது. இலங்கையானது பல துறைகளிலும் பற்பல அபிவிருத்திகளைக் கண்டு வருகின்ற நாடுகளில் ஒன்றாகும். அபிவிருத்தியடைந்த எத்தனையோ நாடுகள் இருந்தாலும் அங்கும் கூட எத்தனையோ பல பிரச்சினைகள் நிறைந்து சிக்குண்டு தவிப்பதை காண்கின்றோம். அதே பார்வையில் நோக்கும் வேளை இலங்கையிலும் பல பிரச்சினைகள், சிக்கல்கள், முட்டுக்கட்டைகள் இருப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

எனவே தான் எமது இலங்கைத் திருநாட்டிலும் நாட்டையும், சமூகத்தையும் எழுச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவையும் உள்ளது. அவ்வாறான தேவைகள் பல துறைகள் சார்ந்து இருப்பதனால் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தன் துறை சார்ந்து உழைக்கும் கட்டாயத்தில் இருக்கிறோம். அந்த வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் தமது சமூகத்திலும், நாட்டிலும் செயற்படுத்த வேண்டிய தன்னார்வ செயற்பாடுகள் என்ன? என்பது பற்றிய ஆய்வைக் குறித்து இவ்வாக்கம் தெளிவுபடுத்துகிறது.

சமூகத்தையும், தேசத்தையும் கட்டியெழுப்ப வேண்டுமெனில் ஆரம்ப கட்டமாக செயற்படுத்த வேண்டிய வேலை என்னவெனில் சமூகத்தில், நாட்டில் எந்த வகையான குறைகள், பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் இருந்து வருகின்றன என்பதை இனங்காண வேண்டும். இனங்கண்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் என்ன என்பதையும் கண்டு கொள்வதன் பின், இப்பிரச்சினை இதன் பின் தொடர ஏதுவான காரணிகள் இருகின்றனவா?, அவை எவை?, அவற்றை நிரந்தரமாக அழிப்பதற்கான செயற்றிட்டங்கள் என்ன? என்று அவதானித்து அதற்கான முழுத்திட்டத்தினையும் இட்டு நீண்ட நாள் பயனளிக்கும் திட்டமாக, தொடராக கவனிக்க என்னவெல்லாம் செய்து கொள்ளலாம் என்ற முழுத் திட்டத்துடன் செயலில் ஈடுபட ஆரம்பிக்க வேண்டும்.

நாட்டில் பல்கலைக்கழக மாணவர்களால் செயற்படுத்தப்பட அல்லது பங்கு வழங்கப்பட வேண்டிய முக்கிய துறையாக ஊடகம் இனங்காணப்பட்டுள்ளது. நாட்டினுள் பலவிதமான இனப்பிரச்சினைகள் ஏனைய பிரச்சினைகளுக்குக் பிரதான காரணமாக இருப்பது அறிவுபூர்வமற்றதும், மத, இன துவேசத்தை வளர்க்கும் திருடர்களின் கைவசம் ஊடகம் இருப்பதுமாகும். ஆகவே பல்கலைக்கழக மாணவர்கள் ஊடகத்துறையில் இணைந்து, மக்களின் உரிமைகள் ஆட்சியாளர்களால் மறுக்கப்படும் வேளையில் அவற்றைத் தட்டிக் கேட்க தயாராக வேண்டும்.

பாடசாலை மாணவர்களிடத்தில் கல்வியில் ஆர்வமின்மையும் கல்வியில் வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றமையையும் காணலாம். இன்றைய மாணவர்கள்தான் நாளைய தலைவர்கள் என்ற வகையில் பாடசாலை மாணவர்கள் ஆர்வமற்று இருக்கும் பாடங்களில் அவர்களை ஆர்வமூட்டும் அணுகுமுறைகளைச் செய்தல், கல்வியில் வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் மாணவர்களை கல்வி எழுச்சிக்குப் பாதைக்குச் செல்லும் வழிகளைக் காட்டல் போன்றவற்றுக்காக பல்கலைக்கழக மாணவர்கள் முன்வர வேண்டும். நாளைய தலைவர்களை உருவாக்க முழு மூச்சுடன் செயலாற்ற பல்கலைக்கழக மாணவர்கள் கடமையுள்ளவர்கள் என்பது உணர்த்தப்பட வேண்டும்.

அதே போன்று மொழித்திறமை குன்றியவர்களால் தான் பல பிரச்சினைகள் எமது சமூகத்திலும், எமது நாட்டிலும் ஏற்படுவதோடு மட்டுமன்றி தற்போதும் அதன் தாக்கங்களை கண்ணுற முடிகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் என்ற வகையில், இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டுமாயின் மொழிப் புலமையை மக்கள் மத்தியிலும் தங்கள் ஒவ்வொருவரிலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பன்மொழிப் புலமையை மக்கள் மத்தியில், மாணவர் மத்தியில், இனங்களுக்கிடையில் ஏற்படுத்தினால் அதன் விளைவாக இனமுறுகல், இனப்படுகொலைகள், இனத்துவேசங்கள் கலைந்து விடும். இதனூடாக ஒற்றுமை மலரும் நாடும் கட்டியெழுப்பப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களால் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு முக்கியமான பகுதியாக அமைவது போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டு எடுத்தலாகும். இந்த போதைக்கு அடிமையாதலில் அதிகமானவர்கள் இளைஞர்களாகக் காணப்படுவது மனதுக்குக் கடினமான ஒரு நிலையாக உள்ளது. இளைஞர்கள் தான் சமூகத்தினதும் நாட்டினதும் முதுகெலும்பாக இருக்க வேண்டியவர்கள். ஆயினும் அவர்களோ போதையில் மூழ்கி முள்ளந்தண்டு உடைந்தவர்களாக மாறிவருகின்றனர். இந்த இளைஞர் சமூகத்தை போதையிலிருந்து மீட்டெடுப்பது என்பது கற்ற சமூகம் என்ற வகையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மிக முக்கிய தார்மீகக் கடமையாகவுள்ளது.

இதுபோன்று அரசியலில், சமூக உளப்பிரச்சினைகளை தீர்ப்பதில், பழையதை விடு புதுமையை எடு என்ற நவீன நாகரீக சிந்தனையை மக்கள் மத்தியிலும் மற்றும் எல்லா சமூகத்திலும் எத்திவைப்பதும், தெளிவுபடுத்துவதும் பல்கலைக்கழக மாணவர்களின் முக்கிய பணிகளில் ஒன்றாக உள்ளது.

வரண்ட அல்லது வற்றிய குளத்துக்கு குளக்கட்டுக்களை தட்டும் நீர் எவ்வளவு அவசியமோ! அதே போன்று சமூகத்தினதும் நாட்டினதும் அபிவிருத்தியை தாமதப்படுத்தும் வரண்ட துறைகளை நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் நீர்த்தரைகளாக மாற்றும் மிகப் பெரிய தார்மீகக் கடமை பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருக்கின்றது என்பது ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனின் உள்ளத்திலும் பதிந்திருக்க வேண்டிய உணர்வாகும்.

அடுத்த கட்டமாக சமூகம் எதிர்பார்க்கும் ஆளுமைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இஸ்லாம் அழகாகக் கூறுகிறது. ஆன்மீகத்தை மாத்திரம் உயர்த்துவதாகவும் இல்லை, அறிவை மாத்திரம் உயர்த்துவதாகவும் இல்லை. இஸ்லாம் எல்லாவற்றிலும் நடுநிலைமையைப் பேணுவதாகவே இருக்கின்றது. இந்த வகையில் இஸ்லாமிய சமூகம் எதிர்பார்க்கும் ஆளுமைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என சில எதிர்பார்ப்புக்களை இஸ்லாம் எடுத்து வைக்கிறது.

எமது இஸ்லாமிய மார்க்கத்தில் முதல் வரியாக அல்லாஹ் கூறினான் “இறைவனின் பெயரைக் கொண்டு வாசிப்பீராக” இதற்குறிய விளக்கத்தை அறிஞர்கள் குறிப்பிடுகின்ற போது எமது அறிவுத்தேடல், ஆய்வு, கண்டுபிடிப்பு, சிந்தனை அனைத்தும் படைத்தவனின் பெயரால் இருப்பது உண்மையான நல்ல ஆக்கபூர்வமான விளைவை உலகில் ஏற்படுத்தும். இவ்வாறான ஆக்கபூர்வமான விளைவை ஏற்படுத்தும் ஆளுமையை சமூகம் எதிர்பார்க்கின்றது.

சுலைமான் (அலை) அவர்களை மிகப் பெரிய அறிவாளியாக குர்ஆன் அறியப்படுத்துகின்றது. அவருக்கு நெருப்பு, நீர், காற்று என பலதை வசப்படுத்தும் சக்தியை அல்லாஹ் கொடுத்திருந்தான். என்றாலும் மிகப் பெரிய ஆற்றல் நிறைந்த ஆளுமையாக இருந்தும் அவர் பின்வருமாறு கூறினார்,

{هٰذَا مِنْ فَضْلِ رَبِّي لِيَبْلُوَنِي أَأَشْكُرُ أَمْ أَكْفُرُ}

“இது நான் அவனுக்கு நன்றியுள்ள அடியானா? நன்றி கெட்ட அடியானா? என்று என்னை சோதிப்பதற்காக என் இறைவன் எனக்கு புரிந்த பேரருளாகும்.” **(சூறா நம்ல் : 40)**

அதே போன்று செல்வம், அறிவு, ஆய்வு, இளமை, வாழ்வு, கற்றல் என்பன அல்லாஹ்வின் அருட்கொடைகளாகும், அது மாத்திரமல்லாமல் அவை அமானிதமுமாகும். இவற்றுக்கு பதில் கூறியே ஆக வேண்டும். ஒரு ஆளுமை இறை நம்பிக்கையில் தான் அறிவு, ஆராய்ச்சியை அமைத்துக் கொள்ள வேண்டும். அந்த உணர்வு ஆழமாக ஒவ்வொரு ஆளுமையின் உள்ளத்திலும் பதியப்பட வேண்டும். அந்த உணர்வு இல்லாவிட்டால் படித்த தலைமுறையாக எமது சமூக ஆளுமைகள் விளங்கினாலும் ஈமானை, ஆன்மீகத்தை, பண்பாட்டை இழந்த தலைமுறையாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது.

ஏக காலத்தில் ஒரு அரசாகவும் பொறியியலாளராகவும் வாழ்ந்த துல்கர்னைன் என்பவர் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் ஞாபகப்படுத்துகிறான். ஒரு சமூகத்தினால் இன்னொரு சமூகத்திற்கு பெரிய பிரச்சினை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இதனை அரசனான துல்கர்னைனிடம் முறையிடவே! ஈயத்திலான அணையை அவர் கட்ட வைத்தார். அதற்கு அந்த சமூகம் துல்கர்னைனான மன்னனைப் பாராட்டினர். அப்போது அந்த அரசர் கூறிய வார்த்தையை அல்லாஹ் எமக்கு படிப்பினையாக இருக்க வேண்டுமென்பற்காகவும், ஓர் ஆளுமை தான் ஒரு சிறிய அல்லது மிகப் பெரிய செயலை செய்தாலும், சமூக பிரச்சினைகளை தீர்த்தாலும், சமூகத்தின் தேவையை பூர்த்தி செய்தாலும் துல்கர்னைனின் வார்த்தையைப் போலவும், துல்கர்னைனில் உள்ளத்தில் பதிந்திருந்த உணர்வைப் போலவும் இருக்க வேண்டுமென்பதற்காக அல்குர்ஆனில் இவ்வாறு ஞாபகப்படுத்துகிறான்.

{هٰذَا رَحْمَةٌ مِنْ رَبِّيْ فَإِذَا جَاءَ وَعْدُ رَبِّيْ جَعَلَهُ دَكَّاءَ وَكَانَ وَعْدُ رَبِّيْ حَقًّا}

“இது என்னுடைய இறைவனின் அருள்தான். என் இறைவனின் வாக்குறுதி வரும் பட்சத்தில் இதனையும் தூள் தூளாக்கி விடுவான். என் இறைவனின் வாக்குறுதி உண்மையானதே” **(சூரா கஹ்ப் : 98)**

சமூகம் எதிர்பார்க்கின்ற ஆளுமைகளாக புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், அதிகமான ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்துறை சார்ந்தவர்கள், தகவல் தொழில்நுட்ப துறைசார் நிபுணர்கள் மற்றும் அனைத்து துறை வளவாளர்களும் தேவைப்படுகின்றனர். இந்த ஆளுமைகள் சுலைமான் (அலை) அவர்கள் மற்றும் துல்கர்னைன் போன்றவர்களாக இருக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கிறது. நாளை வரக்கூடிய படித்த சமூகம், ஆன்மீகத்தில் பண்பாட்டில் பலவீனம் அடையாத சமூகமாகவும் இருக்க வேண்டும் எனச் சிந்திக்கும் ஒருவராகவும் சமூகம் எதிர்பார்க்கும் ஆளுமைகள் இருக்க வேண்டும்.

ஆகவே, இவ்வாறான ஆளுமைகளினாலேயே சமூகத்தில் இருக்கின்ற சிக்கல்களையும், பிரச்சினைகளையும், சவால்களையும் பூரணமாகத் தீர்த்து எமது சமூகத்தையும், எமது நாட்டையும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்று உலகில் முன்மாதிரி மிக்க நாடுகளிலே முதன்மையான நாடுகளில் ஒன்றாக எமது நாட்டையும் உயர்த்த முடியும். எமது நாட்டினது அபிவிருத்திக்கு அனைத்து துறை ஆளுமைகளினதும் பங்கு இன்றிமையானதாகும்.

**உசாத்துணைகள்**

1. இந்து தமிழ்த் திசை: News in Tamil, Latest Tamil News India & World, Hindu Tamil Thisai Daily Newspaper, Available at: (https://www.hindutamil.in/)
2. Speech by Ash. A.C. Agar Mohammad (Naleemi) (2009), “நாங்கள் உருவாக்க நினைக்கும் ஆளுமைகள்”

அல்லாஹ்வுக்கு சொந்தமான இந்த உலகத்திற்கு
அவனிடமே எத்தகைய பெறுமானமும் இல்லை என்றிருக்க,
உனக்கு ஒரு சொட்டும் சொந்தமே இல்லாத இந்த உலகை
எப்படி நீ சொந்தம் கொண்டாட முடியும்!

**– இமாம் ஹஸன் அல்பஸரி**

# நிலவைத் தேடும் வானம்

**அப்னான் எஸ்.எம்.**
முதலாம் வருடம், விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அஞ்சாமை (ஜாஹிலியத்) எனும் கார்மேகம்
அரேபிய வானை  மூடிக் கிடக்கிறது
எட்டுத்திக்கும் எதிரிகளாகி
எக்காளமிட்டுக் கொள்கின்றன.

பாலைவன மணல் வெளிகள்
பாலகர்களின் புதை குழியாகிறது
மதுவின் ஆறுகளில் மூழ்கி
மாதுவின் மடியில் சரணடைகிறது அரேபிய ஆண்மை

சகோதர சண்டைகள் சந்ததிகளாய் தொடர
சிந்திய குருதி பட்டு
சிவந்து போகிறது பாலை மண்

வல்லவனின் ஆலயம் எங்கிலும்
சிலைகளின் சிம்மாசனம் விக்கிரக வணக்கத்தின்
வக்கிர ஆட்சி

அட்டூழியத்தின் அழிவாக
அன்பின் உதயமாக அவதரிக்கிறது
ஓர் உயிர் அஹமது   எனும் பெயருடன்

அகவை நாற்பதில்
அகிலத்தின் இரட்சகன்
அஹமதை தேர்ந்தெடுத்து அவனது தூதை எடுத்துரைக்க

வல்லவனின் வானவரால் வழிகாட்டியாக
மாமறையை வாங்கிக் கொண்டு வள்ளல் நபியும் புறப்படவே

வாய்மைக்கு பேர் போன நபி வானில் இருந்து
வந்த சேதியை வன்மம் கொண்ட
ஜென்மங்களிடம் எடுத்துரைக்க

எட்டுத்திக்கிலும் எறிகல்லும்
வெட்டத்துடிக்கும் கூர் வாளும் கொண்டு தட்டிக் கழித்து
தம்பட்டம் அடிக்கிறது தன்மானம் இழந்த கூட்டம்

வலிமை இழந்தோருக்கு புகலிடமாக வள்ளல் நபியின் மார்க்கம் மாற
வன்மம் கொண்ட வெறியர்களின் அக்கிரமம் அதிகரிக்கிறது

உமரென்றும் அலியென்றும்
உறுமிடும் இளஞ்சிங்கங்கள் உள்நுழைந்திடவே
உயிர் பெற்று எழுகிறது தீனுல் இஸ்லாம்

அண்ட சராசரம் எங்கும்
அகன்று விரிந்து
ஆழ வேரூன்றுகிறது ஏகத்துவம்
அல்லாஹு அக்பர்

மாநபியின் மறைவிற்கு பின்னே
மாநிலம் எங்கும் சன்மார்க்கம் மலர உரமாகி போகின்றன
வீர வாலிப நெஞ்சங்கள்

மேற்கத்திய மோகம் சூழ்ந்து
மூர்க்கத்தனம் பெருகிடாமல்
மார்க்கத்தை காத்த இளம் தூண்கள் மறைந்து போக

நவீன ஜாஹிலியத்
நர்த்தனமாட நாகரீக வலையில்
நழுவி விழுகிறது
நவீன பாத்திமாக்களும் முஹமதுகளும்

இளம் ஸஹாபிகள் ஏற்றிய தீன் சுடர்
இளம் வஹாபிகளால் அணைக்கப்படுகிறது
இணையத்தின் வழியே ஷிர்க் உடன்
இணைந்து போகின்றன முஸ்லிம் பெயர் தாங்கிய
இளைஞர்கள் கூட்டம்
மீண்டும் மெல்ல கருக்கிறது
மனிதம் எனும் வானம்
நாகரீக இருளில் மறைந்து இரவாகி போன இதயங்களில்
நிலவை (தீன்) தேடுகிறது வானம் (உம்மத்).



# நேர்வழியே மிகப் பெரும் தேவை

**மூலம் : அல்–முஜ்தமஃ**
**தமிழில் : றுக்ஷானா அப்துல் ஹமீட்**
மூன்றாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"அல்–குர்ஆனில் இடம்பெறுகின்ற குகைவாசிகளின் சம்பவத்தில் இளைஞர்கள் குகையில் தஞ்சமடைந்ததும் இறைவனிடம் உதவியையோ, வெற்றியையோ, அதிகாரத்தையோ கோரவில்லை. "எங்கள் இறைவா! நீ உன்னிடமிருந்து எங்களுக்கு ரஹ்மத்தை அருள்வாயாக!. இன்னும் எங்களுக்காக எங்கள் காரியத்தை (ப் பலனுள்ளதாக) சீர்திருத்தித் தருவாயாக" என்றே கூறினார்கள்.

**(அத்தியாயம் அல்– கஹ்ப் : வசனம் 10)**

ஜின்கள் அல்–குர்ஆனை செவிமடுத்த போது அல்–குர்ஆனை நோக்கி முதலில் கூறியது "நேர்வழியின் பால் அழைக்கக் கூடியது! இங்கு நேர்வழி என்பதன் மூலம் குறிப்பிடப்படுவதாவது : யதார்த்தத்தை எதிர்கொள்ளல், நேர்மை, சத்தியத்தை நோக்கி செல்லுதல் என்பனவாகும். நாம் நேர்வழியை அடைந்து விட்டால் அத்துடன் வெற்றியையும் அடைந்து கொள்வோம்.

இதனால் தான் "எங்களுடைய இறைவன், நேர்வழியில் இதைவிட நெருங்கிய விஷயத்தை எனக்கு அறிவிக்கக் கூடும்" (அத்தியாயம் அல்கஹ்ப் : வசனம் 24) என்பதை மீண்டும் மீண்டும் கூறுமாறு அல்லாஹ் பரிந்துரைக்கின்றான்.ஆகவே தான் நாம் முன்னெடுப்புக்களை சுருக்கிக் கொள்கின்றோம். சகிப்புத்தன்மையை அதிகரித்துக்கொள்கிறோம். எமக்கான முடிவில் நாம் ஒருவருக்கொருவர் பெருமிதம் கொள்கிறோம், ஏனென்றால் அல்லாஹ் எமக்கு "நேசனாகவும், வழிகாட்டியாகவும்" இருக்கிறான்.

மூஸா (அலை) (ஹிழ்ர் என்றழைக்கப்பட்ட) நல்லடியாரை அடைந்ததும் ஒன்றையன்றி வேறெதனையும் வேண்டவில்லை. "உங்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்ட நன்மையானவற்றை நீங்கள் எனக்கு கற்பிக்கும் பொருட்டு, உங்களை நான் பின்தொடரட்டுமா?" (அத்தியாயம் அல்–கஹ்ப் : வசனம் 66) அவர் நேர்வழியை மட்டுமே வேண்டினார். அல்லாஹ் எங்களுக்கு நேர்வழியை அடைந்து கொள்வதற்கான வழிகளைக் காண்பிக்கின்றான் எனில் நாம் இவ்வுலக மற்றும் மறுமையின் வெற்றிகளை அடைந்து கொள்வதற்கான வழிகளைக் காண்பிக்கின்றான். நாம் அதிகமதிகம் இப்பிரார்த்தனையை கேட்க மறக்கக் கூடாது. இறைவா எங்கள் காரியத்தை (பலனுள்ளதாக)ச் சீர்திருத்தித் தருவாயாக."



# என்னுடன் நான் பேசுகின்றேன்.

**இஸ்ஸத் பாதிமா எம். ஐ.**
முதலாம் வருடம், சித்த மருத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

“எழுந்திருடா தம்பி... அப்பா வந்திருக்கன் பாருடா...” இந்தக் குரலை எங்கோ கேட்டது போன்ற ஒரு ஞாபகம். அப்பா நீங்களா? எத்தனை வருடங்கள் அப்பா எங்களை விட்டு எங்கே சென்றிருந்தீர்கள்? கிட்டத்தட்ட 15 வருடங்களாக கேட்காத என் அப்பாவின் குரல் கேட்கிறது. ஆனால் எங்கே? ஒரே இருட்டு. மூடியுள்ள கண்களை திறக்க முடியவில்லை. ஆ...திறந்துவிட்டேன். நரைத்த முடி குழி விழுந்த கண்கள் இரங்கிய தோள் சுருங்கிய தோல்... என் அப்பாவா இது? அப்பா என்னிடம் பேசுங்கள். எங்கே பார்த்து அழுதுக்கொண்டிருக்கிறீர்கள்? ஆ... என்னது நான் இறந்து விட்டேனா! கொஞ்சம் மூளையை கசக்கிப்பிழிய தான் ஞாபகம் வருகிறது நேற்று நான் இருந்த மனநிலை. என் உடலிலிருந்து உயிர் பிரிந்து விட்டது போலும். என் உடல் இப்படி வீணாக கிடக்கிறதே! கண்கள் சுருங்கி உதடுகள் கறுத்து முகம் சுருங்கிய நிலையில் கன்னத்தில் கண்ணீர் கோடுகள் வழிய கழுத்தில் இறுகிய கயிற்றின் தடித்த தழும்பு.... இப்படி என்னை காண்பதற்கா என் அம்மா ஆசைப்பட்டார். இல்லை... இல்லவேயில்லை. எங்கே என் அம்மா உயிரற்ற நடைப்பிணமாக கிடக்கிறார். எங்கோ வெறித்த பார்வை. கணவனின் துணையில்லாது தன் மூன்று பிள்ளைகளின் நலனுக்காகவே ஓடாய் தேய்ந்த உருவம். அவர்களை நினைத்துப் பார்க்கவில்லையே! என் அக்கா அண்ணனையும் மறந்து விட்டேன். சரி இப்பொழுதாவது என்னுடன் கதைப்பீர்களா? என் ஆதங்கத்தை உள் மனதில் பூட்டி வைத்துள்ள கவலைகளை கஷ்டங்களை கொட்டுகின்றேன் கொஞ்சமாவது கேட்பீர்களா?

என் பெயர் கிரண். 22 வயதான நான் குடும்பத்தின் கடைக்குட்டி. கடைக்குட்டி என்றால் செல்லமாக மிகுந்த அன்போடும் ஆதரவோடும் வளர்ந்திருப்பேன் என்று நீங்கள் நினைப்பது நியாயம் தான். யாரை நொந்தும் பயனில்லை என்பதே என் எண்ணம். என் 7ஆவது வயதில்

எங்களை விட்டுச் சென்ற அப்பா நான் பிறந்து 6 மாதம் வரை மட்டுமே என்னை தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்ட ஆசிரியையான என் அம்மா... குறும்புச் சண்டைகள் போட கூட நேரமில்லாது தங்கள் படிப்பு, தங்கள் வாழக்கை என போய்விட்ட என் அக்கா, அண்ணா இப்படியான ஒரு குடும்ப அமைப்பினுள் எனக்கென ஒரு எல்லை வகுத்து ஒரு வட்டத்திற்குள் வாழப் பழகிக் கொண்டேன். நண்பர்கள் என்று கூட யாருமில்லாது நான், என் புத்தகங்கள், என் அம்மா மட்டுமே எனக்கு தெரிந்த சொந்தங்களாக இருந்தன.

சாதாரணமாகவே அதிகம் பேசாத உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவனாகவே இருந்தேன். அப்பா எங்களை விட்டுச் சென்ற பின் எங்கள் வளர்ச்சிக்காகவே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து தன் இயல்பான புன்னகையையே விட்டு விட்ட என் அம்மா குடும்ப பாரத்தை சுமக்க சிறுவயதிலிருந்தே அம்மாவிற்கு துணையாக நின்ற என் அக்கா, அண்ணா இவர்கள் யாரையும் குறை கூற முடியவில்லை. படிப்பை கைவிட்டு வேலை செய்து அம்மாவுக்கு துணையாக நின்று பின் தங்களின் எதிர்கால வாழ்க்கைக்கு தேவையானதை தேடி சென்றவர்களிடம் இதற்கு மேலும் உதவி பெற்றுக்கொள்வதை அம்மா விரும்பவில்லை. இறுதியில் எஞ்சியது நானும் அம்மாவும் மட்டுமே.

ஒரு நாள் இரவு வழமையாகவே இறுகிய முகமாக கடின உழைப்பாளியாக இருக்கும் என் அம்மா என் அருகில் வந்தமர்ந்தார். பழக்கமில்லாததால் விலகி அமர்ந்தேன். பெருமூச்சுடன் என் கைகளைப் பற்றிப்பிடித்து ‘‘சாப்பிட்டாயா?’’ என்றார்கள். அதிர்ச்சியிலிருந்து மீளாத நான் ஆமென்று தலையாட்டினேன். என் முகத்தைப் பார்த்து என்ன விளங்கிக் கொண்டார்களோ தனது கைகளை திரும்ப எடுத்துக்கொண்டார்கள். முகத்தில் மீண்டும் அந்த இறுக்கம் வந்து மூடிக்கொண்டது. நேர்க்கொண்ட பார்வை தலைநிமிர்ந்த நடை என்ற என் அம்மாவின் ஆளுமைகளின் ரசிகன் நான். இன்று தலைக்குனிந்து நிற்கவும் “என்ன அம்மா?” என்றேன். “ஒன்றுமில்லை தம்பி! மேல்படிப்புக்கு என்ன செய்ய போகிறாய்?” என கேட்டார். உயர்த்தர விஞ்ஞான பிரிவில் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றிற்காக காத்திருக்கும் நான்... “மருத்துவம் தான் அம்மா” என்றேன். “ஆ...” என்று விட்டு தயங்கிய பின் ஒரு கடிதத்தை என்னிடம் தந்தார். தன் சொந்தப் பிள்ளையுடன் கடிதத்துடன் தொடர்பாடுவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அம்மா அதிகம் பேசாதவர் தான். அதனால் நான் ஆச்சரியப்படவில்லை.

“ அன்புள்ள தம்பி......!

உன் வாழ்வில் அம்மா என்ற கதாபாத்திரமாக மட்டுமே கடமையாற்றிக் கொண்டிருக்கும் உன் அம்மா சில விடயங்களை கூற ஆசைப்படுகின்றேன். உன் அப்பா நம்மை விட்டுச் சென்ற பின் உன்னையும் உன் அண்ணா அக்காவையும் வளர்த்து நல்ல நிலைக்கு கொண்டு வர பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் உங்கள் மூவரினதும் விருப்பு வெறுப்புகளை கவனிக்க மறந்துவிட்டேன். உங்களை முன்னேற்ற உழைத்தேனே தவிர உங்களை கவனிக்க மறந்துவிட்டேன். உன் அண்ணா அக்கா என்னுடன் சேர்ந்து கடுமையாக உழைத்தார்கள். படிப்பையும் கைவிட்டு நமக்காகவே உழைத்தார்கள்.

பின் தங்கள் எதிர்கால வாழ்க்கையை சீராக அமைத்துக் கொள்வதற்காக சென்று விட்டார்கள். நீயும் கடுமையாக உழைக்க வேண்டும். நீ எனக்கு என்ன தான் கடைக் குட்டியாக இருந்தாலும் உன்னுடன் சிரித்து பேசி விளையாடிய நாட்களை விரல் விட்டே எண்ணலாம். என் இறுதி காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றேன் என்று தோன்றுகிறது. இன்னும் கொஞ்சம் காலமாவது உன்னுடன் உனக்கு ஆதரவாக இருக்கலாம் என்று நினைக்கின்றேன். நீ நன்றாக படிக்க வேண்டும்.

பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். நன்றாக படித்து பட்டம் பெற வேண்டும். பல்கலைக்கழகம் உன் பாடசாலைக்கல்வியைப் போன்று இருக்காது. பாடசாலையில் கல்வி கற்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். அவர்கள் பெரும்பாலான வழிக்காட்டிகளாக இருப்பார்கள். ஆனால் பல்கலைக்கழகம் பல கலைகளையும் கற்றுத் தருகின்றது. கற்றிருந்த கலைகளை கலையரங்கம் கொண்டு செல்கிறது. உன் ஆளுமைகளை விருத்தி செய்வதில் பெரும் பங்காற்றுகிறது. நீ சிறு வயது முதல் புத்தகங்களுடன் தான் அதிக நேரம் செலவளிப்பாய் என்பதை நான் அறிவேன்.

ஏட்டுக் கல்வியையும் விட அனுபவக் கல்வி வாழ்க்கையின் தாத்பரியத்தைக் கற்றுக் கொடுக்கும். மலையுச்சியை அடைய வேண்டுமெனில் பல முட்பாதைகளையும் ஆழமான அகழிகளையும் ஏன்..? சுடு கற்பாறைகளையும் கடந்து தான் வர வேண்டியதாக இருக்கும். அவற்றைப் பார்த்து பயந்தால் உயரத்தை அடைய முடியாது. அப்பாதையில் நீ இடரினாலும் விழுந்தாலும் உன்னை துாக்கி விட யாரும் வர மாட்டார்கள். அதனால் தோள் கொடுக்கும் தோழர்களை தேடிக்கொள். அவர்களையும் உன் பயணத்தில் சேர்த்துக்கொள். உனக்கு துணையாக மட்டுமன்றி அவர்களுக்கும் நீ துணையாக இருக்க வேண்டும். பல்கலைக்கழகம் உனக்கு பல பாடங்களை கற்றுக் கொடுக்கும். ஏற்ற இறக்கங்களையும் அதை நீ ஏற்றுக்கொள்ளும் விதத்தையும் சவால்களையும் அதை நீ எதிர்க்கொள்ளும் வழிமுறைகளையும் உனக்கு அனுபவப்படுத்தும்.

இவ்வளவு காலமும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்த உனக்கு பல்கலைக்கழகமும் அதற்குப்பின்னர் வரும் சமூகமும் பரந்த உலகத்தைக் காட்டும். பல்கலைக்கழகம் கற்றுத் தரும் பாடங்களை வாழ்க்கையில் பிரயோகிக்கக் கற்றுக்கொள். எப்போதும் புன்னகையை உன் முகம் முழுவதும் பூசிக் கொள். நல்லெண்ணங்களை விதைத்துக் கொள். நீ பார்க்கும் சக மனிதனை நல்லவனாகவே பார். இதனால் அவரிடம் உள்ள கெட்ட குணங்களை நீயே மறக்க எண்ணுவாய். அது உனது உள்ளத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

உன் ஆற்றல்களையும் ஆளுமைகளையும் விருத்தி செய்து கொள். பிறர் துன்பம் காப்பதில் முதலில் நில். அது உன் துயரம் துடைக்கும். இரத்த தான முகாம்கள் போன்ற சமூக விழிப்புணர்வு முகாம்களில் அதிகம் ஈடுபாடு காட்டு. தலைமைத்துவத்துக்கு என்றும் தயங்காதே. அதற்கான ஆளுமைகளை வளர்த்துக்கொள். இன்றைய மாணவ சமுதாயம் தான் நாளைய தலைவர்கள். தலைவர்கள் சமூகத்தின் துாண்களாக இருக்க கடைமைப்பட்டவர்கள் என்பதை மறவாதே. நல்ல தலைவர்கள் நம் நாட்டிற்குத் தேவை. யார் அறிவார்? எதிர்கால அப்துல் கலாம்களும் விவேகானந்தர்களும் அன்னை தெரேசாக்களும் கூட உன் நண்பர்களுக்குள் இருக்கலாம் அல்லவா? எனவே அவற்றை வெளிக் கொண்டுவருவதில் உன் பங்களிப்பும் அடங்கியுள்ளதாக அறிந்தால் இந்த தாயுள்ளம் மகிழும் தம்பி.

பல்கலைக்கழகம் கற்றுத்தந்த பாடங்களை அங்கிருந்து வெளியானதும் நீ வாழும் சமூகத்தில் வெளிப்படுத்த மறக்காதே. நீ கற்ற நல்ல விடயங்களை பிறருடன் பகிர்ந்து கொள். அது உன் அறிவை மேம்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நற்குணங்களை உன் செயல்களில் காட்டு.

சிறு வயதிலிருந்து நீ சுமந்துக் கொண்டிருந்த ஏக்கங்கள் யாவும் என்னால் ஒருபோதும் எதைக் கொண்டும் ஈடு செய்ய முடியாது என்பது நான் அறிந்த விடயமே. உன்னால் பெற முடியாமல் போன விடயங்களை உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குக் கொடு. உன் புன்னகையில் மற்றவர்களை மகிழ்விக்கச் செய். உன் கூட்டுக்குள் இருந்து வெளியே வா! நான் சொல்லித் தந்த நீ பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தை காட்டிலும் பரந்து விரிந்த பிரபஞ்சம் உனக்காகக் காத்திருக்கிறது.

எழுந்து வா! உன் முகத்தை பார்த்து உன் கைக்கோர்த்து உன் தலைத் தடவி பேச நினைத்தவை இவை தான். அதற்கு பழக்கமில்லாத உன் முகம் பார்த்ததும் வார்த்தைகள் என் வாயை அடைத்து என்னிடம் கேள்விக் கேட்கிறது “என்று நீ அன்புடன் பேசினாயா இன்று அன்பாய்ப் பேச..?” என்று. என்னை மன்னித்துவிடு…

என்றும் அன்புடன்,
உன் அம்மா


டயரியை மூடி வைத்தேன். அன்று அம்மா எனக்கு தந்த கடிதமும் டயரி எழுதுகின்ற பழக்கமும் இன்று நான் செய்யவிருந்த குற்ற செயலிலிருந்து என்னைப் பாதுகாத்தது. நான் எழுதியது போன்ற நிலைமையில் என் அம்மா என்னை பார்ப்பதை விட்டும் காப்பாற்றியது.

இன்றுடன் நான் அம்மாவை விட்டு பல்கலைக்கழகம் வந்து 6 மாதங்கள் ஆகி விட்டது. வந்த முதல் நாளிலிருந்து நேற்று வரை பல கஷ்டங்களை இங்கு அனுபவித்து வருகின்றேன். நேற்று மிகவும் மனமுடைந்து போய் விட்டேன். அதனால் தான் இந்த விபரீத முடிவை எடுக்கத் தோன்றியது. இப்பொழுது அதன் முட்டாள் தனம் புரிகிறது.

அம்மாவின் விருப்படி பல்கலைக்கழகம் நுழைந்தேன். முதலாம் வருடம் முதலாம் நாள் பல்கலைக்கழகம் என்ற புது உலகிற்குள் நுழைந்தேன். முற்றிலும் வித்தியாசமான உலகத்தை இங்கு பார்த்தேன். எவ்வளவு எதிர்ப்பார்ப்புகளுடன் பல்கலைக்கழகம் நுழைந்திருந்தாலும் பல மகிழ்ச்சியான நிகழ்வுகளை மட்டுமன்றி சில துன்பங்களையும் சவால்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. சிறு வயதிலிருந்து பல விடயங்களை சந்தித்திருந்தாலும் அங்கெல்லாம் என் அம்மா என்னுடன் இருந்தார். அது ஒரு புது விதமான புத்துயிர்ப்பை எனக்கு அளித்திருந்தது. ஆனால் இங்கு புதுச் சூழலில் நான் சந்தித்த சவால்களை சமாளிக்க சிறிது கஷ்டமாய் இருந்தது. அம்மாவும் என் பக்கத்தில் இல்லாதது மிகவும் சிரமமாய் இருந்தது. நிம்மதியை இழந்ததாய் தோன்றியது. மரணத்திலாவது நிம்மதியை உணர நினைத்தேன்.

ஆனால் முடியவில்லை. நான் இறந்ததும் என்னை விட்டுச் சென்ற அப்பா என்னிடம் திரும்பி வந்தால் என் அண்ணா, அக்கா என்னைப் பார்க்க வந்தால் என்ன செய்வேன்…? என் அம்மா… அவர் முகத்தை நான் எப்படி பார்ப்பேன். இறுதியாக அவர் எதிர்ப்பார்த்த கடைசிப் பிள்ளையும் அவரை ஏமாற்றிச் சென்றதாக எண்ணி விடுவார். அவர் பட்ட கஷ்டங்களுக்கு பலன் கிடைக்காது போய் விடும். சிறு வயதிலிருந்து தன் பிள்ளை பட்ட கஷ்டங்களை மறந்து பல்கலைக்கழகம் சென்று மகிழ்ச்சியாக கற்று சமூகத்தில் நல்ல மனிதன் என பெயரெடுப்பான் என எதிர்ப்பார்த்த என் அம்மாவின் எதிர்ப்பார்ப்பை வீணாக்க நான் விரும்பவில்லை. இதயம் வலித்தது.

அதனால் எந்த கஷ்டத்தையும் சிரமத்தையும் தாங்கிக் கொள்ள நினைத்தேன். அம்மா நீங்கள் எதிர்ப்பார்த்தது போன்று உங்கள் பெயர் காக்கும் பிள்ளையாய் நான் வருவேன். எந்த சவாலையும் சமாளித்து சாதனையாளனாய் மாறுவேன். என்னுடன் நான் நடத்திய உளப் போராட்டத்தில் நானே என்னை வென்று விட்டேன்! பேச்சால் வெல்ல முடியாதது ஏதும் உண்டா! சிறு உள்ளமானாலும் பரந்த உலகமானாலும்! நானும் வெல்வேன்.




# முஸ்லிம்களின் வரலாற்றைச் சுவடிப்படுத்தல்

# நூலக நிறுவன முஸ்லிம் ஆவணக செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிமுகம்


**சப்னா இக்பால்**

திட்ட முகாமையாளர்,

நூலகம் நிறுவனம்.


**அறிமுகம்**

வரலாற்றை ஆராயுமிடத்து பண்பாடுகளும், சமூகவழக்காறுகள் முக்கியமான ஒன்றாகவே காணப்படுகின்றன. அவற்றின் இருப்பும், மாற்றங்களும் காலனித்துவம், பின்காலனித்துவம், போராட்டங்கள், பொருளாதார நிலவரங்கள், சமூகக்கட்டுமானங்கள் எனத் தொடர்ந்த அதிர்வுகளால் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. இக்கால ஓட்டமும் இந் நிலைமாற்றங்களும் ஒரு சமூகத்தின் இருப்பு தொடர்பான பல்வேறு அசைவியக்க மாற்றங்களை மேற்கொள்ளும் இக்கால கட்டத்திலே சமூக, பண்பாட்டு, மொழி இழப்பு வெளிப்படையாகவும் மறைமுகவாகவும் தொடரும் இச்சூழலில் பல்வேறு விடயங்கள் கணக்கிலிடப்படாமலும், ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் இழந்தும் பேணப்படாமலும் போய்விட்டன. பொதுவாக வரலாறுகள் சிங்களவர், தமிழர், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் அடையாளத்தையே வலியுறுத்துகின்றன. அவ்வரலாறுகளின் போதாமையினை இலங்கை வரலாற்றியலில் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக ஒவ்வொரு சமூகம் பற்றிய மேலோட்டமான விடயங்களில்

எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், இலக்கியவாதிகள், கல்வியியலாளர்கள் பற்றிய விடயங்களே செல்வாக்கு செலுத்துகின்றன. அவற்றுக்கு வெளியே கலை, சமூகப் பண்பாட்டுத் தளங்களில் வரலாற்று ஆய்வுகளோ எழுத்துக்களோ அரிது. அல்லது அவற்றுக்கான ஆவணங்கள் தரவுகள் மிக அரிது என்றே கூறவேண்டும். அதிலும் முஸ்லிம்கள் பற்றிய வரலாற்று முன்மொழிவுகள் மிகவும் அரிது என்றால் அது மிகையாகாது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பினும் பண்பாட்டில் தமக்கேயுரிய மதரீதியான தனித்துவ அடையாளங்களை அவர்கள் பேணிவருகின்றனர். ஆனால் அவர்கள் பற்றிய வரலாற்று ஆவணங்கள் என்றால் அது கேள்விக்குரியானதே? அவ்வப்போது சேகரிக்கப்பட்டாலும் அவற்றை ஒரே தளத்தில் கொண்டு வருதல் என்பது கடினமான ஒரு செயற்பாடாகவே காணப்பட்டது. அவ்வாறான ஒரு சமூக சுவடிப்படுத்தலினை மேற்கொள்ளும் எண்ணிம நூலகமாக 2005 முதல் நூலக நிறுவனம் செயற்படத்தொடங்கியது. குறிப்பாக தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான அறிவு வளங்களை ஆவணப்படுத்தி எண்ணிம வகையில் பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. அதனூடாக சுவடிப்படுத்தலை விரைந்து செயற்படுத்துமிடத்து குறுகிய காலத்தில் பாரிய சேகரிப்பைக் கண்டடைய முடியும்.

சுவடிப்படுத்தலில் இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்களில் முஸ்லிம்கள் மிக முக்கியமான பிரிவினராகக் காணப்படுகின்றனர். இலங்கை முஸ்லிம்கள் தமக்கென தனித்துவமான வாழ்வியலையும் அரசியல், பொருண்மிய, வணிக வரலாறுகளையும் கொண்டுள்ளதுடன் தமக்கான சில அடையாளங்களையும், சமூகப்பொருண்மைகளையும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வாழ்வியல் குறித்து ஆய்வு செய்த கலாநிதி அனஸ் அவர்கள் இலங்கையில் முஸ்லிம்கள் ஆயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன்பிருந்தே இலங்கையில் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்கிறார். குளோடியஸ் தொலமி இலங்கையில் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தை 'சோனர்' எனத் தன் வரலாற்றுக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதோடு தன் வரைபடத்தில் 'சோனாநதி' என ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தையும் வரைந்திருப்பதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அதே போன்று, கிரேக்க மாலுமி "ஓனோஸ் கிறிட்டோஸ ால்" என்பவரால் கி.மு 326 இல் வரையப்பட்ட இலங்கை வரைபடத்தில் புத்தளம் மற்றும் அதை அண்டிய பிரதேசங்களில் 'சோனாள்களின் குடியேற்றம்' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சனத்தொகையில் பன்னிரெண்டு சதவீதமாக உள்ள முஸ்லிம்களில், மூன்றில் இரண்டு பகுதியினர் தென்னிலங்கையிலும், மூன்றில் ஒரு பகுதியினர் வடக்கு கிழக்கிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தொடர்பான விடயங்கள் பண்பாட்டு கருவூலங்கள் மிகக்குறைவானவையாகவே வெளிப்படுத்தப்படுகின்கின்றது அல்லது ஆவணப்படுத்தப்படாமல் கைவிடப்படுகின்றது என்றே கூறவேண்டும். ஒரு சமூகத்தின் கூட்டு ஆவணமாக்கல் முயற்சிகளில் அச்சமூகத்தைச் சேர்ந்த அனைத்து விளிம்பு வெளிகள், குழுக்கள், உப–சமூகங்கள்/பண்பாடுகள், (அச்சமூகத்தால்/சமூகத்துள்ளே) ஒடுக்கப்பட்டோர் தொடர்பான கவனப்படுத்தலும், அச்சமூகத்தின் அதிகார மேலாண்மை, வரன்முறைப் பேணுகை பற்றிய மீள் கேள்விகளும் மாற்று அறிமுறைகளும் அவசியமானவை. அதனால் முஸ்லிம்களின் வரலாற்றை மீள அறிந்து கொள்ள ஆவணப்படுத்தல் இன்றியமையாத ஒன்றாகும். கூடிய அழிவாபத்துக்கு உட்பட்ட,

போதிய கவனிப்புக்கள் பெறாத, சமூகச் சூழ்நிலைகளால் புறக்கணிக்கப்பட்ட, விளிம்பு வெளிகள், குழுக்கள், சேகரங்கள் தொடர்பான சிறப்புச் செயற்றிட்டங்களை நூலக நிறுவனம் வடிவமைத்து முன்னெடுத்து வருகின்றது. நூலக நிறுவனத்தின் முஸ்லிம் ஆவணகம் இச்செயற்றிட்டங்களுள் ஒன்றாகும். முஸ்லிம்களின் வரலாற்றை எவ்வாறு ஆவணப்படுத்துவது, ஒரு சேகரிப்பாக எவ்வாறு ஒன்றுசேர்ப்பது போன்ற பல்வேறு சவால்கள் காணப்படுவதுடன் அதன் கிடைக்கும் பயன்கள் பற்றிய போதியளவு விழிப்புணர்வு எம்மவர்களிடையே இன்மையும் சுவடிப்படுத்தல் சிதறுண்டு காணப்படுகின்றமைக்கான முக்கிய காரணமாக அமைகின்றது. இதன் நீண்ட இடைவெளிகளால் பல நூற்றாண்டுகளின் எழுத்துக்கள், பதிவுகள் காலத்தால் அழிந்து போய்விட்டன. இப்போது கிடைக்கக் கூடியவற்றையாவது தேடி எடுத்து, காலத்தால் அழிந்து போகா வகையில் பாதூ காத்து, பேணி வைப்பது மிக முக்கியமான பணி என்பதுடன், வரலாற்றுக்கு செய்யும் அளப்பரிய பங்களிப்புமாகும். அதனை நூலக நிறுவனத்துடன் இணைந்து செய்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. அவ்வகையே இக்கட்டுரையானது முஸ்லிம்கள் வரலாற்றைச் சுவடிப்படுத்தளில் நூலக நிறுவன முஸ்லிம் ஆவணக செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிமுகமாக அமைகிறது.

**நூலக நிறுவனத்தின் முஸ்லிம் ஆவணகத் திட்டம்**


நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகள், மரபுரிமைகளை ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை செயற்படும் இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமாக 2005 முதல் இன்றுவரை செயற்பட்டு வருகின்றது. (noolahamfoundation.org) அத்துடன் 2017 முதல் பல்வேறு செயற்றிட்டங்களுக்கூடாக பல்வேறு எழுத்தாவனங்கள், வாய்மொழி வரலாறுகள், புகைப்படங்கள், போன்ற பல்லூடகம் சார்ந்த ஆவணங்களை திரட்டி எண்ணிமப்படுத்தி அனைவருக்கும் ஒரு உசாத்துணையாக வழங்குவதில் மிக உத்வேகத்துடன் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக சில செயற்றிட்டங்கள் நூலக நிறுவனத்தின் தொடர் திட்டங்களாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முஸ்லிம் ஆவணகம், பெண்கள் ஆவணகம், மலையக ஆவணகம் மற்றும் இ–பள்ளிக்கூடம் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவ்வகையே இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்களில் முஸ்லிம்கள் மிக முக்கியமான பிரிவினராகக் காணப்படுவதால் அவர்களது வாழ்வுமுறைகள் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய ஆவணப்படுத்தலுக்கு எண்ணிம ஆவணப்படுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவது மிகவும் பயனுடையதாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் ஆவணகம் (Muslim Archive) என்பது நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு சிறப்புச் சேகரச் செயற்றிட்டமாக முன்மொழியப்பட்டது. அதனூடாக தமிழ் முஸ்லிம்களின் அரசியல், பொருண்மிய, சமூக, பண்பாட்டு வரலாறுகளையும் வாழ்வியலையும் கூட்டு முறையில் ஆவணப்படுத்தவும் எண்ணிம முறையில் பாதுகாக்கவும் பகிரவும் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்றிட்டமாக 2008 இல் (முஸ்லிம் பிரதிகள் செயற்றிட்டம்) வடிவமைக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்துவதற்கான ஆளணி, தொடர்புகள், நிதி ஆகியவற்றினை ஒருங்கிணைத்து செப்ரம்பர் 2011 இல் முஸ்லிம் ஆவணகம் ஒரு சிறப்புச் சேகரமாக உருவாக்கப்பட்டது. 2011இல் ஒரு ஊழியர் வளம் ஒதுக்கப்பட்டு முஸ்லிம்கள் தொடர்பான எழுத்தாவணங்களும், சில பல்லூடக

ஆவணங்களும் ஆவணப்படுத்தப்பட்டன. ஆயினும் போதியளவிலான நிதியின்மை மற்றும் பணியாளர்கள் இன்மை போன்ற காரணங்களால் தொடர்ந்து ஓர் தனிச்சேகரமாக மேற்கொள்வது கடினமாக அமைந்தது. இருந்தபோதும் நூலக சேகர அபிவிருத்தியூடாக சேகரிக்கப்பட்ட ஆவணங்களுள் முஸ்லிம்கள் சார்ந்த ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டு வந்தன. பின்னர் ஆவண சேகரிப்பு தொடர்பான இடைவெளிகள் உணரப்பட்டு மீண்டும் 2019 ஆண்டு முஸ்லிம் ஆவணகம் சார்ந்த ஓர் தனிச்செயற்திட்டமாக முன்னெடுப்பதற்கான செயற்றிட்ட முன்மொழிவு எழுதப்பட்டு தமிழ் முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து கட்டற்ற அணுக்கத்துடனான ஓர் எண்ணிம சமூக ஆவணகத்தை உருவாக்கல் மற்றும் கலை, இலக்கிய, பண்பாட்டு, அரசியல், மற்றும் கல்வியல் தளங்களில், இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்புகளை வெளிக்கொணர்வதனூடே முஸ்லிம் சமூகம், ஆவணகங்கள் தொடர்பான கருத்துருக்கள், சொல்லாடல்களை மாற்றுவதற்கு உதவுதல். போன்ற, இலக்குகளை நோக்கி 2020 ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு முஸ்லிம் ஆவண சேகரிப்புக்கள் இடம்பெற தொடங்கியது.

**இதுவரைக்குமான முஸ்லிம் ஆவணகச் செயற்பாடுகள்**

முஸ்லிம் ஆவணகம் நூலக நிறுவனத்தின் இணைய எண்ணிம நூலக வலைத்தளத்தினூடாக செயற்படுத்தப்படுகிறது. கடந்த காலப்பகுதியில் நூலக நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட முஸ்லிம் ஆவணகச் செயற்பாடுகளில் இதுவரைக்கும் 907 நூல்களும், 77 பிரசுரங்களும், 93 பத்திரிகைகளும், 90 இதழ்களும், 47 சிறப்பிதழ்களும், 422 ஆளுமைகளும், 30 நிறுவனங்களும், நான்கு வாய்மொழி வரலாறுகளும் பெறப்பட்டுள்ளன.

**சுவடிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள்ஃஆவணங்கள்**



முஸ்லிம்களில் வரலாற்று ஆவணப்படுத்தலின் விடயப்பரப்புகளாகக் கொண்டு சுவடிப்படுத்தப்படவேண்டிய பரப்புக்களாக முஸ்லிம்களின் வரலாறு, சமயம், அரசியல், பொருளாதரம், சமூகப்பண்பாட்டு அசைவுகள், கலை இலக்கியங்கள் மற்றும் நாட்டார் வழக்காறுகள் என்பன முக்கியப்படுத்தப்பட வேண்டியவையாக உள்ளன. இவ் விடயப்பரப்புள் ஓலைச்சுவடிகள், நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள், பிரசுரங்கள், துண்டுப் பிரசுரங்கள், நினைவு மலர்கள், நாட்காட்டிகள், கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், வாய்மொழி வரலாறுகள், நேர்காணல்கள், ஓவியங்கள், வரைபடங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் அருந்தத்தன்மைகொண்ட பாவனைப்பொருட்கள் போன்றவற்றுடன் கட்டடங்களும் உள்ளடங்குகின்றன. அவ்வாறான சேகரிப்புக்களை இனங்கண்டு ஆவணப்படுத்தல் ஊடாக முன்னைய காலகட்டத்தின் பயில்வுகளை அறிந்துகொள்ள முடியும்.


The Muslim Friend
முஸ்லிம் நேசன்
திங்கட் கிழமை தோறும் பிரசுரஞ் செய்யப் படும்.
ஆரணத்தைத்தேர் பூரணத்தைப்பார்.
VO. 2. கொழும்பு 1884 NO. 19
முஸ்லிம் நேசன்.
Monday 12 th May 1884
பத்திராதிபர்
ஒதியன்றல்பேங்கு.

மலர் 2 இதழ் 19. (1884 மே 12) (அரசு சுவடிச் சாலை, கொழும்பு)

முஸ்லிம்களின் வரலாற்று ரீதியான விடயங்கள் எனும் போது பண்டைய வணிகர்கள் தொடர்பான குறிப்புக்கள், கல்வெட்டுக்கள், காலனிய – பிரித்தானியர் ஆட்சிக்கால அரச ஆவணங்கள், ஆளுனர்கள், அதிகாரிகள் எழுதிய நூல்கள். நாட்குறிப்புகள், அறிக்கைகள், கடிதங்கள், ஓலைச்சுவடிகள், நிலவரைப் படங்கள் ஆகியவற்றை சேகரித்தல் ஊடாக வரலாற்றில் முஸ்லிம்களுக்கான இருப்பினை கண்டடைய முடியும். மேலும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பிலான நூல்களை, ஆய்வுகளை, பதிவுகளை ஆவணப்படுத்தல் வணிகர்கள் மற்றும் பயணிகளால் பதிவு செய்யப்பட்ட ஒளிப்படங்கள், ஒலிக்கோப்புகள், குறிப்புகள், போன்றவற்றை அடையாளப்படுத்துவதுடன் தனிமனித வரலாறுகள் – வாய்மொழி வரலாறுகளை ஆவணப்படுத்தல் ஊடாக வரலாற்றின் இருப்பியலை இனங்கண்டுகொள்ள முடியும். சமயம் எனும் போது வழிபாட்டு இடங்கள் (பள்ளிவாசல்கள்), அவ்விடங்கள் சார்ந்த கட்டட முறைமைகள், அலங்காரங்கள், சடங்குகள், சமய நம்பிக்கைகள், சமய மரபுகள், வழிபாட்டு முறைகளை, தொன்மங்கள், பண்டிகைகள் போன்றவற்றை சுவடிப்படுத்தல் இனங்கண்டு கொள்ளலாம்.





அரசியல் எனும்போது இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாறு, முஸ்லிம்களுக்குள்

உருவான அரசியல் கட்சிகள் – பங்களித்தோர், கட்சிக்கான பதாதைகள், சின்னங்கள், இடங்கள், நபர்களின் வாய்மொழி வரலாறுகள், ஒளிப்படங்கள், இதர ஆவணங்களை ஆவணப்படுத்த முடியும். பொருளாதார முறைமை எனும் போது முஸ்லிம்களின் தொழிற்கலைகள், கைவினைப்பொருட்கள், தொழில் செய்முறைகள், தொழிற்பகுப்புக்கள், உற்பத்தி முறைகள், தொழில் சார்ந்த கருவிகள், நுகர்வு, பரிமாற்ற முறைகள் ஆகியவற்றை ஆவணப்படுத்த முடியும். சமூகப்பண்பாடு முறைகள் என்ற வகையில் முஸ்லிம்களின் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் சமூக–பண்பாட்டு, நாட்டார் வழக்காற்றியல், வாழ்வியல் கூறுகளை ஆவணப்படுத்தல், சமூக நிறுவனங்கள் (குடும்பம், திருமணம், பொழுதுபோக்கு), சமூக அமைப்பு முறைகள், அதிகார அடுக்கு வரன்முறை, வாழ்வு முறைகள், வாழ்க்கைச் சடங்குகள், மருத்துவ முறைகள், மூலிகைப் பயன்பாடுகள், உணவு முறைகள், ஆடை, அணிகலன்கள், புழங்குபொருட்கள், நாட்டார் கதைகள், சொல்வடைகள், நொடிகள், பாரம்பரிய விளையாட்டுக்களை ஆவணப்படுத்த முடியும். கலைகள், இலக்கியம் எனும் போது இசை, ஓவியம், அரபு எழுத்தணிக்கலை மற்றும் நிகழ்த்து, ஆற்றுகைக் கலைகள், கலைகளில் பயன்படுத்தப்படும் ஆடை, ஆபரணங்கள் மற்றும் ஒப்பனைப்பொருட்கள் போன்றனவற்றையும் ஆவணப்படுத்தல். இவ்வாறாக பல்துறைசார் விடயப்பரப்புக்களை அடையாளப்படுத்தி அதனை ஆவணப்படுத்தல் ஊடாக ஒரு பாரிய சேகரிப்பினை சமூகத்திற்கு வழங்கமுடியும்.

**சுவடிப்படுத்தலில் காணப்படும் சவால்கள்**

ஒரு குறித்த விடயப்பரப்பில் வாசகருக்கும் ஆய்வாளருக்கும் முழுமையான பயனை வழங்குவதே சிறப்புச் சேகரமொன்றின் நோக்கமாகும். தேவையான ஆகக் குறைந்த உள்ளடக்கம் இல்லாவிடின் சிறப்புச் சேகரத்தின் நோக்கம் முழுமையடையாது. கையில் கிடைக்கும் ஆவணங்களை இணையத்தில் வெளியிடுவதோடு நின்றுவிடுவது எண்ணிக்கை சார்ந்த திருப்தியை வழங்குமே தவிர அறிவின் அசைவியக்கத்தினைச் சாத்தியப்படுத்தாது. ஆவணங்களைத் தேடி முழுமையாக ஆவணப்படுத்துவதும் எத்தகைய விடயங்கள் இதுவரை வெளியாகவேயில்லை என்பதனை அடையாளங்கண்டு அவை உருவாகுவதைச் சாத்தியப்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். முஸ்லிம்களின் ஆவணங்கள் தொடர்பான தகவல்கள், அவை இருக்கும் இடங்கள் தொடர்பான தகவல்கள், அவற்றினைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் ஆகியன தேவையாக உள்ளன. ஆவணங்கள் தொடர்பான ஆய்வு, தேடலை மேற்கொண்டு அவற்றை அடையாளங் காணுதல், ஆவணங்களைக் கொண்டிருப்போரைத் தொடர்புகொண்டு அவற்றினைப் பெற்றுக் கொள்ளுதல், மின்பிரதியாக்கம் செய்து மின்னூல்களாக இணையத்தில் வெளியிடுதல் இவ்வகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தன்னார்வலர்கள் குழுவைக் கண்டடைதல், வெளியீடுகளை அடையாளம் கண்டு ஆவணப்படுத்தினாலும் அவற்றினை முழுமையாக இணையத்தில் வெளியிட பதிப்புரிமையாளர்களின் அனுமதி மிக அவசியமானதாகும். அறிவுச் செயற்பாடுகளைக் கட்டற்ற விதத்தில் முன்னெடுக்க உரிம அனுமதிகளின் அவசியத்தைப் பரவலாக வலியுறுத்த வேண்டியுள்ளது. அத்துடன் பதிப்புரிமையாளர்களை அடையாளங்கண்டு தொடர்பு கொண்டு அனுமதிப் படிவங்களில் கையொப்பம் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அது சார்ந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல். மேலுள்ள விடயங்களைச் சாத்தியப்படுத்தப் பெருமளவு மனித

வளங்களும் நிதி வளங்களும் தேவையாக உள்ளது. குறிப்பாக முஸ்லிம் சமூகங்களிலிருந்து நேரடியான பங்களிப்பு பெருமளவில் கிடைத்தால் மட்டுமே முழுமையான ஆவணப்படுத்தல் சாத்தியமாகும். அரிய ஆவணங்களைப் பெறுவதிலும் அனுமதிகளைப் பெறுவதிலும் ஏற்கனவே சமூகத்தில் இயங்கிக் கொண்டிருப்பவர்களது பங்களிப்பு அவசியமாகிறது. குறிப்பாக ஒருவர் ஓர் ஆவணம் என்ற வகையில் சேகரிப்பை தொடங்கினும் அவற்றை பாரிய சேகரமாக மாற்றமுடியும்.

**உசாத்துணை**


1. அஸீஸ், எ.எம்.எ, இலங்கையில் இஸ்லாம், கொழும்பு:கலைவாணி புத்தக இல்லம், 1963.
2. நஹியா, ஏ. எம், அஸிஸும் தமிழும், கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 1991.
3. இலங்கை முஸ்லிம்களது வரலாறு,சோனகம் வெளியீடு.
4. அல்ஹாஜ் மௌலவி அப்துர் ரஸ்ஸாக், எம்.ஏ. இஸ்லாமிய நாகரீகமும் கலாசாரமும். யாழ்ப்பாணப் பல்கரஸ்ரீலைக்கழக முஸ்லிம் மஜ்லீஸ் வெளியீடு.
5. பேராசிரியர் பத்மநாதன், சி. இலங்கையில் வன்னிச்சிற்றரசுகள்: உற்பத்தியும் அபிவிருத்திகளும். கொழும்பு குமரன் புத்தக இல்லம்.
6. நமது வரலாற்றை நாங்கள் தான் ஆவணப்படுத்த வேண்டும், தில்லைநாதன் கோபிநாத், வெளியீடு– ஜீவநதி, 2020.
7. Azees, A.M.A, "*Ceylon Muslims and their Mather Tongue*" Ceylon Daily News, 1941.
8. ta.wikipedia.org/wiki
9. noolahamfoundation.org/wiki
10. www.thinakaran.lk
11. noolaham.org/wiki
12. boosarysallih.blogspot.com

# உலகின் தலை சிறந்த சொல் செயல்

**முனீரா பேகம் முகம்மது நஜீப்**
முதலாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நாளைய நாட்டை எம் ஆசைச் செல்வங்கள்
ஆள்வர் என்றுணர்ந்து ....
உம்மை ஈன்றெடுத்த பேரன்புமிக்க
பெற்றோரின் புதையல்களே...
அத்தனை அவலங்கள் மத்தியிலும் பக்குவமாய்
பள்ளிப் பருவத்தை முடித்து...
பல் கலைகளைக் கழகமாகப் பயில வந்திருக்கும்
நாமல்லவோ....
அடுத்த தலைமுறையினரின் தலையெழுத்தாக
அமைய வேண்டும்....

விதியின் வழியில் உலகம் சுழல்கிறது என்றால்
அது விதியின் திறமை...
விதியையே உன்னால் சுழற்ற முடியுமென்றால்
அது உன் முயற்சியின் மகிமை...
சாதிப்பேன் என்று சொன்னால் நம்பாத உலகம்
சாதித்தவன் சொன்னால் நம்பத் தயங்காது...
சொல் தோழா....
நீ சாதிப்பேன் என்று சொல்லப் போகிறாயா...?
சாதித்தவனாய் சொல்லப் போகிறாயா...?
செயலை விட சிறந்த உதாரணம்
இல்லை என்பதற்கு...
உன் செயல்களே உதாரணமாக வேண்டும்.

நான் கண்ட சமூக ஆளுமைகளில் நீயும்
ஒருவனாக வேண்டாமா...?
என நான் உன்னை கேட்கவில்லை
என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்
சமூகத்தின் நிலை மாற்ற...
நீ அரசாளத் தேவையில்லை அதன்
ஆளுமை நீயென
உலகின் தலைசிறந்த சொல்லான...
செயலால் அறிவித்தாலே போதும்...

# BASE STONE LAYING FOR UNIVERSITY MASJID - 2018






## 1ST PLANTATION - 2018



## 2ND PLANTATION - 2020





# மனிதம் கோரும் பல்கலை

**சஜீஹா பேகம் ஜலீல்**
முதலாம் வருடம் (சட்டத்துறை), கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கழிவுப் பட்டி அது ஒரு சிறிய கிராமம். நிஜத்திலும் ஒதுக்கப்பட்ட பூமி. அங்கு தான் எனது கதையின் கதாநாயகி பிறந்திருந்தாள். ஹேமா பெண்மைக்கோர் முரண். அழுக்கு நிற மேனி. காடாய் வளர்ந்த பரட்டை முடி. ஆனாலும் அவள் சிரிப்பழகி. கூரையைப் பிய்த்துக் கொண்டு துன்பமழை பொழிந்தாலும் அவள் புன்னகைக்க மறந்திடாள். கிராமம் அது ஒன்னும் சும்மா இல்ல எதுவித வளர்ச்சியும் கண்டிராத வெகுளியது. ரெண்டு கார்போட் மட்டைகளை ஒட்ட இணைத்தாற் போல் ஓர் பள்ளிக்கூடம் புல்லையும் உணவாக்கி மரத்தையே மருந்தாக்கி பெண்மைக்கோர் விலங்கிட்ட பழமைக் கோட்டையது. அங்கு தான் மொத்தக் கிராமத்தின் ஆணிவேராய் ஹேமா. அவள் ஒரு முஸ்லிம் குடும்ப வாரிசே என்றாலும்,

**"அட புள்ள படிச்சி என்னத கிழிக்க போற! கெம்பசு போய் ஆடப்போரியா?" என்ற கிராமக் கட்டைகளின் ஒலியில் ஏனோ பல தசாப்தங்கள் அரிக்கப்பட்டன.**

ஹேமா படிப்புப் பேரணி என்றெல்லாம் இல்லை. என்றாலும் அக்கிராமத்தின் அறிவுச் சுடர். அன்று புதன் கிழமை. கிராம அபிவிருத்தி என்று சொல்லி பல நிலங்கள் அபகரிக்கப்பட்டன. கிராம அபிவிருத்தி மறுக்கப்பட்டது. துணை நிற்க ஆளின்றி அவலத்திலே கிராமம் மூழ்கிற்று. **"யார் கொடுத்த தைரியம் உமக்கு எங்கள் உரிமையை பறிக்க"** எங்கிருந்தோ உரத்த பேச்சு. அட நம்ம ஹேமா. கிராமமே உறைந்து சிலையாய் அடங்கிற்று அவ்வொலியில்.

அசதியில் சொல்ல மறந்தேன் அவள்...அவள் ஹேமா இருளில் கண்டெடுத்த ரத்தினமாய் அக்கிராமத்திலேயே முதன் முதலாய் பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவியாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டாள். இருந்தும் பல எள்ளல்களின் மத்தியிலும் பெறுமதியற்ற கவரிங் செயினாகவே கற்று வந்தாள். இன்று மூன்றாம் வருட மாணவியாய் தன் கிராம கௌரவத்திற்காய் உரத்த குரலில் கத்தி நின்றாள்.

யாரும் எதிர்பார்க்காத அகோர ரூபம் எடுத்து உரிமை சுதந்திரம் என்று அக்கிராமமே அறியாத பல வாசகங்களை எழுப்பி நின்றாள். உண்டென்றால் வாழும் உரிமை அதுவே அவரவர் சுதந்திரம் என்றாள். அநியாயமாய்ப் பறிக்கப்பட்ட தன் நிலம் மற்றும் இது வரை காணாத பல அபிவிருத்திகளையும் மொத்தமாய் மீட்டெடுக்க எண்ணி தன் மக்களை அறிவால் விழிப்பூட்டினாள். இவற்றுக்கும் பல துறை திறமைவான்கள் தேவைப்பட்டனர். கிராமமே வெட்கி நின்றது கல்வியின் மதிப்பை உணர்ந்து. ஆனால் ஹேமா சிறிதும் பின்வாங்கவில்லை.

கிராமத்தைக் கூட்டி சட்டத்தை தெளிவுப்படுத்தினாள். ஏனைய மாணவர்கள் மத்தியில் சட்டக்கல்வியின் ஆர்வத்தைத் தூண்டினாள். ''அட புள்ள படிச்சி என்னத கிழிக்க போற! கெம்பசு போய் ஆடப்போரியா?'' என்ற கிழடுகளின் வாசகம் தப்பென்று உதரப்பட்டது.

ஹேமாவின் ஆங்கில சரளத்தால் **''வெள்ளையனின் கூட்டாளி கிராமத்தில் நுழைந்தானோ?''** என்றெல்லாம் மக்களின் மனக் கடிகாரம் எண்ணித் துடித்தது. இள வயதிலேயே கிராம நிர்வாகத்தை ஏற்று மக்களிடம் இருந்து நோட்டுக்களை திரட்டி பள்ளிக்கூடத்தை விசாலமாக்கினாள். சிறப்பாகவும் முறையாகவும் கிராமத்தை வழிப்படுத்தினாள். கிராமத்திற்குத் தெரியாத ஏராள விளையாட்டுக்களை கோச்சாக நின்று பயிற்றுவித்து அவளுக்குள் இருந்த பல்துறை வீராங்கனைகளை வெளிப்படுத்தினாள். சும்மாவா! அவளது பல்கலைக்கழகத்தில் சகல விளையாட்டுகளிலும் முதலிடம் எடுத்த மாணவியவள்.

“என்னுயிரே!!!” என எங்கிருந்தோ கேட்ட ஓலத்தில் கனத்தது கூட்டம். வாய் வழியாய் தள்ளிய நுரை கீழ் வட்டாய் வளைந்த உரு மூச்செடுக்க அலறிக் கொண்டிருந்து ஆம்... இதை காண மறுத்த மரைக்காரின் பெண்சாதியின் அலறலே அது.

**''அட உயிர் பிரியப் போகுது பேசுரத பேசிமுடி''** என்ற அனுபவ குரலால் இன்னும் அழுகை உச்சத்தில் நின்றது. எட்டாத தூரத்தில் அமைந்திருந்த ஆஸ்பத்திரி இவ் அவலத்தின் முதற் காரணம் என்பதில் மறுப்பில்லை. எல்லாவற்றையும் பார்த்தும் சிறிதும் பதறாமல் ஹேமா துடித்துக் கொண்டிருந்த அம்மனிதரை நெருங்கி ஒரு வைத்தியராய் மருத்துவம் செய்திட்டாள். என்ன ஆச்சிரியம் அவர் சற்றே குணமானார்.

தொடர்ந்து நின்ற போராட்டத்தில் கிராம அவலம் குறித்து மாவட்ட ஆட்சியாளருக்கு மெயிலொன்றை அனுப்பி மெயிலின் பலன் மேலிட உத்தியோகத்தர் குழாம் பெரிய பெரிய வண்டிகளில் வந்திறங்கினர்.

**(செல்போனையே அறியாத கிராம ரெத்தம் இன்று அசால்ட்டாக மெயில் அனுப்ப எவ்வாறு அறிந்தது!)**

**“எம்மோ சிங்கள தமிழ் இங்கிலீசுனு அம்புட்டு இனமும் வந்திருக்கு இந்த புள்ள வேற ஏதோ மயில் அனுப்பிச்சாம்”** என்ற ஆறே வயதான அஹமட்டின் நகைச்சுவையில் கூடிய கூட்டம் “ஹா” என்று சிரித்திற்று. முறையான பேச்சில் துணிச்சலாய் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மும்மொழி மேதையாக தன் பேச்சை அடுக்கி நின்றாள். கிராமம் தானே என சமாளித்திட எண்ணி வந்தோர் அவளின் ஒட்டு மொத்த துணிச்சலால் கோரியக் கோரிக்கைகளைத் தருவதாக சொல்லி பிடித்தனர் ஓட்டத்தை.

வந்தது சித்திரை மாதம் இரண்டாம் கிழமை. அத்தி பூத்தாற் போல ஓட்டுக்காய் ஏராள வேட்பாளர்கள் இழித்துக் கொண்டு நின்றியிருந்தனர். அபிவிருத்தி உண்டென்றார்கள். தலைக்கு

ஆயிரம் என்றார்கள். காலடியில் மருத்துவம் என்றார்கள். இன்னும் பல புழுவி மறைந்தார்கள்.

தேர்தல் குறித்து மக்கள் ஒன்று கூடி ஹேமாவின் வழிகாட்டலை வேண்டினார். ஹேமா புதிதாக ஒருவரை தேர்தலில் இறக்கி மொத்தக் கிராமத்தினதும் ஆதரவை வழங்கச் சொன்னாள். அக்கிராமத்திலேயே சற்று பக்குவமான நஸாரை தேர்ந்தெடுத்து வோட்டைக் கலைத்து இடம் பெற்ற மாவட்டத் தேர்தலில் திருப்புமுனையை ஏற்படுத்தினர்.

சேமிப்பு, முதலீடு எனப் பொருளாதார அறிவை மக்களிடம் கொண்டு சேர்த்தாள். நிவாரண நிதி வழங்கிய நாள், அது ஒரு திங்கள் கிழமை. நிர்வாகிகள் கிராமத்தில் ஏமாற்ற எண்ணிப் போட்ட கணக்கில் ஏமாந்து போனார்.

**“எங்கடா எங்கள் பணம்? கவர்மென்ட் வெளியிட்ட பட்சட்டு தெளிவா இருக்கே.”** கிராமத்தில் அனுபவத்திலும் வயதிலும் முந்திக் கொண்ட ஆதார் காக்காவின் ஞானம் பிறந்த கேள்வியை கண்டு நிர்வாகிகள் அஞ்சினர்.

கிராமமே பேரானந்தத்தில் ஹேமாவை எண்ணி அவனது பெற்றோரும் உறவினர்களும் ஏனைய கிராம மக்களும் பெருமை பூத்தனர். ஆனால் பல்கலைக்கழகம் நுழையும் முன் அவ்வளவிற்கும் அவள் தைரியசாலியோ பேச்சாளியோ பல்துறை மேதாவியோ அல்ல. அட்டைப்பூச்சி போல பிரச்சினை என்றால் பெற்றோரையே ஒட்டி வாழ்ந்தவள். ஆங்கிலம் என்றாலே அவள் வாய் ஊமையாய் அடங்கிய காலம். ஆனால் இன்று அவள் புதுத்திருப்பங்களுடன் அக்கிராமத்தில் இளம் பெண் தலைவியாக......

அடிப்படை வசதிகள் கூடாத இல்லாத ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் கற்ற ஹேமாவிற்கு இது எப்படி சாத்தியமாயிற்று!?

மீண்டும் ஒரு குளறுபடி: கிராம முன்னேற்றத்தைத் தடுக்க உத்தியோகத்தர்கள் மதத்தை ஆயுதமாகப் பயன்படுத்தினர். வீசிய வலையில் சிக்கிய மீன்களாய் மக்கள் ஒருவரை ஒருவர் அடித்து உதைத்தனர். சம்பவ முடிவிலே வந்த ஹேமா அதிர்ச்சி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டாள். நன்றே சிந்தித்து பல வாதங்களுக்கு மத்தியில் அனைவரையும் கூட்டி மதத் தெளிவினை ஊட்டினாள். ஒற்றுமையே பலமென்று மதவெறியென்னும் போதையைக் களைந்து எறிந்தாள்.

அட தனித்து நின்று இனச்சூழ்ச்சியை எவ்வாறு அவள் முறியடித்தாள்? ஆம்! அவளது பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ என நான்கு இனத்து நண்பர்களும் கைகோர்த்தே அதனைச் சாத்தியமாக்கினர். சிலரது பார்வைக்கு ஹேமாவும் அவளது நண்பர்களும் ஒற்றுமையின் ஓவியமாய்த் தோன்றினர்.

இவ்வாறு சட்ட, மருத்துவ, பொருளாதார, இன, மத, சமூக மற்றும் விளையாட்டு போன்ற பல துறைகளில் சாமர்த்தியமாக இருந்த ஹேமாவிற்கு அமெரிக்கா செல்ல அழைப்பு வந்தது. அது பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த ஓர் அழைப்பு. ஹேமா ஒரு வருடத்திற்கு முன்பு தேசிய ரீதியில் பங்கேற்று நிகழ்த்திய விவாதத்தில் வெற்றிப் பெற்று இன்று சர்வதேச மட்ட அழைப்பே இது. பலவித கௌரவிப்புக்கள் சூழ அமெரிக்க விவாத மேடையில் பங்கேற்று தன் நாட்டுக்காகவும் தன் கிராமத்திற்காகவும் திறமையாக பேசி நாட்டுக்கே பெருமை சேர்த்தாள். பூரித்த மகிழ்ச்சியுடன் ஏராள கரகோஷங்களும் பரிசுகளும் அவளை கட்டித் தழுவ நாடு திரும்பினாள்.

அவள் வருகைக்கு முன்னரே கழிவுப்பட்டி மாற்றங்கள் கண்டன.

**"அடிப்படை வசதிகள் கூட இல்லாத ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் கற்ற ஹேமாவிற்கு இது எப்படி சாத்தியமாயிற்று!?".** கிராமமே உணர்ந்தது இதற்கான பதிலை. "படிச்சி என்னத்த கிழிக்கப் போற" என்ற பேச்சு அடியோடு அழிக்கப்பட்டது.

அன்று அவள் முதல் முறையாக பல்கலைக்கழகம் நுழைந்த நாள். அறியாத பலர் தெரியாத மொழி ரெண்டு கண்ணும் வீங்கிட அழுது நின்றாள். நிஜத்திலும் அத்தனை மாற்றமும் கல்வியின் சீதனம் என்று உணர்த்தப்பட்டது. ஒரு மனிதனை பூரணப்படுத்துவது பல்கலைக்கழகக்கல்வி என்பது உணர்த்தப்பட்டது. கிராமம் பல்கலைக்கழக வாழ்வை வேண்டி நின்றது. சமூக முன்னேற்றத்திற்கு பல்கலைக்கழகம் வழிகாட்டி என்று அக்கிராமமே ஹேமாவினால் கற்றுக்கொண்டது.

**துணிச்சலுடன் சகல துறை திறமைகளையும் அவளுக்குள் உட்புகுத்தி அவளைப் பெண் என்பதற்கும் மேலாக வளர்த்ததென்றால், மும்மொழிகளிலும் அவள் பேச்சு ஒலிப்பதென்றால் அது பல்கலைக்கழக நெறிப்படுத்தல் என்றே கூறலாம்.**

புத்தகக்கல்வி மட்டுமல்ல வாழ்கை என்று ஒவ்வொரு மனிதனையும் உணர வைக்கும் புதிரே பல்கலைக்கழகம். அறியாத தூரத்திலும் அறியாத மனிதர்களை கடந்து செல்லும் பக்குவம்.

**"பல்கலைக்கழகம் சென்று பல்கலை கல்" என்று கிராமமே முழங்கச் செய்தது. ஹேமாவை தொடர்ந்து பல மாணவர்கள் பல்கலைகழகம் தெரிவாகி சட்ட, மருத்துவ, முகாமைத்துவ, பொறியியல் மற்றும் தொழிநுட்பவியல் என பல துறைகளில் கற்றனர்.**

தொடர்ந்தும் கற்றே வருகின்றனர்...

- வளர்ச்சி எய்தா ஓர் கிராமம் கதைக்கு வலுவூட்டும் என்ற நம்பிக்கையிலேயே இக்கதை எழுதப்பட்டது. மாறாக தொடர்ந்து பல ஆண்டுகளாக பல்கலைக்கழகம் தெரிவாகி தங்கள் ஆளுமைகளை வளர்த்து வரும் மாணவர்களையோ அவர்கள் வாழும் கிராம நகரங்களையோ நான் அசதியிலும் மறந்ததில்லை. இக்கதையில் மட்டுமல்ல உண்மையிலும். பல்கலைக்கழகம் செல்லும் ஒவ்வொரு மாணவரும் ஒரு சமுதாய மற்றும் தேசிய வளர்ச்சியின் அத்திவாரம் என்பதில் மறுப்பதற்கில்லை.
- பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்த ஒரு மாணவியைக் கதாநாயகியாக வலம் வரச் செய்த காரணம் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களை தாங்களே நம்பி எதற்கும் துணிந்து முன் வர வேண்டும் என்பதற்காகவே.
- சட்டபீட மாணவியிடம் சகல திறன்கள் இருப்பதாக காட்டியதால் மற்ற துறையை இழிவுப்படுத்தினேன் என்பது பொருளல்ல.
- இக்கதையில் வரும் ஒவ்வொரு சம்பவங்களும் கதைக்கான தொனிப்பொருளை வாசகர்களுக்கு உணர்த்தும் என நம்புகிறேன்.



## செயலாளரின் செயலேட்டிலிருந்து.....

**அஹமட் நுஸ்கி சுபைர்**
பொதுச் செயலாளர், முஸ்லிம் மஜ்லிஸ்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ் என ஏகனைப் போற்றிப் புகழ்ந்து அண்ணல் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலாமும் ஸலவாத்தும் கூறியவனாக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அதன் செயற்பாட்டு இயங்கியலை இவ்வறிக்கையில் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது முஸ்லிம் மாணவர் அமைப்பின் புதிய நிர்வாகக் குழுவானது 2020 செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலையின் தியான மண்டபத்தில் இடம்பெற்ற ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து பொறுப்பேற்றுக்கொண்டது. இவ்வமைப்பானது முஸ்லிம் மாணவர்களின் நலனுக்கான பணிகளை 1977 ஆம் ஆண்டு தொட்டு சுமார் 44 வருட காலமாக செயற்படுத்தி வருவதோடு தற்போது இவ்வமைப்பில் எமது பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலிருந்தும் சுமார் 950 மாணவர்கள் வரை உறுப்பினர்களாக அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொவிட்–19 தொற்றுப் பரவலின் ஆரம்ப காலப்பகுதியில் எமது நிர்வாகம் கையளிக்கப்பட்ட போது நோய்ப் பரவல் அவதானத்தின் காரணமாக பல்கலைக்கழக வழமையான கல்வி நடவடிக்கைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்த நிலையிலும் சில செயற்திட்டங்களை எம்மால் அமுல்படுத்த கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

புதிய நிர்வாகமாக பொறுப்பேற்றதன் பிறகு முதலாவது நிர்வாகக் குழு கூட்டத்தின் முக்கியமாக, மாணவர்களை உடல் மற்றும் உள ரீதியாக அசௌகரியத்திற்குள்ளாக்கும் இஸ்லாத்தில் முற்றாக தடுக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகக் கலாசாரமான பகிடிவதையினால் ஏற்படும் பிரச்சினைகள் பேசுபொருளானது. புதுமுக மாணவர்கள் பகிடிவதைக்கு உள்ளாவதைத் தவிர்க்கும் நடவடிக்கைகளும் அக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் சில புதிய செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

எமது அமைப்பின் முஸ்லிம் மாணவர்களின் வகுப்பு நேரங்களின் போது தொழும் தேவைகளின் நிமித்தம் பயன்படுத்தும் பல்கலைக்கழகத்தில் முதலாவது மாடியில் இருந்த தொழுகை அறை தியான மண்டபத்திற்கு அருகில் இடமாற்றம் பெற்றது.

இவ்வாண்டுக்கான புனித ரமழானை வாஞ்சையுடன் வரவேற்றோம்.

இக்காலப்பகுதியில் சில பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே பல்கலைகழகத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது அவர்களுக்கான ஸஹர் மற்றும் இப்தார் ஏற்பாடுகள் மஜ்லிஸ் நிர்வாகக்குழுவினால் ஏற்பாடு செய்து தரப்பட்டது. மேலும் சில மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளும் இக்காலப்பகுதியில் வழங்கப்பட்டது. இதற்குரிய நிதியினை தந்துதவியவர்களுக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு அவர்களின் இம்மை மறுமை வாழ்விற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அந்த வகையில் புனித ரமழானின் வருகையினை எதிர்ப்பார்த்து வடிவமைக்கப்பட்ட Ramazan Raccolta- 2021 போட்டி நிகழ்ச்சியானது ரமழான் காலப்பகுதியில் நிகழ்நிலையில் வாட்ச்அப் குழுமங்களின் மூலமாக அனைத்து பீட மாணவர்களையும் குழுக்களாக பிரித்து ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டது. இப்போட்டியானது குழுக்கான flyers வடிவமைத்தல், குழுக்கான Vedio creating, Content writing, Calligraphy, photography போன்ற என்றவாறான போட்டிகளின் தொடராக இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்ச்சியானது மாணவர்களின் கலை மற்றும் ஆளிடைதொடர்பாடல், ஆக்கபூர்வ சிந்தனை, எழுத்தாற்றல், தனிப்பட்ட மற்றும் குழு ரீதியான திறமைகள் போன்ற இன்னோரன்ன ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஒரு தளமாகக் காணப்பட்டது.

எமது முஸ்லிம் மஜ்லிஸிற்கான உத்தியோகபூர்வ YouTube channel ஆனது ஆரம்பிக்கப்பட்டது. இதன் வாயிலாக வெள்ளிக் கிழமைகளில் இடமபெற்ற ஜூம்மா பயான் காணொளிகள், முக்கிய நிகழ்வுகள் மற்றும் விழாக்களின் காணொளிகள் பதிவேற்றப்பட்டு வருகின்றன. மேலும் (க.பொ.த) சாதாரண தர மாணவர்களுக்கான ஆங்கில மற்றும் விஞ்ஞான பாட மாதிரி வினாத்தாள்களுக்கான கலந்துரையாடல்கள் மற்றும் அவரகளுக்கான கருத்தரங்குகள் நிகழ்நிலைத் தொடர்களாக யாழ் பல்கலையின் பட்டதாரி பயிலுனர்களைக் கொண்டு நடத்தபடுவதுடன் மாணவர்களுக்கான வழிகாட்டல்களும் இடம்பெற்று வந்தன.

மேலும் தரம் 10 பாடத்திட்டத்திற்கமைய விஞ்ஞானம் மற்றும் இஸ்லாம் பாடத்திட்டத்திற்கான விளக்கக் காணொளிகளை தொடர்களாக பதிவேற்றம் செய்து வருகின்றோம். இவ்விதம் விஞ்ஞானப் பாடத்திட்டத்திற்கு விஞ்ஞான பீடத்தை சேர்ந்த ஆர்.சல்ஹா மற்றும் நுஸ்ஹா இஸ்மாயில் ஆகியோர் விளக்கக் காணொளிகளை வழங்கியுள்ளனர். இஸ்லாம் பாடத்திட்டத்திற்கு கலைப்பீட மாணவர்களான எம்.ஆர்.எப். இன்கா, கே.எம்.எப். அஸ்பா, ஏ.எச். ருக்ஷானா, எம். என்.எப். நப்லா ஆகியோர் விளக்கக் காணொளிகளை வழங்கினர்.

மாணவர்களின் தேடலினை மேம்படுத்தும் நோக்கிலான 2021 ஆம் ஆண்டிற்கான வினா விடைப் போட்டியானது யாழ் பல்கலையின் முஸ்லிம் மஜ்லிஸ் உத்தியோகபூர்வ முகநூல் மற்றும் வட்ஸ்அப் குழுமங்கள் வாயிலாக 2021.09.24 ஆம் திகதியிலிருந்து நடத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டி நிகழ்ச்சியானது 03 வகையான வினாக்களை உள்ளடக்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பி.ப 8.00 மணிக்கு பதிவேற்றம் செய்யபடுகின்றது. இதற்கு ஒரு மணி நேர அவகாசம் வழங்கப்பட்டு பி.ப 10.00 மணிக்கு அந்த நாளுக்குரிய வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டு அவ்களுக்கான ரீலோட் பரிசில்கள் வழங்கப்பட்டும் வருகின்றது. மேலும் சரியாக விடையளித்த 20 நபர்களின் பெயர் மற்றும் பீட விபரங்களும் அறிவிக்கப்படுகின்றன.

தற்போது நாட்டில் இனங்காணப்பட்ட ஒரு பாரிய இடர்பாடான வைத்திய சாலைகளின் இரத்தவங்கிகளில் காணப்படும் குருதிக்கான பற்றாக்குறை காரணமாக இரத்த தான முகாம் ஒன்று கடந்த 2022.03.07ம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. இரத்த தான முகாமானது பல்கலைக்கழக complex இல் ஒழுங்கு செய்யப்பட்டு ஆண்களுக்கு Study Hall இலும் பெண்களுக்கு தொழுகை அறையிலும் மு.ப 08.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை இரத்தம் வழங்குவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

குறித்த இரத்தான நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் மற்றும் நிதிசார் உதவிகளை வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

ஒவ்வொரு வருடமும் கனிசமான பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை செயற்படுத்தி வரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பானது இவ்வருடம் தனது பல்வேறு செயற்றிட்டங்களின் அமுலிலும் கொவிட்–19 தொற்றுப் பரவலினால் பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டமை கசப்பான உண்மையாகும். இவ்வறிக்கையினை நோக்கும் ஒவ்வொரு மாணவனும் அதே போல் அனைவரும் இவ்வமைப்பின் இயங்கியலுக்கு தம்மால் இயன்ற பங்களிப்பினை வழங்குவது அவர்களின் இம்மை மறுமைப் பயன்களை ஈட்டிக்கொள்ள கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்வதாகும். ஏக இறைவனுக்காகவே மேற்கொள்ளப்படும் எமது முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பின் அனைத்து செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டங்களிலும் எம்மோடு துணை நின்ற பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். எஸ். ஸ்ரீ. சற்குணராசா, பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், ஏனைய கல்விசார் கல்விசாரா ஊழியர்கள், முஸ்லிம் மஜ்லிஸ் பீடப்பிரதிநிதிகள் மற்றும் அனைத்து மாணவ சகோதரர்கள் ஆகியோருடன், ஊக்குவித்து உதவிய அனைவருக்கும் யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சார்பில் உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எனது நன்றிகளை மஜ்லிஸின் பெரும் பொருளாளர் திரு. கு. ராசகுமாரன் மற்றும் காப்பாளர் வீ. குமாரதீபன் ஆகியோருடன் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அனுசரணையாளர்களுக்கும் கூறிக்கொள்வதில் உவகையடைகின்றேன்.

உங்கள் அனைவரினதும் நற்செயல்களை எல்லாம் வல்ல இறைவன் பொருந்திக் கொள்வானாக!

# Quiz competition with reload prize – 2021/2022
# Details of the winners

| Quiz No | Date | Name | Faculty | Place |
|---|---|---|---|---|
| 1 | 2021.10.01 | Aslam NMM. | Engineering | Winner |
| | | Husna F. | Agriculture | Runner up |
| 2 | 2021.10.08 | Rihana Begam C. | Arts | Winner |
| | | Nuha MAF. | Allied health sciences | Runner up |
| 3 | 2021.10.22 | Ifthihaj Banu AK. | Arts | Winner |
| | | Shimak Ahamed MF. | Engineering | Winner |
| | | Ruzna F. | Allied health sciences | Winner |
| 4 | 2021.10.29 | Farha F. | Siddha medicine | Winner |
| | | Ifthihaj Banu AK. | Arts | Winner |
| | | Inka MRF. | Arts | Runner up |
| 5 | 2021.11.05 | Nisdha Jawsen MJF. | Agriculture | Winner |
| | | Shimak Ahamed MF. | Engineering | Runner up |
| 6 | 2021.11.19 | Ashfa A. | Allied health sciences | Winner |
| | | Sabeeha Banu | Allied health sciences | Runner up |
| 7 | 2021.11.26 | Rihana Begam C. | Arts | Winner |
| | | Safras FM. | Arts | Runner up |
| 8 | 2021.12.03 | Safras MSM. | Engineering | Winner |
| | | Inka MRF. | Arts | Runner up |
| 9 | 2021.12.24 | Safras MSM. | Engineering | Winner |
| | | Arshath AH. | Engineering | Runner up |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 2021.12.31 | Naseeha N. | Allied health sciences | Winner |
| | | Faahith KRM. | Engineering | Runner up |
| 11 | 2022.01.07 | Haleeth M | Engineering | Winner |
| | | Safras FM | Arts | Runner up |
| 12 | 2022.01.21 | Sabeeha Banu HU. | Allied health sciences | Winner |
| | | Shama MRF. | Agriculture | Runner up |
| 13 | 2022.01.28 | Misfa SLF. | Agriculture | Winner |
| | | Ashfa | Allied health sciences | Runner up |
| 14 | 2022.02.04 | Naseeha N. | Allied health sciences | Winner |
| | | Ashfa | Allied health sciences | Runner up |
| 15 | 2022.02.25 | Safras MSM. | Engineering | Winner |
| | | Naseeha N. | Allied health sciences | Runner up |

# Quiz Competition -2021 / 2022



## Old Memories of MMUoJ














# ACHIEVEMENTS OF THE STUDENTS

**Irshad sreenthaj** Faculty of Arts

- Won the Dr. Nagalingam Balakrishnan Memorial Gold Medal for Economics for being the best student in Economics at the 2017 Special Degree Examination, the Sir Arunachalam Mahadeva Memorial Prize for being the best student in Economics at the 2017 Special Degree Examination, and the Myliddy S. Swaminathan Memorial Prize for being the top student obtaining First Class at the 2017 Final Special Degree Examination. Irshad Sreenthaj is an Emerging Young Economics Scholar (EYES) in Sri Lanka.
- Sreenthaj's Grade Point Average (GPA) score was the highest in the Arts Faculty's graduating class of 2020.

**Sabina Farween M.M.** Faculty of Arts

- Mr.M.V Rajaratnam Memorial Award for the best student followed history as special degree at the final special degree examination in Arts.

**Rukshana A.K.F.** Faculty of Arts

- Achieved in getting a fully funded scholarship to go to Nepal Access Summit in 2019 and which was selected by US embassy.

**Arshath AM.** Faculty of Arts

- 1st class in BA

**Fathima Sahani F.** Faculty of Arts

- 1st class in BA

**Nusrath Banu MA.** Faculty of Arts

- 1st class in BA

**Najath Muhammad AK.** Faculty of Arts (Law)

- Best Palyer of Chess (Ludus 2019)
- Best Palyer of Carrom (Ludus 2019)
- Best Player of Foot Ball (Ludus 2019)
- Runner Up Badminton (Ludus 2019)
- Won 9 Madels in those games
- Won 2 Cups in those games
- Goldern Boot Award in food ball (Ludus 2019)

**Hasran HM.** Faculty of Arts (Law)

Best Bowler - Cricket (Ludus 2019)

**Hifzul Rahman Fathima Rasha** Faculty of Arts (Law)

- Represented University of Jaffna in the National Law School debate tournament in 2018 and 2019, conducted by the National Law School of India University in Bangalore, India which took place in Bangalore, India.
- Represented the team University of Jaffna in the national rounds of William C. Vis moot competition 2018 conducted under the auspices of the United States Department of Commerce, Commercial Law Development Programme.
- Represented University of Jaffna in H V Perera QC Memorial Moot Court Competition 2019, an International mooting tournament of Sri Lanka conducted by Law college of Sri Lanka.
- Took part of the team University of Jaffna in "Law goes green - Inter University English debate competition"" held in April 2019 organized by Department of Public and International Law, Faculty of Law, University of Colombo. The team University of Jaffna was the winner of the English medium debate of the competition and won the "Best Speaker award" in English debate.
- A member of the "Runners Up" team of 15th Henry Dunant moot court competition on International Humanitarian Law – national rounds organized by International Committee of Red Cross.
- Took part in the India and Asia regional virtual rounds of famous "Philip C. Jessup International Law Moot Curt Competition 2021" and she was a speaker/oralist for both side claimant and respondent of the team, which represented University of Jaffna in this competition for the very first time.
- A part of the team University of Jaffna in the global rounds of famous ""Philip C. Jessup International Moot Court Competition"" 2021, and the team qualified for White and Case advanced rounds in the global rounds; and we were awarded with an honorable mention for "Best New Law School" award. She was a speaker/oralist of team University of Jaffna for both side claimant and respondent. It was the very first time, University of Jaffna took part in this prestigious competition.
- Team coordinator and a speaker/oralist of team University of Jaffna in International Criminal Court Moot Court Competition 2021 in which a Sri Lankan team participated for the very first time. She was individually ranked as the 26th best speaker among the speakers of the international competition.

**Faslur Rajah S.** Faculty of Engineering

- Invented cost effective mobile based education system and implemented around Sri Lanka and online digital based book companion mobile app for students.

**Shafan A.M.M.** Faculty of Engineering

- Champion of IESL UIY (Young inventor of the year) competition- 2021 our team from faculty of engineering university of Jaffna has placed first in the final round of IESL UIY (Young inventor of the year) 2021 for our invention "Lunch sheet separator from food waste". Additionally, the invention also won the price for the most popular invention.

**Mohamed Ispak** Faculty of Engineering

- Published a conference paper on "Effect of coarse aggregate sizes on the behavior of self-compacting concrete". Proceedings of the 8th International Symposium on Advances in Civil and Environmental Engineering Practices for Sustainable Development ACEPS - 2021"

**Mahas M.M.** Faculty of Science

- VollyBall 2020 Champions (Science week)
- Badminton Champions 2021 (Science week)

**Anfas M.H.M.** Siddha Medicine Unit

- 2019 inter faculty Taekwondo Runner up (weight: under 68 )
- Badminton- Runner up (Siddha week)
- 1st place- high jump (Siddha week)
- 1st Place- 100 meter hurdles (Siddha week)
- 2nd place- 400 meter (Siddha week)

**Marikkar MRMMS.** Faculty of Technology

- Runners up in National karate championship 2018

குறிப்பு :

மலர்க்குழுவிற்கு பீடப்பிரதிநிதிகளால் இதுவரை கிடைக்கப்பெற்ற மாணவர்களின் அடைவுகளே இங்கு பதிவிடப்பட்டுள்ளமையை கருத்திற் கொள்ளவும்.

# PAST EXECUTIVE COMMITTEES
# (1976-2019)

**Executive committee (1976/77)**

| | |
|---|---|
| Patron | Moulavi K.H.M. Kalideen B.A. (Hons) |
| Senior treasurer | Mr. M.A. Nuhman B.A.(Hons) B.Phil |
| President | Mr. I.L.Abdul Jabbar |
| Vice president | Mr. M.T.Ahamed |
| Secretary | Mr. A.L.Jaufar Sadique |
| Assist. Secretary | Mr. I.L.Madhaar |
| Social secretary | Mr. Y.M.Ismail |
| Junior treasurer | Mr. M.S.M.Caasim |
| Co-editors | Mr. M.A.K.M.Abdul Hameed |
| | Mr. A.J.Noorul Faakiya |
| Members | Mr. M.H.M.Uwaiz |
| | Mr. M.B.Noormohamed |
| | Ms. A.H.Mumthazbegum |

**Executive committee (1979/80)**

| | |
|---|---|
| Patron | Moulavi K.H.M. Kalideen B.A. (Hons) |
| Senior treasurer | Mr. M.A. Nuhman B.A.(Hons) B.Phil |
| President | Mr. H.M. Farook |
| Vice president | Mr. M.Y.M. Siddeek |
| Secretary | Mr. A. Mohamed Hussain |
| Assist. Secretary | Mr. M.T. Ziyad Mohamed |
| Social secretary | Mr. M.M. Siyan |
| Junior treasurer | Mr. M.T.M. Jalaaldeen |
| Co-editors | Mr. A.C.A. Mohamed Mansoor |
| | Mr. M.M. Faiz |
| Sub editor | Ms. Regia Sherief |
| Members | Mr. M.J.M. Zarook |
| | Mr. M.I.M. Sadick |
| | Mr. M.C. Julaina |

**Executive committee (1980/81)**

| | |
|---|---|
| Patron | Moulavi K.H.M. Kalideen B.A. (Hons) |
| Senior treasurer | Mr. M.A. Nuhman B.A.(Hons) B.Phil |
| President | Mr. Ziyad .M.Thaha |
| Vice president | Mr. S.Najimudeen |
| Secretary | Mr. Mohamed Sanun |
| Assist. Secretary | Mr. A.L.Jamaldeen |
| Social Secretory | Mr. S.M.M. Mansoor |
| Junior treasurer | Mr. N.Jamaaldeen |

| | |
|---|---|
| Co-editors | Mr. M.S.Wajeehu |
| | Mr. M.S.H.M.Musthafa |
| Members | Mr. M.M.Faiz |
| | Mr. M.S.M. Fuward |
| | Mr. A.L. Shajahan |
| | Ms. I.S.Sithy Faiza |
| | Ms. T.Raiza |

**Executive committee (1981/82)**

| | |
|---|---|
| Patron | Dr. M.Z.M. Malhardeen |
| Senior treasurer | Mr. M.A. Nuhman M.A.(Hons) |
| President | Mr. B.M. Mahboob |
| Vice president | Mr. K.M.A.Fareed |
| Secretary | Mr. MSM Fuward |
| Assist. Secretary | Mr. M.I.M.Sahabdeen |
| Junior treasurer | Mr. A.L.A.Raheem |
| Co-editors | Mr. U.L.M.Jainudeen |
| | Mr. A.S.Laahir |
| Members | Mr. Y.Peer Mohamed |
| | Mr. A.R.M.Thowfeek |
| | Mr. M.M.Basheer |
| | Ms. M.I.S.F. Zulfica |
| | Ms. A.C. Haxiba |

**Executive committee (1982/83)**

**Executive committee (1983/84)**

**Executive committee (1984/85)**

**Executive committee (1986/87)**

| | |
|---|---|
| Patron | Mr. M.I. Abdur Razzak M.A. ( Khartoum) |
| Senior treasurer | Mr. M.H.M. Nasir B.Sc (Hons) |
| President | Mr. A.C. Mohamed Naffeel |
| Vice president | Mr. M.S. Amanullah |
| Secretary | Mr. M.I.M. Mahir |
| Assist. Secretary | Mr. O.M. Zarookdeen |
| Junior treasurer | Mr. S.L.A. Gafoor |
| Editor | Mr. M.H.M. Alisabri |
| Sub editor | Ms. Regia Sherief |
| Auditor | Mr. M.M.M. Sherief |
| Members | Ms. M.I.S. Nihara |
| | Mr. S.H. Abdullah |

| | |
|---|---|
| | Mr. H.G. Thangaraja |
| | Mr. M.I. Ibrahim |
| | Ms. M.C. Rizana |
| | Mr. S.L. Jahufar |

**Executive committee (1987/88)**
**Executive committee (1989/90)**
**Executive committee (2010/11)**

| | |
|---|---|
| President | Mr. M.M.M. Sufad |
| Vice president | Mr. A.R.M Muwaffaque |
| Secretary | Mr. F.Sihan |
| | Mr. Y.M Sadikeen |
| | Mr. M.H.Rajaas |
| Vice secretary | Mr. Y.M Sadikin |
| Treasurer | Mr. A.M.O.M Ozaal |
| | Mr. A.W.M Arkam |
| Editor | Mr. S Abdul Hutha |
| Ladies Wing | Ms. M.A.F Farsana |
| Members | Mr. A.L Rajipkhan |
| | Mr. A.L.S.M Bisru |
| | Mr. A.L.M Safraz |
| | Mr. A.M.W Akram |
| | Ms. A Afza |
| | Ms. N.F Safrana |
| | Ms. M.P.F Nsra |
| | Ms. M.N.F Sabrin |

**Executive committee (2011/12)**

| | |
|---|---|
| President | Mr. MM Radeef |
| Vice president | Mr. NM Sarjoon |
| Secretary | Mr. S Abul Hutha |
| Vice secretary | Mr. AGM Mafas |
| Treasurer | Mr. AJM Kiyas |
| Editor | Mr. S Abdul Hutha |
| Ladies Wing | Ms. MF Rifka |
| Assist Ladies Wing | Ms. MNF Safrin |
| Members | Ms. MA Sahnas Aysha |
| | Mr. MMM Ifam |
| | Ms. AHF Asmiya |

Mr. ACM Mifras
Ms. MIF Isnath
Mr. AHM Riswan
Ms. MNF Riqasa
Mr. MTM Ijas
Ms. MH Munasa
Mr. KMM Irfan
Ms. MY Silmiya
Mr. HM Rajjaz
Ms. MJF Jumana

**Executive committee (2013/14)**

| | |
|---|---|
| Patron | Mr. A. Rasakumaran (Head, ELTC) |
| Senior treasurer | Mr. Prof. S. Srisatkunarajah (Dean, Faculty of Science) |
| President | Mr. NM Sarjoon |
| Vice president | Mr. S Abul Hutha |
| Secretary | Mr. MNM Usman |
| Vice secretary | Mr. Hm Rajjaz |
| Junior treasurer | Mr. MTM Ijas |
| Editor | Ms. MH Rabiya Umma |
| Assist Editor | Ms. MA Munasa |
| Organizer | Mr. ANM Arsad |
| Ladies Wing | Ms. AH Nufa Nathrin |
| Members | Mr. S Ajmal Imthiyas, |
| | Ms.M Samiya |
| | Mr. MM Zakeel |
| | Ms. MJF Jumana |
| | Ms. MA Sahnas Aysha |
| | Mr. ANM Sifas |
| | Ms. MNF Fowzana |
| | Mr. MHM Riyas |
| | Mr. HMM Haleem |
| | Ms. AM Samrath Begam |
| | Mr. AHM Riswan |
| | Mr. ARM Miflan |
| | Ms. AS Rameesha |

**Executive committee (2014/15)**

| | |
|---|---|
| Patron | Dr. A. Rasakumaran (Head, ELTC) |

| | |
|---|---|
| Senior treasurer | Prof. S. Srisatkunarajah (Dean, Faculty of Science) |
| President | Mr. H.M.M. Haleem |
| Vice president | Mr. A.N.M. Arshad |
| Secretary | Mr. M.S.M. Jafran |
| Vice secretary | Mr. M.N.M. Nifras |
| Junior treasurer | Mr. S.A.M. Nifras |
| Editor | Ms. U.L.I. Neetha |
| Coordinator | Mr. A.M.M. Assam |
| Ladies wing | Ms. R.F. Rifla |

Representatives

| | |
|---|---|
